விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

பக்கங்கள்: 32

* விளம்பரங்கள்
* வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 15 ஞாயிற்றுக்கிழமை 10.03.2019 Sunday 10th March 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

# சம்பந்தனின் சலுகைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

## சம்பந்தன் மௌனமாக இருந்ததால் தமிழர்கள் இழந்தவை

* விசாரணை
* தீர்வு
* சிங்களக் குடியேற்றம்
* கைதிகளின் விடுதலை
* போனேரை கண்டறிதல்
* வட,கிழக்கு
* சுயநிர்ணய உரிமை
* போராளிகளுக்கான வாழ்வாதாரம்
* பாதிக்கப்பட்ட விதவைகளுக்கான வாழ்வாதாரமும் சுயதொழிலும்
* பட்டதாரிகளின் பிரச்சினை
* அரசியல் தீர்விற்கான அழுத்தம்

## சம்பந்தன் மௌனமாக இருந்ததால் சம்பந்தனுக்கு கிடைத்தவை

வாகனங்கள் இரண்டு( V8 KX 2330, Discovery KO 6339)
மாதாந்தம் 600 லீற்றர் எரிபொருள்
வாகன பராமரிப்பு
3 பில்லியன் பெறுமதியான ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் சொகுசு மாளிகை
மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம்
2 வீட்டுப் பராமரிப்பாளர்களுக்கான சம்பளம் போன்றவை அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது.
சம்பந்தனுக்கு அரச சலுகைகள் கொடுப்பதில் மகிந்தவும் மகிழ்ச்சி.




Ministry of Lands and Parliamentary Reforms

CM No 09/2019 My Ref. No.: 5/6/1/1 CM/389

Cabinet Memorandum

Providing Hon. R. Sampanthan, the Leader of the Tamil National Alliance with Essential Service Facilities

**Background**

Hon. R. Sampanthan, Trincomalee district Member of Parliament of Illankai Tamil Arasu Kachchi (ITAK) was appointed as the Leader of the Opposition of the Eighth Parliament on September 03, 2015. Ministry of Public Administration had provided him with a suitable official quarters on January 04, 2017 and Mr. Samapanthan moved into the official quarters on September 15, 2017 upon the completion of renovations thereto by Sri Lanka Navy.

**Justification**

Hon. Speaker has appointed Hon. Mahinda Rajapakse, Kurunegala district Member of Parliament as the new Leader of the Opposition of Parliament on 18.12.2018.

Hon. R. Sampanthan is the oldest sitting Member of Parliament and he is the Leader of the Tamil National Alliance as well. He plays a pivotal role in the process to bring about reconciliation among ethnicities which is one of the priorities in the present context. Hence, many diplomatic dignitaries visit on him for discussions regularly. It is the responsibility of the government to provide him with necessary facilities for the purpose.

**Approval**

In view of the above matters, upon the request of Hon. Speaker, I seek the approval of the Cabinet of Ministers for the following as personal to Hon. R. Sampanthan:

i. Allow Hon. R. Sampanthan to continue occupancy in the official quarters allocated to him by the Ministry of Public Administration
ii. Incur the expenses for water bills, electricity bills and maintenance of the official quarters by the Ministry of Lands and Parliamentary Reforms;
iii. Recruit the Bungalow Caretaker, two Gardeners presently employed for the maintenance of the official quarters situated on a land in extent of 1½ acres and two Laborers employed for interior maintenance of the house, on casual basis and pay their salaries by the Ministry of Lands and Parliamentary Reforms

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

OBSERVATIONS

Cabinet Memorandum No: 19/0588/121/007

PROVIDING HON. R. SAMPANTHAN, THE LEADER OF THE TAMIL NATIONAL ALLIANCE WITH ESSENTIAL SERVICE FACILITIES

The Hon. Minister of Lands and Parliamentary Reforms has submitted the above Memorandum seeking approval of the Cabinet of Ministers to extend certain essential service facilities to Hon. R. Sampanthan, the Leader of the Tamil National Alliance, Member of Parliament (the Leader of the Opposition till recently) including continued occupancy in the official quarters.

I agree to the grant of the proposed facilities to the Hon. R. Sampanthan as personal to him taking into account the special circumstances involved.

Sgd/-Maithripala Sirisena

February 25, 2019

*A Decision of the Cabinet Meeting held on 2019.02.26*

(C) Supplementary Agenda Items:

85. Cabinet Paper No.19/0588/121/007, a Memorandum dated 2019-02-13 by the Minister of Lands and Parliamentary Reforms on "Providing Hon. R. Sampanthan, the Leader of the Tamil National Alliance with Essential Service Facilities" - the above Memorandum was considered along with the observations of H.E. the President. After discussion, taking into consideration the special reasons adduced in the Memorandum, it was decided to grant approval to the proposals (i) to (v) in the final paragraph of the Memorandum.

Action by: **My/Finance** - copy of Memorandum and above observations annexed.
**My/Lands and Parliamentary Reforms** - above observations annexed.

Copied to: **Secretary to the President**
**Secretary to the Prime Minister** - copy of Memorandum and above observations annexed.
**My/Public Administration & Disaster Management** - copy of Memorandum and above observations annexed.

iv. Assign KX 2330 and KO 6339 vehicles to Hon. Sampanthan with the fuel allocation of 600 liters per month and undertake the maintenance and repairs of these two vehicles by the Ministry of Lands and Parliamentary Reforms
v. Obtain additional financial provisions required for the activities described under ii, iii and iv from the Ministry of Finance

Gayantha Karunatilleke
Minister of Lands and Parliamentary Reforms

Ministry of Lands and Parliamentary Reforms
"Mihikatha Medura",
1200/6, Rajamalwatte Avenue
Battaramulla.
13-02-2019

## 24.02.2019 தமிழ்த்தந்தியின் பிரதான தலையங்கத்தை உறுதிப்படுத்தியது அமைச்சரவை

**இப்படியாக சம்பந்தனுக்கு சலுகைகளை வழங்குவதற்கு அமைச்சரவை தயாராகின்றது என்ற செய்தியினை 24.02.2019 தமிழ்த்தந்தி தலையங்கம் தீட்டியது. சர்வதேச சிக்கலிலிருந்து இலங்கையை காப்பாற்றிய சம்பந்தனுக்கு சலுகைகளை வழங்க அமைச்சரவை தயாராகின்றது என்ற தலையங்கத்தை தீட்டியிருந்தது. அந்த செய்தி தற்பொழுது அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட 80 கோடி ரூபா வாகனங்களுடனும், 600 லீற்றர் மாதாந்த எரிபொருள் சலுகைகளுடனும், அரச மாளிகைகளும் வழங்கியதனூடாக தமிழ்த்தந்தி செய்தியை உறுதிப்படுத்தியது.**

சம்பந்தன் இந்த விடயங்களை விட்டுக்கொடுத்ததற்காக அரசு சம்பந்தனுக்கு அமைச்சரவை அங்கீகாரத்துடன் எந்தஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கோ எந்த ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கோ (ஸ்ரீமா பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன, அமிர்தலிங்கம், மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க) இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து கொடுக்காத அரச சலுகையினை அமைச்சரவை அங்கீகாரத்துடன் சம்பந்தன் அவர்களுக்கு அரசு வழங்கியுள்ளது.

இது இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு 1947 ஆம் ஆண்டிற்குப் பின்பு அரசு வழங்கிய முதலாவது சன்மானம் அல்லது சலுகையாகும்.

இது இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்பு சம்பந்தனுக்கு மாத்திரம் ஏன் வழங்கப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு அரசு கூறும் பதில், அவர் பிரிவினைவாத தலைமையிலிந்து எதிர்ப்பு அரசியலிலிருந்து அரசுக்கு ஒத்தாசை புரிகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு தலைமையாக இயங்கியதுதான் காரணமாக கூறப்படுகின்றது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு தொடர் மாடிக்கு பதிலாக அவர் அமைச்சாரகியவுடன் அவருக்கு இன்னொரு மாளிகை வழங்கப்பட்டால் அவர் இரண்டையும் பயன்படுத்துவது இலங்கை சட்டத்திற்கு முரணானது.

இலங்கையில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இரு அரச மாளிகைகளை பயன்படுத்திய வரலாறுகளும் இல்லை. பயன்படுத்திய மாளிகையை பதவி முடிந்த பின் சொந்தமாக்கிய வரலாறும் இல்லை.

திருகோணமலையில் சம்பூரில் கட்டப்பறிச்சான், கிளிவெட்டி, நல்லூர் போன்ற பிரதேசங்களில் மக்களை சந்தித்த சம்பந்தன் உங்கள் 5000 பேருக்கும் வேலை வாங்கித் தருவேன். என்னால் அதை செய்ய முடியும், நான் உங்களுக்கான தொழிலைக் கேட்டாலோ, அல்லது உங்களுக்கான பாடசாலைகளைக் கேட்டாலோ வீதிகளை கேட்டாலோ அதை உங்களுக்கு செய்வதற்கு அரசாங்கம் செய்யத் தயாராக இருக்கிறது. ஆனால் நான் அதைக் கேட்க மாட்டேன்.

அந்த சலுகைகளைக் கேட்டால் உங்கள் உரிமைகளை நான் எப்படிப் பெறுவது.

அதனால்தான் சலுகைகளை நான் பெறுவதற்கு முயற்சிக் காமல் உங்களின் உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றேன்

02 ஆம் பக்கம் பார்க்க

# ஜெனீவாவில் அம்பலமாகும் கூட்டமைப்பின் குள்ளவேஷம்



## கொதித்தெழும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

### இலங்கையை சர்வதேச பாதுகாப்பு சபைக்கு கொண்டுவர வேண்டும்

[illegible] யத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினுடைய நிகழ்ச்சி நிரலிலிருந்து வெளியே எடுத்து நியூயோர்க்கிலுள்ள பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்பதுதான் எங்களின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஏனெனில் பாதுகாப்புச் சபை ஊடாகத்தான் சர்வதேச குற்றவி[illegible] அல்லது விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை உ[illegible]வாக்கலாம்.

இந்த இரண்டினூடாகத்தான் தமிழருக்கு நடந்த இனப்படுகொலைக்கு முழுமையான, நியாயமான, நம்பகத்தன்மையான ஒரு விசாரணை ஊடாக குற்றம் புரிந்தவர்களை தண்டிக்க வைக்கலாம்.

மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் விரும்பாத பட்சத்தில் பேரவையால் எதுவுமே செய்யமுடியாது. கடந்த 2012இலிந்து இலங்கையினுடைய நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்தால் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டலாம், இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப் படுகொலையை அவர்கள் விசாரிக்கத் தயாரில்லை, மாறாக அவர்கள் குற்றம் புரிந்த இராணுவத்தினரையும் அரசியல் தலைவர்களையும் பாதுகாக்கின்ற கோணத்தில்தான் செயற்படுகின்றார்கள் என்று வெளிப்படையாக அவர்கள் ஒரு கொள்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் இலங்கையை கண்காணித்தல் என்ற பெயரில் இரண்டு வருட கால அவகாசத்தை வழங்குவது என்பது பாதிக்கப்பட்ட, இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட தமிழினத்திற்கு செய்த பச்சைத் துரோகம் என்பதுதான் எங்களின் கருத்து. அந்த விடயத்தை நாங்கள் பகிரங்கமாக ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் பதிவு செய்வதற்குத்தான் எங்களை அழைத்துள்ளார்கள். இன்றைக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் தமிழ் தேசிய

02 ஆம் பக்கம் பார்க்க



வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்க புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
தலைவராக ரி.பத்மசொரூபன், செயலாளராக கே.நவநீதன், பொருளாளராக ரி.கமலனும் தெரிவு செய்யப்பட்டனர்.
உபதலைவர்களாக ரி.எம்.தெய்வேந்திரன், எஸ்.சிவதீபன், ஜே.சுதாத்தரன், என்.பிரதாஸ், கே.சிவசேகரன் ஆகியோரும், உபசெயலாளராக ரி.விந்துஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.
மேலும் உறுப்பினர்களாக எஸ்.என்.அருத்வெல்ல, ஆர்.சற்சொரூபன், எஸ்.வசிகரன், ஆர்.தர்சிகா, கே.லேக்காஜினி, ஏ.ஆர்.டினோஜன், என்.சிவநேசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் பொதுக்கூட்டம்

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் 28 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இலக்கம் 166, புத்கமுவ வீதி இராஜகிரியவிலுள்ள, பறவைகள் பூங்கா (Birds Park) காலை 9.00 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சீ.எம். மத்துமபண்டார கலந்துகொள்வார். நிகழ்வில் பங்குபற்றுவதற்கான நுழைவுச் சீட்டுக்களை சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களிடமிருந்து நிகழ்வு இடம்பெறும், வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.
புதிய அங்கத்தவர்களை சேர்க்க கூட்டத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

## நாடளாவிய ரீதியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் குதிக்கும் ஆசிரியர் சங்கங்கள்

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் எதிர்வரும் 13.03.2019 (புதன் கிழமை) அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளனர். இதற்கான அழைப்பினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரனும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினும் கூட்டிணைந்து விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அழைப்பில்,

தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால்களும், கடையடைப்புக்களும் காலத்தின் தேவை கருதி நடைபெறுகின்றன. அவற்றுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என எமது ஆதங்கங்களையும், அநீதிகளையும் உலகுக்கு எடுத்துக்காட்டுகின்றோம். அதன் ஒரு செயற்பாடாக கடந்த 25.02.2019 அன்று நடைபெற்ற வடமாகாணம் தழுவிய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தில் நாம் முழுமையாக பங்குகொண்டோம். அவ்வாறே அடக்குமுறைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிரான போராட்டங்களுக்கு நாம் பூரண ஆதரவையும் வழங்கி வருகின்றோம்.

அதேபோன்று குறைந்த வேதனங்களோடு பணியாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் தமது வேதனங்கள் அதிகரிக்கப்படவேண்டும் எனவும், அவசியமற்ற சுமைகள் நீக்கப்படவேண்டும் எனவும், மத்திய அரசு கல்விக்காக ஒதுக்கும் நிதி போதுமானதாக இல்லை எனவும் பல போராட்டங்களை முன்னெடுத்தும் எந்தப் பயனும் இல்லை.

மாறாக எதிர்வரும் 13.03.2019 அன்று (புதன் கிழமை) ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பளத்தை உயர்த்துதல், ஆசிரியர்கள்மீது செலுத்தப்படும் தேவையற்ற நெருக்கீடுகளை அகற்றுதல், மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக 6% ஒதுக்குதல்.

ஆகிய மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை மாணவர்களும், பெற்றோரும் புரிந்து கொள்ளும் விதத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் சென்று காலை:08.00 மணிமுதல் காலை:08.30 மணிவரை கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து பாடசாலை நுழைவாயிலில் அமைதியாக ஒன்றுகூடி தமது கவனவீர்ப்பை வெளிப்படுத்தி, அன்றைய நாள் முழுவதும் கறுப்புப் பட்டியுடன் கடமையில் ஈடுபடுவது என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அனைத்துத் தொழிற்சங்கங்களையும் ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று உள்ளது.

## வரவு-செலவு திட்டத்தில் எங்களுக்கு நம்பிக்கையில்லை; சுரேஷ் பிரேமச்சந்திரன்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

நாங்கள் இவ்வளவு காலமும் எவ்வொரு வரவு செலவுதிட்டத்தையும் நாங்கள் எதிர்த்து வந்துள்ளளோம்.அல்லது வெளிநடப்பு செய்து வந்துள்ளோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழரசுக் கட்சி , டெலோ, புளொட் போன்றவை தொடர்ச்சியாக ஆதரித்து வந்துள்ளன.ஆகவே இந்த வரவு செலவுத்திட்டத்தில் எங்களுக்கு பெரிய நம்பி'க்கை கிடையாது.இவர்கள் சொன்ன விடயம் எல்லாம் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் என்பதிலும் அதற்கான அத்திவாரம், அடிப்படை இல்லாத சூழ்நிலை உள்ளது.நாங்கள் நிச்சயமாக இதனை ஆதரிக்கின்ற சூழ்நிலை இருக்காது.இவர்கள் புனர்வாழ்விற்கு, மீள்குடியெற்றதத்திற்கு ஒதுக்க வேண்டிய பணங்கள் விட பல்லாயிரம் மடங்கு அதிகமாக இவர்கள் பாதுகாப்பிற்கு என்று ஒதுக்கப்படுகின்றது. பாதுகாப்பு என்ற ரீதியில் என்ன நடைபெறுகின்றது. தமிழ் மக்களின் காணிகள் பிடிக்கப்படுகின்றது.

புதிய புதிய இராணுவ முகாம்கள் வருகின்றது.எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு ஆதரவு தெரிவி'க்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் நிச்சயமாக தமிழ் மகக்ளை ஏமாற்றக்கூடிய விதமாக தான் இருக்கும் என்று தான் நான் நம்புகின்றேன்.பாதுகாப்பு ஒதுக்குவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்ல முடியும். அதற்கு எதிராக எங்களினால் கை உயர்த்த முடியும். ஆனால்அதனை கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இது வரை செய்தது கிடையாது.50 ஆயிரம் வீடுகள் என்றால் 15 ஆயிரம் வீடுகள் என்றார்கள் அதில் கூட ஒரு வீடு கட்டுவதற்கு ஆறரை இலட்சம் தான் கொடுப்போம் என்கின்றார்கள். இந்த கால கட்டத்தில் உங்களுக்கு அத்திவாரம் கூட போட முடியாது.இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லுகின்றோம்.தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஆதரவளிக்கும்.வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படும்.சிறிதரன் போன்றவர்கள் எதிர்த்தாலும் கூட அவர்கள் வாக்களிக்கும் நேரத்தில் ஆதரவு தெரிவிப்பார்கள்.



கோப்புப்படம்

## கடும் வெப்பத்தால் ஆரோக்கிய சீர்கேடுகள்

தற்போது வெப்பநிலை அதிகரித்துள்ளதால் ஆரோக்கிய சீர்கேடுகள் ஏற்படலாம் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தச் சீர்கேடுகளை தவிர்ப்பதற்கான ஆலோசனைகளை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம், உடலை மூடும் வகையில் இளம் நிறங்களுடன்கூடிய இலேசான ஆடைகளை அணிவது சிறப்பானது.

குறிப்பாக விவசாய, கட்டுமானப் பணிகளில் ஈடுபடுகையில் சூரியக் கதிர்களின் நேரடித் தாக்கத்தைத் தவிர்க்க வேண்டும். தினந்தோறும் குளிப்பது பொருத்தமானது என சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

அதிக சூரிய வெளிச்சம் இருக்கும் சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் திறந்த வெளிகளில் விளையாடுவதைத் தவிர்ப்பது நல்லது. கூடுதலான வெப்பநிலை நிலவும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை தனியே வாகனங்களில் விட்டுச் செல்ல வேண்டாம் என மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இனிப்பும், மதுசாரமும் செறிந்த பானங்களைத் தவிர்ப்பது ஆரோக்கியமானதாகும் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கச்சதீவில் இம்முறை பத்தாயிரம் பேர் ஒன்றுகூடுவர்



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுள்ளதாகத் தெரிவித்திருக்கும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் இம்முறை திருவிழாவுக்கு இலங்கையிலிருந்து ஏழாயிரம் வரையான பக்தர்களும் இந்தியாவிலிருந்து 2200 பேர் வரையிலும் வருவார்களென எதிர்பார்க்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 15,16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கான முன்னேற்பாட்டு இறுதிக் கூட்டம் மாவட்ட அரச அதிபர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அரச அதிபர் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

மேற்படி ஆலய வருடாந்த திருவிழாவுக்கான முதலாவது ஏற்பாட்டுக் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 1 ஆம் திகதி நடைபெற்றிருந்தது. இந் நிலையில் அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அல்லது பணிகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து இறுதி முடிவெடுப்பதற்காக இறுதிக் கூட்டமாக இந்தக் கூட்டம் அமைந்திருக்கின்றது.

குறிப்பாக கடந்த கூட்டத்திற்கமைய முன்னெடுக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றங்கள் மற்றும் விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. இதற்கமைய மேற்படி ஆலய உற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதில் மிக முக்கியமாக இலங்கையைச் சேர்ந்த ஏழாயிரம் பேர் வரையிலும் இந்தியாவிலிருந்து 2200 பேர் வரையிலும் பக்தர்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கான அனைத்து பொறுப்புக்களையும் இலங்கை கடற்படையினர் செய்கின்றார்கள்.

இதில் போக்குவரத்து துறையைப் பொறுத்தவரையில் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 3.30 மணி முதல் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பஸ்வண்டிகள் குறிகாட்டுவானை நோக்கி புறப்படும். அந்தச் சேவைகள் காலை 10.30 மணி வரை தொடர்ந்து நடைபெறும். அதே போன்று 16 ஆம் திகதி காலை முதல் குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான விசேட பேருந்து சேவைகள் நடாத்தப்படும்.

மேலும் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் நலன் மற்றும் வசதி கருதி கூடுதலான போக்குவரத்து பஸ் சேவைகள் ஒழுங்குபடுத்தப்படுவதோடு குறிகாட்டுவானிலும் நீர், மலசல கூட வசதிகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

கடந்த முறை போன்று இம்முறையும் கூடுதலான பக்தர்கள் வருவார்களாக இருந்தால் எங்களுக்கு இம்முறையும் ஒரு பிரச்சனை ஏற்படுகின்றது. ஏனெனில் எங்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தான் படகு சேவைகள் இருக்கின்றன.

ஆகவே இருக்கின்ற எல்லாப் படகுகளையும் அதில் நாங்கள் ஈடுபடுத்தி இயன்றளவு மக்கள் போக்குவரத்தைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம். ஆயினும் கூடுதலான பயணிகள் வருகின்றபோது எல்லோரும் செல்வதென்பது மிக கடினமான காரியமாகத் தான் இருக்கும். ஆகவே ஆலயத்துக்கு வரவிருக்கின்றவர்கள் 15 ஆம் திகதி காலையிலேயே குறிகாட்டுவானுக்கு வந்து படகுகில் ஏறிச் செல்லுமாறு கோருகின்றோம்.

ஏனெனில் பின்னால் வருகின்றவர்களுக்கு படகுச் சேவை வழங்குவது மிக கடினமாகவே இருக்கும். ஆகவே 15 ஆம் திகதி காலையிலேயே குறிகாட்டுவான் நோக்கி பயணித்து படகில் ஆலயத்துக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இதேவேளை நெடுந்தீவு பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேச சபையால் கடற்படையின் ஒத்துழைப்புடன் முழு அளவிலான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதிலும் மலசலகூட வசதி குடிநீர் வசதி போன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## தொல்பொருட்களை சேதப்படுத்தினால் 5 இலட்சம் ரூபா அபராதம்; 15 வருடங்கள் சிறை



தொல்பொருட்களுக்கு சேதம் விளைவிப்பவர்களுக்கு விதிக்கப்படும் தண்டப்பணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பி.பி. மண்டாவல தெரிவித்தார்.

தொல்பொருட்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைக்கும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் பிரகாரம், தண்டப்பணம் 50,000 முதல் 5 இலட்சமாக அதிகரிக்கப்படவுள்ளது.

தொல்பொருட்களுக்கு சேதம் விளைவிப்பவர்ளுக்கு வழங்கப்படும் சிறைத்தண்டனையையும் 2 வருடங்களிலிருந்து 5 முதல் 15 வருடங்களாக அதிகரிக்கவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

1940 ஆம் ஆண்டு இலக்கம் 9-இன் கீழான தொல்பொருள் கட்டளைச் சட்டம் இறுதியாக 1998 ஆம் ஆண்டு திருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




## ஜெனீவாவில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கூட்டமைப்புத்தான் விரும்பி வந்து இந்த இரண்டு வருட கால அவகாசத்தைக் கேட்டுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெயரிலேதான் இந்த அரசாங்கத்தைக் காப்பாற்ற விரும்புகின்ற நாடுகள் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தான் விரும்புகின்றார்கள் என்று இந்த அரசாங்கத்தை காப்பாற்றுகின்ற வேலையில் முழுமூச்சாக ஐ.நா.வில் வந்து நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்களால் செய்யக்கூடியது உத்தியோகபூர்வமாக அங்கு நடக்கின்ற அமர்வுகளை வந்து இங்கு நடக்கும் அநியாயங்களை பதிவு செய்வதும், எங்களின் மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அடுத்த முறையாவது இப்படி துரோகமிழைக்கும் தரப்புகளை முற்றிலும் தமிழ் அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதுதான் நாங்கள் செய்யக்கூடிய பணி. அதைச் செய்யாமலிருக்கின்ற வரைக்கும் எங்கள் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு நடுத்தெருவில் நிற்பார்கள்.

சர்வதேச அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் அரசியலைக் கையாளக் கூடிய தமிழ் அரசியல் தரப்புகள் மிகக்குறைவு. கடந்த 2015இல் சர்வதேச விசாரணை வேண்டும், காலஅவகாசம் வழங்கக்கூடாது என்று வடமாகாணசபை நிறைவேற்றினாலும், அந்தத் தீர்மானத்தை குறிப்பிட்ட அரங்கிலே வந்து பதிவு செய்யாமல், குறிப்பிட்ட நாடுகளுக்குக் கொடுக்காமல், மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்குக் கூட கொடுக்கவில்லை. இந்தத் தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பின்புதான் வடமாகாண சபையின் இந்தத் தீர்மானங்களை சிவாஜிலிங்கம் கொண்டு சென்று எங்களின் கண்ணுக்கு முன்னால் கொண்டு சென்று கொடுத்தார். இதெல்லாம் ஒரு நாடகம். நாங்கள் 2010இலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு இனத்துக்குத் துரோகம் இழைக்கிறது என்ற கருத்தை கூறிக்கொண்டு வந்துள்ளோம். ஆனால் அன்றைக்கு எங்கள் மக்கள் அந்தக் கருத்தை விளங்கிக் கொள்ளவில்லை. இன்றைக்கும் தமிழ் மக்களிடம் பெயரெடுக்கும் முயற்சிக்காக சர்வதேச விசாரணை வேண்டும் என்று நடிக்கின்றார்களே ஒழிய, உண்மையில் சர்வதேச விசாரணைக்குக் கொண்டு செல்வதற்கு நிர்பந்திப்பதற்கு அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கத் தயாரில்லை என்பதுதான் உண்மை. அதை காலப்போக்கில் எங்கள் மக்கள் அறிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அண்மையில் தமிழ்த்தந்திப் பத்திரிகைக்குக் கூட அச்சுறுத்தல் விடுத்திருப்பதாக அறிந்தேன். அதை நான் ஜெனீவா அமர்வில் பதிவு செய்யவுள்ளேன். இன்றைய நிலையில் அரசு விரும்புகின்ற ஊடகங்கள் எதையும் எழுதலாம். அரசு சார்பாக தமிழ் மக்கள் மட்டத்தில் பச்சைப்பொய்யை கொண்டு செல்லும் ஊடகங்கள் எதைப்பற்றியும் எழுதலாம், போராளிகளைப் பற்றி என்னத்தையும் எழுதலாம், புகழ்ந்தும் எழுதலாம், குறைத்தும் எழுதலாம். இராணுவத்தை மிக மோசமாகக் கண்டிக்கலாம். அவையெல்லாம் மக்கள் மட்டத்தில் அங்கீகாரம் பெறுவதற்கு அவர்கள் எதையும் செய்யலாம். ஆனால் உண்மைக்கு நேர்மையாக வேலை செய்வதற்கு, உறுதியாக வேலை செய்வதற்கு தயாராக இருக்கக் கூடிய ஊடகங்களுக்குத்தான் இந்த அனைத்துப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

உதாரணமாக சுமந்திரன் தமிழீழ விடுதலைப்புலிகளை ஞாபகப்படுத்தி எதையும் பேசலாம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதைச் செய்தால் நாங்கள் அடுத்தமுறை விசாரணைக்கு அழைப்புவரும். அதேமாதிரித்தான் ஊடகங்களும். இதை நாங்கள் விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும்.

## சம்பந்தன்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

என்று கூறிய சம்பந்தன், இன்று எந்த முகத்தை வைத்துக் கொண்டு மக்களை சந்திக்கப் போகின்றார்.

# தலவாக்கலை பகுதியில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை





**க.கிஷாந்தன்**

தலவாக்கலை லிந்துலை நகர சபைக்குட்பட்ட தலவாக்கலை நகரத்தில் காலாவதியான மற்றும் மனித பயன்பாட்டுக்கு உதவாத உணவு வகைகள் திண்பண்டங்கள், பேக்கரி உணவுகள் ஆகியன விற்பனைக்காக வைத்திருந்த பல வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக கொட்டகலை பொது சுகாதார அலுவலகத்தின் பொது சுகாதார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

மக்களின் நலன் கருதியும், இப்பிரதேசத்திற்கு வரும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் 08.03.2019 அன்று திடீர் சுற்றிவளைப்பு ஒன்று தலவாக்கலை நகரில் மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சுற்றிவளைப்பின் போது ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்கள் சில்லறை வர்த்தக நிலையங்கள் போன்றவற்றை சோதனையிடப்பட்டது. இதன்போது பலகடைகளில் காலாவதி அச்சிடப்படாத மற்றும் பாதுகாப்பான முறையில் பொதியிடப்படாத உணவுப்பண்டங்கள் இதன்போது அகற்றப்பட்டு மண்ணெண்ணெய் இட்டு அழிக்கப்பட்டன.

இந்த சுற்றிவளைப்பின் போது பல கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இச்சுற்றிவளைப்பிற்கு கொட்டகலை வைத்திய நிலைய பொதுச்சுகாதார உத்தியோகத்தர் மற்றும் தலவாக்கலை லிந்துலை நகர சபை சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இருந்ததுடன் தலவாக்கலை நகரிலுள்ள வெதுப்பகங்கள், உணவகங்கள், இறைச்சிக்கடைகள் உட்பட சில்லறைக்கடைகள் இவர்களால் சோதனையிடப்பட்டன.

# அதிக கட்டணம் அறவீடு

**சுஜீவன்**

பொது மக்களுக்கான அடிப்படை தேவைகளுள் ஒன்றான போக்குவரத்து சேவையினை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்கி வரும் இந்நிறுவனங்களினால் பொது மக்கள் பலவேறு சேவைகளை பெற்றுக் கொண்டு வருவதுடன் ஒரு சில சிரமங்களுக்கும் முகங்ணங்களை கட்டணங்களை அறவிடுவதனால் பொது மக்கள் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை நகரிலிருந்து சூழவுள்ள பிரதேசங்களுக்கு செல்ல நிலையான கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் ஒரு சிலர் பொது மக்களிடமிருந்து அதிக கட்டணங்களையே அறவிட்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே இவ்விடயம்



கொடுக்காமலில்லை.

அந்த வகையில் முச்சக்கர வண்டிகளும் பொது மக்களுக்கான பொது போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன . இருப்பினும் ஒரு சிலர் அதிக கட்டணங்களை பொது மக்களிடம் இருந்து அறவிட்டு வருவதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். குறிப்பாக தலவாக்கலை நகரில் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் ஒரு சில முச்சக்கர வண்டி சாரதிகளே இவ்வாறு அதிக கட்டணங்களை அறவிடுவதாக தெரிய வருகிறது . குறிப்பாக தமக்கு நன்கு பரீட்சயமான வர்களுக்கு ஒரு தொகையும் மற்றவர்களுக்கு வேறொரு தொகையும் அறவிடப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது வழமையான கட்டணங்களுக்கு பதிலாக அவரவர் நினைத்த கட்டதலவாக்கலை - லிந்துலை நகரசபை தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய விசாரனைகளை முன்னெடுத்த பொதுமக்களுக்கு நியாயமான போக்குவரத்து சேவையினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. தலவாக்கலை நகரில் சுமார் 500 முச்சக்கர வண்டிகள் பொது மக்களுக்கான போக்கு வரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை மலையகக்குதிகளில் பொது போக்குவரத்தில் ஈடுபடும் சகல முச்சக்கர வண்டிகளுக்கும் வாசிப்பு மாணி (ட்துணுஹ) பொருத்துவதற்கான நடவடிக்கையும் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்படுகிறது.



அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையில் உள்ளக மருத்துவப் பயிற்சியை நிறைவு செய்த வைத்தியர் ஆர்.சிஜானாவை வாழ்த்தி வழியனுப்பி வைக்கும் நிகழ்வு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கே.எம். அஸ்லம் தலைமையில் குறித்த வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து வைத்தியர்ஆர்.சிஜானாவை பாராட்டி பரிசில்களை வழங்கி வைப்பதை காணலாம்.

படம்: பைஷல் இஸ்மாயில்

# பேராதனை பல்கலைக்கழக இராமநாதன் விடுதி மாணவர்களின் ஒன்றுகூடல்

பேராதனை பல்கலைக்கழக இராமநாதன் விடுதியில் தங்கியிருந்த முன்னாள் மாணவர்களின் முப்பதாவது ஒன்றுகூடல் எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பி.ப 2.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

கொழும்பு 5, ஜோசப் பிரேஸர் வீதியில் அமைந்துள்ள பொலிஸ் அதிகாரிகளின் உணவகத்துக்கு அடுத்ததாகவுள்ள பொலிஸ் குடும்பங்களின் நலன்புரிச் சங்க மண்டபத்தில் ஒன்றுகூடல் இடம்பெறும். இராமநாதன் விடுதியில் தங்கியிருந்த ஆண்கள், பெண்கள் அனைவரும் தமது துணைவர்களோடு இந்நிகழ்வுக்கு அழைக்கப்படுகின்றனர். பேராதனை பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பட்டதாரியும், இந்நிகழ்வுக்கு விருந்தினராக அழைக்கப்பட முடியும். பழைய மாணவர்களின் சந்திப்பு, நினைவுகளை புதுப்பித்துக்கொள்ள அறிய தொரு சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளதென ஏற்பாட்டாளர்கள் சார்பில் அமரதாச குணவர்தன அறிவித்துள்ளார். மண்டபவாயிலில் நிகழ்வுக்கான நுழைவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதி விபரங்களுக்கு - அமரதாஸ குணவர்தன -011 2863129 /071 6810978 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ள முடியும்.

# மஸ்கெலியா நகரை அபிவிருத்தி செய்ய கோரிக்கை

**மஸ்கெலியா நிருபர்**

நடந்து முடிந்த பிரதேசசபை அமர்வில், மஸ்கெலியா பிரதேசசபை உறுப்பினர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றுகையில், மஸ்கெலியா நகர் மிகவும் பின்தங்கிய நிலையில் போய்கொண்டுள்ளது. அதற்கான அபிவிருத்தி பணிகளை, நாம் நமது காலகட்டத்தில் மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே ஹட்டன் மஸ்கெலியா பிரதான வீதியை, காட்டு மஸ்கெலியா தோட்ட வைத்தியசாலை அருகில், புதிதாக பாதை அமைக்கபட்டு அப்பாதை பெரிய நடுதோட்ட தேயிலை தொழிற்சாலையூடாக சமனெலிய வித்தியாலயம், இஸ்லாமிய பள்ளிவாசல், ஆலய வீதியினூடாக மஸ்கெலிய பேருந்து தரிப்பிடத்திற்கு வரும் பட்சத்தில்

வருடத்தில் 60 லட்சத்திற்கு மேற்பட்ட யாத்திரிகள் சிவனடிபாதமலைக்கு ஹட்டன் மஸ்கெலியா வீதியினூடாக வந்து செல்கின்றனர். அவர்களுக்கு மஸ்கெலியா நகரம் இப்போது தெரியாது. ஆகவே அவ்வீதியை செப்பனிட்டால் நகர் வர்த்தகர்கள் நன்மையடைவார்கள். அதேபோல் யாத்திரிகளின் நலன் கருதி, பெரிய நடுதோட்ட தேயிலை தொழிற்சாலைகள் கடந்த 30 வருட காலமாக மூடி கிடப்பதை திறப்பதன் மூலம் யாத்திரிகள் குறைந்தபட்சம் 3000 பேராவது அங்கு தங்கி செல்லலாம்.

அவ்வாறு செய்யுமிடத்து யாத்திரிகள் நலன் பேனப்படும். மேலும் சபைக்கு அதன் மூலம் வருமானம் கிட்டும். ஆகையால் இன்றைய ஆளுனர் மைத்திரி குனரட்ன அவர்கள் இதனை செய்ய முன்வந்துள்ளார். அவரை கொண்டு இந்த வேலைதிட்டத்தை முன்னெடுப்போம் என சபையில் கூறினார்.

அனைத்து உறுப்பினர்களும் இவரது கோரிக்கையை ஏகமனதாக ஏற்று அதன்படி 2019 இறுதிக்குள் ஆளுனர் மைத்திரி குனரட்ண ஆதரவில் இதனை செய்து முடிக்க உள்ளதாக ஏற்று கொண்டனர் என மஸ்கெலியா பிரதேசசபை உறுப்பினர் எஸ் சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார்.

# 40 வருடங்களாக திருத்தப்படாத வீதி

**மஸ்கெலியா நிருபர்**

சாமிமலை பகுதியில், மஸ்கெலியா பிலான்டேசனுக்கு உரித்தான மினாக்கொலை தோட்டத்திற்கு செல்லும் சாமிமலை பிரதான வீதியில் இருந்து, 2 கிலோமீற்றர் தூரம் உள்ள பிரதான வீதியானது கடந்த 40 வருட காலமாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாக உள்ளது.

கடந்த பிரதேசசபை தேர்தலின் போது, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ் அவர்கள் அவ்வீதியை செப்பனிடும் முகமாக, இதற்கு தேவையான கற்கள் கொண்டு வந்து குவித்ததுடன் பெயர் பலகையும் இணைத்து, வைபவ ரீதியாக அடிகலும் நாட்டப்பட்டது.

இருந்த போதும் அவ்வீதியானது இதுவரை காலமும் செப்பனிடபடாத நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் அங்குள்ள பாடசாலைமாணவர்கள், மற்றும் முதியவர்கள், நோயாளிகள், கர்ப்பினி தாய்மார்கள், அனைவரும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகுகின்றனர்.

மேலும் செப்பனிடபடவிருந்த வீதியானது இன்னும் செப்பனிடபடாமைக்கான காரணம் ஏன் எனவும், ஊன்றிய கல் என்னவானது? ஏன் எமது பிரதேசத்திற்கு உரிதான பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை கவனத்தில் எடுக்கவில்லை? அவர்களும் தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் தானே? எனவும், தங்களை மாற்றாம் தாய் மனப்பான்மையில் பார்க்காமல் தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு சேவை செய்ய முன்வருமாறும் தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும் இதனை உடன் செப்பனிடப்படாவிடத்து யாரும் வாக்கு கேட்டு வர கூடாது என்று தோட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சமயத்தின் உட்கருத்துக்களை விளங்கி கொள்ளாதவர்களே மதம் மாறுகின்றனர்



**துறைநீலாவணை நிருபர்**

மனிதர்களுக்குள்ளும் உலக நாடுகளுக்கு இடையிலும் நான் என்ற அகந்தையும் தற்பெருமையும் நிறுத்தப்பட்டால் மாத்திரமே அதிகமான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என சைவப்பிரச்சாரகர் அகரம் செ.துஜியந்தன் தெரிவித்தார்.

வெல்லாவெளி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் மஹாசிவராத்திரி விசேட பூசை வழிபாடுகளும் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வும் ஆலயமுன்றலில் இடம்பெற்றபோது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மாவிற்கும் காத்தல் தொழிலைச் செய்யும் விஸ்ணுவிற்கும் அறியாமையால் ஏற்பட்ட நானென்ற அகந்தைச் செருக்கை சிவன் அழித்து சிவனோடு சீவன் ஐக்கியமாக இருக்கின்ற ஒரு ராத்திரிதான் மஹாசிவராத்திரியாகும்.

ஒவ்வொரு வருடமும் முறையாக கடைப்பிடிக்கும் போது நூறு அஸ்வமேதயாகம் செய்த பலன் கிட்டுவதுடன் இருபத்து நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக சிவராத்திரி விரதத்தை கடைப்பிடித்தால் பிறப்பில்லாத பெருவாழ்வு கிட்டும்.

மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் ஏமாற்றுவதிலும் அடுத்தவரை கெடுத்து குட்டிச்சுவராக்குவதிலும் கண்ணும் கருத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள். பொய், புரட்டு, ஏமாற்று, களவு, ஆசை, கோபம், பழிவாங்கும் உணர்ச்சியென எதிர்மறையான சிந்தனைகளுடனேயே அலைகின்றனர்.

இந்த கலியுகத்தில் நல்லவர்களைக் காண்பதும் கண்டுபிடிப்பதும் அவர்களோடு உறவு கொண்டாடுவது என்பது மிகக்கடினமான ஒன்றாகவே ஆகிவிட்டது. இதற்கு மனிதர்களிடம் இறைபக்தி குறைந்ததே காரணமாகும். சைவசமயத்தின் ஒவ்வொரு விழாக்களும் விரதங்களும் பண்டிகைகளும் ஒவ்வொரு தத்துவத்தை விளக்கிநிற்கின்றது. சைவசமயத்தின் உட்கருத்துக்களை விளங்கிக் கொள்ளாதவர்களே மதம் மாறுகின்றனர்.

எமது உள்ளத்தில் எழும் நான் என்ற அகந்தையை தற்பெருமையை சிவன் நாமம் உச்சரித்து இல்லாதொழிக்கவேண்டும். எம் உள்ளத்தின் அழுக்கை கழுவ வேண்டுமானால் அனைவரும் சிவநாமம் சொல்லி பிறப்பில்லா பெரு வாழ்வுக்கு வழிதேட வேண்டும் என்றார்.

# ஊடகவியலாளர் ஸாகிருக்கு சேவை அதிஉயர் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிப்பு



லங்கா சாதனையாளர் மன்றம் விஸ்வம் கெம்பஸுடன் இணைந்து நடாத்திய சிறந்த சேவையாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு டாக்டர் ஏ.பீ.ஜே.அப்துல் கலாம் அதிஉயர் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கும் விழா லக்ஷ்மன் கதிர்காமர் லைட்ஹவுஸ் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

லங்கா சாதனையாளர் மன்றம் மற்றும் டாக்டர் அப்துல் கலாம் கல்லூரியின் முகாமைத்துவ, தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றின் தலைவரும் விஸ்வம் கல்லூரியின் தவிசாளருமான பேராசிரியர் டாக்டர் ஏ. டெக்ஸ்டர் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இந்தியப் பேராசிரியர், பத்மசிறி டாக்டர். விஜயகுமார் எஸ். சாஹ் மற்றும் அதிதிகள் முன்னிலையில் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஸாகிர் சேவை அதி உயர் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

படமும் தகவலும் - இஸட்.ஏ.றஹ்மான் ஓலுவில்




# ஆட்சியில் இருந்தால் எங்கள் ஸ்டைலே வேறு: விஜயகாந்த் மகன் பிரபாகரன் பேச்சு



கடந்த 2011 தேர்தல்போல் வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அனைவரும் விஜயகாந்தை நோக்கி வரும் நிலை ஏற்படும் என்று விஜயகாந்தின் மகன் பிரபாகரன் அரசியல் கூட்டத்தில் பேசினார்.

தேமுதிக தலைவர் விஜய்காந்தின் மகன் பிரபாகரன் தீவிர அரசியலில் இறங்கியுள்ளார். தருமபுரியில் நடந்த தேமுதிக கூட்டத்தில் அவருக்கு பெரிய வரவேற்பு கொடுக்கப்பட்டது.

கூட்டத்தில் பிரபாகரன் பேசியதாவது:

தர்மபுரிக்கு முதலில் பேச வந்தேன், ஆனால் கிருஷ்ணகிரியில் இருந்தே வரவேற்பு கொடுத்தார்கள். யாரெல்லாம் தேமுதிக ஓய்ந்துபோனது என்று சொன்னார்களோ அவர்கள் பதிலளிக்கும் வழியில் பொதுமக்களின் வரவேற்பு இருந்தது. வரும் வழியில் அனைவரிடமும் கைகொடுத்தேன். கிருஷ்ணகிரியில் பெருமையான விஷயம், அவர்கள் வரவேற்பின்போது கை நகம்பட்டு ரத்தம் வந்தது. அதை பெருமையான ஒன்றாக நினைக்கிறேன்.

எனக்கு வலியை மறந்து தொண்டர்களின் பாசமும் நேசமும் தெரிகிறது. இவ்வளவு வெயில் அடித்தும் கட்டு குலையாமல் கூட்டமாக இருக்கிறீர்கள். கேப்டன் ராணுவக்கட்டுப்பாடு கொண்ட கட்சியை உருவாக்கி இருக்கிறார் என்று அம்மா சொல்வார்கள். அதை இங்கு பார்க்கிறேன்.

சூரியன் சுட்டெரித்தாலும், இலைகள் என்ன செய்தாலும் முரசு மாதிரி இருக்கும் இந்த கூட்டத்தை பார்க்கும்போது. எவ்வளவு அடித்தாலும் முரசிலிருந்து சத்தம்தான் வரும். தேர்தல் வரும்போது முரசின் சத்தம் எப்படி இருக்கும் என்பதை மட்டும் எல்லோரும் பாருங்கள்.

வரும்போது அப்பாகிட்ட சொல்லிவிட்டுத்தான் வந்தேன் தைரியமா போய்ட்டு வா என்று சொன்னார். நான் தைரியமா போவேன் ஏனென்றால் நான் உங்கள் மகன் என்று சொன்னேன். அங்கு தொண்டர்களைப் போய் பார் உனக்கு இன்னும் தைரியம் தானாக வரும் என்று அப்பா சொன்னார். நிறைய தைரியமா இருக்கேன்.

நம்ம கட்சியை யாராலும் வீழ்த்த முடியாது. லட்சம்பேர் வந்தாலும் தேமுதிகவில் ஒரு செங்கலைக்கூட நகர்த்த முடியாது. ஒரு கட்சி வளர வளர வயதானவர்கள் மட்டும் இருந்தால் ஓய்ந்துப்போய்விட்டது என்று கூறலாம். ஆனால் எத்தனை இளைஞர்கள் உற்சாகமாக வருகிறீர்கள். இதைப் பார்க்கும்போது வேட்டியை மடித்துக்கட்டி இறங்கும் உற்சாகம் எனக்கு வருகிறது.

தமிழகத்தை பார்த்து கேலி பேசிய காலம் உண்டு. எல்லோரும் சொல்வார்கள் தமிழ்நாடு ஒரு சிஎம் இல்லாத அனாதை மாநிலமாக உள்ளது என்று. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஜல்லிக்கட்டு பிரச்சினைக்காக இளைஞர்கள் நீங்கள் ஒன்று திரண்டீர்கள்.

மற்றவர்கள் தமிழகத்தை கேலி செய்தாலும் ஜல்லிக்கட்டுக்கு போராட்டத்துக்குப்பின் திரும்பிப்பார்த்தார்கள். ஜல்லிக்கட்டுக்கு எப்படி எல்லோரும் ஒன்றாக சேர்ந்தீர்களோ, அதேபோல் வருகின்ற தேர்தலில் அனைவரும் ஒன்றாக சேர்ந்து வரும் காலங்கள் தமிழகத்துக்கு சிறப்பாக அமையவேண்டும்.

தேர்தல் நேரத்தில் நான் சீக்கிரம் வருவேன் என்று தலைவர் விஜயகாந்த் சொன்னார். என்ன வதந்திகள் வந்தாலும் நம்பாதீர்கள். கேப்டன் சிங்கம் போல் கெத்தாக இருக்கிறார். தேர்தலுக்கு வருகிறேன் என்று சொல்லச்சொன்னார். வரும் தேர்தலிலும் தேமுதிக இல்லாமல் யாரும் ஆட்சி அமைக்க முடியாது. எப்படி யாரெல்லாம் 2011-ல் தேமுதிகவை நாடி வந்தார்களோ அதேபோன்று வரும் நிலைதான் 2019-லும் ஏற்படப்போகுது.

யாரெல்லாம் ஓட்டு இல்லை என்று கேலி செய்கிறீர்களோ, அவர்கள் எல்லாம் கேப்டன் இல்லாமல் ஆட்சி இல்லை எனும் நிலை இன்னும் இரண்டு மூன்று மாதத்தில் சொல்வார்கள். இதை நான் திமிறாக சொல்கிறேன், ஆணவத்தோடு சொல்கிறேன், தேமுதிக தொண்டனாக சொல்கிறேன். ஏனென்றால் எங்கள் வலிமை எங்களுக்கு தெரியும். தர்மபுரி கேப்டனின் கோட்டை. இங்கு மற்ற கட்சிக்காக உழைத்து வெற்றியை தேடித் தந்திருக்கிறோம்.

இது பொங்கல் விழா அரசு கடமைக்காக கொடுக்கிறார்கள் ஆனால் விஜயகாந்த் மனசார கொடுக்கிறார். இதே நாங்கள் அரசாங்கமாக இருந்தால் எங்கள் ஸ்டைலே வேறு. வேற மாதிரி நடத்துவோம் தமிழகம் முழுவதும். தேமுதிக ஒரு தேர் என்றால் விஜயகாந்த் அதில் ராஜா. மற்ற கட்சிக்காரர்களுக்கு நன்றி, ஏனென்றால் கடந்த தேர்தலில் எங்களுடன் இருந்து உங்கள் துரோகத்தை காட்டினீர்கள் இப்போது நாங்கள் விசுவாசத்தை காண்பிக்கிறோம். அது வரப்போகும் தேர்தலில் விஸ்வரூப வெற்றியாக இருக்கப்போவதை மட்டும் பாருங்கள்.

இவ்வாறு பிரபாகரன் பேசினார்.

## மிளிரும் நேர்மை

கடைக்காரர் இல்லாமலே லாபகரமாக ஒரு கடை கேரளாவில் இயங்கிவருகிறது. படுத்த படுக்கையாக இருக்கும் மக்கள் உருவாக்கும் பொருட்களை விற்பனைக்கு வைத்திருக்கும் கடையில், இதுவரை திருட்டு நடந்ததில்லை.

கன்னூரின் ஆழிக்கோடை ஒட்டிய கிராமம் வங்குலத்துவாயல். இங்கு கடந்த ஜனவரி 1-ம் தேதியில் இருந்து இந்தக் கடை இயங்கிவருகிறது. ஜனசக்தி அறக்கட்டளை என்னும் என்ஜிஓ இந்தக் கடையை நிர்வகித்து வருகிறது.



இதுகுறித்துப் பேசுகிறார் அந்த அமைப்பைச் சேர்ந்த சுகுணன். ‘முதலில் அந்த இடத்தில் கிராமத்து மக்களுக்குக் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தோம். அதற்குப் பிறகு தன்னார்வலர்கள் மூலம் வயதானவர்களுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் மருந்து வாங்கிக் கொடுக்கும் இடமாகப் பயன்படுத்தினோம். ஒவ்வொருவருக்கும் மருந்து வாங்க சுமார் 1000 ரூபாய் தேவைப்பட்டது. அவர்களில் சிலர் வித்தியாசமான, அழகிய வடிவங்களில் சோப், பவுடர்களை உருவாக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். ஆனால் அவற்றை விற்பனை செய்யத் தோதான இடம் இல்லை.

உடனே ஒரு யோசனை உருவானது. எங்களின் இடத்தில் இந்தக் கடையைத் தொடங்கினோம். இந்தக் கிராமத்தில் உள்ள அனைவரையும் எங்களுக்குத் தெரியும். அவர்களைப் பரிபூரணமாக நம்பினோம். கடைக்காரர் ஒருவரை நியமிப்பது குறித்து யோசிக்கவே இல்லை. சதானந்தன் என்னும் காய்கறி வியாபாரி தினந்தோறும் தனது கடையைத் திறக்கும்போது திறந்து, மாலையில் மூடிவிடுவார்.

இப்போது சக்கர நாற்காலியில் இருப்போர் மற்றும் நடக்க முடியாத 5 பேர் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்கிறோம். கல்ஃபில் பணியாற்றி முதுகு ஒடிந்து நாடு திரும்பிய கலீல், பிறந்ததில் இருந்தே நடக்க முடியாமல் இருக்கும் சுபைதா, சக்கர நாற்காலியிலேயே வாழ்க்கையை நகர்த்தும் சுகுமாரன், கால்பந்து விளையாட்டில் காயம் பட்ட வினோத் மற்றும் ஸ்ரேயா இல்லத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஆகியோர் பொருட்களை உருவாக்குகின்றனர்.

சோப்புகள், சலவை பொடிகள், சட்டை, மெழுகுவர்த்திகள், தேங்காய் ஒடு ஸ்பூன்கள் மற்றும் பேனாக்கள் ஆகியவற்றை விற்பனை செய்கிறோம்.

ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு 1000 ரூபாய்க்கு விற்பனை ஆனது. இப்போது சராசரியாக ரூ.750-க்கு வியாபாரம் நடக்கிறது. 10 நாட்களுக்கு ஒருமுறை பணத்தை எடுத்துவருவோம். இதுவரை பணம் திருடு போனதில்லை. கணக்கு இடித்ததில்லை. சொல்லப்போனால் 5 ரூபாயோ, 10 ரூபாயோ அதிகமாகத்தான் கிடைத்திருக்கிறது’ என்று நெகிழ்ச்சியுடன் சொல்கிறார் சுகுணன்.

## கமல் கட்சியில் 1,137 பேர் விருப்ப மனு



மக்கள் நீதி மய்யம் 40 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட உள்ளதாக கட்சித் தலைவர் கமல்ஹாசன் அறிவித்தார். 40 தொகுதிகளிலும் போட்டியிட விரும்புபவர்கள் விருப்ப மனுக்களை தாக்கல் செய்யலாம். கட்சி உறுப்பினராக இல்லாதவர்களும் விருப்ப மனு தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது.

விருப்ப மனு விநியோகம் கடந்த மாதம் 28-ம் தேதி தொடங்கியது. 2 நாட்களுக்கு முன்பு சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்துக்கு நேரில் வந்து, விருப்ப மனுக்களை கமல்ஹாசன் பெற்றுக்கொண்டார்.

பூர்த்தி செய்யப்பட்ட விருப்ப மனுக்கள் ரூ.10 ஆயிரம் கட்டணத்துடன் தாக்கல் செய்யப்பட்டன. 7-ம் தேதி மாலையுடன் விருப்ப மனு பெறும் நடவடிக்கைகள் நிறைவடைந்தன.

மக்களவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து 1,137 பேர் விருப்ப மனு தாக்கல் செய்துள்ளனர்.

கமல்ஹாசன் தங்களது தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து150-க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் விருப்ப மனு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரின் பரிசு மழை



பூத் கமிட்டி ஆரம்பித்து, வார்டு வாரியாக வாக்காளர்களைக் கவரும் பணிகளில் அதிமுகவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக மதுரை,தேனி, விருதுநகர் மக்களவைத் தொகுதி மற்றும் திருப்பரங்குன்றம் சட்டப் பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யும் நோக்கில், வாக்காளர்களைக் கவர அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் புதிய உத்திகளைக் கையாள்கிறார்.

மாநில ஜெயலலிதா பேரவைச் செயலாளராகவும் இருக்கும் அவர்,பேரவை சார்பாக மண்டல வாரியாக ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை நடத்தி வருகிறார். விழாவுக்கு வந்தவர்கள் வெறும் கையோடு செல்லக் கூடாது என்பதற்காக இளைஞர்களுக்கு பேன்ட் - சர்ட், பெண்களுக்கு ஹாட் பாக்ஸ், சேலை, குடும்பத் தலைவர்களுக்கு வேட்டி, பிறந்த குழந்தைகளுக்கு ஒரு கிராம் மோதிரம் என்று பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி வருகிறார்.

இதுகுறித்து அவரது ஆதரவாளர்கள் மேலும் கூறியபோது, மதுரையில் திருமங்கலம், சோழவந்தான், உசிலம்பட்டி, திருப்பரங்குன்றம் ஆகிய பகுதிகளில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா சைக்கிள் பேரணியை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நடத்தினார். அதில் கலந்துகொண்ட அனைவருக்கும் இலவச சைக்கிள் வழங்கினார். மதுரை கிழக்கு, மேலூர், திருமங்கலம், திருப்பரங்குன்றம் சட்டப்பேரவைத் தொகுதிகளில் மட்டும் 15 ஆயிரம் பேருக்கு சைக்கிள் வழங்கியுள்ளார்.

## மக்களவையா? மாநிலங்களவையா?- வைகோ சூசகம்

நான் மக்களவைக்கு போட்டியிடுவதா, மாநிலங்களவைக்கு போட்டிடுவதா என இப்போது கூற முடியாது என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

மதிமுக மகளிரணி சார்பில் உலக மகளிர் தின விழா திருச்சியில் நேற்று நடைபெற்றது. மகளிரணி மாநிலச் செயலாளர் டாக்டர் ரொஹையா தலைமை வகித்தார். இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வைகோ, பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திமுகவின் தலைமையிலான கூட்டணி மக்களவைத் தேர்தலில் 40 தொகுதிகளிலும், இடைத்தேர்தலில் 21 தொகுதிகளிலும் மகத்தான வெற்றி பெறும். தேர்தல் முடிவுக்கு பிறகு, கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்தும் வகையில் மாநில கட்சிகளும், காங்கிரஸ் கட்சியும் இணைந்து மத்தியில் ஆட்சி அமைக்கும்.

திமுக கூட்டணி உறுதியாக வெற்றி பெறும். நான் மக்களவைக்கு போட்டியிடுவதா, மாநிலங்களவைக்கு போட்டிடுவதா என இப்போது கூறமுடியாது.

துரைமுருகன் வீட்டை முற்றுகையிட்ட தேமுதிகவினரை எச்சரிக்கிறேன். நாங்கள் ஒரு கூட்டணியில் இருந்தால், அதற்காக உயிரைக் கொடுப்போம். துரைமுருகன் வீட்டை முற்று கையிடுவது போன்ற வேலையில் ஈடுபட்டு, விபரீதத்தை விலைக்கு வாங்க வேண்டாம் என்றார்.

## கணவனின் 3-வது மனைவியை கொலை செய்த 2-வது மனைவி; உதவி செய்த முதல் மனைவியின் மகள்கள்

கணவன் மூன்றாவதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டதால் அவரின் இரண்டாவது மனைவி, முதல் மனைவியின் 2 மகள்கள், மகளின் காதலன் உதவியோடு மூன்றாவது மனைவியைக் கொலை செய்துள்ளார். மும்பையில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இதுகுறித்துப் பேசிய பால்கர் பகுதி காவல் ஆய்வாளர் ஜிதேந்திர வன்கோட்டி, மும்பையின் நல்ல சோபரா பகுதியில் வசித்து வருபவர் சுஷில் மிஸ்ரா. 45 வயதான இவர் கான்ட்ராக்டராகப் பணியாற்றி வருகிறார். உத்தரப் பிரதேசத்தில் இவரின் முதல் மனைவி தனியாக வசித்து வருகிறார். இதற்கிடையே 2017-ல் பார்வதி மனே என்பவரை மிஸ்ரா இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

மிஸ்ரா, பார்வதி மற்றும் மிஸ்ராவுடைய முதல் மனைவியின் 2 மகள்கள் ஆகிய 4 பேரும் டான் லேன் பகுதியில் குடியேறினர்.

ஓராண்டுக்கு முன்னதாக மிஸ்ரா மூன்றாவதாக யோகிதா என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இருவரும் லிங்க் சாலையில் உள்ள அபார்ட்மென்டுக்குக் குடிபெயர்ந்தனர். இந்நிலையில் திருமணத்துக்குப் பிறகு மிஸ்ரா, பார்வதியின் வீட்டுக்கு வருவதில்லை என்று கூறப்படுகிறது. அதேபோல வீட்டுச் செலவுக்குத் தேவையான பணத்தையும் மிஸ்ரா சரியாகக் கொடுக்கவில்லை. இதனால் பார்வதி மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இதற்கிடையே பிப்ரவரி 28-ம் தேதி, மிஸ்ரா அலுவலக வேலைக்காக குஜராத் சென்றுள்ளார். யோகிதா தனியாக இருக்கும் நேரத்துக்காகக் காத்திருந்த பார்வதி, இந்த சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டார்.

மிஸ்ராவுடைய முதல் மனைவியின் இரு மகள்கள், மகளில் ஒருவரின் காதலனை அழைத்துக் கொண்டு யோகிதா இருக்கும் இடத்துக்குச் சென்றார் பார்வதி. கழுத்து நெரித்து யோகிதாவைக் கொலை செய்தனர். அனைவரும் சேர்ந்து போர்வையால் அவரின் உடலைச் சுற்றி, நல்ல சோபரா பகுதியில் உள்ள ஓர் இடத்தில் வீசிவிட்டுச் சென்றனர்.

அடுத்த நாள், உள்ளூர் மக்கள் யோகிதாவின் உடலைக் கண்டனர். காவல்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சிசிடிவி ஆவணங்களை ஆய்வு செய்த போது, ஆட்டோவில் யோகிதாவின் உடல் கொண்டுவரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு ஓடும் 4,000 ஆட்டோக்களை ஆய்வு செய்த காவல்துறையினர், ஆட்டோ ஓட்டுநரைக் கண்டுபிடித்தனர். அவரின் உதவியோடு பார்வதியும் மற்றவர்களும் பிடிபட்டனர் என்று காவல்துறை ஆய்வாளர் தெரிவித்தார்.

## மலர்ந்த மனிதநேயம்



அரிய வகை ரத்த கேன்சரால் பாதிக்கப்பட்ட 5 வயது சிறுவனுக்கு ஸ்டெம்செல் தானம் செய்வதற்காக இங்கிலாந்தில் 4,855 பேர் முன்வந்தனர். கொட்டும் மழையிலும் பொறுமையாக வரிசையில் நின்ற அவர்களை நெட்டிசன்கள் கொண்டாடி வருகின்றனர்.

இங்கிலாந்து, வோர்செஸ்டரைச் சேர்ந்த ஒலிவியா சேக்ஸல்பி மற்றும் ஜேமி லீ தம்பதியின் மகன் ஆஸ்கர் சேக்ஸல்பி லீ. 5 வயதான அவனுக்கு லுக்கீமியா வகையிலான அரிய வகை கேன்சர் ஏற்பட்டது. அவனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அழிந்துவரும் ஸ்டெம் செல்லுக்குப் பதிலாக அதேவகை புதிய ஸ்டெம்செல்களைப் பொருத்தினால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்று கூறினர். 3 மாதத்துக்குள் இந்த சிகிச்சை நடைபெற வேண்டும் என்றும் கெடு விதித்தனர்.

இதை அறிந்த உள்ளூர் மக்கள் சிறுவன் ஆஸ்கருக்கு உதவ முன்வந்தனர். வோர்செஸ்டரில் உள்ள பிட்மாஸ்டன் தொடக்கப் பள்ளியில், வார உறுதியில் கொடையாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக முகாம் ஒன்று நடத்தப்பட்டது. சமூக வலைதளங்களில் இது குறித்துப் பிரச்சாரங்கள் நடந்தன.

இறுதியில் ஆஸ்கருக்கு ஸ்டெம்செல்லைத் தானமாக வழங்க ஏராளமானோர் முன்வந்தனர். எதிர்பாராத விதமாக மழை கொட்ட ஆரம்பித்தது. ஆனாலும் அசராத கொடையாளிகள், பொறுமையாக வரிசையில் நின்றனர். ஸ்டெம்செல் தானம் செய்வதற்காக சுமார் 4,855 பேர் கலந்துகொண்டனர். இந்த சம்பவம் முன்னெப்போதும் இல்லாத சாதனையாகப் பார்க்கப்படுகிறது.

இதுகுறித்துப் பேசிய சிறுவனுன் தந்தை சேக்ஸல்பி, ஆரம்பத்தில் எங்களால் ஆஸ்கரைக் காப்பாற்ற முடியாது என்று சோர்ந்து போனோம். ஆனால் ஒவ்வொரு முறையும் அவனின் புன்னகையைக் காணும்போது எங்களால் முடியும் என்ற நம்பிக்கை வந்தது. ஆஸ்கரின் தைரியம் எங்களுக்கு தெம்பை ஊட்டியது.

அந்த நேரத்தில்தான் இன்னும் வலிமையானோம். ஒரு முறைகூட அவன் சோர்ந்து நாங்கள் பார்த்ததில்லை. அவனுக்காக இத்தனை பேர் ஒன்று கூடியது மிகுந்த நெகிழ்ச்சியை அளிக்கிறது என்றார்.


## பெண்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் சவுதியின் சர்ச்சை செயலி: நீக்க கூகுள் மறுப்பு

ஆப்ஷெர் என்ற சர்ச்சைகுரிய செயலியை தனது ப்ளே ஸ்டோரிலிருந்து நீக்க கூகுள் நிறுவனம் மறுத்துவிட்டது.

ஆப்ஷெர் என்ற செயலி, சவுதி அரேபியாவில் இருக்கும் ஆண்கள், பெண்களின் நடவடிக்கைகளை கண்காணிக்க உதவுகிறது. இந்த செயலி பற்றிய புகார்களைத் தொடர்ந்து அதை விசாரித்த கூகுள், ஒப்பந்தங்களை எந்தவிதத்திலு இந்த செயலி மீறவில்லை என்பதால், அதை ப்ளே ஸ்டோரிலிருந்து நீக்க முடியாது என தெரிவித்துள்ளது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த சில அரசியல் தலைவர்களும் இந்த செயலியை நீக்க வேண்டும் என நிர்பந்தித்திருந்தனர். இந்நிலையில், ஆப்பிள் நிறுவனம் ஆப்ஷெர் செயலியை ஆராய்ந்து வருகிறது. ஆனால் இன்னமும் ஆப்பிளின் செயலிகள் ஸ்டோரிலிருந்து ஆப்ஷெரை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கூகுள் மற்றும் ஆப்பிளின் செயல்பாடுகளும், பதில்களும் அதிருப்தி அளிப்பதாக அமெரிக்க கீழவை பிரதிநிதி ஜாக்கி ஸ்பையர் தெரிவித்துள்ளார். ஆப்ஷெரை நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த தலைவர்களில் இவரும் ஒருவர்.




சவுதி அரேபிய அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கும் ஆப்ஷெர், அடக்குமுறைக்கான செயலியாக செயல்படுவதாக பல பெண்கள் உரிமை அமைப்புகளின் விமர்சனங்களை சந்தித்துள்ளது. முதன்மையாக இந்த செயலி, சவுதி குடிமகன்கள், அரசின் சேவைகளை பெறுவதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பெண்களின், புலம் பெயர்ந்து வேலை செய்பவர்களின் நடவடிக்கைகளையும் அவர்கள் பாஸ்போர்ட் தகவல்களை வைத்து கண்காணிக்க உதவுகிறது.

அவர்கள் எங்கு பயணப்படுகிறார்கள், எவ்வளவு நேரப் பயணம் உள்ளிட்ட தகவல்களுடன் அவர்கள் எங்கு செல்ல வேண்டும், செல்லக் கூடாது என கட்டுப்பாடுகளையும் விதிக்கலாம்.

தமிழ்த்தந்தி
ஞாயிற்றுக்கிழமை 10.03.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

## அதிகாரப் பகிர்வுக்கு எதிரான சதித்திட்டத்தை முறியடிக்க வேண்டும்!

2009 இல் போர் முடிவுக்கு வந்ததும் வடக்கு மாகாண சபைக்கும் தேர்தல் நடத்தி அதையும் முதன்முதலாக இயங்க வைத்தார். சிங்களத் தரப்பில் இந்த மாகாண சபை முறைமைக்கு சில பேரினவாத சக்திகள் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வந்த சூழ்நிலையில் தமிழர் தரப்பின் நிலை என்னவாக இருந்தது என்பதையும் பார்ப்பது அவசியமானது. புலிகள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த அதேநேரத்தில், தனிநாட்டுக்கான போரில் அவரது இன்னொரு சகாவான யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனையும் சுட்டுப் படுகொலை செய்தனர். இருந்தும் தமிழர் விடுதலை கூட்டணி சந்திரிக காலத்தில் 2000 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதியை ஆதரித்தது. அந்த நேரத்திலும் இந்த தீர்வுப்பொதியைத் தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் என்று கருதப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தை புலிகள் தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலை செய்தனர். அதன் பின்னர் அந்தத் தீர்வுப்பொதி நாடாளுமன்றத்துக்கு வந்த நேரம் புலிகளின் உத்தரவுக்கிணங்க தமிழர் விடுதலைக் கூட்டணி சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஐ.தே.கவுடனும், ஜே.வி.பியுடனும் இணைந்து அதற்கு எதிராக வாக்களித்து அதைத் தோற்கடித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி உள் முரண்பாடுகளால் செயலிழந்து போன பின்னர், புலிகள் தமது தேவைகள் சிலவற்றை நிறைவேற்றும் நோக்குடன் தமிழரசுக் கட்சி தலைமையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கினர். இரா.சம்பந்தன் தலைமையிலான இந்த அமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்ததுடன், மாகாண சபை முறைமையையும் நிராகரித்து வந்தது. ஆரம்பத்தில் 1948 இல் கட்சி உருவான காலம் முதல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் சமஸ்டி கோரி வந்த தமிழரசுக் கட்சி, பின்னர் 1986 இல் தனிநாடு கோரி தீர்மானம் நிறைவேற்றியது. பின்னர் 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்து மாகாண சபை முறையை ஏற்றுக் கொண்டது. பின்னர் புலிகளின் பயமுறுத்தல் காரணமாக அதைக் கைவிட்டது. ஆனாலும் புலிகள் 2009 இல் அழிக்கப்பட்ட பின்னரும் சம்பந்தன் சில சந்தர்ப்பங்களில் மாகாண சபை முறை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்று கூறி வந்துள்ளார். அதன் மூலம் கிடைத்த ஒரேயொரு தீர்வையும் கூட இல்லாமல் செய்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை கங்கணம் கட்டி வந்தது தெளிவானது. அதேநேரத்தில் 2015 இல் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு விருப்பமான ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும், இரு தரப்பினரதும் அந்நிய சக்திகளின் ஆலோசனைக்கிணங்க ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும் சம்பந்தன் கூறத் தொடங்கினார். அப்படியானால் அவர் கூறும் தீர்வுதான் என்ன? ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி முன்வைத்த சமஸ்டியா? ஆனால் அவரது நெருங்கிய சகபாடி எம்.ஏ.சுமந்திரன் தாம் சமஸ்டி அமைப்பொன்றைக் கோரவில்லை என்றும் கூறுகின்றார். அப்படியானால் கூட்டமைப்பு முன்வைக்கும் தீர்வு என்ன? ஏன் அதைப் பகிரங்கப்படுத்தாமல் ஒளிவுமறைவாக வைத்திருக்கின்றனர்? இந்தச் சூழ்நிலையில் வட மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணம் என்பனவற்றின் ஆயுள் காலம் முடிவடைந்து ஒன்றரை வருடங்களாகியும் அவற்றுக்கு தேர்தல் நடத்தாமல் ஐ.தே.க. அரசாங்கம் இழுத்தடித்து வருகின்றது. அதன் பின்னர் வட மாகாணம் உட்பட மேலும் சில மாகாண சபைகளின் ஆயட்காலமும் முடிவடைந்து விட்டது. அவற்றைப் பற்றியும் அரசாங்கம் கவலைப்படவில்லை. முடிவடைந்த மாகாண சபைகளுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தும்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் பல தடவை வலியுறுத்தியும் ரணிலின் அரசாங்கம் செவிமடுத்ததாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் மக்களின் வேண்டுகோளை மட்டுமின்றி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் வேண்டுகோளையும் ஐ.தே.க. அரசாங்கம் உதாசீனம் செய்கிறது. மாகாண சபை முறை விசேடமாக தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக கொண்டு வரப்பட்டது என்ற ரீதியில் அவற்றுக்கான தேர்தல்களை உடன் நடத்தும்படி கோர வேண்டிய பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உரியதே.

ஆனால் கூட்டமைப்பு எதிர்க்கட்சியில் இருந்தபோதும் அந்தக் கோரிக்கையை முன் வைக்கவில்லை, இப்பொழுதும் வைக்கவில்லை. பதிலாக, தேர்தல் தோல்விப் பயத்தில் மாகாண சபைகளின் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வரும் ஐ.தேக. அரசைப் பாதுகாப்பதில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. ஏற்கெனவே இருக்கும் அதிகாரப் பகிர்வு அலகான மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் ஐ.தே.க. அரசும், அதற்கு ஒத்துழைக்கும் தமிழ் கூட்டமைப்பும், புதிய அரசியல் அமைப்பு ஒன்று வந்து தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் என மக்களை நம்ப வைக்க முயல்கின்றனர். புதிய அரசியல் அமைப்பு ஒன்று வரப்போவதில்லை என்பதும், அதன் மூலம் இனப் பிரச்சினை தீரப்போவதில்லை என்பதும் சிறு பிள்ளைக்குக்கூடத் தெரிந்த விடயம். உண்மை என்னவெனில், பல குறைபாடுகள் இருந்தபோதும், நடைமுறையில் இருக்கின்ற மாகாண சபை முறைமையையும் இல்லாமல் செய்து, முற்றுமுழுதான ஒற்றையாட்சி முறையையே நடைமுறைப்புடுத்த வேண்டும் என்பதுதான் ஐ.தே.கவினதும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் திட்டம். ஏனெனில் இலங்கையின் வரலாற்றில் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்ட அத்தனை முயற்சிகளையும் ஐதே.கதான் குழப்பி வந்திருக்கிறது. அவர்களது திட்டத்துக்கு உடந்தையாகத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் 'மாகாண சபை முறை தமிழர்களுக்கான தீர்வு அல்ல' என்ற போர்வையில் மாகாண சபை முறைமையை நிராகரித்து வருகின்றது. இந்த இரு பகுதியினரதும் நோக்கம் என்ன என்பது விளங்கிக்கொள்ள முடியாதது அல்ல. தமிழர்களை ஒற்றையாட்சியின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் சிங்கள பேரினவாதக் கட்சியான ஐ.தே.கவின் நோக்கம். இனப் பிரச்சினை தீர்ந்து போகாது 'பிச்சைக்காரனின் புண்'ணாக இருக்க வேண்டும் என்பதுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம். எனவே இருவரதும் நோக்கங்கள் ஒரே நேர்கோட்டில் பயணிக்கின்றன. எப்பொழுதும் ஏமாளிகளாக இருககின்ற தமிழ் மக்கள்தான் தாம் எந்தக் கோட்டில் (பாதையில்) பயணிப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

# மகளிர் தினமும் மனித உரிமையும்

வீட்டிற்குள்ளே இருந்த பெண் சமுதாயம் தற்போது வானில் பறந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றி தினமே மகளிர் தினமாகும். ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் தான் மகளிர் தினம் பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண் வயிற்றில் பிறந்து, பெண்ணால் வளர்க்கப்பட்டு, பெண்ணோடு வாழ்பவர்கள்தான் எனினும், பெண்ணின் துயரங்களையும், விருப்பங்களையும், உணர்வுகளையும் ஆண்கள் தெரிந்து கொள்வதில்லை. தெரிந்து கொள்ள இந்த ஆணாதிக்க சமூகம் விரும்புவதுமில்லை. இந்த நிலையை மாற்றி பெண்ணுரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மார்ச் -8, 1857இல் நியூயார்க்கில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள் தோன்றி போராட்டங்களை முன்னெடுத்தன. நாட்டில் இயற்றப்பட்ட புரட்சிகர தீர்மானங்களும், சட்டத்திருத்தங்கள் மூலமான உரிமைகளையும் முன் வைத்து போராட்டங்கள் நடத்தப்பட்டது.

பொருளாதார விடுதலைதான் பெண்விடுதலையின் முதல்படி. அப்படிப் பார்த்தால் முன்னெப்போதைக் காட்டிலும் பெண்கள் படிப்பதும், வேலைக்குப் போவதும் அதிகரித்திருக்கிறது. இந்தப் பொருளாதார சுதந்திரம் ஒரு பெண் என்ற முறையில் கூடுதல் சுதந்திரத்தை இவர்களுக்கு வழங்கியுள்ளதா? அல்லது பெண்ண்டிமைத்தனம் புதிய வடிவங்களில் இவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறதா? இந்த அடிமைத்தனத்தை இன்றைய தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்கின்ற மறுகாலனியாக்கச்சூழலில் பெண்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள்? என்றால் அங்கே ஒரு கேள்விக்குறிதான். உலக மகளிர் தினத்தை வேண்டுமானால் நாம் எளிமையாகக் கொண்டாடலாம். ஆனால் இந்த உலக மகளிர் தினம் கொண்டாடுவதற்கு காரணமான போராட்டமும், அதன் வெற்றிகளும் அவ்வளவு எளிதாகக் கிட்டியதல்ல என்றுதான் நாம் சொல்லவேண்டும்.

நிலையும் இருந்து வந்த்து. இந்த நிலையில் 1857ம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில் பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது.

ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. இதனால் பெண்கள் துயர சாகரத்துள் மூழ்கி கிடந்தனர். பின்னர் கொதித்தெழுந்தனர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் வழங்கக்கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு செவி சாய்க்கவில்லை. இதனால் அமெரிக்கா முழுவதும் கிளர்ந்தெழுந்த பெண் தொழிலாளர்கள், 1857ம் ஆண்டு மார்ச் 8ம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர். இங்கே பெண் வளம் ஒடுக்கப்பட்டது. அதன் பிறகு 1907ம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராடத் தொடங்கினர். 1910ம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடந்தேறியது. இதில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு காட்டினர். இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜேர்மனி கம்யூனிஸ்ட் தலைவர் கிளாரே செர்கினே, மார்ச் 8ம் திகதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை என்பது வருந்ததக்கது. 1920ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா, ஆண்டுதோறும் மார்ச் 8ம் திகதி உலக மகளிர் தினத்தை கொண்டாட

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்



உலக மகளிர் தினம் உருவான பின்னணியை சற்று பார்த்தால் இப்போதுதான் அவர்கள் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. அடிமைத்தனம் எங்கு இருக்கிறன்றதோ அங்குதான் சுதந்திரத்திற்கான தேடல் இருக்கும். பெண் அடிமைத்தனம் எங்கு இருக்கிறன்றதோ அங்குதான் பெண் சுதந்திரம் மற்றும் பெண்கள் எழுச்சி தேவைப்படுகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமஉரிமை மையமாக வைத்து கி.பி. 1909-ல் அமெரிக்க சோசலிஸ்ட் கட்சியினர் முதல் முதலாக மகளிர் தினத்தை பிப்ரவரி மாதம் 28ம் தேதி கொண்டாடினர். இதன் முடிவாக 1911, மார்ச் 19 அன்று ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றம் சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் அரசு அலுவலகங்கள் முன் திரண்டு வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் சமஉரிமை அளிக்கவேண்டும் எனப் போராட்டம் நடத்தியுள்ளனர். இதனால் ஏற்பட்ட கிளர்ச்சியினால் ஐக்கிய ராஜ்யம், ருஷ;யா போன்ற நாடுகளில் வேறுபட்ட நாட்களில் 1917 வரை இவ்வாறான குரல்கள் ஒலித்து வந்தன.

1917-க்குப்பின் உலக மகளிர் அமைப்புகள் ஒன்று கூடி மகளிர் தினத்தை மார்ச்-8 என்று கட்டமைத்தனர். இத்தகைய பெண்கள் போராட்டங்களால் 1945-ல் சான் பிரான்ஸிஸ்கோவில் ஐக்கிய நாடுகள் ஒன்றுகூடி பெண்கள் சமஉரிமை (பநனெநச நஙரயடவைல யள ய கரனெயஅநவெயட டரஅயண சடிபாவள) என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த நிலையில் 18ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். வீட்டிற்குள்ளேயே பெண்ணை பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதரை சிறை பிடிப்போம் என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவித்துவங்களில் அன்றைய கால தமிழ் பெண்களின் நிலைமையினை நன்றாக உணரமுடிந்த்து. இதற்கு மேலைத்தேய பெண்களும் இதற்கு விதிவிலக்கு இல்லை என்ற

வேண்டும் என்று பிரகடனம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து 1921ம் ஆண்டு முதல் மார்ச் 8ம் திகதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

1975ம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐ.நா பிரகடனப்படுத்தியது. தற்போது ரஷ்யா, உக்ரைன், உஸ்பெஸ்கிஸ்தான், வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஆர்மேனியா, அஜர்பைஜான், பெலாரஸ், புர்கினியா பெசோ, கம்போடியா, கியூபா, எரித்திரியா, கஜகஸ்தான், மால்டோவா, மங்கோலியா, மான்டேநெக்ரோ, தஜிகிஸ்தான், துருக்மெனிஸ்தான் ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்துக்கு விடுமுறை வழங்கப்படுகிறது என்பது பெண்கள் போராட்டத்திற்கு கிடைத்து மாபெரும் வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது. மென்மைக்கு ஒப்பானது தான் பெண்மை என்று சொல்லி சரித்திரத்திரத்தில் பெண்களின் திறமைகளை பல்வேறு இடங்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தாலும் கூட அதற்கு சற்றும் சளைக்காமல் அணு முதல் அண்டம் வரை தமது திறமைகளை நிலைநாட்டிய வண்ணமே அன்று முதல் இன்றுவரை பெண் இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

### அன்னை தெரேசா

ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகஸ்டு 26, 1910 அன்று ஒட்டோமன் சாம்ராஜ்யத்தின் அஸ்கப் என்ற அன்றைய காலத்தில் அழைக்கப்பட்ட மேசிடோனியக் குடியரசின் ஸ்கோப்ஜி)இல் பிறந்தார். ஆகஸ்டு 26 ஆம் தேதி பிறந்த போதிலும், அவர் திருமுழுக்குப் பெற்ற ஆகஸ்டு 27 ஆம் தேதியையே தனது உண்மைப் பிறந்தநாளாகக் கருதினார். 1950 அக்டோபர் 7 ஆம் தேதி, பிறர் அன்பின் பணியாளராக பிற்காலத்தில் உருவெடுக்கப் போகும் சபையை துவக்க தெரெசாவுக்கு அனுமதி கிடைத்தது.

உண்ண உணவற்றவர்கள், உடுத்த உடையற்றவர்கள், வீடற்றவர்கள், முடமானவர்கள், குருடர்கள், தொழு நோயாளிகள் போன்றோர்களையும், தங்களை சமூகத்திற்கே தேவையற்றவர்களெனவும், அன்பு செய்யப்படாதவர்களெனவும், கவனிக்கப்படாதவர்களெனவும் எண்ணிக்கொண்டிருப்பவர்களையும், சமூகத்திற்கே பெரும் பாரமென்று எண்ணப்பட்டு அனைவராலும் புறக்கணிக்கப்பட்டவர்களையும் கவனித்தலே தன் வாழ்க்கையின் தலையாய கடமையாக எண்ணி வாழ்ந்த செம்மனச்செம்மல் தான் உலக மக்களின் அன்னை ஷஅன்னை திரேசா

அடுத்ததாக பெனாசீர் பூட்டோவை எடுத்துக் கொண்டால் பாகிஸ்தானில் மத்திய-இடது அரசியல் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக இருந்த ஒரு பாகிஸ்தான் அரசியல்வாதியாவார். பூட்டோ, தமது 35வது வயதில், 1988ல் முதன்முறையாக பிரதம மந்திரியாக பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. பூட்டோ, ஒரு முஸ்லீம் அரசை தலைமை தாங்கி நடத்தி செல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார். அவர் பாகிஸ்தானின் பிரதம மந்திரியாக இருமுறை (1988-1990; 1993-1996) பதவி வகித்தார். பல இன்னல்களைச் சந்தித்த பூட்டோ பாகிஸ்தானின் முதல் பெண் பிரதம மந்திரி என்பது குறிப்பிடத்தக்கது.

### தற்கொலைப் போராளி வீரமங்கை குயிலி

தற்கொலைப் போராளிகளின் போராட்ட வடிவம் விஸ்வரூபம் எடுத்து இரண்டாம் உலகப் போரில் தான் என எழுதப்பட்ட வரலாறுகள் சான்று பகிர்கின்றது. ஜேர்மனிக்கும் ஜப்பானுக்கும் இடையே நீர்மூழ்கிக் கப்பலில் நடைபெற்ற யுத்தத்தில் ஜப்பானிய வீரர்களின் தற்கொலைப் போராட்டம் தான் இதற்கான ஆரம்பமாக கருதப்படுகிறது. ஆனால் இரண்டாம் உலகப்போர் நடைபெறுவதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னரே பிரித்தானியர்களை எதிர்த்துத் தமிழ் மண்ணில் நடைபெற்ற போர்க்களத்தில்தான் முதன்முதலாக 'தற்கொலைப் போராளி' உருவானார் என்றும் அந்த ஈகத்துக்குரிய வீரமங்கை குயிலி என்றும் வரலாறுகள் கூறுகிறது.

குயிலி பெண் என்பதால் மட்டுமல்ல, சேரியில் பிறந்தவர் என்பதாலும் வரலாற்றின் பக்கங்களில் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார் என்று மறைந்து நிற்கும் வரலாறுகள் கூறுகிறது. தமிழ்நாட்டின் சிவகங்கை மண்ணை அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விரட்டிட வீரமங்கை வேலு நாச்சியார் சபதம் நிறைவேற்றிடத் தன்னையே ஈந்து உலகின் முதல் தற்கொலைப் போராளியாய் அழிந்து போன குயிலியின் வீரம் கூட இரட்டடிப்பு செய்துள்ளார்கள் உலகில் தற்கொலைப் போராளிகளுக்கான விதை தமிழ்மண்ணில் தான் விதைக்கப்பட்டது. பெண்கள் என்றால் நுகர்வுப் பொருளாகக் கருதும் மனிதர்களிடையே, சரித்திரப் பெண்கள் சாதனைப்பெண்கள் என்று போற்றும் வரலாற்றில் குயிலியின் வரலாறு புதிய பார்வையை வழங்கிநின்றது. பெண்கள் நாட்டின் கண்கள் என்றால் அது வெற்றுப்பேச்சு அல்ல என்பதை குயிலி நிரூபித்துக்காட்டியுள்ளார்.

### புளோரன்ஸ் நைட்டிங்கேல்

நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதி. போரில் காயம்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டவர். தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் இவரே முதலில் ஆரம்பித்து வைத்தவர் என்பது பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட்டது .விளக்கேந்திய சீமாட்டி, கைவிளக்கேந்திய காரிகை (வுடந டுயனல றடிவா வாந டுய அணீ) என்று அழைக்கப்பட்டார். இவர் ஒரு எழுத்தாளரும், புள்ளியியலாளரும் ஆவார்

துருக்கியிலிருந்த போது நவம்பர் 29 1855 அன்று இவரது பணியினைக் கௌரவிக்கும் முகமாக நடந்த கூட்டத்தில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவரெழுதிய தாதியியற் குறிப்புகள் என்னும் 139 பக்கங்களுடைய புத்தகம், நைட்டிங்கேல் பயிற்சிக்கூடத்திலும் ஏனைய தாதியர் பயிற்சிக்கூடங்களிலும் பாடத்திட்டத்தின் முக்கிய பகுதியாக அமைந்த்தோடு மட்டுமல்லாமல் தாதியர் சேவையை நிறுவி அதை முன்னேற்றும் பணியிலேயே அவர் தனது வாழ்நாளைக் கழித்த பெண்மணியும் ஆவார்

1869ல் எலிசபெத் பிளாக்வெல் என்பவருடன் இணைந்து பெண்களுக்கான மருத்துவ கல்லூரியொன்றையும் தோற்றுவித்த்தோடு. 1882 ஆம் ஆண்டளவில் நைட்டிங்கேல் தாதியர் பரவலாகச் சேவை புரிந்தனர். புளோரன்ஸ் நைட்டிங்கேல் 1883 இல் விக்டோரியா அரசியிடமிருந்து அரச செஞ்சிலுவை விருது பெற்றார்.

1907 இல் ஓர்டர் ஒவ் மெரிட் எனும் விருதைப்பெற்ற முதல் பெண்மணி புளோரன்ஸ் நைட்டிங்கேல் என்பது குறிப்பிடத்தக்கது.

### மேரி கியூரி

மேரி க்யூரி புகழ்பெற்ற போலந்து மற்றும் பிரஞ்சு வேதியியல் அறிஞர் ஆவார். இவர் போலந்தில் வார்சா எனும் இடத்தில் 1867 இல் பிறந்தார். இவர் வேதியியல் மற்றும் இயற்பியலுக்காக நோபல் பரிசை முறையே 1911, 1903 ஆம் ஆண்டுகளில் பெற்றார். ரேடியம், பொலோனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டுபிடித்த்து என்பது குறிப்பிடத்தக்கது.

### மேரி கொல்வின்

எங்கெல்லாம் அரசப் படைகளின் தாக்குதலில் அப்பாவிகளின் அபயக் குரல் கேட்கிறதோ... அங்கெல்லாம் தனது இருப்பைப் பதிவு செய்த பத்திரிகையாளர் மேரி

13 ஆம் பக்கம் பார்க்க....

# புதிய அரசியல் அமைப்பும் தமிழ்த் தேசிய சக்திகளும்

**நக்கீரர்**

இடைக்கால அறிக்கையில் சில முன்னேற்றகரமான விடயங்கள் இருக்கின்றன ஆனால் அவை ஒரு முடிவல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். கடந்த வாரம் தமிழரசு கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விழிப்புணர்வுக் கூட்டத்திலேயே சம்பந்தன் இதனை தெரிவித்திருக்கின்றார். இதிலிருந்து சம்பந்தன் தலைமையிலான அணியினர் தங்களது வேலையை ஆரம்பித்துவிட்டனர் என்பது தெளிவு. சம்பந்தன் தனதுரையில் பிறிதொரு விடயத்தையும் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, புதிய அரசியலமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பாண்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், மக்களின் விரும்பத்தினை அறிந்து கொள்ளும் வகையில் பொதுசன வாக்கெடுப்பு விடப்படும். உண்மையில் இந்த இடம்தான் ஆபத்தானது.



> **புதிய அரசியல் யாப்பு ஒருவேளை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் படுமாக இருந்தால் அது ஒரு பிரச்சினைக்குரிய விடயமல்ல. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உடன்பாடற்ற கட்சிகள் அதில் பங்கு கொள்ளாமல் விடலாம். ஆனால் விடயம் பொதுசன வாக்கெடுப்பு ஒன்று இடம்பெறுமாக இருந்தால் அதுதான் மிகவும் சிக்கலானது. அதில் தமிழ் மக்கள் பங்குகொள்வது மிகவும் பாரதூரமானது என்பதுடன் அது தமிழ்த்தேசிய அரசியல் வரலாற்றுக்கு செய்யும் மாபெரும் அநீதியாகவும் அமைந்துவிடும்**

அது ஒரு பிரச்சினைக்குரிய விடயமல்ல. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உடன்பாடற்ற கட்சிகள் அதில் பங்கு கொள்ளாமல் விடலாம் ஆனால் விடயம் பொதுசன வாக்கெடுப்பு ஒன்று இடம்பெறுமாக இருந்தால் அதுதான் மிகவும் சிக்கலானது. அதில் தமிழ் மக்கள் பங்குகொள்வது மிகவும் பாரதூரமானது என்பதுடன் அது தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றுக்கு செய்யும் மாபெரும் அநீதியாகவும் அமைந்துவிடும்.

மேலும், கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக சிந்திய இரத்ததிற்கும், இழப்புக்களுக்கும், அர்ப்பணிப்புக்களுக்கும் எந்தவொரு அர்த்தமும் இல்லாமல் போய்விடும். சம்பந்தன் கூறுவது போன்று புதிய அரசியல் யாப்பில் முன்னேற்றகரமான விடயங்கள் இருந்தால் நல்லது. அது வரட்டும். அதனை எமது மக்கள் அனுபவிக்கட்டும் ஆனால் பொதுசன வாக்கெடுப்பில் தமிழ் மக்களை பங்குகொள்ளச் செய்வது மிகவும் அநீதியானது. அது தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றையே ஒரு நாளில் கேள்விக்குள்ளாக்கவல்லது. அதனை தமிழ் மக்கள் செய்யலாமா?

இன்றைய சூழலில் இந்த விடயங்களை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு சென்று, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது. சம்பந்தனின் தகவலின்படி இந்த மாத இறுதியில் இடைக்கால அறிக்கை மற்றும் உப குழுக்களின் அறிக்கை தொடர்பான விவாதங்கள் இடம்பெறவுள்ளன. இதில் ஏற்படப் போகும் இணக்கப்பாடுகளின் அடிப்படையில்தான், புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் இடம்பெறும். இதற்கிடையில் தமிழரசு கட்சி மன்னாரில் ஏற்பாடு செய்தது போன்று, ஏனைய இடங்களிலும் கூட்டங்களை நடத்தலாம். இந்த சந்தர்ப்பத்தில் அதற்கு சமாந்தரமாக அதே வேளை அதனையும் விட வேகமாகவும் வீச்சாகவும் தமிழ்த் தேசிய தரப்பினர் மக்கள் மத்தியில் சென்று, பொதுசன வாக்கெடுப்பினால் ஏற்படப் போகும் ஆபத்தை உணர்த்த வேண்டும்.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் தொடர்சியான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். பெரும் கூட்டங்கள் நடத்துவதை விடவும், நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும் சென்று சிறு சிறு கூட்டங்களை நடத்தலாம். இது சமூகத்தின் மத்தியில் ஒரு கருத்துருவாக்கத்தை பதிவு செய்யும். இதிலுள்ள ஆபத்தை உணரச் செய்வதே மிகவும் முக்கியமானது. என்னதான் பிரசாரங்கள் மேற்கொண்டாலும் கூட, அனைத்து மக்களையும் வாக்களிப்பிலிருந்து விலத்தி வைக்க முடியாது. ஆனால் இடைக்கால அறிக்கையை சாதகமாக பரிசீலிக்க வேண்டுமென்று கூறுபவர்கள் கூட ஒரு விடயத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

அதாவது, ஒற்றையாட்சி முறைமை அப்படியேதான் இருக்கப் போகிறது. அதே போன்று, பௌத்த மதத்திற்கான முன்னுரிமையிலும் எந்தவொரு மாற்றமும் இருக்கப் போவதில்லை. இந்த இரண்டும் இல்லாத ஓர் அரசியல் யாப்புடன் சிங்கள மக்கள் மத்தியில் சென்றால் அது நிச்சயமாக தோற்கடிகப்படும். பொதுசன வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் அதன் பின்னர் அரசாங்கம் கவிழ்வது நிச்சயம். அவ்வாறானதொரு விசப்பரிட்சையில் இந்த அரசாங்கம் நிச்சயம் ஈடுபடப் போவதில்லை எனவே புதிய அரசியல் யாப்பு என்று ஒன்று வருமானால், அது ஒற்றையாட்சியை மேலும் உறுதிப்படுத்தும் ஒன்றாகவே இருக்கும்.

இவ்வாறானதொரு சூழலில் ஒரு பொதுசன வாக்கெடுப்பு இடம்பெற்றால் அதனை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்வுத பற்றி மக்கள் விழிப்படைய வேண்டும் இலங்கை பிரித்தானிய காலனிய ஆட்சியிலிருந்து விடுபட்ட பின்னர் கொண்டுவரப்பட்ட 1972 மற்றும் 1978 அரசியல் யாப்பு ஆகிய இரண்டின் போதும், தமிழ் மக்களின் பங்குபற்றல் இருந்திருக்கவில்லை. அப்போதிருந்த தமிழ்த் தேசியத் தலைமையின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே மேற்படி இரண்டு யாப்புக்களும் நிறைவேற்றப்பட்டன. இலங்கை அரசு எதேச்சாதிகாரமாகவே நடந்து கொண்டது. தமிழ் மக்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அந்த எதேச்சாதிகாரத்தின் விளைவாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்பந்திக்கப்பட்டனர். அது முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்று, ஒரு சர்வதேச விடயமாக மாறியது. இன்று தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேச அரங்கில் விவாதிக்கப்படும் ஒரு விடயம். ஆனால் வெளியுலகு நோக்கிச் சென்ற விடயத்தை மிகவும் புத்திசாதுர்யமாக இலங்கை அரசு மீண்டும் உள்நோக்கி கொண்டுவந்திருக்கிறது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2015இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜெனிவா பிரேரணையின் கீழ், ஐ.நாவிற்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவருவதற்கான முயற்சிகளை ரணில் - மைத்திரி கூட்டரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் இரா.சம்பந்தனும் ஆதரவு வழங்கிவருகின்றார்.

இந்த இடத்தில் தமிழ்த் தேசிய சக்திகள் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. அதாவது, புதிய அரசியல் யாப்பு ஒரு வேளை நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பாண்மையுடன் நிறைவேற்றப்படுமாக இருந்தால் ஒரு பொதுசன வாக்கெடுப்பு இடம் பெற்றால், அதில் 51 வீதமான தமிழ் மக்கள் பங்குகொள்ளாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பொதுசன வாக்கெடுப்பு வெற்றிபெறுவதும் தோல்வியடைவதும் இங்கு பிரச்சினைக்குரிய விடயமல்ல. ஆனால் அது வென்றாலும் தோற்றாலும் இறுதியில் தமிழ்த் தேசிய அரசியல் தோற்காமல் இருக்க வேண்டும். அதுவே தமிழ்த் தேசிய சக்திகளின் இலக்காக இருக்க வேண்டும்.

சம்பந்தனை பொறுத்தவரையில் அவருக்கு பொதுசன வாக்கெடுப்பு மிகவும் கட்டாயமான ஒன்று. அதனாலேயே அவர் மீண்டும் மீண்டும் பொதுசன வாக்கெடுப்பு தொடர்பில் பேசி வருகின்றார். அவரைப் பொறுத்தவரையில் விமர்சனங்களிலிருந்து தப்புவதற்கு அது ஒன்றே வழி. சம்பந்தனை பொறுத்தவரையில் பொதுசன வாக்கெடுப்பு வென்றாலும் அல்லது தோற்றாலும் அவருக்கு அது வெற்றியே



ஆனால் ஒற்றையாட்சிக்கான உறுதிப்பாட்டுடன், பௌத்தத்திற்கான முன்னுரிமையுடன் கூடிய ஒரு அரசியல் யாப்பை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளலாம். இதில் எதிர் தரப்பினர் இறுதியில் எவ்வாறான முடிவை எடுப்பர் என்பதில் தெளிவில்லை. சிங்கள தேசியவாத சக்திகள் இப்போது அதனை எதிர்ப்பது போன்று எதிர்த்துவிட்டு பின்னர் பொதுசன வாக்கெடுப்பின் போது அமைதியாகவும் இருக்கலாம். ஏனெனில் சிங்கள தேசியவாத அரசியலுக்கு புதிய அரசியல் யாப்பால் எந்தவொரு பங்கமும் ஏற்படப் போவதில்லை.

இங்கு மற்றுமொரு விடயத்தையும் பதிவு செய்ய வேண்டும். ஒரு புதிய அரசியல் யாப்பு வருமாயின் அது நிச்சயமாக வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிரான ஒன்றாகவே இருக்கும். எனவே அவ்வாறானதொரு அரசியல் யாப்பிற்கான பொதுசன வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் பங்குகொள்வார்களாக இருப்பின் அதன் பொருள் தமிழ் மக்களும் வடக்கு கிழக்கு பிரிப்பை அங்கீகரிக்கின்றனர் என்பதாகும். எனவே தமிழ் மக்கள் தங்களின் வாக்குகளைக் கொண்டே, தமிழ் மக்களின் தனித்துவத்தை, 70 ஆண்டுகளுக்கு மேலான அவர்களது அரசியல் தவத்தை கலைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்பதை மக்கள் உணரத் தொடங்கினால் அதன் பின்னர் நிலைமைகள் முற்றிலுமாக கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை இனியும் தமிழ்த் தேசிய சக்திகள் தாமதிக்க முடியாது. இதில் உடன்படும் அனைத்து தமிழ்த் தேசிய சக்திகளும் ஓரணியில் திரள வேண்டும்.

ஒற்றையாட்சியை பேணிப் பாதுகாக்க முற்படும், பௌத்தத்திற்கு முன்னுரிமையளிக்கும் ஒரு புதிய அரசியல் யாப்பிற்கு எதிராக மக்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். அது ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும். அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தின் கீழ்தான் இந்த நிலைமைகளை எதிர்கொள்ள முடியும். இதற்கென ஒரு தமிழ்த் தேசிய செயலணியை உருவாக்கலாம். இதற்குள் அனைத்து கட்சிகளும், தனிநபர்களும், சிவில் அமைப்புக்களும் உள்வரலாம் அத்துடன் இவற்றுக்கு வெளியில் இருக்கின்ற வர்த்தக சங்கங்கள், தொழிற்சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், பெண்கள் அமைப்புக்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்கள் என அனைவரையும் ஓரணிப்படுத்தி இதனை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்கலாம். இவ்வாறனதொரு செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டுமாயின் அதற்கு பெருமளவு நிதியும் தேவைப்படும். புலம்பெயர் சமூகம் இந்த இடத்தில்;தான் கைகோர்க்க முடியும். புலம்பெயர் சமூகமும் தனது வரலாற்றுப் பொறுப்பிலிருந்து விலகி நிற்க முடியாது. களமும் புலமும் ஓரணியாக வேலைசெய்ய வேண்டிய காலம் மிகவும் கனிந்துவிட்டது. இன்றைய சூழலில் தமிழ்த் தேசிய சக்திகள் முன்னாலுள்ள ஒரேயொரு பணி இதுவாக மட்டுமே இருக்க முடியும். புதிய அரசியல் யாப்பிற்கான பொதுசன வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் பங்குகொள்வது என்பது அவர்களது வரலாற்றை அவர்களே மறுதலிப்பதாகும். அவர்களது பிள்ளைகளின் தியாகத்தை அவர்களே கொச்சைப்படுத்துவதாகும். மக்கள் அறியாமையாலும் தவறான விளக்கங்காளாலும் இதில் பங்குகொள்வதற்கான வாய்புக்கள் அதிகமுண்டு. அந்த மக்களை சரியான பாதை நோக்கி கொண்டு செல்ல வேண்டியதே தமிழ்த் தேசிய சக்திகளின் பணியாகும்.

# கத்தோலிக்கர்–இந்துக்கள் பிரச்சினையின்றி தமிழர்களாக ஒற்றுமையாக வாழவேண்டும்

அமெரிக்காவிலிருந்து
எம்.ரூபன்

வடக்கில் வாழும் தமிழர்களில் இந்துக்கள் பெரும்பான்மையாக கொண்டபோதிலும்,கிறிஸ்தவர்கள்,முஸ்லிம்கள் சிறுபான்மையினரே.அவர்கள் கடந்த காலங்களில் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றனர். யுத்த சூழலால் வடக்கில் இருந்து முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட் சம்பவம் இரு சமூகங்களுக்கும் இடையில் ஒரு பிரிவை ஏற்படுத்தியது. ஆனால்,யுத்தம் முடிந்த பின்னர் அவர்கள் தெற்கில் இருந்து மெல்ல,மெல்ல மீளக்குடியேற நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு சில பிரச்சினைகள் இடம்பெற்றாலும் அவர்கள் தமிழர்களுடன் ஒற்றுமையாக பழைய சம்பவங்களை மறந்து ஒற்றுமையாக தற்போது வாழ்வதை காணமுடிகிறது.முஸ்லிம்களும், தமிழர்களும் பிரிய சில வெளிநாட்டு சக்திகளே காரணம் என பல தரப்பினரும் கூறுகின்றனர்.

யுத்தம் முடிந்து பத்து வருடங்கள்.வடக்கு,கிழக்கில் சொந்த இடங்களில் மக்கள் மீளக்குடியேறி வாழ முடியாத நிலை. சில இடங்களில் தொடர்ந்தும் படையினர் நிலைகொண்டுள்ளனர். இதற்காக பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு புறம் போராட்டம் நடாத்திவருகின்றனர்.அண்மையில் கிளிநொச்சியில் காணாமல் போனோர் தொடர்பான பேரணி. இவற்றில் எல்லாம் இந்துக்களும்,கிறிஸ்தவர்களும் ஒன்றுபட்டே கலந்து கொண்டனர்.அவற்றைவிட பல கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தப்படும் போராட்டங்களிலும் மத பேதமின்றியே கலந்துகொள்வதை காண்கிறோம். இந்த இரு சமூகத்தினரும் யுத்த காலத்துக்கு முன்னர் இருந்தே பல நூறு வருடங்களாக ஒற்றுமையாகவே வாழ்ந்துவருகின்றனர். தற்போது மன்னாரில் இவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.



படஉதவி: இணையம்

### மன்னார்- திருக்கேதீஸ்வரம்

இதற்கு நீண்டதொரு வரலாறு உள்ளது.சுருக்கமாக கூறினால்,ஏழாம்,எட்டாம் நூற்றாண்டுகளில் திருஞானசம்மந்தராலும்,சுந்தரராலும் தேவாரம் பாடப்பெற்ற ஒரு புனித சரித்திரத்தை தன்னகத்தே கொண்டுள்ள இத்திருக் கேதீஸ்வரம் போர்த்துக்கீசரினால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. அதன் பின் வந்த ஒல்லாந்தரின் ஆளுகையிலும் இவ்வாலயத்தை எவருமே மீளக் கட்டி எழுப்ப முடியாத சூழல் ஏற்பட்டது. ஆங்கிலேயர் வருகையின் பின்னர்தான் போரத்துக்கீசரால் அழிக்கப்பட்ட இந்து கோவில்கள் மெல்ல மெல்ல கட்டப்பட்டன. அதன்படி திருக்கேதீஸ்வர ஆலயத்தை புனருத்தாரணம் செய்ய ஆறுமுகநாவலர் முயற்சி எடுத்தார். ‘பாலாவிக்கரையில் ஒரு தேன்பொந்து மறைந்திருக்கிறது. திருக்கேதீஸ்வரமான அத்தேன்பொந்தை தேடுங்கள்’ என்று அவர் இந்துக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

ஆறுமுகநாவலரின் இந்த வேண்டுகோளை ஏற்று செயற்பட விழைந்தவர்களில் சேர்.பொன். இராமநாதனும், அவரது மூத்த சகோதரரான பொ. குமாரசாமியும் முதன்மையானவர்கள். கொழும்பு கொச்சிக்கடையில் கருங்கற்களால் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை தனது சொந்த செலவில் கட்டுவித்த சேர்.பொன்.இராமநாதனுக்கு திருக்கேதீஸ்வர ஆலய பணியில் முற்று முழுதாக தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வாய்ப்பில்லாமல் போயிற்று எனலாம்.

இதேவேளை 1893 இல் திருக்கேதீஸ்வரம் அமைந்த பிரதேசத்தை அப்போது மன்னார் மாவட்டம், யாழ்.மாவட்டத்துடன் இணந்திருந்ததால் அன்றைய அரசாங்க அதிபர் சேர்.வில்லியம் டிவைனர் ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுத்தார். இதனால், இப்பிரதேசத்தை தாம் வாங்கி தமது உடைமையாக்கினால் திருக்கேதீஸ்வர ஆலயத்தை நிர்மாணிக்கும் பணிகளை இலகுவாக்கலாம் என்ற இந்துக்களின் எண்ணக்கிடக்கையை செயலுருப்படுத்துவதற்காக சுமார் நாற்பது ஏக்கர் அளவிலான இப்பிரதேசத்தை நாட்டுக்கோட்டைச்செட்டிமார்கள் ஏலத்தில் வாங்கினார்கள். இந்துக்கோவில்களை நிர்மாணிப்பதில் முன்னின்ற நாட்டுக்கோட்டைச்செட்டிமார்களின் இந்த நற்பணிக்கு தலைமை தாங்கியவர் யாழ்ப்பாணத்தைச்சேரந்த பசுபதிச்செட்டியார். இந்துக்கல்லூரியின் வளர்ச்சியிலும் பசுபதிச்செட்டியாருக்கு பாரிய பங்குண்டு. குமாரசாமி மண்டபத்தில் அவரது உருவப்படமும் உள்ளது. இக்கல்லூரி விளையாட்டு இல்லங்களில் ஒன்றுக்கு இவரது பெயரும் சூட்டப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், பல காரணங்களால் அவை முற்றுப்பெறாத நிலை காணப்பட்டது. பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்காவின் அரசில், வெளிவிவகார அமைச்சு,ப ாதுகாப்பு அமைச்சு செயலாளராக பணியாற்றியவரும், வீடமைப்பு நிர்மாண அமைச்சருமான சேர்.கந்தையா வைத்தியநாதன் இந்த ஆலயத்தின் திருப்பணிச்சபைத்தலைவராக அங்கேயே வதிவிடம் அமை த்து தங்கி பணிகளை மேற்கொண்டார்.அவரது அயராத உழைப்பினால் இவ்வாலயம் அலாதியான வளர்ச்சியை பெற்றது. ஒரு குறிப்பிட்டளவு மக்கள் தொகையுள்ள திருக் கேதீஸ்வரத்துக்கென ஒரு கிராம சபை வட்டாரத்தையும்,தனியான தபாற் கந்தோரையும் அமைக்கின்ற அளவுக்கு இவரது சேவை அமைந்திருந்தது என்றே கூறலாம்.



படஉதவி: இணையம்

### கத்தோலிக்கர்களுடன் பிரச்சினை ஆரம்பம்

இவரது காலத்தில், கிறிஸ்தவர்களுக்கும், ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையில் ஒரு பிரச்சினை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. திருக் கேதீஸ்வரம், யாழ்ப்பாணம்-மன்னார் பிரதான வீதியில் இருந்து பிரிந்து செல்லும் வீதியின் முடிவில்தால் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இந்த வீதியையும், திருக்கேதீஸ்வரம் செல்லும் வீதியையும் இரு எல்லைகளாக கொண்டு ஒரு கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது. இந்த தேவாலத்திலேயே

14 ஆம் பக்கம் பார்க்க....



# தொடரும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனை

கடந்த டிசம்பரில் அடிப்படை நாள் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக (5.50 டாலர்) அதிகரிக்க கோரி இலட்சத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது, அதை நிராகரித்த இலங்கை பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதியான இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கம், அதை தாங்க முடியாது என அறிவித்தது.

கம்பனிகளின் வருடாந்த அறிக்கையின் படி, பெரும்பாலான பெருந்தோட்டக் கம்பனிகள் பாரிய இலாபத்தினை பெற்றுள்ள நிலைமையிலேயே இவ்வாறு கூறிக்கொள்கின்றன. மேலும், தேசிய தரகு நிறுவனங்களும், அதேபோல் உலக சந்தையை கையாளும் சர்வதேச கம்பனிகளினதும் இலாபம் உயர்ந்துகொண்டே இருக்கின்றன.

இந்த தேயிலை கம்பனிகள், உற்பத்தி மற்றும் வருகைக்கான கொடுப்பனவுகளை வெட்டிய பின்னர், 20 ரூபாய் அற்ப சம்பள உயர்வுடன், தொழிலாளர்களின் மொத்த நாள் சம்பளத்தை 750 ரூபாவாக ஆக்கியுள்ளன.

நாட்டில் 24 பிராந்திய தோட்ட கம்பனிகள் உள்ளன. பின்வருவன, அவற்றில் ஏழு கம்பனிகளின் 2017-2018 நிதி ஆண்டுக்கான தேறிய இலாபமாகும்.

★ கொட்டகல பிளான்டேஷன்: 255 மில்லியன் ரூபாய்கள் (1,417,769 டாலர்கள்)

★ மஸ்கெலியா பிளாண்டேஷன்: 251 மில்லியன் ரூபாய்கள்

★ பொகவந்தலாவ பிளாண்டேஷன்: 163 மில்லியன் ரூபாய்கள்

★ கலனிவெளி பிளாண்டேஷன்: 160 மில்லியன் ரூபாய்கள்

★ ஹொரான பிளாண்டேஷன்: 84 மில்லியன் ரூபாய்கள்

★ வட்டவள பிளாண்டேஷன் மற்றும் ஹட்டன் பிளாண்டேஷன் (சன் சயின் ஹோல்டிங்ஸ்): 1,200 மில்லியன் ரூபாய்கள்

★ எல்பிடிய பிளாண்டேஷன்: 335 மில்லியன் ரூபாய்கள்

சுமார் எட்டு தேசிய தேயிலை தரகு நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் இரண்டினது 2017-2018 நிதி ஆண்டுக்கான தேறிய இலாபம் பின்வருமாறு.

★ சிலோன் டி புரோக்கர்ஸ்: 100 மில்லியன் ரூபாக்கள் (556.000 டாலர்)

★ ஏசியா சியக கமோடிட்டிஸ்: 97 மில்லியன் ரூபாய்கள்

கூட்டுத்தாபன மற்றும் தனி பங்கு உரிமையாளர்கள் இலாபமடையும் அதேவேளை, கம்பெனிகளின் நிர்வாகிகள் பாரிய செல்வ வளங்களை பெறுகின்றனர். கலனிவெளி பிளாண்டேஷனின் மூன்று நிறைவேற்று அதிகாரிகளுக்கான வருடாந்த சம்பளம் 35 மில்லியன் ரூபாய்களாகும். அதாவது அவர்களில் ஒவ்வொருவரது மாதாந்த சம்பளம் ஒரு மில்லியனுக்கு அதிகமாகும்.

இதை ஒரு தொழிலாளியின் மாத சம்பளத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தற்போதைய அற்ப அதிகரிப்புக்குப் பின்னர், ஒரு தொழிலாளி மாதம் 26 நாட்கள் வேலை செய்துள்ளதாக கருதினால், அவன் அல்லது அவளுடைய சம்பளம் 19,500 ரூபாவாகும். வேறு வார்த்தையில் சொல்வதானால், ஒரு நிறைவேற்று அதிகாரி, தன்னுடைய வேலை ஆளைவிட 50 மடங்கு சம்பளத்தை பெறுகிறார்.



**இலங்கை பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் நிலைமைகளை வெட்டும் அதேவேளை பாரிய இலாபத்தினை குவிக்கின்றன**

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட, மிகப் பிராமாண்டமான பூகோள தேயிலை கம்பனியான யுனிலிவர், லிப்டன் வணிகவகையின் கீழ் உலகெங்கிலும் தேயிலையை விற்பனை செய்கிறது. யுனிலிவர் அதன் 'புத்துணர்வூட்டல்' உற்பத்தி பண்டங்களின் பிரிவில் ஐஸ் கிறீம் உடன் சேர்த்து தேயிலையை விற்பனை செய்கின்றது. இந்தப் பிரிவின் 2017 இற்கான தேறிய இலாபம் 11.3 வீதமாகும், அதாவது 6,486 மில்லியன் பவுண்டுகளாகும். கடந்த வருடம் அதன் இலாபம் 9.8 சதவீதம் ஆகும், அதாவது 5,547 மில்லியன் பவுண்டுகளாகும்.

உலகின் இரண்டாவது தேயிலை வணிகவகையான டெட்லே, இந்தியாவை தளமாக கொண்ட டாடா குளோபல் பிவரேஜஸ்க்கு சொந்தமானதாகும். இந்த பன்னாட்டுக் கம்பனி உலகெங்கும் தேயிலை விற்பனை செய்து 5,670 மில்லியன் இந்திய ரூபாய்கள் (80 மில்லியன் டாலர்) தேறிய இலாபத்தை 2017-2018 இல் பெற்றுக்கொண்டது. அதற்கு முந்திய வருட இலாபம் 4,640 மில்லின் ரூபாய்கள் ஆகும்.

இலங்கை, கென்யா, வியட்நாம், தென் ஆபிரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் தோட்டத் தொழிலாளர்களை கொடூரமாக சுரண்டி, இந்த சர்வதேச கூட்டுத்தாபனங்கள் பாரிய இலாபத்தினை பெறும் அதேவேளை, அவற்றின் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதாக பாசாங்கு செய்கின்றன.

யுனிலிவர் கம்பனியின் 2017-2018 வருடாந்த அறிக்கை கூறுவதாவது: மூலோபாய மனித உரிமை பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதோடு வணிக சிக்கல்களுக்கு உதவுவதுடன் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் தொடரும் துஷ்பிரயோகங்களை தடுக்கவும் செயற்படுவதன் மூலம், இது வணிக வளர்ச்சியுடன் ஒரு சாதகமான சமூக தாக்கத்தை ஏற்படுத்தவும் முற்படுகிறது.

இது ஒரு பொய்யாகும். இதக்கு மாறாக, ஒரு 'சாதகமான சமூக தாக்கத்தை' ஏற்படுத்துவதை விட, உண்மையில் இந்த நிறுவனங்கள், தங்களின் அதி சிறந்த இலாபங்களை உயர்த்துவதற்காக தொழிலாளர்களின் ஊதியங்கள் மற்றும் சமூக உரிமைகளை மேலும் குறைத்து வருகின்றன. உலகளாவிய கொள்வனவு கம்பனிகள், அதி சிறந்த இலாபங்களை பேணுவதை அடிப்படையாகக் கொண்டே, தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளை தேர்வு செய்கின்றன.

போட்டித்திறன் மற்றும் தங்களுடைய சந்தைகளையும் இலாபங்களையும் தக்க வைத்துக் கொள்வதன் பேரில், தோட்டக் கம்பெனிகள் உற்பத்தி செலவுகளைக் குறைப்பதன் மூலமே கொள்வனவு கம்பனிகளுக்கு சேவை செய்ய முயற்சிக்கின்றன. இந்தச் செயல்பாட்டில் மையமாக இருப்பது, தொழிலாளர்களின் செலவுகளை குறைப்பதே ஆகும். அதாவது தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகளை வெட்டிக் குறைப்பதாகும்.

இதன் உச்சக் கட்டமாக, முன்னெப்போதும் இல்லாதளவு ஆகக் கூடிய மட்டத்திலான சுரண்டல் ஊடாக அதி உயர்ந்த உற்பத்தி திறனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, தோட்டக் கம்பனிகள், இப்போது 'வருமானப் பகிர்வு மாதிரியை' அல்லது 'வெளியார்-உற்பத்தி முறையை' அறிமுகப்படுத்துகின்றன. கம்பெனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் சமீபத்தில் கையொப்பமிடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் பிரிவுகளில் ஒன்று, வெளியார் உற்பத்தி' மாதிரியை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவது பற்றி கூறுகிறது.

இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தின் படி, பெருந்தோட்ட சேவைகள் குழுவின் தலைவர் ரொஷான் இராஜதுரை அறிவித்ததாவது: 'எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைமைகளால் நாங்கள் நெருக்கப்படுகின்றோம். இலங்கை தேயிலைகளில் 95 சதவீதத்திற்கும் மேலாக ஏற்றுமதி செய்யப்படுகிறது, அதன் விலைகள் எங்களால் தீர்மானிக்கப்படவில்லை, உலகச் சந்தையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது. (டெய்லி ஊகூ, டிசம்பர் 12, 2018).

இந்த 'வெளியே-உற்பத்தி'திட்டத்தின் கீழ், ஆயிரம் தேயிலை செடிகளை கொண்ட ஒரு காணித்துண்டு ஒரு தொழிலாளிக்கு வழங்கப்படும். கம்பனியானது உரம், இரசாயணங்கள், உபகரணங்கள் போன்றவற்றை வழங்குவதோடு, உற்பத்தியை அதிகரிப்பதற்காக தொழிலாளர்களின் முழு குடும்பமும் இந்த நிலத்தை வேலை செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றது. பறித்த தேயிலை கொழுந்துகளை கம்பனி கொள்வனவு செய்துகொண்டு, கொடுத்த பொருட்கள் மற்றும் அலுவலக பராமரிப்புக்கான செலவுகளையும் இலாபத்தையும் கழித்துக்கொண்டு, எஞ்சியதை தொழிலாளிக்கு கொடுக்கும்.


அதன் வருடாந்த அறிக்கையில், கலனிவெளி பிளாண்டஷன், 'வெளியார்-உற்பத்தி திட்டத்தின் வழியில் கட்டமைக்கப்பட்டுள்ள வருமானப் பகிர்வு மாதிரியானது தொழிலாளர்கள் தங்கள்

13 ஆம் பக்கம் பார்க்க....

# அடையாள அரசியலில் இலங்கை

சோல்பரி அரசியல் அமைப்புக்கேற்ப பாராளுமன்ற நடைமுறையினை ஏற்படுத்துவதற்காக 1947 ம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கா முதலாளித்துவ அடிப்படைவாதக் கருத்துக்களையும் இனவாதக் கருத்துக்களையும் கொண்ட 'தேசிய காங்கிரஸ்', 'சிங்கள மகாசபை', 'முஸ்லீம் லீக்' ஆகிய மூன்று கட்சிகளை தமது தலைமையில் ஒன்றிணைத்து 'ஐக்கிய தேசியக் கட்சி'என்ற புதிய கட்சியினை ஆரம்பித்தார்.

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தக்கான முதலாவது தேர்தல் 1947ம் ஆண்டே இடம் பெற்றது. பாராளுமன்றத்தக்கான 100 ஆசனங்களில் டி.எஸ்.சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 46 ஆசனங்களை வென்றது. டி.எஸ்.சேனநாயக்காவின் சமயோசித நடவடிக்கையினால் சுயேட்சை வேட்பாளர்களை தம்பக்கம் இழுத்து அரசாங்கத்தினை அமைத்துக்கொண்ட போதும் ஒரு நிட்சயமற்ற அரசாங்கமாகவே டி.எஸ்.சேனநாயக்காவின் அரசாங்கம் காணப்பட்டது.



டி.எஸ்.சேனநாயக்காவுடன் கூட்டுச் சேர்ந்த கட்சிகள் சராசரியாக 15 ஆசனங்களை மட்டும் பெற்றுள்ளது எனக் கூறமுடியும். ஆனால் இவர்களை விட தனியாகப் போட்டியிட்ட லங்கா சமசமாசக் கட்சி 10 ஆசனங்களையும் போல்;விக் லெனினிசக் கட்சி 05 ஆசனங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி 05 ஆசனங்களையும் பெற்றன. இம் மூன்று கட்சிகளும் தமக்கிடையிலான கொள்கைகளை மறந்து தொழிலாளர் நலனை மட்டும் முன்னிறுத்தி கூட்டுச் சேர்ந்திருக்குமாயின் இடது சாரிகள் என்ற அடிப்படையில் 20 ஆசனங்களைப் பெற்றிருக்கும்.

இடது சாரிக் கட்சிகள் எனச் சொல்லப்படுகின்ற இக் கட்சிகள் தங்களுக்கிடையில் எவ்வாறுதான் பிரிந்து நின்று முட்டி மோதினாலும் முதலாளித்துவ வாதிகள் இவர்களை தமக்கு எதிரான ஓரணியினராகவே நோக்குகின்றனர். இந்த அடிப்படையில் எந்த முதலாளித்துவ அல்லது இனவாதக் கட்சிகள் பெற்றிராத பெரும்பான்மையினை இவ்வருடத்தில் இடதுசாரிகள் பெற்றனர் என்பது முக்கியமான விடயம் ஆகும்.

இது போன்று சிறுபான்மையினர் என்று நோக்கும் போது ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் 07 ஆசனங்களையும் இலங்கை இந்திய காங்கிரஸ் 07 ஆசனங்களையும்; மன்னாரிலும் வவுனியாவிலும் சுயேட்சை வேட்பாளர்களாக இரு தமிழர்களும் நியமன உறுப்பினர்கள் 4 பேருமாக மொத்தம் 20 பேர் இடம் பெற்றிருந்தனர்.

டி.எஸ்.சேனநாயக்கா பிரதமரான பின்பு அவருடைய அரசாங்கத்தை தோற்கடித்து இடதுசாரிகளும் சிறுபான்மையினரும் சேர்ந்த அரசாங்கமொன்றை அமைக்கும் பொருட்டு ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் கூடிய இடது சாரிக் கட்சிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் சிலரும் பொதுக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்தை அமைப்பது என்று முடிவு எடுத்திருந்த போதிலும் பொதுக் கொள்கைக்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதில் எழுந்த முரண்பாடுகளை அடுத்து இம்முயற்சி பலனற்றுப் போய்விட்டது.

சிறுபான்மையினரின் நலனுக்காக 50:50 கோரிக்கையில் விடாப்பிடியாக நின்ற

**கலாநிதி சு.சிவரெத்தினம்**

ஜி.ஜி.பொன்னம்பலம் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இடது சாரிகளுடன் விட்டுக் கொடுப்புக்களைச் செய்து அரசாங்கத்தை அமைப்பதற்கான சந்தர்ப்பத்தினை தவறவிட்டமை அவருடைய முதலாளித்துவ வர்க்க நலனின் வெளிப்பாடே எனலாம்.

திரு.அ.மகாதேவா ஜி.ஜி.யின் 50:50 கொள்கையுடன் முரண்பட்டு டி.எஸ்.சேனநாயக்காவுடன் சேர்ந்து உள்விவகார அமைச்சராக பதவி வகித்திருந்தார். மேற்படி 1947ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் டி.எஸ்சின் சகபாடியாக யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட போது, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜி.ஜி. பின்வருமாறு உரையாற்றியிருந்தார். மகாதேவா தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்து விட்டார். சோல்பரி அரசியல் திட்டம் தமிழ் மக்களுக்கு தீமையையே விளைவிக்கும். அத்தகைய அரசியல் அமைப்பை ஆதரித்து மகாதேவா வாக்களித்தார். அவரின் முடிவை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதை பிரிட்டி; அரசுக்கும் உலகுக்கும் காட்ட வேண்டும். எனவே நீங்கள் திரண்டு வந்து எனக்கு வாக்களித்து மகாதேவாவின் துரோகத்தை அம்பலப் படுத்த வேண்டும். (மேற்கோள், த.சபாரெத்தினம்) அத்துடன் அவருடைய சகபாடிகள் 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' எனும் இன உணர்ச்சியூட்டும் சுலோக அட்டைகளையும் விநியோகித்ததாக திரு.த.சபாரெத்தினம் குறிப்பிடுகின்றார்.

தேர்தலில் தமிழ் காங்கிரஸ் வெற்றி பெற்றதும் ஜி.ஜி. பொன்னம்பலம் குடியெற்ற நாட்டு அமைச்சருக்கு பின்வரும் வாசகம் அடங்கிய தந்தியினை அனுப்பிவைத்தார். சென்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சித் தமிழ் அபேட்சகருள் ஒருவராவது தெரிவு செய்யப்படாததிலிருந்தும் 1945 ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையை ஆதரித்த பழைய அரசாங்க சபை அங்கத்தவருள் ஒருவர் தவிர ஏனையோர் தோற்கடிக்கப்பட்டதிலிருந்தும் இலங்கைத் தமிழ் மக்கள் சோல்பரி அரசியல் திட்டத்தை நிராகரித்து விட்டார்கள் என்பது தொளிவு. இலங்கையிலுள்ள சமூகங்கள் எல்லாவற்றுக்கும் சம உரிமை அளிக்கும் சுதந்திர அரசியல் திட்டமொன்றை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கோருகிறது. இலங்கை மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் திட்டத்தை வகுப்பதற்கு அரசியல் நிர்ணய சபை ஒன்று வேண்டும். இப்பொழுது இருப்பதைப் போன்ற சட்டசபை, மந்திரி சபைகளுடன் கூடிய ஒற்றையாட்சி அரசாங்கத்தைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தகுந்த மாற்றுமுறை இல்லாதபடியால், நாங்கள் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை கோருகின்றோம். (மேற்கோள்.த.சபாரெத்தினம்)

இந்தத் தந்தியினால் தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை. ஆனால் ஜி.ஜி.பொன்னம்பலம் பாடளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். அன்று அவரால் ஆரம்பிக்கப்பட்ட பிரிட்டி; அரசுக்கும் உலகுக்கும் காட்டுகின்ற செய்தி எனும் ஏமாற்று அரசியலுக்கு தமிழ் உணர்வை பயன்படுத்துகின்ற போக்கு இற்றைவரை எவ்வித வேறுபாடுமின்றி தொடர்வதுதான் தமிழினம் பெற்ற ஜி.ஜி.யின் அருள்கொடையாக இருக்கின்றது.

**பகுதி 13**

இந்தத் தந்தியினால் கோபமுற்ற டி.எஸ். சேனநாயக்கா 1947ம் ஆண்டுத் தேர்தல் முடிவினை அடிப்படையாகக் கொண்டு சிங்கள மக்களின் எதிர்கால அரசியல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை மிக நிதானமாகத் திட்டமிட்டார். இலங்கை இந்திய காங்கிரசும், இடது சாரிக்கட்சிகளும் பெற்ற வாக்குகள் இந்தியத் தொழிலாளர்களுடைய வாக்குகள் என்பதை நன்கு அறிந்திருந்தார். இவர்களுடன் தமிழ் காங்கிரசும் சேர்வது பேரினவாத முதலாளித்துவத்துக்கு ஆபத்தானது என்பதை உணர்ந்த அவர் அன்று மேற்குலகில் வளர்ந்து வந்துகொண்டிருந்த கம்யூனிஸ எதிர்ப்பை தமக்குச் சார்பானதாக பயன்படுத்திக் கொண்டார். குறிப்பாக இலங்கையை கம்யூனிஸத்திலிருந்து காப்பாற்ற வேண்டிய அவசியம் குறித்து பேசலானார். இது பிரிட்டி;சாருடைய முதலாளித்துவ நலன்களைப் பாதுகாப்பதற்கு அவசியமானதாக இருந்தது. இதனால் டி.எஸ். பிரிட்டிசாரின் நம்பிக்கைக்குரியவரானார். அத்தோடு சிறுபான்மையினர் விடயத்தில் தாம் மிகத் தாராளமாகச் செயற்படுவதாக பிரிட்டிஷ் அரசுக்குக் காட்டினார். இதற்காக அவர் முதலில் கையாண்ட தந்திரம் தனது அமைச்சரவையில் வவுனியாவில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சி.சுந்தரலிங்கம் அவர்களை வர்த்தக அமைச்சராக நியமித்தார். மன்னாரில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சி.சிற்றம்பலம் அவர்களை தபால்,தந்தி தொடர்புகள் அமைச்சராக நியமித்தார். இது போன்றே மலே சமூகத்தைச் சேர்ந்த டி.பி. ஜாயாவை தொழில் சமூக சேவைகள் அமைச்சராக நியமித்தார். இது சிறுபான்மையினர் விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்பவர் என்கின்ற பிரதிமையை பிரிட்டி;சாருக்கு ஏற்படுத்திற்று.

அடுத்ததாக அவருடைய நோக்கமாக இருந்தது இந்தியத் தமிழருடைய பிரஜாவுரிமையினைப் பறித்து தமிழர்களின் விகிதாசாரத்தை குறைப்பதாகும். ஆரம்பத்திலிருந்தே இந்தியப் பிரஜைகளுக்கு வாக்குரிமை வழங்குவதை எதிர்த்து வந்தவர், இந்தியப் பிரஜைகள் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கினால் கண்டிய சிங்களவரின் உரிமை பறிக்கப்பட்டு விடும் என்ற கருத்தை முன்வைத்து இயங்கியவர். 1947ம் தேர்தலில் 14 தொகுதிகளில் இந்தியத் தொழிலாளர்களின் வாக்குகளினால் வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர். இது டி.எஸ்.சிக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இவர்களுடைய பிரஜாவுரிமையினைப் பறிப்பதற்கு அவர் கையாண்ட தந்திரம் கம்யூனிஸத்திலிருந்து இலங்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோசமாகும். இதனால் பிரிட்டி; அரசு டி.எஸ்.சின் நடவடிக்கைகளைக் கண்டுகொள்ளவில்லை. தமது நலன் பாதுகாக்கப்படுவதையே பிரிட்டி; அரசு விரும்பியது. அதை டி.எஸ். மிகச் சரியாக முன்னெடுத்தார். டி.எஸ்.சைப் பொறுத்தவரையில் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அதாவது பிரிட்டி;சாருக்கு நம்பிக்கைக்குரியவராக இருப்பதோடு தமிழர்களின் விகிதாசாரத்தையும் குறைப்பதாகும்.

1948 ஆம் ஆண்டு இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்ட மசோதாவைக் கொண்டு வந்து இந்தியத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையினைப் பறிப்பதற்கான முயற்சியினை மேற்கொண்டார். இதனை தமிழ் காங்கிரசின் அனைத்து உறுப்பினர்களும் இடதுசாரிகளும் எதிர்த்தனர். இதனை எதிர்த்துப் பேசிய ஜி.ஜி. டி.எஸ்.சை ஒரு வகுப்புவாத வெறியர் என்றும் அம்மசோதா நிறைவேற்றப்பட்ட தினத்தை இலங்கையின் கறுப்பு நாள் என்றும் வர்ணித்தார்.(த.சபாரெத்தினம்) இந்தியாவும் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து கண்டன அறிக்கையினை வெளியிட்டது. இந்திய எதிடப்பை சமாளிப்பதற்கு தமிழ் காங்கிரசை தனது பக்கம் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற முடிவினை டி.எஸ். எடுத்தார். இதற்காக இரு அமைச்சுப் பதவிகளை காங்கிரசுக்கு வழங்குவதாக ஜி.ஜி.யுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். தனக்கு கைத்தொழில், கைத்தொழில் அபிவிருத்தி, கடற்றொழில் அமைச்சைக் கோரிப் பெற்றார். வட்டுக்கோட்டை தொகுதி உறுப்பினர்.க.கனகரெத்தினம், உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டார். பருத்தித்துறைத் தொகுதி உறுப்பினர். தா.இராமலிங்கம், கோப்பாய் தொகுதி உறுப்பினர் வ.குமாரசாமி, ஊர்காவற்துறை தொகுதி உறுப்பினர் அ.லி.தம்பிஐயா, பட்டிருப்புத் தொகுதி உறுப்பினர். எதிர்மனசிங்கம் ஆகியோர் ஜி.ஜி.யுடன் அரசாங்கத்தில் இணைந்து அரசாங்கத்தக்கு ஆதரவு அளித்து இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தினை நிறைவேற்றினர்.

சிறுபான்மையினரின் உரிமைக்காக 50:50 கேட்டு போராடியவரும் இதற்காக டி.எஸ். சின் வேட்பாளரான அ.மகாதேவாவை துரோகி என்று வசைபாடி, அவரை தோற்கடித்து தன்னை வெற்றிபெறவைத்து தமிழர்களின் தீர்ப்பை உலகுக்கு காட்டுங்கள் என கோசமெழுப்பியவரும் டி.எஸ்.சை ஒரு வகுப்புவாத வெறியர் என்றும் முழங்கிய ஜி.ஜி. டி.எஸ்.சின் அமைச்சுப் பதவிக்கு அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டு பதவியில் சரணாகதி அடைய வைத்தது அவருடைய வர்க்ககுணாம்சத்தினாலாகும்.

தொடரும்

# காணாமல் ஆக்கப்பட்டோரும் காலத்தை இழுத்தடிக்கும் அரசும்




இலங்கை நாட்டில் நடைபெற்ற மூன்று தசாப்த யுத்தத்தில் வடக்கு, கிழக்குப்பகுதியைச் சேர்ந்த பலர் காணாமால் ஆக்கப்பட்டுள்ளனர். இறுதியுத்தத்தில் சரணடைந்தவர்களும், விசாரணையென்ற பெயரில் இராணுவ முகாம்களுக்குள் அழைக்கப்பட்டவர்களும், தொழிலுக்காக சென்றவர்களும் இதில் அடங்குகின்றனர். இவர்கள் இன்றுவரை உயிரோடு இருக்கின்றனரா? இல்லையா? என்பதே தெரியாதுள்ளது. ஆனாலும் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றனர் என்ற நினைப்பில் அவர்களது உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வருகைக்காக காத்திருக்கின்றனர். இதற்காக இந்த நாட்டிலே போராட்டங்களையும்; நடாத்தி வருகின்றனர். இதற்கான தீர்வினை அரசுவழங்குவதாக தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சரியான தகவல்களைப்பெற்று, விசாரணைகளை மேற்கொண்டு, தேடுதல் செயற்பாடுகளில் ஈடுபட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து உரியதரப்பினரிடம் உறவுகளை வழங்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தால் அவர்கள் குறித்த தகவல்களையும், அவர்களது உடலங்கங்கள் எங்கே என்பது தொடர்பிலும் விளக்கங்களை உரிய உறவினர்களுக்கு வழங்க வேண்டும். கணவனை, பிள்ளைகளை, சகோதரங்களை, மனைவியை காணவில்லையென பலநாட்களாக காத்திருக்கும் மக்களுக்காக, ஐ.நா சபையின் கூட்டத்தொடர்களை இலக்கு வைத்து, ஏதோ ஒன்றைக்கூறியும், செய்தும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கரிசனை காட்டுவதாக தம்மை இனங்காட்டி வருகின்றனர் என்ற விமர்சனங்களும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

மைத்திரிபாலசிறிசேன தமிழ்மக்களின் வாக்குப்பலத்தினால் அரியணை ஏற்றப்பட்டதன் பிற்பாடும், இந்த நாட்டிலே நூற்றுக் கணக்கான நாட்களைக்கடந்து, குறிப்பாக ஆட்சிப்பொறுப்பேற்றதில் இருந்து இன்று வரை ஒவ்வொரு நாட்களும் தமது உறவுகளை

> **மனரீதியாக நாளுக்கு நாள் அழுத்தங்களுக்கு உட்பட்டு முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட சமூகமாக மாறியிருக்கின்றனர். தமது உறவுகளின் படங்களை வைத்துக்கொண்டு அவற்றினையே பார்த்துப் பார்த்து தமது வாழ்க்கையினையும் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர்**

கண்டுபிடித்து தம்மிடம் ஒப்படைக்குமாறு கூறி வீதிகளிலே படுத்துறங்கி, நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பலரின் வாழ்க்கை வீதியிலே கழிந்துகொண்டிருக்கின்றது. மனரீதியாக நாளுக்கு நாள் அழுத்தங்களுக்கு உட்பட்டு முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட சமுகமாக மாறியிருக்கின்றனர். தமது உறவுகளின் படங்களை வைத்துக்கொண்டு அவற்றினையே பார்த்துப் பார்த்து, இன்றுவருவார் நாளைவருவார் என்ற ஏக்கங்களுடன் தமது வாழ்க்கையினையும் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கை நாட்டிற்கு வருகைதந்து செல்கின்ற ஐநா பிரதிநிதிகளும் இதனைக் கண்ணுற்றும் செல்கின்றனர்.

அறிக்கைகளையும் முன்வைத்தும் செல்லுகின்றனர். தற்போதைய ஆட்சியாளர்களும் மனதினைநொருக்கடிக்கும் விதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றிருப்பர் என்ற பேச்சுகளையும் கூறியிருக்கின்றனர். இதனாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மிகவும்

**முனையூரான்**

பாதிக்கப்பட்டிருப்பதனையும், அரசின்மீது முழுமையான நம்பிக்கையினையும் இழந்திருக்கின்றனர். இதற்காக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், இதுதொடர்பில் கரிசனைகொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களையும் செய்து வருகின்றனர். குறிப்பாக வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த மாதம் வடக்கில். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு அவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தியும் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர். அதே போல வட,கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுப்பதாகதெரியவில்லையெனத் தெரிவித்து அமெரிக்காவின் தலையீட்டினைக்கோரி யாழ்ப்பாணத்தில் கையெழுத்துப் போராட்டமொன்றை ஆரம்பித்தனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளை மீட்டுத்தர அமெரிக்கா முன் வரவேண்டும் என வலியுறுத்தி வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது போன்று பல போராட்டங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை உள்ளிட்ட கிழக்கு மாகாணங்களிலும், வடக்கு மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இவ்வாறான தொடர் போராட்டங்களின் அழுத்தங்களினால்தான், ஆட்சியின் பங்குதாரர்கள் சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக ஐநா கூட்டத்தொடரினை இலக்குவைத்தே அவ்வாறான முன்னெடுப்புக்களும் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலக சட்டமானது கடந்த 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்ட போதும், அதற்கான பிரதிநிதிகள் ஒருவருடங்களை கடந்தே நியமிக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகத்தின் தலைவராக சாலிய பீரிஸ் நியமிக்கப்பட்டதுடன், ஜயதீபா புன்னியமூர்த்தி, மேஜர் ஜெனரல் மொஹந்தி ஏ. பீரிஸ், சிரியானி நிமல்கா பெர்னாண்டோ, மிரக் ரஹீம், சோமரிசி கேலியனகே மற்றும் கணபதிபிள்ளை வேந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக 10 அமைச்சர்களைக்கொண்ட அமைச்சரவை உபகுழு ஒன்றை அமைப்பதற்கும் துணை குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான வசதிகளை செய்வதற்காகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் மூலம், பாதிப்பை ஈடுசெய்யக்கூடிய சட்டரீதியிலான பொறுப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை, இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெறாத வகையில் பார்த்துக்கொள்வதற்கான சட்ட ரீதியிலான மறுசீரமைப்பு மேற்கொள்வது தொடர்பில் தனது சிபாரிசுகளை சமர்ப்பித்துள்ளது. இதேபோன்று பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிதி உதவி வேலைத் திட்டம், கடன் நிவாரண வேலைத் திட்டம், வீடமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டம், கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத் திட்டம், தொழிற்பயிற்சி, வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல், தொடர்பான சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த சிபார்சுகளை மதிப்பீடு செய்து பொருத்தமான எதிர்கால நடவடிக்கைகளுக்கான பரிந்துரைப்பதற்காக விஜயதாச ராஜபக்ஸ தலைமையில் கீழ் மேலும் 10 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை துணை குழு ஒன்றை நியமிப்பதற்கும் உப குழுவின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை செய்வதற்காகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாக காணி அபிவிருத்தி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவை துணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்திருந்தார்.

இறுதி யுத்தத்தின்போது சரணடைந்தவர்கள், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான பெயர் விபரங்களையும் எங்கெங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பான விபரங்களையும் வெளியிடுமாறு தேசிய பாதுகாப்பு சபைக்கு உத்தரவிடுவேன் என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் கடந்த காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்திருந்தார். அதே போன்று காணாமல் போனவர்களுக்கான சான்றிதழை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காணாமல் போனவர்கள் தொடர்பாக புதிது புதிதாக ஆணைக்குழுக்களை அமைப்பதன் ஊடாக எந்தப் பலனும் இல்லை.

பழைய தகவல்களுக்கு அமைய பரணகம மற்றும் உடலாகம ஆணைக்குழுவின் தகவல்களை பெற்று காணாமல் போனோருக்கான சான்றிதழை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கை சார்பான பிரதிநிதிகளை அனுப்பி, நடைமுறைக்கு சாத்தியப்படும் வகையிலான இரண்டு வருடகால செயற்றிட்டம் ஒன்றை அமைப்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். அதன்மூலம் யுத்த பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் இரண்டு பிராந்தியக் கிளைகள் மன்னார், மாத்தறை மாவட்டங்களில் திறந்து வைக்கப்பட இருக்கின்றதாகவும், காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகி உள்ள நிலையில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரனி சாலிய பீரிஸ் தெரிவித்ததுடன், இது தொடர்பான பிரதான நிகழ்வு அடுத்த மாதம் 9 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

காணாமால் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு ஒருவருடங்களுக்கு பின்பு அதற்கான அங்கத்தவர் தெரிவும், அங்கத்தவர் தெரிவிலிருந்து ஒருவருடத்திற்கு பின்பு கிளைகள் திறப்பும் நடைபெறுகின்றமை அரசின் இழுபறிநிலையையும், அக்கறைக்கொண்டிராத தன்மையையும் வெளிப்படுத்தி நிற்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டி நிற்கின்றனர்.

யுத்தம் நிறைவுபெற்று ஒருதசாப்தம் நிறைவுபெறவுள்ள நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விரைவு செயற்பாட்டினை மேற்கொண்டு தேடிதலினை இந்த நாட்டிலே இதுவரை மேற்கொள்ளாமை மிகவும் கவலையளிக்கும் விடயமாகவே உள்ளது. சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட அதே காலப்பகுதியில் அதற்கான அங்கத்தவர்களை தெரிவு செய்து, கிளைகளையும் அமைத்து, தேடுதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, உரியநபர்களுக்கான பதில்களையும் கூறியிருக்க வேண்டிய அரசாங்கம்

14 ஆம் பக்கம் பார்க்க....



# முஸ்லிம் அரசியலில் பேரம் பேசும் சக்தி குறைவடைந்து செல்கின்றதா?

இலங்கையில் அரசியல் வரலாற்றில் மூவின மக்களும் ஒன்றிணைந்து கொண்டுவந்த சுதந்திர இலங்கையின் பின்னரான காலகட்டங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும்சரி, ஆட்சி செய்த அரசியல்வாதிகளும்சரி மூவின மக்களுடன் ஒன்றிணைந்து பயணிக்க விரும்பவில்லை. சிறுபான்மையினரை தனித்துவத்திற்குள் நிற்கவிடாது வெறும் ஒட்டுக்களாகவே பார்க்க முற்பட்டனர். இதனால்தான் இன்றுவரையிலும் ஓரினம் மற்ற இனத்தை சந்தேகக் கண்கொண்டு பார்க்கலாயினர். நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் மாத்திரமே இலங்கையில் தனித்துவமானமுறையில், இரு இனங்களையும் ஓரமாக்கிக் கொண்டு செயற்பட்டிருப்பதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. வரலாறு நெடுகிலும் முஸ்லிம்களுக்கு என்றொரு கட்சி இல்லை என்பதை உணர்ந்துகொண்டு பலமான தேசிய கட்சிகளின் பின்னலுடன் முஸ்லிம் அரசியல்வாதிகள் 1948க்கு முன்னரும்சரி, பின்னரும்சரி இரண்டறக்கலந்தே வந்தனர்.

ஆனால் தமிழ் அரசியல்தலைமைகள் சற்று வித்தியாசமான முறையில் பேரின சக்திகளுடன் சிலர் இணைந்திருந்தாலும் பலமானதொரு கட்சியாக தனக்குள் உருவாக்கிக் கொண்டு அதன் பின்னணியில் செயற்பட்டனர். 1975க்குப் பின்னர் அதன் தாக்கம் மிகக் கடுமையாக இருந்து. பின்னரான காலகட்டங்களில் அது போராட்ட வடிவம்பெற்று இன்று உலகளவில் பேரம் பேசும் அளவுக்கு அதன் தாக்கம் சென்றிருக்கின்றன. ஆனால் இந்தளவுக்கு முஸ்லிம் தலைடிமைகள் அல்லது அரசியல்வாதிகள் எகிறிக் கொண்டு சென்றது கிடையாது. இது பின்னனால் முகாவின் ஸ்தாபகர் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்கள் பேரின கட்சிகளின் மாயையிலிருந்து விலகி தனக்கென்றொரு கட்சியை நிறுவி அதன் பின்னால் முஸ்லிம் சமூகத்தை ஒன்றிணைப்பதன் மூலம் தமது சமூகத்தின் ஒட்டுமொத்த பேரம் பேசும் சக்தியாக வளர்த்துக் கொண்டு சாதிக்கலாம் என்று கனவுகண்டு அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்.

ஆனால் இன்று அதன் நிலை தட்டுத்தடுமாறி வழிதெரியா காட்டுக்குள் விடப்பட்டவர்போல முஸ்லிம் சமூகம் திக்கற்றுக் காணப்படுவதன் காரணமாக கொடுப்பதை எடுத்தாலும் சரி, எடுக்காவிட்டாலும்சரி பேரம் பேசுகின்ற சக்தியற்று கொடுப்பதையாவது பெற்றுக்கொண்டு அமைதியாக இருப்பது மேல்என்று நினைத்துக் கொண்டு இன்று கொக்கரிப்பதில் எவ்விதமான பயனுமில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும். அடையாளம் என்பது ஒரு நாட்டில் வாழும் சமூகங்களிடையே பரஸ்பரம் ஒன்றுமைப்பட்டு அனைத்தும் நமக்கே உரிய பாணியில் பயணிப்பதுதான் உண்மையான மனித உரிமையின் அடையாளமும், சர்வதேச மயப்படுத்துதலும், சீரான ஜனநாயகப் பண்புமாகும். ஆனால் தனித்துவம் என்றொரு சொல்லைக் கொண்டு விடுதலைப் புலிகள் முஸ்லிம் என்கிற ஒரே காரணத்திற்காக தமிழ் பேசினாலும் அவர் சோனகர் என்பதால் இரவோடு இரவாக ஒரு பிராந்தியத்திலிருந்து உடுத்த ஆடையுடன், வெறும் கையுடன் வெளியேற்றப்பட்ட வரலாற்றுப் பின்னணியுடன்தான் இன்று வரை ஜனநாயக பண்புகளைக் கொண்டுள்ளதாகக் கூறிக்கொண்டு நமது நாட்டில் வாழவேண்டியிருக்கிறது. இம்முறை வருடத்தின் வரவு செலவுத் திட்டம் வாசிக்கப்பட்டபோது வடக்கில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கும் வசதிசெய்து கொடுக்கப்படும் என்கிற ஒரு சொல்லைப் பேசி அங்கு வாழ்ந்து வரும், வெளியேற்றப்பட்ட மக்களின் உள்ளங்களில் பால் வாத்திருந்தார் நிதியமைச்சர்.

அதேவேளை கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இனவாதத்தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட பல பள்ளிவாசல்கள் குறிப்பாக அம்பாரையில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசல் தாக்கப்பட்டிருந்தது. இவற்றினை ஏன் முழுமையாக புனரமைக்க முடியாமற் போனது. மடுதேவாலயம் யுத்தத்தின்போது கடுமையாக சேதப்படுத்தப்பட்டிருந்தது. அதனை முழுமையாக அபிவிருத்தி செய்ய வேண்டியது அரசின் கடமை. அதேபோன்றுதான் முஸ்லிம் பள்ளிவாசல்களும் புனரமைக்கப்பட வேண்டும். ஆனால் அது சிலவேளை முடியாமற் போகும். காரணம் பேசும் பேசும் சக்தி முஸ்லிம் அரசியல்வாதிகளிடமிருந்து சென்று விட்டன. ஒற்றுமையாக இருந்து முஸ்லிம்களுக்கான அரசியல் மையத்தை கொண்டு செல்ல வேண்டிய தலைமைகள் பிரிந்துள்ளன. பதவிகளுக்காகவும், சுகபோகங்களுக்காகவும் பேரினவாத அரசியல்வாதிகளின் செல்லப்பிள்ளைகளாகி தாமே அனைத்தையும் பெற்று தேர்தலின்போது தாம் எந்தப்பக்கம் சென்றால் அதிக இலாபம் கிடைக்கும் என்று பார்த்து கட்சி மாறுகின்ற ஒரு சமூகமாக இன்று முஸ்லிம் சமூகத்தைப் பார்த்து ஏனை சமூகத்தினர் வெளிப்படையாகக் கூறுகின்ற அளவுக்கு பேரம் பேசும் சக்தி ஓரங்கட்டப்பட்டு விட்டது என்பதுதான் உண்மையாகும்.

**தந்திமகன்**

உதாரணமாக, என்னதான் வசதிகள் கொடுப்பதாக்க கூறினாலும் இன்று அரசோடு அமைச்சுப் பதவிகளைக் பெற்றுக்கொண்டாலும் அவர்களும் இணைந்து போராட வேண்டியிருக்கிறது. மன்னார் முசலி போன்ற பிரதேசங்களில் நடாத்தப்பட்டு வருகின்ற தொடர் போராட்டம் பல நாட்களாக நடைபெற்ற போதிலும் காணிமீட்கப்பட்டனவா? குப்பைகளை கொட்டாமல் விட்டனரா? வவுனியா குப்பைப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிட்டதா? எத்தனை வருடங்களாகப் பேசப்படுகின்றன. முடிவுகள் இல்லாமலே காலம் நகர்ந்து விட்ட நிலையில் அமைச்சுப் பதவிகளை விட்டெறிந்துவிட்டு தாம் தனித்துவம் பேணி பேரம் பேசும் அளவுக்கு முஸ்லிம் தலைமைகள் இருந்திருக்கிறதா? என்றால் அது சிறியளவாகத்தான் இருக்கிறது. அரசு வழங்கத்தயாராக இல்லாதபோது பேரம் பேசும் சக்தியைக் கொண்டுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அதனை பேரம்பேசி, பெறமுடியாமல் இருக்கிறது. ஆக அது முடியாதாகவே இருக்கிறது. ஆனால் அது முடியக் கூடிய காரியமாக இருந்த போதிலும் அதனை வெளிப்படையாக கொண்டு செல்லாது தேர்தல் நெருங்குகின்றபோது மாத்திரம் வெளிப்படையாகவே அரசை குறைகூறிக்கொண்டு, மக்களை சூடாக்கி உசுப்பேற்றி தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் ஒரு அமைச்சினைப் பெறுவதற்கு தாமே உண்மையான சமூகப் பற்றாளன் என்று தெரியப்படுத்தி வாக்குகளை பெறுகின்ற ஒரு நிலைமைக்கு அரசியல் தலைமைகள் மக்களிடம் வாக்கைக் கேட்பார்கள். இதுதான் வழமையாக நடைபெறுகின்ற ஒரு அரசியல் கலாச்சாரம்.

ஆனால் இதற்கு மாற்றமாக எவ்விதமான அமைச்சுப்பதவிகளும் அற்ற நிலையில் சுகபோக வாழ்க்கையை தமது சமூகத்திற்காக உதறித்தள்ளி விட்டு சமூகமே பிரதானம் என்று கூறிக்கொண்டு சமூகத்திற்காக ஒற்றுமையுடன் செயற்படுவதை பல வருடங்காளப் சகோதர இனமான தமிழ் சமூக அரசியல்வாதிகளைப் பார்க்கின்றோம். அங்கு அபிவிருத்திகள் இடம்பெறவில்லையா? அமைச்சராக இருந்துதான் சேவையாற்ற வேண்டுமா என்ன? ஒரு நாட்டின் அரசு தன் மக்களுக்குச் செய்ய வேண்டியவற்றை செய்வது அவர்களின் கடமையாகும். நாட்டை அபிவிருத்தி செய்வது அரசுகளின் கடமை. ஆனால் மக்களின் உரிமைகள் மீதான விடயங்களில் பேரம்பேசும் சக்தி இருக்குமாக இருந்தால் அது அந்தச் சமூகத்திற்கு பேரினத்தால் கெடுதல் ஒன்று வருகின்றபோது தட்டிக் கேட்க முடியும். அமைச்சுப் பதவிகளால் வெறும் வீதிகள் அமைப்பதும், மண்நிரப்பி கட்டிடங்கள் கட்டுவதாலும் சமூகக் கடமைகள் முடிந்துவிட்டதா? என்கிற கேள்விகளை பேரம் பேசும் சக்தியை இழந்தவர்களிடம் கேட்க வேண்டியிருக்கிறது.

இந்த பேரம் பேசும் விடயம் தொடர்பாக அண்மையில் மிகக் காரசாரமான முறையில் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்ற ஒருவர் உள்ளூராட்சி மாகாணசபைகள் இராஜங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் அவர்கள். உண்மையில் அவரை இந்த வேளையில் பாராட்ட வேண்டும். ஏனெனில் சில விடயங்களை அவர் நேரடியாக பேசக்கூடியவர். அவர் கூறுகின்ற ஆபத்தான விடயத்தை இப்போது பார்ப்போம். அதாவது, முஸ்லிம் சமூகத்தின் பேரம்பேசும் சக்தியை இல்லாமலாக்க திரைமறைவில் சதிநடைபெறுகிறது. இன்றைய காலகட்டம் 1978 தொடக்கம் 2019 வரை இந்நாட்டு முஸ்லிம்கள் ஆனுபவித்து வருகின்ற அரசியல் உரிமைகளை தலைகீழாகப் புரட்டிப் போடுகின்ற காலமாக இந்த வருடம் மாறப்போகின்றது. அடுத்த சில மாதங்களில் நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு எது மிஞ்சப் போகின்றது என்ற அச்சம் இன்று முஸ்லிம்களுக்கு மத்தியில் எழுந்திருக்கின்றது.

1978 ற்குப் பின்னர் வந்த இனமுரண்பாடு என்பது நாட்டில் பெரும்பான்மை சமூகத்திலிருந்து சிறுபான்மை சமூகத்தை பல ரூபங்களில் இடைவெளிகளை கூட்டியயிருந்த காலகட்டமாகவிருந்தது. அது குறிப்பாக எங்களுடைய தமிழ் சமூகம் தங்களின் இருப்புக்காகவும், உரிமைகளுக்காகவும் ஆயுதப்போராட்டத்தினை ஆரம்பித்தபோது அது பலகோலங்களில் வட கிழக்கு மண்ணில் இரத்த ஆறினை ஓடச்செய்ததுடன், தமிழ் சமூகத்தின் அரசியல் விடுதலைதான், உரிமைதான் எங்களுக்குத்தேவை வேறு எதுவும் தேவையில்லை என அவர்களுடைய போராட்டம் வீரியம் எடுத்திருந்தது. அதன் விளைவு வட கிழக்கிலுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

அந்த ஆயுதம் ஏந்துதல் தெற்கிலுள்ள அரசியல் தலைமைகளான ஜனாதிபதி தொடக்கம் பாராளுமன்றம் வரை உலுக்கி எடுத்திருந்தது. இதனால் சர்வதேசம் வந்தது. இந்திய அமைதிகாக்கும் படை வந்தது. இறுதியில் அது இலங்கை-இந்திய ஒப்பந்தமாக மாறியது. ஆனால் துரதிஷ்டவசம் 1982 வரை இந்நாட்டு முஸ்லிம்களுக்கு தலைமை தாங்குவதற்கு தலைமையொன்று இருக்கவில்லை. சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு தலைமையொனன்று இருக்கவில்லை. அதன்விளைவு 1987ஆண்டு இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக வடக்கும், கிழக்கும் இரவோடு இரவாக சொந்த மண்ணிலே முஸ்லிம்கள் அடிமைப்பட்டிருந்தனர். ஈற்றில் வடக்கிலிருந்த முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டனர். முஸ்லிம்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவத்திருந்தனர். என்கிற விடயங்களைக் கூறியிருந்தார்.

மேலும் கௌரவ இராஜங்க அமைச்சர் ஹரீஸ் குறிப்பிடும்போது இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தை கருத்தில்கொள்ளாலம் அன்றைய காலகட்டத்தில் முஸ்லிம்களின் தனித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியமானது. அஷ்ரப் அவர்கள் இருக்கும் காலமெல்லாம் பேரம் பேசும் சக்தியாக இருந்தது. அவரேதான் இந்நாட்டில் யார் அரசாளவேண்டும் என்கிற தீர்மானிப்பாளராக இருந்திருக்கிறார். அந்த அத்தியாயம் தொடர்ந்து வந்தது. ஆனால் அந்த பேரத்தை ஒழிப்பதற்கான சில தரப்புக்களுடன் இணைந்து புதிய அரசியல் அத்தியாயத்தினை உருவாக்க முனைந்திருப்பதாகவும் அமைச்சர் ஹரீஸ் கூறியிருந்தார். நாம் இப்போது கூறுகின்றோம் இப்போதிருக்கின்ற இந்த அமைச்சுப் பதவிகளை தூக்கி;யெறிந்துவிட்டு சமூகத்திற்காக ஒற்றுமைப்பட்டு அந்த புதிய அரசியல் அமைப்புக்கு எதிராக செயற்படுவதற்கு ஏன் முஸ்லிம் தலைமைகளால் முடியாமல் இருக்கிறது.

அன்று ஆட்சியினை தீர்மானிக்கின்ற சக்தியாக இருந்தவர்கள் இன்று குறைவடைந்து சக்தியற்றவர்களாக சென்றமைக்கான காரணம் என்ன? அது தேர்தல்கள் வருகின்றபோது அறியக்கூடியதாக இருக்கின்றது. அன்றையவர்கள் அனைவரும் கட்சித்தலைவர்களாக பிரிந்து விட்டனர். அமைச்சே பிரதானம் என்றாகிய நிலையில் அரசியலில் எதுவும் நடக்கலாம் என்றாகிவிட்டது.

அன்று சக்தியாக ஓரணியில் இயங்கியபோது பேரம் பேசும் சக்தியும் மேலோங்கிக் காணப்பட்டது. ஆனால் இன்று தனித்துவம் இழந்து, அரசியலில் அமைச்சுப்பதவிகளுக்காகவும், அபிவிருத்தி மாயை முன்னிலைப்படுத்தி சமூகத்தின் இருப்புக்கான உரிமையே அற்ற நிலையில் இவ்வாறு பாராளுமன்றத்திற்கு வெளியே மக்கள் மத்தியில் பேசுவதைவிட மக்களவையில் பேசுவதுதான் சிறப்பானதாகும் என்பதை இவ்வேளை ஞாபகமூட்ட வேண்டியிருக்கிறது. அதற்கான மாற்று மருத்துவமும் உண்டு. புதிய இளம் தலைமைகளை அரசியல் நீரோட்டத்திற்குள் கொண்டு செல்லவேண்டும். மீண்டும் மீண்டும் ஒருவரையே தொடர்ந்து பாராளுமன்றத்திற்கு அனுப்புவதிலிருந்து விலக வேண்டும். ஒவ்வொரு முறையும் புதிய புதிய தலைமைகள் உருவாக வேண்டுமாக இருந்தால் சாயாதாக, கட்சிகளுக்குப் பின்னால் சோரம்போகாத சமூகப் பற்றாளர்களை தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்ப வேண்டும். அவர்கள் ஊடாக இந்த பேரம் பேசும் சக்தியை முன்கொண்டு செல்லலாம் என்கிற வாதங்களும் அண்மைய நாட்களில் பலமாக பேசப்படுகின்ற ஒரு விடயமாகும். இதற்கு தேர்தல் மாத்திரமே விடைசொல்லும்.அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்.

# திகன இழப்பீடுகளுக்கான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை

இலங்கை வாழ் முஸ்லிம்களால் வரலாற்றில் மறக்க முடியாத சம்பவங்களில் கடந்த சில வருடங்களுக்குள் எதிர் கொண்ட சம்பவங்களில் இரண்டாவது பாரிய சம்பவமாக திகன, தெல்தெனிய சம்பவங்களைக் கூறலாம். முதலாவது சம்பவம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் அளுத்கம, தர்ஹா நகர் உள்ளிட்ட இடங்களில் பெரும்பான்மை இனவாதிகளால் மேற்கொள்ளப்பட முஸ்லிம் அழிப்புச் சம்வமாகும். அதற்கு அடுத்ததாக கடந்த வருடம் கண்டி திகன, தெல்தெனிய உள்ளிட்ட முஸ்லிம் கிராமங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களாகும்.

அளுத்கம உள்ளிட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட கொலை மற்றும் உடமைகள் அழிப்புக்கள் விடயத்தில் அந்த மக்கள் இழந்த இழப்புக்களுக்கு இன்னும் பூரணமாக எந்தவொரு இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. அந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் நிம்மதியற்ற நிலையில் இழப்புக்களின் கவலையிலேயே தமது வாழ்வை எதிர் கொண்டு வருகின்றனர் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைகளின் மத்தியில் கண்டிச் சம்பவம் முஸ்லிம்கள் மத்தியில் இன்றும் ஆறாத வடுக்கலாகவே பதிவாகி இருந்து வருகின்றது. சிறுபான்மைச் சமுகங்கள் என்ற வகையில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் கடந்த ஒரு தஸாப்த காலமாக சொல்லொனாத் துயரங்களையும், துன்பங்களையும் எதிர் கொண்டது மட்டுமல்லாது உயிர்களையும் இழக்க வேண்டிய கசப்பான நிலைமைகளுக்குள் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக சமய ரீதியாக சமயஸ்தளங்களைக்கூட இலக்கு வைத்து தாக்கும் மாபெரும் சதித்திட்டங்களை மேற்கொண்டதன் விளைவாக கண்டி திகன உள்ளிட்ட கிராமங்கள் தாக்கப்பட்டன. இதன் காரணமாக முஸ்லிம் கிராம மக்கள் பாரியதொரு அபாய நிலைமைகளை எதிர் கொண்டதுடன் உயிர்களையும் காவு கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டு விட்டது எனலாம். இரண்டு நபர்களுக்குள் ஏற்பட்ட வாய்த்தர்க்கமும், கைகலப்பும் ஒரு சமுகத்தினையே அழித்தொழிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றதை கவலையோடு கூற வேண்டியுள்ளது.

குமாரசிங்க என்ற சாரதி மீது குடிபோதையில் இருந்த முஸ்லிம் நபர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்த சாரதியின் மரணத்திற்கு இட்டுச் சென்றதன் பிரதிபலிப்புக்கள் கண்டியில் பல கிலோ மீற்றர் வரையான முஸ்லிம் பிரதேசங்களை தீக்கரையாக்கி விட்டது. தாக்குதல்களை மேற்கொண்ட நபர்கள் மீது பொலிஸாரும், நீதிமன்றங்களும் சட்ட நடவடிக்கை எடுக்க முன்னர். ஒருசில இனவாத சக்திகள் அப்பாவி பௌத்த மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் மீதான பொய்யான வெறுப்புப் பிரச்சாரங்களை பல வழிகளிலும் மேற்கொண்டு பாரிய குழப்பத்தை ஏற்படுத்தி விட்டனர். இவர்கள் வட்ஸ்அப், பேஸ்புக் மற்றும் இணையத் தளங்கள் ஊடாக இளைஞர்களை திரட்டியே மேற்படித் தாக்குதல்களை மேற்கொண்டனர். குறித்த இனவாத குழுக்கள் தாம் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு திகனவை ஒரே நாளில் அழித்து அப்பாவி இளைஞன் ஒருவரை தீமூட்டி எரித்துக் கொலை செய்ததுடன் மார்க்க அறிஞரான மௌலவி ஒரவவரையும் தாக்கி படுகாயப்படுத்தி ஈற்றில் அவரின் உயிரையும் பலியெடுத்து விட்டனர்.

**சத்தார் எம் ஜாவித்**

இவ்வாறு நடைபெற்ற சம்பவத்தை உடநடியாக கட்டப்பாட்டுக்குள் கொண்டுவராது இனவாதக் கும்பல்களின் திட்டங்கள் எல்லாம் நிறைவேறிய பின்னர் பொலிஸாரும், பாதுகாப்புத் தரப்பினரும் வந்து நடந்து கொண்ட விதங்களையெல்லாம் முஸ்லிம்கள் என்றும் மறந்துவிட முடியாது. கடந்த வருடம் இடம் பெற்ற மேற்படிச் சம்பவம்கள் முஸ்லிம்களைப் பொருத்தவரை மிகவும் கரைபடிந்த சம்பவங்கள் என்றே கூறலாம். இந்த நிலைமைகளை உடன் கட்டப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத முஸ்லிம் தலைமைகளுக்கு அப்பால் அரசாங்கம் ஒரு சமுகத்தினை அழிக்க இனவாதக் கும்பல்களுக்கு சந்தர்ப்பம் வழங்கியமையும், குறித்த சம்பவத்தை வேடிக்கை பார்த்ததும் மனிதாபிமானத்திற்கு அப்பால்பட்ட துரோகத்தனம் என்றே கூறலாம்.

இலங்கையில் வாழும் எந்தச் சமுகங்களாகவும் இருக்கட்டும் அது தனி மனிதனாக இருக்கலாம் அல்லது ஒரு சமுகமாக இருக்கலாம், அல்லது ஒரு இனமாக இருக்கலாம். அவர்களுக்கு இடர்கள், பிரச்சினைகள் ஏற்படும்போது அவர்களை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிய அல்லது பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் அரசாங்கத்திற்கும், பாதுகாப்புத் தரப்பினருக்மே இருக்கின்றது. ஆனால் திகன, தெல்தெனிய சம்பவத்தில் அவர்களைப் பாதுகாப்பதில் மாபெரும் துரோகத்தை அரசும், பாதுகாப்புத் தரப்பினரும் இளைத்து விட்டனர் என்றால் அதனை மறுக்க முடியாது.

இலங்கையின் எந்தவொரு குடிமகனின் சொத்துக்களும் அழிக்கப்படுமானால் அது இந்த நாட்டின் சொத்துக்கள் என்பதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். வெள்ளம் வருமுன் அணைக்கட்ட வேண்டும் என்பதுபோல் அரசுக்கும், புலணாய்வுத் துறையினரும், பொலிஸாருக்கும் திகன சம்பவங்கள் பற்றி நன்கு தெரிந்த நிலையில் அவற்றை கண்டு கொள்ளாது மாற்றான்தாய் மனப்பான்மையில் இருந்து விட்டு பின்னர் கூக்குரல் இட்டதை இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்லாது சர்வதேசமும் கண்டு கொண்ட விடயமாகும். மேற்படி விடயம் சர்வதேச மட்டத்தில் இந்த நாட்டுக்கு பாரிய அவப்பெயரையும், விஷனத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம்.

இழப்புக்கள் என்ற வகையில் அதனை அரசாங்கமே வழங்க வேண்டும். இந்த வகையில் சட்டவிரோத குழுக்கள் காட்டும் காட்டுத்தர்பார்களை தடுக்காது அழிவுகள் ஏற்பட்ட பின்னர் அதற்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுக்கான நிதி யாருடையது என்பதனைச் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அரசாங்கம் திகன சம்பவத்தில் இறந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், அழிக்கப்பட்ட உடமைகள் எல்லாவற்றிற்கும் விரைவாக இழப்பீடுகள் வழங்கப்படும் என்ற வாக்குறுதிகள் இன்று மக்களை ஏமாற்றும் கைங்கரியங்களாகவே கண்டு கொள்ள முடிகின்றது.

குறித்த சம்பவத்தில் ஒருசிலருக்கு சிறுசிறு தொகை வழங்கி விட்டு பின்னர் தருகின்றோம் என்ற வார்த்தைகள் இன்றுவரை நீர்மேல் எழுத்தான கதையாகவே உள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றர். அரசியலுக்காகவும், ஊடகங்களுக்காகவுமே அவர்கள் சிறுசிறு தொகைகளை வழங்கியதாகவும் குறிப்பாக சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட பாசித் என்ற இளைஞனின் குடும்பத்திற்கு வெறும் ஒன்றரை இலட்சம் மட்டுமே அரசாங்கம் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் வாக்குறுதியளித்த வகையில் ஒரு வருடம் நிறைவடைந்த நிலையிலும் அந்த மக்களுக்கான இழப்பீடுகள் பூரணமாக வழங்கப்படாது இழுத்தடிப்புச் செய்து வரும் விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மனச் சஞ்சலத்துடனும், அரசின் மீது வெறுப்பிலுமே உள்ளனர். அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் இருக்கின்ற அரசு இன்று பாதிக்கப்பட்ட மக்களின் விடயத்தில் கவனஞ் செலுத்தாது தேர்தலை இலக்காக வைத்து அதற்கான தமது காய் நகர்த்தல்களை மேற்கொள்வதும், 2019 வரவு செலவுத் திட்டத்தில் கூட இந்த மக்களின் விடயங்களில் அக்கறை செலுத்தாது இருப்பதும் முஸ்லிம் சமுகத்தில் அரசிற்கு எதிரான பாரிய எதிர்ப்பு அலைகைகளாக மாறி வருவதைக் காண முடிகின்றது.

இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றச் சட்டங்கள் எல்லாம் ஒருசில பெரும்பான்மை இனவாத சக்கதிகளால் கொச்சைப்படுத்தப்படுவதால் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமுகங்கள் பாரிய அச்சத்துடனேயே வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றனர். இன்று இவ்வாறு பகிரங்கமாக சட்டத்தை மீறும் நபர்கள் விடயத்தில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது அரசியல் மற்றும் சமயம் சார்ந்த செல்வாக்குகளால் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாது வெளியில் வருவது சமாதானமாக வாழ விரும்பும் மக்கள் மத்தியில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. திகன சம்பவத்தை பகிரங்கமாக மேற்கொண்டவர்களை அரசு விடுதலை செய்துள்ளமை எல்லாம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கவலைகளை மேலும் அதிகரிக்கச் செய்யும் விடயங்களாகவே காண முடிகின்றது.

ஒருவரின் இழப்புக்காக நீதிமன்றச் சட்டங்களை மீறி கோடிக்கணக்கான சொத்துக்களை அழிக்கவும், முஸ்லிம் மதஸ்தளங்களையும், பள்ளிவாசல்களையும் அழிக்கவும், அப்பாவிகளின் உயிர்களை பலியெடுக்கவும் மேற்கொள்ளும் காடைத்தனங்களை எந்த விதத்திலும் எற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கமும், பாதுகாப்புத் தரப்பினரும் விட்ட பிழைகளும், தவறுகளுமே திகன இழப்புக்களுக்கு காரணங்களாகும்.

பதட்ட நிலைமைகளைக் கருத்திற் கொண்டு குமாரசிங்கவின் உடலை அரசாங்கமே அவர்களின் வீட்டிற்கு கொண்டு சென்று ஒப்படைத்திருக்க வேண்டும். மாறாக வன்முறையை ஏற்படுத்த கங்கனங் கட்டிக் கொண்டிருக்கும் இனவாத கும்பல்களின் கையில் கொடுத்து அந்த உடலை அவர்கள் ஊர்வலமாக கொண்டு சென்றமை அப்பாவி பௌத்த மக்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒருவகையான வன்முறை உணர்வுகளை தூண்டிவிட்டது. அத்துடன் முஸ்லிம்களை அழிக்கத்துடிக்கும் கும்பல் பொதுமக்களையும் இணைத்துக் கொண்டு அழிவுகளை ஏற்படுத்த வழிவகுத்திருந்தது என்பதே யதார்த்தமான உண்மையகளாகும்.

எனவே அரசாங்கம் கண்டி வன்முறைகளை சரியான நேரத்தில் கட்டுப்படுத்தாது விட்ட பிழைகள் கண்டி முஸ்லிம்களின் அவலத்திற்கும், அழிவிற்கும் வித்திட்டது என்ற விடயத்தை பொறுப்பான எவரும் மறுக்க முடியாது. இந்த வகையில் பாதிக்கப்பட்ட அனைத்து முஸ்லிம்களும் இந்த நாட்டு மக்கள் என்ற வகையில் எந்தவித பாரபட்சமும், குறைகளும் ஏற்படாத முறையில் அவர்களுக்கான முழு இழப்பீடுகளையும் அரசாங்கம் காலம் தாழ்த்தாது சரியான முறையில் வழங்க வேண்டும் என்பதே அந்த மக்களின் ஆதங்கங்களாகும்.

# பெண்களின் இன்றைய நிலை

**சி.திவியா**

பெண் சுதந்திரம் என்று பேசுபவர்கள் அந்த சுதந்திரம் என்பதன் உண்மை அர்த்தம் என்னவென சிந்தித்ததுண்டா?

மகளிர் தினத்தை ஒரு கொண்டாட்டமான தினமாக மாற்றிவிட்டார்கள்.

உண்மையில் எதற்காக தொடங்கப்பட்டது என்பதை மறந்து பெண்கள் தினக் கொண்டாட்டங்கள் சமீப காலமாக வணிக லாபத்துக்கான ஒரு தளமாக மாறிவிட்டது.

பெண்கள் சம்பந்தப்பட்ட பொருட்களுக்கான விளம்பரமும் விற்பனையும் செய்து இந்த வாய்ப்பை பயன்படுத்தி லாபம் பார்க்கிறது ஒரு கூட்டம்.

பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும், இந்த உடைகள் தான் அணிய வேண்டும். இந்த நேரத்துக்குள் வீடு திரும்பிவிட வேண்டும், இல்லையெனில் அவர்களின் பாதுகாப்புக்கு யாரும் பொறுப்பல்ல என்று உரத்த குரலில் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள் இங்குள்ள கலாச்சார காவலாளிகள் சிலர்.

ஒரு நாளை ஓட்டறதே பெரிய கஷ்டம், இதில் பெண்களுக்கான ஒரு நாளுன்னா எங்க பிரச்னை தீர்ந்திடுமா என்ன என்ற வேதனையுடன் ஒலிக்கும் பெண்களின் குரல் ஒரு பக்கம்.

நன்றாகப் படித்து முடித்திருந்தாலும் குடும்பம் எனும் கூட்டில் அடைபட்டு, என் திறமைகளை வெளிக் கொண்டு வர முடியவில்லை, இதில் மகளிர் தினம் ரொம்ப முக்கியம் என்று புலம்பும் இல்லத்தரசிகள் பலர்.

இப்படி நாலா பக்கமும் பெண்கள் தினத்தை மறுப்பவர்கள் இருக்கவே செய்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள் ஒருபுறம் இருக்கட்டும்.

உண்மையில் மகளிர் தினம் என்று தனிப்பட்ட ஒரு தினம் தேவையா? அந்த ஒரு நாளில் ஏதேனும் நல்ல விஷயங்கள் நடக்கின்றனவா? உலகம் முழுவதும் உள்ள பெண்களின் விழிப்புணர்வு மேம்பட்டுள்ளதா?

ஆண்டுதோறும் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்படுகின்றனது. 1975 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை இந்த தினத்தை சர்வதேச பெண்கள் தினமாக அறிவிருத்திருந்த போதும், இந்நாளின் வரலாறு 1917 ம் ஆண்டு சுமார் இரண்டு லட்சம் ரஷ்யப் பெண்கள், ஜார் மன்னரின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த நிகழ்வை நினைவு கூறும் நாளாகும். ஜார் ஆட்சிக்காலத்தில் முதலாம் உலகப்போரின் விளைவாக , பல்லாயிரக்கணக்கான ரஷ்ய ஆண்கள் மடிந்தனர்; காணாமல் ஆக்கப்பட்டனர்; பஞ்சம் தலைவிரித்தாடியது; இதனால் தமது கணவனை போருக்கு பலிகொடுத்துவிட்டு குழந்தைகள் பசியில் வாடுவதை பொறுக்க முடியாத பெண்கள் ரொட்டிக்காக

போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த பெண்கள் எழுச்சியின் தொடர்ச்சியாகவே மாபெரும் ரஷ்யப் அக்டோபர் புரட்சி ஏற்பட்டது. அதற்கு நன்றிகூறும் விதமாக , லெனின் தலைமையிலான சோவியத் அரசு மார்ச் 8 திகதியை மகளிர் தினமாக அறிவித்து ரஷ்யப் பெண்களை கௌரவித்தது. இன்று பெண்கள் அனுபவிக்கும் மகப்பேற்று விடுமுறை, பாலூட்டும் தாய்மாருக்கான நேரச்சலுகை உட்பட பல்வேறு உரிமைகள் ரஷ்ய சோஷலிச புரட்சி எமக்கு பெற்றுத் தந்த உரிமைகளாகும். சமூகத்தில் இன்னமும் கூட ஆணாதிக்கத்தை வளர்த்தெடுப்பது ஆண்கள் மட்டுமல்ல, சில பெண்களும் தான். தன்னை விட ஆண் ஏதோ ஒரு வகையில் உயர்ந்தவன் என்று பெண்களின் மரபணுவில் பதியப்பட்டிருப்பதால் அவர்கள் அதை அப்படியே நம்பும் நிலை இன்னும் நீடிக்கிறது.

போலி பெண்ணியவாதிகள் எவ்வளவு ஆபத்தானவர்களோ அதே போலத்தான் இந்தப் பெண்களும். இவர்களை முதலில் சரி செய்தால் தான் சம உரிமை, பெண்ணை உடலாக மட்டும் ஆண் பார்க்கும் தன்மையிலிருந்து விடுபடுதல் சாத்தியம்.

எப்போதும் ஒருவன் தன்னை உயர்ந்தவனாகவே நினைத்துக் கொண்டிருந்தால் அங்கு ஒடுக்குமுறைகள் அழிக்கப்படவே முடியாது. எனவே பெண்கள் தங்கள் மனத்திலிருந்து செயல்படும் நிலையிலிருந்து மாறி புத்தியிலிருந்து சிந்திக்கும் நிலை வர வேண்டும். சமூகம் ஆண் பெண் பாகுபாடற்ற சீரான சமூகமாக மறுமலர்ச்சி அடையும் வரையிலேனும் அவர்கள் தங்களை அப்படியே தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

மகளிர் தினங்கள் ஏன் கொண்டாடப்பட வேண்டும் என்று பெண்களுக்கு முதலில் தெளிவு ஏற்பட வேண்டும். பெண்களைப் பற்றி மட்டுமே கவனஈர்ப்பு செய்வதை விட்டுவிட்டு ஆண்கள் சிறுவர்கள் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

அடுத்த உயிரின் வலியை உணர வேண்டும் என்ற அடிப்படை விஷயங்கள் தெரிந்திருந்தால் ஆத்திரத்தில் கூட ஒரு சிறுவன் இன்னொரு சிறுவனின் தலையில் கல்லைப் போட மாட்டான். எனவே ஒரு புதிய சமூகத்தை உருவாக்கும் மிகப் பெரிய பொறுப்பு பெண்களிடம் மட்டுமே உள்ளது.

பெண்கள் அதைத்தான் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்றாலும், இன்னும் மிகச் சரியாக செய்ய வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு காந்தியும் ஒரு கலாமும் தோன்றினால் உலகம் பூந்தோட்டமாகவே மாறிவிடுமல்லவா? அத்தகைய பூந்தோட்டத்தில் மகளிர் தினத்தை கொண்டாடுவது எவ்வளவு சிறப்பாக இருக்கும் என எண்ணிப்பாருங்கள்.

ஆனாலும் நாம், தமது பல்வேறு உரிமைகளுக்காக உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடுகளிலும் பெண்கள் இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது நாட் சம்பளம் ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்;

அதே போல யுத்தத்தில் காணமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத் தரும்படி போராடிக் கொண்டிருக்கின்றனர்.

தமது பூர்வீக வாழ்விடங்களை மீட்டுத் தரும்படி கேப்பாபிளவு, சிலாவத்துறை மக்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

புத்தளம் பிரதேசத்தில் கொழும்பு, வெளிநாட்டு திண்மக் கழிவுகளை கொட்டும் திட்டத்திற்கு எதிராக மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த எல்லா போராட்டங்களிலும் சளைக்காமல் ஓர்மத்துடன் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பது பெண்களே....

10 இலிருந்து 50 வயதுடைய பெண்களையும் ஐயப்பன் கோயில் தரிசனத்திற்காக அனுமதிக்க வேண்டும் என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும் கூட , வழிபாட்டுக்கு சென்ற பெண்களுக்கு ஆணாதிக்க மதவாத சக்திகள் தாக்குதல் நடத்தினர்.

இதற்கெதிராக , தமது வழிபாட்டு உரிமைக்காக, சுமார் 5 லட்சம் கேரள பெண்கள் திரண்டெழுந்து மனித சங்கிலி போராட்டத்தை நடத்தி தமது உரிமைகளை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்விலிருந்து புலனாவது என்ன?

சட்டங்களில், காகிதங்களில் இருக்கும் பெண்களின் உரிமைகள் நடைமுறைக்கு வர வேண்டுமானால் கூட பெண்கள் போராட வேண்டியிருக்கிறது.

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக பல்வேறு சட்டங்கள் வெறும் காகிதங்களில் மட்டுமே இருக்கின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளரான போதநாயகி, ஹட்டன் தனியார் வைத்தியசாலை தாதி சாந்தினி உட்பட பல பெண்கள் குடும்ப , வேலையிடத்தில் நிகழும் வன்முறைகளால் , அத்துமீறல்களால் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

குடும்ப உறுப்பினர்களினால் தான் பெண்களுக்கெதிரான அதிக வன்முறைகள் இடம்பெறுகின்றன. அவை முறைப்பாட்டிற்கு கூட வருவதில்லை. பொருளாதார உழைப்பிலும் குடும்ப உழைப்பிலுமாக பெண்கள் இரட்டைச் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதுபற்றி முதலாளித்துவ சட்டங்கள் கண்டுகொள்வதில்லை. அதைப்பற்றி பேசினால் முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இருப்பிற்கு அச்சுறுத்தலாகும் என்பதால், பெண்விடுதலை என்பதை மேட்டுக்குடி பெண்களின் பார்வையில் அவர்களின் கோரிக்கைகளை மட்டுமே முன்னிறுத்துகின்றனர். உழைக்கும் பெண்களின் கோரிக்கைகள் புறம்தள்ளி விடுகின்றனர்.

உண்மையில் உழைக்கும் பெண்களின் விடுதலை சமூக விடுதலையுடன் இணைந்திருந்திருக்கிறது.

உழைக்காத பெண்கள் என எவருமே இல்லை என்ன சில பெண்களிற்கு உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கிறது, பணப்பெறுமதி இருக்கிறது. பணப்பெறுமதியற்ற குடும்ப உழைப்பில் பெண்களின் ஆயுளும் ஆரோக்கியமும் தேய்ந்து மடிந்து போவதை எவரும் கண்டுகொள்வதில்லை.

1990 களில் வெனிசூலா நாட்டின் இல்லத்தரசிகள் , தமது குடும்ப உழைப்பையும் சமூக உழைப்பாக கருதி தமக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வேலைநிறுத்த போராட்டம் நடத்தி வெற்றி கண்டனர்.

குடும்ப உழைப்பில் 8 மணி நேரம் என்ற நேர வரையறை இல்லை. காலை கண் விழித்ததிலிருந்து உறங்கச் செல்லும் வரை ஓய்வற்ற உழைப்பில் பெண்கள் சலிப்பின்றி உழைப்பது பற்றி எந்த கவலையும் யாருக்கும் இல்லை.

இன்று பெண்கள் பொருளாதார உழைப்பிலும் ஈடுபடுகின்ற போதிலும் குடும்ப உழைப்பு எனும் இரட்டைச் சுமையாலும் அல்லாடுகின்றனர்.

அதை போல பணியிடங்களில் ஆண்களுக்கு நிகரான சம்பளம் வழங்கப்படாமல் சுரண்டப்படுகின்றனர். பாலியல் வசவுகள் , பாலியல் அத்துமறல்கள் என பணியிடங்களில் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இவற்றிற்கு எதிர்பபு தெரிவித்து குரல் உயர்த்துபவர்கள் தனிப்பட்ட பழிவாங்கல்கள் மூலம் அச்சுறுத்துகின்றனர். இதற்கு பயந்து பல்வேறு வன்முறைகள் வெளிவருவது கூட இல்லை.

இலங்கையில் யுத்தத்தின் காரணமாக சுமார் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் தலைமையேற்ற குடும்பங்களில் நிரந்தர வேலை இன்மை, வறுமை காரணமாக பெண்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி நுண்கடன் நிறுவனங்கள் பெண்களை மேலும் சுரண்டுகின்றனர்.

நுண்கடன் நிறுவனங்களின் அத்துமீறல்களால் பல பெண்கள் தற்கொலையின் விளிம்பிற்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். உலகெங்கிலுமுள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு சட்டத்தின் மூலம் பெற்றுக் கொண்ட தீர்வுகள் சொற்பமே...

அவை பெண்களின் ஓர்மமான விடாப்பிடியான போராடாடங்களின் மூலமே பெற்றுக்கொள்ளப்பட்டன. பெண்கள் அமைப்பாவதும் , அவ்வமைப்புக்குள் தமது அனுபவங்களை , துன்பங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் தீர்வுகளை தேட முயற்சிப்பதுமே எமக்கான விடுதலைக்கான திறவுகோலாகும்.

எமது விடுதலைக்காக எமது கால்கள் நகரும் போதுதான் எம்மைச் சுற்றிலுமுள்ள அடிமைச் சங்கிலிகளை நாம் உணரத் தொடங்குவோம்.

அவ்வாறு உணரத் தொடங்கும் போது எம்மை சரியான திசையில் வழிநடத்த அமைப்பாக்கம் பெறுவது தான் பெண்களின் இன்றைய அடிப்படைத் தேவையாகும். பெண்களை அடக்குமுறைகளின் கட்டுப்பாட்டிற்கும் தனித்தனி தீவாக வைத்திருக்கும் வரை நமக்கு விடுதலை என்பது எட்டாக் கனியே...

திருமணமானபின் , தமது உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள கூட தோழிகளின்றி மனவுளைச்சலுக்கு ஆளாகியிருக்கும் பெண்கள் அநேகம்.

வெளிப்படையாக பேசிக்கொள்ள யாருமின்றி போவது மாபெரும் துன்பம். இதை களைய பெண்கள் முன்வர வேண்டும். தமக்கு எதிரான குடும்ப , சமூக, அரச வன்முறைகளை இனம்கண்டு களைய, போராட வேண்டும

‘சும்மா கிடைக்க சுதந்திரம் என்பது சுக்கா மிளகா கிளியே’ என்ற

பாரதிதாசனின் கேள்விக்கேற்ப எமக்கான விடுதலையை நாம் சும்மா பெற்றுவிட முடியாது.



# கைவிடப்பட்ட நிலையிலிருக்கும் எலகந்த மீன் விற்பனை நிலையம்


கோப்புப்படம்

## போதைவஸ்த்து பிரியர்களின் உல்லாசபுரியாக மாறுகின்றதா?

தேர்தலை எதிர்நோக்கும் நிலையில் அரசியல்வாதிகளும் பொதுமக்களும் ஆர்வத்துடன் இருந்து வரும் இவ்வேளையில், அரசாங்கம் பொருளாதார வளர்ச்சி காண வேண்டும் என்ற நோக்கத்தில் அவசர அவசரமாக நடவடிக்கைளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


கோப்புப்படம்

இருந்தும் மக்களின் அடிப்படைத் தேவைகள் தீர்க்கப்படாமலே இருந்து வருகிறது. சாதாரண பொதுமகன், அவன் குடும்பம், பிள்ளைகள் நிறைவான வாழ்க்கையை உணர்வார்கள்.

தொழில் இல்லாப் பிரச்சினை, வீடில்லா பிரச்சினை, குடிநீர் பெறுவதில் தாமதம் போன்ற அத்தியாவசியமானவை கிடைக்காமல் போகும் போது மக்கள் வெறுப்படையதான் செய்வார்கள்.

வத்தளை, எலகந்த பகுதியில் வசிக்கும் மக்கள், எலகந்தவில் பல வருடங்களுக்கு முன் நிறுவப்பட்ட மீன் சந்தைப்படுத்தும் விற்பனை நிலையமொன்றை பெருமளவு செலவில் பெற்றுக் கொண்டது.

ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா அம்மையார், இந்த மீன் விற்கும் நிலையத்தை பல மில்லியன் ரூபா செலவில் உருவாக்கி திறப்பு விழாவும் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது.

ஆனால் நடந்ததோ வேறு கதை. மீன் விற்பனையாளர்கள் அந்த மீன் விற்கும் நிலையத்தின் அமைப்பு, மீன் விற்கக்கூடியவிதமாக அமையவில்லையென அக் கட்டிடத்தில் மீன் பரப்பி வைக்கப்படும் சிறு கடைகள், பிரதான வீதியிலிருந்து உள்பகுதியில் அமைந்துள்ளதால் பொதுமக்கள் உட்புறத்திற்கு வராமல் முன்உள்ள விற்பனை நிலையத்தில் மீன் கொள்வனவு செய்கின்றார்கள் என்றும், அதனால் தங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுவதாகக் கூறி அக் கட்டிடத்தை அம்போவென கைவிட்டு மீண்டும் தெருவோரங்களில் மீன் விற்பனையை பல ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். தற்போதும் அதே நிலைதான்.

இதனால் போக்குவரத்திற்கு பெரும் தடையேற்பட்டுள்ளது. போதாக் குறைக்கு தெருவின் மறுபுறத்தில் போக்குவரத்து பஸ்வண்டிகள் வேறு நிறுத்தப்படுகிறது. போக்குவரத்து சீராக இருக்க வேண்டும், விபத்துகள் குறைய வேண்டும், நடைபாதை பொதுமக்களுக்கு தடையின்றி இருக்க வேண்டும், என்ற உயர் எண்ணத்தில் தான் இங்கு மீன் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது.

ஆனால் அந்த எண்ணம் நிறைவேறவில்லை. மீண்டும் போக்குவரத்து சீர் குலைந்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கைவிடப்பட்ட இந்த மீன் விற்பனை நிலையத்தின் தற்போதைய நிலை மேலும் பொதுமக்களுக்கு பெருந் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.

**பொதுமக்கள் விசனம்**

அக்கட்டிடம் குப்பை கொட்டுமிடமாகவும், நுளம்புபெருகுமிடமாகவும் பற்பல தகாத நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்களின் விசனத்திற்கு முக்கிய காரணம், போதைவஸ்து சிறிய அளவில் மறைமுகமாக விற்பனை செய்யப்படுவதுதான்.

இளைஞர்கள் மாலைநேரங்களில் அங்கே காரணமின்றி சுற்றியலைவார்கள். அவர்களுக்கு மட்டும் தெரிந்த ஒரு சிலர் மறைவிடங்களில் ஆங்காங்கே சுருட்டி வைக்கப்பட்ட பொட்டலங்களை எடுத்துக் கொள்கிறார்கள்.

எலக்கந்த பாலத்தின் ஒதுக்குப்புறமான பகுதியில் போதைவஸ்த்து மறைத்து வைக்கப்படுகிறது.

மீன் விற்பனைக்காக கட்டப்பட்ட கொங்கிறீட் மேசைகள் படுக்கைகளாக மாறியுள்ளது.

தகாத உறவில் ஈடுபடும் பெண்களின் வருகையை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றதென பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களை குறியாகக் கொண்டு தான் சிறியளவில் போதைவஸ்த்து விற்பனை இடம்பெறுகிறது என பெற்றோர் கவலைப்படுகிறார்கள்.

**லீலா இராமையா**

எத்தனையோ அரசியல்வாதிகள், கிராமசேவகர்கள், நகரசபை தலைவர்கள், பொலிஸார் என இந்த எலக்கந்த பிரதான வீதியில் அமைந்துள்ள இந்தப் பாழடைந்த கட்டிடத்தையிட்டு பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

போதைவஸ்த்து இங்கு சகஜமாக விற்பனை செய்யப்படும் விடயம் பொலிஸாருக்குத் தெரியும். இந்தக் கட்டிடத்தின் மாடிப்பகுதியில் சிறு கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை வெறுமையாக இருப்பதுடன் படுக்கையறைகளாக உபயோகப் படுத்தப்படுகின்றன.


கோப்புப்படம்

மின்சார வசதி இங்கு இருக்கிறது. ஆனால் மின்சாரத்திற்கான கட்டணம் செலுத்துவது யாரெனப் புரியவில்லை. நகரசபைக்கும் மின்சார சபைக்கும் இது நிச்சயமாக தெரிந்திருக்க வேண்டும்.


உண்மையில் இக்கட்டிட மாடியில் உள்ள சின்ன அறைகளில் ஒருசிலர் வாடகை செலுத்தி வியாபாரம் செய்கிறார்கள். கையல் நிலையம், அடகுக்கடை போன்ற ஒரு சில கடைகள் உள்ளன.

எத்தனையோ முறை பொதுமக்கள் இந்தக் கட்டிடம் சம்பந்தமான விடயங்களை உரியவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்தும் எவரும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

எமது ஜனாதிபதி தற்போது போதைவஸ்த்து சம்பந்தமாக கடுமையான நடவடிக்கை சட்டதிட்டங்களை மும்முரமாக அமுல்படுத்தி வரும் இவ்வேளையில் எலகந்த மீன் விற்பனை நிலையத்தில் கைவிடப்பட்ட இக் கட்டிடத்தை மீண்டும் நல்ல முறையில் நடத்த நடவடிக்கை எடுத்தால், எத்தனையோ வர்த்தகர்கள் நன்மை பெறுவார்கள். அதனால் தொழில் பெறும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

மின்சாரம், தண்ணீர் போன்ற சகல வசதிகள் இருந்தும் பாழடைந்த இக்கட்டிடம் மீண்டும் நல்ல முறையில் சீராக்கப்பட்டால் மீன் வர்த்தக நிலையமாக மாற்றியமைக்கவும் முடியும். அல்லது வேறு வர்த்தகங்களுக்கு உபயோகப்படுத்தலாம்.

முக்கியமாக போதைவஸ்த்து விற்பனை இங்கு குறைவடையும். சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டுபிடித்து எலக்கந்தை நகரத்தை தூய்மைப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்பது இப்பகுதி வாழ் மக்களின் அவாவாகும்.



# வாசிப்பினூடான கற்றல்

## மாணவர்களின் வாழ்வை பிரகாசிக்கச் செய்யும்

'கண்டது கற்கப் பண்டிதனாவான்' எனற முதுமொழிக் கொப்ப வாசிப்பு என்பது, ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதற்கு பிரதான வழி முறையாகும். புத்தகங்கள், பத்திரிகைகள், மற்றும் சஞ்சிகைகள் மட்டுமன்றி விளம்பரப் பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள், பெயர்ப் பலகைகள் போன்ற கையினால் எழுதப்பட்ட, அச்சில் வடிக்கப்பட்ட மற்றும் இணையத்தள செய்திகள் அனைத்துமே வாசிக்க தகுந்தவையாகும்.

பாடசாலைக் கல்விக்கு வாசிப்புப் பழக்கம் அத்தியவசியமாகும்.

வாசிப்புப் பழக்கம் நம்மில் ஏற்பட்டால் அந்தப் பழக்கத்திற்கு நாம் அடிமையாகிவிடுவோம். பொதுவாக, எந்தவொரு விடயத்திற்கும் அடிமையாவது நன்றன்று எனக் கூறப்பட்டாலும், வாசிப்புப் பழக்கம் அதற்கு விதிவிலக்காகும்.

வாசிப்புப் பழக்கத்தின் மூலம் வாழ்க்கைக்கு பல்வேறு நன்மைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

வாசிப்பு பழக்கத்திற்கு அடிமையானவர்கள் பொதுவாக, எந்தவிதமான கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாவதில்லை. காரணம் வாசிப்பு பழக்கத்தினால் கிடைக்கின்ற நல்ல விடயங்களின் மூலம் அவர்கள் செப்பனிடப்படுகின்றமையே ஆகும். 'நல்ல புத்தகங்களும் நல்ல நணபர்களே'.

மாணவர்களின் பிரதான பொறுப்பு கல்வி கற்றலாகும். பெற்றோர் உட்பட பாடசாலைகள், அரசாங்கம் மற்றும் சமுதாயம் என்பன மாணவர்கள் கல்வி கற்பதை அதிகம் அதிகம் எதிர்பார்க்கின்றர். இலங்கையில் கல்வி இலவசமாக அளிக்கப்படுகின்றது. 1943 ஆம் ஆண்டு கல்வி அமைச்சராக இருந்த சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா அவர்களின் சீர்த் திருத்தத் திட்டத்தின் முக்கிய விதந்துரையாக இலவசக் கல்வி அமைந்தது. அதற்கமைய , பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை இலவசமாகக் கல்வி அளிப்பதற்கும் அவ்வாறே

தமிழ் மொழியில் கல்வி கற்பதற்கான உரிமை மற்றும் அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கிலம் கற்பித்தல், தொடர்பில் பாடத்திட்டத்தை அமுல்படுத்தல் என்பன இந்த ஆலோசனையில் உள்ளடங்கியிருந்தது.

**றாசிக் நபாயிஸ்**
(BA, MA) சமூகப்பணியார்,
மருதமுனை

பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். பாராட்டுதல், குறைகளை எடுத்துக்கூறல், பரிசில்களை வழங்குதல், தேவையான வேளைளில் தண்டனைகளை வழங்குதல், போட்டிகளில் ஈடுபடுதல் என்பன இவைகளில் சில வழிகளாகும்.

இவைகளில் குறை கூறுதல் மற்றும் தண்டனை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மாணவர்களுர்க்கு மகிழ்ச்சியற்ற செயல்களாகவும் அதேவேளை, பாராட்டுதல் , பரிசில்கள வழங்குதல் மற்றும் போட்டியில் ஈடுபடுத்தல் என்பன அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். செயல்களாகவும் விளங்குகின்றன. எனினும் பிறரின் உந்துதலால், கல்வி கற்பதை விட, மாணவர்கள் தாமாகவே உணர்ந்து வாசித்து கல்வி கற்பதே சிறந்ததாகும்.

'நுனிப் புல் மேய்வதால்' தான் நினைத்த மாதிரி சரியாக வாசிக்கவும் முடியாது கற்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் முடியாது.

தாமாகவே சிந்தித்து செயற்படுவதானது , ஒருவரின் உளரீதியான மிகப் பெரும் சக்தியாகும் . சிறு பராயம் முதற்கொண்டே பல மாணவர்கள், பெற்றோர் சொல்லைக் கேட்டே கல்வி கற்கின்றனர். ஆரம்ப கட்டம் என்பதால் இது நலமானதே, எனினும் மாணவர்கள் தாமாகவே முன்வந்து கற்பதே சிறந்ததாகும். இப்படி தேடியும், ஆராய்ந்து வாசித்து கற்பதால் மாணவர்களின் வாழ்வு பிரகாசிக்கும் என்பது

மாத்திரமல்ல அவர்கள் ஒரு வளமாகவும் மாறுகிறார்கள். உலகப் பொது விடயங்களையும் சேமித்துக் கொள்கிறார்கள். தேவையான போது வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள். இதனாலேயே அதிக மாணவர்கள் கட்டுரை, கவிதை, சிறுகதைகள், பேச்சுக்கள் உள்ளிட்ட போட்டிகளுக்கு சென்று பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் வெற்றி வாகையும் சூடுகிறார்கள்.

வாசிக்கும் போது உரிய விடயத்தில் அவதானம் செலுத்துவது கற்றலில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. அநேகமாக ஒரு விடயத்தில் அவதானம் செலுத்துவது என்பது சிறு வயதில் கடினமான விடயமாகவே இருக்கும். எனினும் , மனதை அமைதியாக வைத்து ஒரே விடயத்தில் கவனம் செலுத்தப் பழக வேண்டும். கற்றலில் தொடர்ந்து ஈடுபடுவது சிரமமாக இருந்தால், இடையிடையே வேறு பல விடயங்களிலும் ஈடுபடுதல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது செய்யும் வேலைகள் அல்லது மற்றும் விடயங்களில் முழுக் கவனத்தையும் செலுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் வாசிப்பதன் ஊடாக மொழி உச்சரிப்புக்கான பயிற்சியும் கிடைக்கின்றன. மேலும் மற்றவர்களுக்கு கேட்காதவாறு வாசிக்கும் போது கண்களால் எழுத்துக்களை இனங் கண்டு மனம் விளங்கிக் கொள்ளும் பயிற்சியையும் பெறுகிறார்கள். ஒருவர் அறிந்து கொள்ளும் சொற்களின் எண்ணிக்கை அடிப்படையிலேயே சிந்தனை ஆற்றல் வளர்கிறது. எனவே கல்வியில் முன்னேற்றம் அடைய விரும்பும் மாணவர்கள் வாசிப்பதன் மூலம் அதிக அளவு சொற்களையும் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

ஒரு புத்தகத்தை படிக்கும் போது அதிலுள்ள பல்வேறு விடயங்களை நாம் அறிந்து புரிந்து கொள்ளலாம். தொடர்ந்து வாசிக்கும் போது நம் மனதில் ஆழமாக பதிந்து தேவையான போது அவற்றினை நினைவுபடுத்துவதாகவும் அமையும். இப்படியான வாசிப்பு, அறிவுத் தேடலுக்கும் புரிதலுக்கும் கற்றலை இலகுபடுத்துவதற்கும் எழுத்தாற்றல் மற்றும் பேச்சாற்றலை அதிகரிப்பதற்கும் உதவும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

பத்திரிகைகள் எம்மத்தியில் நாளாந்த, வாராந்த, மாதாந்த பத்திரிகைகள் என வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவைகளை தொடர்ந்து நாம் வாசிப்பதன் மூலம் உள்நாடு, வெளிநாட்டு, அரசியல், பொருளாதார, விளையாட்டு நிகழ்வுகள் உட்பட பல்வேறு துறைகளின் விடயங்களைப் பரவலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்றது.

எனவே ஓய்வு நேரங்களில் புத்தகங்கள், பத்திரிகைகள், நாவல்கள், சிறுகதைகள், இலக்கண, இலக்கிய நூல்கள் மற்றும் அறிஞர்களின் தத்துவம் சார்ந்த நூல்கள் போன்றவற்றை வாசிப்பதற்தகு பழக்கப்படுத்திக் கொண்டால் மனம் அமைதியடையும், சிறந்த ரசனையும், ஆர்வமும் அதிகரிக்கும். கெட்ட சிந்தனையில் இருந்து விடுதலை பெறவும் முடியும். எனவே 'வாசிப்பினூடான கற்றல்' மாணவர்களின் வாழ்கை பிரகாசிக்க செய்யும் என்பது திண்ணம்.



# தமிழை நேசிக்காதவன் சைவத்தை நேசிக்க முடியாது

## பேராசிரியர் வே.சங்கரநாராயணன் (தமிழ்நாடு)

**அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றம் பாடசாலை மாணவர்களுக்கான விழுமியக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம் - 01 செயற்திட்டத்தில் மாணவர்களின் கல்வியும் ஆன்மீக விழுமியங்களும் என்னும் சொற்பொழிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சொற்பொழிவாளர் கலாநிதி தமிழருவி பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் அவர்களது உரையின் சிறுபகுதி.**

உலகின் பல கண்டங்களிலும் பரந்து விரிந்து செழிப்புற்று வளர்ந்த மொழிகளில் சைவசமயம் முதன்மையானது. சைவத்தின் தொன்மைக்கு அகழ்வாராய்ச்சிகள், தொல்பொருள் சான்றுகள், வடமொழி, தமிழ் மொழிகளிலுள்ள பழம்பெரும் ஏட்டுப்பிரதிகள் ஆதாரமாக விளங்கி வருகின்றன. சிந்துவெளி நாகரீக காலம் கி.மு.3250 தொடக்கம் 2750 வரையான காலப்பகுதியாகும். இதுவே சைவசமயத்தின் தொன்மையினை முதன்மைப்படுத்தி ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எமது தமிழ்மொழி ஆரம்பகாலகட்டத்தில் 51 எழுத்துக்களை மட்டுமே உடைய மொழியாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் பின்தமிழை வளர்த்த சான்றோர்கள் 247 எழுத்துக்களை உருவாக்கி எமது பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். க்மிழானது மிக இலகுவாக கையாளக்கூடியதும் மிக குறுகிய வசன நடை கொண்டவையாகவும் உள்ளது. ஆங்கில மொழியுடன் ஒப்பிடும் போது இவை புலப்படும். இதனாலேயே தமிழ்மொழி செம்மொழி என்ற பெருமை, ஆதிக்குடிகள் தமிழர் என்ற அசைக்கமுடியாத பெருமைக்கும் உரியவை எனலாம். இன்று உலக மக்களிடையே பல ஆயிரக்கணக்கான மொழிகள் பேச்சு, எழுத்துக்கள்பயன்பாட்டிலுள்ளது எனலாம். அவற்றில் தமிழ் பழமை வாய்ந்த மொழியாகும். மேலும் பல்லாயிரம் ஆண்டுகால இலக்கண இலக்கிய வரலாற்றைக் கொண்டதுமாகும். அதாவது சங்கம் வளர்த்த தமிழ் என்ற புகழையுடையது.

மனித வாழ்வும் மாணவர்களின் கல்வியும் ஆன்மீகத்துடன் பயணிக்கும் போதே முமையான வெற்றகைக் காணமுடியும். மாணவர்களுக்கு முதலில் குருபக்தி அவசியம். இதனையே மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் மாதா, பிரத, குரு ஆகிய மூன்றும் கண்ணுக்குத் தெரிகின்ற கடவுள்கள். நாம் காண்கின்றோம். ஆனால் நான்கவதாக உள்ள தெய்வத்தை எமது கண்ணால் காணமுடியாது. மன ஒடுக்கத்தின் மூலமாக நிச்சயம் காணமுடியும். ஆக இந்த நான்கையும் நாம் வணங்கினாலே இவ்வுலகம் எமக்கு அடிமைப்பட்டுவிடும்.

இவ்வுலகில் 86 இலட்சம் உயிரினங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இவற்றில் மனிதனைத் தவிர ஏனைய உயிரினங்கள் யாவும் குறுக்காகவே வளர்கின்றது. மனிதன் மட்டுமே மேல்நோக்கி வளர்கின்றான். அதாவது அவனது சிந்தனைகள் ஒவ்வொரு வினாடியும் வளர்ச்சி பெற்றுக்கொண்டே இருக்கின்றது. இதனாலேயே விஞ்ஞானத்துறையின் அதீத வளர்ச்சியின் பயன்களை மனிதகுலம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

இன்று சைவமும் தமிழும் உலகில் கொடிகட்டிப் பறக்கின்றன. உலகின் எப்பாகம் சென்றாலும் ஆலயங்களை தரிசிக்கக்கூடிய பாக்கியம் கிடைக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழன் கடல்கடந்து புலம்பெயர்ந்து மேற்குல நாடுகளுக்குச் சென்றுள்ளான். ஆனால் இலங்கை மண்ணிலிருந்து கடந்த பத்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பு சென்ற பெருவாரியான தமிழர்களாலேயே ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் மூலை முடுக்குகள் எல்லாம் ஆலயங்களை நிறுவ முடிந்ததுள்ளது டன் சைவத்தை வளர்த்தும் உள்ளார்கள். இதைப் பெருமையாக உலக மக்கள் பார்க்கின்றார்கள். லண்டன் மாநகரில் மட்டும் இன்று 28 சைவ ஆலயங்கள் உள்ளது. இது எமக்குப் பெருமைதரும் விடயமல்லவா. மாணவர்களாகிய உங்கள் கல்விப் பணிக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் அவர்கள் அரும்பணி செய்து கொண்டிருக்கின்றார்கள். தொண்டுக்காக வாழ்பவனும் இலங்கைத் தமிழர்களே ஆகும்.

**இரத்தினம் நடராஜன்**
**அக்கரைப்பற்று**

மாணவர்களாகிய நீங்கள் ஆன்மீகத்துடன் இணைந்து பயணித்தால் வெற்றி எம் பக்கம். இளமையில் கல்வி சிலையில் எழுத்து.

எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு
என்பது திருக்குறள்.

அதாவது யார் என்ன சொன்னாலும் உண்மைப் பொருளை கண்டறிவது அறிவு என்றது திருக்குறள். இதை மாணவர்கள் நன்கு மனதினில் பதியவைத்துக் கொள்வது அவசியம். சமயக்கல்வி ஊடாகவே நிறைவான நினைவாற்றலை நாம் அடையமுடியும்.

ஒருமுறை கடவுள் இருக்கின்றார் என்பவருக்கும் கடவுள் இல்லை என்று கூறுபவருக்கும் ஒரு விவாதம் ஏற்பட்டதையும் இவை எவ்வாறு அமைந்தது என்பதையும் மாணவர்களாகிய உங்களுக்குச் சொல்கின்றேன். வழமைபோன்று ஒரு குருவானவர் பிள்ளையாரை வணங்கிக் கொண்டிருக்கின்றார். அவ்வழியே தனது செல்லப் பிராணியான நாயைக் கூட்டிக் கொண்டு ஒருவன் வருகின்றார். அவன் கடவுள் பக்தி நிறைந்த அந்தக் குருவானவரிடம் உமது பிள்ளையார் எத்தனை கிலோ என்று கேட்க அதற்கு சுமார் 100 கிலோ இருக்கும் என்று குருவானவர் கூறினார். உமது கடவுள் உண்மையானால் நான் கூறும் போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்றான். என்னப்பா போட்டி என்றார் குருவானவர். சற்றுத் தொலைவிலுள்ள காவேரி ஆற்றில் இரண்டையும் தூக்கி வீசுவோம். எது கரைசேர்கின்றதோ அதுவே உண்மையானது என்றான் வழிப்போக்கன். இதற்கு குருவானவர் உனது போட்டிக்கு வருகிறேன். ஆனால் நாம் ஏன் அவ்வளவு தொலைவிலுள்ள காவேரிக்கு போகவேண்டும். நீ உனது நாயை தூக்கி என் பிள்ளையார் மீது வீசு. நான் எனது பிள்ளையாரை தூக்கி உனது நாய் மீது வீசுகின்றேன். எது அழியாமல் அப்படியே இருக்கின்றதோ அதுவே உண்மையானது என்றார். உடனே தெளிவடைந்த வழிப்போக்கன் குருவானவரிடம் சரணடைந்து உலகப் பரம்பொருளை ஏற்றுக் கொண்டான். எனவே எங்கும் நிறைந்த எம் பெருமானை எமது அறியாமையினால் எள்ளி நகையாடுவது முற்றிம் தவறு என்பதுடன் இதுவே எமது வாழ்விற்கு அழிவினைத் தந்துவிடும்.

மாணவர்களாகிய நீங்கள் எக்காரியத்தைச் செய்தாலும் தகுந்த முறையோடும் பயிற்சியோடும் செய்தால்தான் வெற்றி கிட்டும். இறைவழிபாடும் அவ்வாறே அமைந்துள்ளது. எந்தவொரு துன்பத்திலிருந்தும் விடுபடுவதற்கு நிச்சயமாக ஏதாவதொரு வழி இருக்குமென்பதை திடமாக நம்ப வேண்டும். அவை சில வேளை கஷ்டமானதாகவும் இருக்கலாம். அல்லது இலகுவானதாகவும் இருக்கலாம். எமது மன திடத்தைப் பொறுத்து வெற்றி கிடைக்கும். இந்தக் கலியுகம் துன்பங்கள் நிறைந்த மகாச முத்திரம். ஆனால் இறைபக்தியினால் இலகுவாக துன்ப, துயரங்களிலிருந்து மீட்சி பெறமுடியும். எனவே தான் நாங்கள் மாணவர்கள் மட்டத்தில் ஆன்மீகத்தை வளர்த்தெடுக்க திட்டமிட்டோம். ஆன்மீக கல்வி கற்றல் ஊடாக உலக சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதுடன் உங்கள் தற்கால கல்வி வாழ்வு பிற்கால உலக வாழ்வு இரண்டும் ஆன்மீக நடைமுறைகள் ஊடாக மீட்சியை காணும் என்பதில் ஐயமில்லை.

# இயற்கையாகப் பழுத்தால் மணமும் சுவையும் அதிகம்

பெரியோர் முதல் சிறியோர் வரை பழங்களை அதிகம் உண்ண விரும்புவார்கள். வைத்தியர்களும் குறைந்தபட்சம் தினமும் 80 கிராம் பழங்களை உணவாக உட்கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியத்தைப் பேணலாம் எனக் கூறுகின்றார்கள்.

அவசரமான இன்றைய உலகில் துரித உணவுகளையோ, கடைச் சாப்பாட்டையோ உண்ணும் மக்கள் மகிழ்ச்சியுடன் உடம்புக்கு தீமை செய்யாத உணவென்ற நம்பிக்கையுடனேயே பழங்களை உட்கொள்கின்றார்கள். நன்றாகப் பழுத்த மாம்பழம், வாழை, பப்பாளி போன்றவற்றின் சிறப்பை அறிந்த பெற்றோர்கள் தங்களுடைய வளரும் பிள்ளைகளுக்கு பழங்களையே விரும்பி வாங்கிக் கொடுக்கின்றார்கள். இளம் பெண்கள் தங்கள் முகப் பொலிவுக்காகவும் பழங்களைப் பயன்படுத்துகின்றார்கள். பிறக்கவிருக்கும் குழந்தை மிகவும் ஆரோக்கியமாக பிறக்க வேண்டுமென கர்ப்பிணிப் பெண்களும் பழங்களையே விரும்பி உண்கின்றார்கள்.

பல வகையான விட்டமின்கள் பழங்கள் மூலமே எமக்குக் கிடைக்கின்றன. மலச்சிக்கல் போன்ற நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும் பழங்கள் உதவுகின்றன. இவ்வாறு பல சிறப்புகள் வாய்ந்த பழங்களுக்கு உலகம் பூராவும் நல்ல கிராக்கியுண்டு. இதன் காரணமாக பழ வியாபாரிகள் பெருமளவு காணப்படுகின்றார்கள். மொத்த வியாபாரிகள். நடுத்தர வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் என நாம் இவர்களை வகைப்படுத்தலாம். இந்த வியாபாரிகளில் நல்லவர்களும் இருக்கலாம், தீயவர்களும் இருக்கலாம்.

இலாபத்தை மாத்திரம் நோக்காகக் கொண்டு நல்ல பண்புகளை மறந்து வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை மிக அதிகரித்துச் செல்கின்றது. இது கவலைக்குரிய விடயமாகும். அதிக விலைக்கு பழங்களை விற்பனை செய்து மக்களின் பணத்தை கொள்ளையடிப்பதுடன், அவர்கள் பழங்களை நீண்ட நாட்கள் வைத்திருக்கவும் விரைவி'ல் பழுக்கச் செய்வதற்காகவும் இரசாயனத் திரவியங்களை பயன்படுத்துகின்றனர். பாவனையளவின் உடலுக்கு சுகாதார கேட்டை ஏற்படுத்தும் என அறிந்திருந்தும் அவற்றைப் பயன்படுத்துகின்றார்கள்.

அரசாங்கம் பரிந்துரை செய்துள்ள பழங்களை பழுக்க வைக்கும் இரசாயனங்கள் உள்ளன.

ஆரம்பத்தில் அதற்காக நாம் அனைவரும் அறிந்த காபைட்டே பாவிக்கப்பட்டது.இது தூள் போன்றது. இதனை நீருடன் கலந்தால் அசற்றலீன் வாயு உற்பத்தி செய்யப்படும்.

இந்தக் கலவையை மூடப்பட்ட அறையில் பழங்களுடன் வைத்தால் அதிலிருந்து வெளியாகும் அசற்றலின் வாயு மூலம் பழங்கள் பழுக்கும். ஆனால் வியாபாரிகள் அதனை நீரில் கரைத்து பழங்களில் விசிறியதால் 2011ம் ஆண்டு காபைட் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டது. அதன் பின்னரே எத்திரில் பாவனை ஆரம்பமாகியது.

எதிரிலை நீரில் கரைத்தால் எத்திலின் வாயு உற்பத்தி செய்யப்படும். வாழைப் பழங்களில் ஒரு பழம் பழுத்தவுடன் ஏனைய பழங்களும் இயற்கையாகவே பழுக்கத் தொடங்குவது இநத எதிலின் சுரக்கப்படுவதனாலாகும். உண்மையில் இது பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் பிரச்சினை என்னவென்றால் எமது வியாபாரிகள் பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை கவனத்திற் கொள்ளாது பாவிப்பதாகும்.

ஒரு லீற்றர் நீரில் ஒரு மில்லி லீற்றர் எத்திரில் கரைப்பது தான் அரசாங்கத்தின் பரிந்துரையாகும். இந்தக் கலவையில் மூன்று தொடக்கம் ஐந்து மில்லி லீற்றரை ஒரு சதுர அடியில் வைக்க முடியும். பழுக்க வைக்க வேண்டிய பழங்களை மூடிய கலவையுள்ள அறையில் வைத்தால் அவை தூண்டப்பட்டு பழுக்கும். 24 மணித்தியாலத்துக்கு அவ்வாறு வைப்பது தான் அரசாங்கத்தின் பரிந்துரையாகும். ஆனால் அதனை நேரடியாக பழத்தின் மீது விசிறுவது குற்றமாகும். வாழை, மா, பப்பாளி, பெயார்ஸ், ஆணைக் கொய்யா போன்ற பழங்களை இதன் மூலம் பழுக்க வைக்க முடியும்.

வெளிநாடுகளில் பழங்களை சரியான முறையிலேயே அறுவடை செய்கின்றார்கள். வாழைக்குலையை நன்றாக முற்றிய பின்னரே வெட்டுகின்றார்கள். அவை இயற்கையாகப் பழுத்தால் சுவையும் மணமும் மிகுந்ததாக இருக்கும்.

எனவே நாமும் சிறந்த பழங்களை சிறப்பாக வாங்கி உண்டு வாழ்வோம் அல்லது உற்பத்தி செய்வோம் வாரீர்.

**என்.ஹரன்**

## தொடரும்...

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

கொழுந்து பறிக்கும் சராசரி அளவை அதிகரிக்க ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்ட ஒரு துணிவான புதிய முயற்சியாகும்,' என தெரிவித்துள்ளது.

கம்பனிகளின் குறிக்கோள், 'சம்பள முறையை' அகற்றி, தொழிலாளர்களை ஒரு நவீன குத்தகை-விவசாயிகளாக மாற்றுவதே ஆகும். இந்த நடவடிக்கை, தோட்டத் தொழிலாளர்களின் ஒழுங்கமைக்கப்பட்ட பலத்தை தகர்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பொகவந்தலாவ பிளாண்டேஷனின் ஆண்டு அறிக்கை, 'தொழிற்துறையில் உயர்ந்த பேரம் பேசல் சக்தியுடனான ஆகக் கூடிய உழைப்புச் செறிவும், குறைந்த உற்பத்தித் திறனும், வேலை நிறுத்தங்களும் உள்ளன', மற்றும் இவை 'கம்பனியின் இலாபத்துக்கும் அழிவுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்,' என்று வலியுறுத்துகிறது.

வேறு வார்த்தைகளில் கூறினால், பெரிய சர்வதேச தேயிலை உற்பத்தி கம்பனிகள், உலக சந்தையில் போட்டியிடுவதற்கும், தங்கள் இலாபங்களைப் பாதுகாப்பதற்கும், பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் சமூக நிலைமைகளை வீழ்த்துவதற்கு பல்வேறு முறைகளை பயன்படுத்துகின்றன. அதன் மூலம், இந்த எல்லா நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் ஒரே விதமான சர்வதேச தாக்குதல்களை எதிர்கொள்கின்றனர். இது உலக முதலாளித்துவத்தின் சீரழிந்த நிலைமைகளின் கீழ் சர்வதேச அளவில் தொழிலாள வர்க்கத்தின் மீதான பரந்த தாக்குதல்களின் பாகமாகும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் போன்ற இலங்கை பெருந்தோட்டங்களில் உள்ள தொழிற்சங்கங்கள், தமது சர்வதேச சக தரப்பினரைப் போலவே, அரசங்கத்தின் ஆதரவுடன் கம்பனிகளின் இந்த தீவிரமான தாக்குதல்களை முழுமையாக அதரிக்கின்றன. முதலாளித்துவ இலாப நோக்கு அமைப்பு முறைக்கு எதிரான ஒரு சர்வதேச போராட்டத்தின் மூலம் மட்டுமே தொழிலாள வர்க்கத்தின் ஜனநாயக மற்றும் சமூக உரிமைகளை பாதுகாப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியும். இலாப நோக்கு அமைப்பு முறைக்கு முடிவுகட்டி, உற்பத்தியை தொழிலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் ஒழுங்கமைப்பதற்கும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்குமான போராட்டத்தில், தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் சர்வதேச வர்க்க சகோதர சகோதரிகளுடன் ஐக்கியப்பட வேண்டும். சோசலிச சமத்துவக் கட்சியின் (இலங்கை) ஆதரவோடு எபோட்சிலி தோட்டத் தொழிலாளர்களின் நடவடிக்கைக் குழுவானது, மார்ச் 17 அன்று தோட்டத் தொழிலாளர்களின் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இதில் இலங்கை தோட்டத் தொழிலாளர்களுக்கும் முழு தொழிலாள வர்க்கத்திற்கும் உள்ள முக்கிய பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்படும்.

**நன்றி:**
**உலக சோசலிச**
**இணையத்தளத்திலிருநுது**

## மகளிர்...

05 ஆம் பக்கத் தொடர்ச்சி

கொல்வின். பிறப்பால் அமெரிக்கராக இருந்தாலும் லண்டனில்தான் அதிகமாக வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. லிபியா அதிபர் கடாபிதான் இவர் முதன் முதலாகச் சந்தித்த நாட்டின் அதிபர். கடாபி இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன் சந்தித்தவர் மேரி கொல்வின். கொசாவா, ஜிம்பாப்வே, கிழக்கு தைமூர்... என எங்கு உள்நாட்டு யுத்தம் நடந்தாலும் அங்கே மேரி கொல்வின் சென்றுவிடுவார். அதனாலேயே 'போர்ச் செய்தியாளர்' என்ற பட்டம் தாங்கினார். இதே போன்று '2001-ம் ஆண்டு வன்னியில் 5 லட்சம் தமிழரின் அவல நிலையை அறிந்துகொள்ள புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்தவர் தான் மேரி கொல்வின் என்ற பெண் ஊடகவியலாளர் என்பதை யாரலும் மறுக்கவோ அல்லது மறக்கவோ முடியாது.

பொதுவாக, பெரும் பத்திரிகைகளில் 'வார் ரிப்போர்ட்டர்' என்று இருப்பார்கள். இராணுவம் எத்தகைய ஆயுதங்களை வைத்துள்ளது, என்ன மாதிரியான வெடிகுண்டுகள் வைத்திருக்கிறார்கள், ஒரு குண்டு எத்தனை கி.மீ. தாண்டிப் போய் வெடிக்கும், இராணுவத் தளபதிகளின் சாகசம் என்ன என்று எழுதி 'வார் ரிப்போர்ட்டர்' ஆனவர்கள் தான் அதிகம். ஆனால் முற்றுமுழுதாக மாறுபட்டவர் தான் மேரி கொல்வின். போர்ச் சூழலில் பலியாகும் பெண்கள், குழந்தைகள் படும் அவஸ்தைகள் மூலமாக ஆயுதங்களின் கோரத்தை எழுதுவதன் மூலமாக 'அமைதி நிருபராக'இருந்தவர்.

1999ம் ஆண்டு கிழக்கு தைமூர் போர்ச்சூழலில் 1,500 பெண்கள் தங்களது பிஞ்சுக் குழந்தைகளுடன் சிக்கிக்கொண்டபோது ஐ.நா. அமைப்புடன் பேசி அவர்களை மீட்கத் துடித்தவர் கொல்வின். கடைசியில், அவர்கள் அத்தனை பேரையும் காப்பாற்றவும் பகீரதப் பிரயத்தனம் செய்து வெற்றியும் கண்டார். 2000 ஆம் ஆண்டில்தான் அவரது பார்வை இலங்கைப் பக்கமாகவும் திரும்பியது. நேரடியாக ஈழம் வந்த மேரிகொல்வின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேரிகொல்வினின் இடது கண்ணின் பார்வை முற்று முழுதாக பறிபோனது.

எத்தனையோ மிரட்டல்களைச் முகங்கொடுத்தும் சற்றும் சளைக்காதவராய் மேரி கொல்வின் அடுத்த பணியை செவ்வனவே செய்ய சிரியாவில் கால் பதித்தார்.. இலங்கையைப் போலவே சிரியாவும் மேரி கொல்வினனை மிரட்டியது. அந்த மிரட்டலைக் கூட கருத்திற் கொள்ளாமல் சிரியா நாட்டுக்குள் பிரவேசித்தவர் மேரி கொல்வின். மேரி கொல்வினின் இடது கண்ணை இலங்கை பறித்தது. அவரது உயிரையே காவு வாங்கி விட்டது சிரியா. எங்கோ பிறந்து யாருக்காகவோ உழைத்து, எங்கோ இறந்துபோன கொல்வினின் வாழ்க்கை, நம் அனைத்துப் பெண்களுக்கும் முன்னுதாரமாக திகழுமென்றால் அது மிகையாகது.

### இரோம் சர்மிளா

பகுஜன் சமாஷ் கட்சியின் தலைவர் மாயாவதியை இந்தியாவின் இரும்பு மங்கை என்று அவரது தொண்டர்கள் அழைக்கிறார்கள். இதைப்போலவே மணிப்பூரைச் சேர்ந்த இரோம் சர்மிளாவையும் இரும்புப் பெண் என்று அம் மாநில மக்கள் அழைக்கிறார்கள். உண்மையில் இங்கு இரும்புப் பெண்யார்? இந்தியாவின் இரும்புப் பெண் மாத்திரமல்ல இன்றைய உலகின் இருப்பும் பெண்ணும் அவள்தான். மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்தவர் இரோம் சர்மிளா. அவருக்கு இப்போது 42 வயதாகிறது. அவரது வாழ்வுக் காலத்தில் 15 ஆண்டுகள் உணவருந்தாமல் போராடிக்கொண்டிருக்கிறார். இத்தனை ஆண்டுகள் பெரும் பசியோடு இருக்கும் சர்மிளாவின் கோரிக்கை தான் என்ன?

சர்மிளாவின் கோரிக்கை ஒன்றே ஒன்றுதான். மணிப்பூர் மாநில, ஆயுதப் படைக்கு அளித்துள்ள, சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்ற கோரிக்கையினை முதன்மையாக வைத்திருந்தார் இரோம் சர்மிளா. உண்ணா விரதப் போராட்டம் தொடங்கிய மூன்றாவது நாள் இரோம் சர்மிளா கைதுசெய்யப்பட்டார். தற்கொலைக்கு முயன்றதாக காரணம் கூறப்பட்டடே அவர் கைதுசெய்யப்பட்டார். தற்கொலைக்கு முயலும் எவரையும் கைதுசெய்ய முடியும் என்ற இந்திய சட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு ஆண்டும் விடுதலை செய்யப்பட்டு கைது செய்யப்படுகிறார் சர்மிளா. அடிப்படையில் சர்மரிளா ஒரு கவிஞர். மங்கோவி என மணிப்பூர் மக்களால் அறியப்பட்ட சர்மிளா இன்று வட கிழக்கு மாநில மக்களின் போராளியாக அந்த மாநிலத்தவரால் மங்கோவி என அழைக்கப்படுகிறார். பலமுறை சிறை, பல முறை விடுதலை, மீண்டும் சிறை. பலனில்லை. உண்ணாவிரதத்தைக் கைவிடவே இல்லை. சிறைச்சாலையிலுள்ள மருத்துவ மனைக்குக் கொண்டு போய், மூக்கு வழியாக இரைப்பைக்கு குழாய் சொருகி, அதன் வழியாக, திரவ வடிவிலான ஆகாரத்தை உள்ளே செலுத்தினார்கள் இரோம் சர்மிளாவிற்கு ... ஆனால் இலட்சியத்தை அடைவதற்கு முன்பே இறந்துவிடக் கூடாது என்பதற்காக, சர்மிளாவும், குழாய் வழியாக ஆகாரம் செலுத்துவதை எதிர்க்காமல் இருக்கிறார். அன்று முதல் இன்று வரை மருத்துவமனையில், பாதுகாப்பான அறையில் படுக்கவைக்கப்பட்டுள்ளார். சர்மிளாவின் உதடுகளில், ஒரு சொட்டு தண்ணீர் பட்டு, ஆண்டுகள் கடந்து விட்டது. உண்ணாவிரதம் ஆண்டுக் கணக்கில் நீண்டு கொண்டே செல்வதால், சர்மிளாவின் உள் உறுப்புகள் பலமிழந்து விட்டன.

இவ்வாறு உலகவரலாற்றே திரும்பி போட்டு உலகையே திரும்பிப் பார்க்க வைத்த அத்தனை பெண்மணிகள் எத்தனையோ பேர். அத்தனை பெண்களையும் அவர்கள் செய்த தியாகத்தையும் சாதனைகளையும் ஒரு கணமாவது சிந்தித்துப் பார்க்கவேண்டியது ஒரு சமுதாயத்தின் தார்மீக கடமையாகும். பெண்கள் சம உரிமைக்காக எத்தனையோ பெண்கள் போர்க்கொடி ஏந்தி போராடி இருந்தாலும் கூட சமுதாய ரீதியாகவும் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் இன்று வரை முடக்கப்பட்ட வண்ணமே இருக்கின்றார்கள். இதற்கு எடுத்துகாட்டாக எத்தனையோ செய்திகளை அன்றாட வாழ்க்கையில் பெண்கள் சந்தித்துக்கொண்டே தான் இருக்கிறார்கள். பெண்களின் முன்னேற்றத்திற்கு எத்தனையோ பெண்கள் முன்னுதாரனமாக வாழ்ந்துகாட்டியிருந்தாலும் கூட இன்னும் இன்றைய காலகட்டத்தில் பெண்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறி இருக்கின்றதா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

# 6 கோடியால்தான் அ.தி.மு.க.வில் சீட் மறுத்தார் ஜெயலலிதா

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லாவுக்கு த.மு.மு.க பொதுச் செயலாளர் ஹைதர் அலி எழுதியுள்ள 18 பக்கக் கடிதம், இஸ்லாமிய சமூகத்தினர் மத்தியில் விவாதப் பொருளாகியுள்ளது. ‘நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க-வில் சீட் மறுக்கப்பட்டதன் பின்னணியில் த.மு.மு.க-வே உடையும் அளவுக்கு விவகாரம், வீதிக்கு வந்துள்ளது’ என்கின்றனர் அக்கட்சி நிர்வாகிகள்.

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க அணியில் இணைந்து போட்டியிடுவது என மனிதநேய மக்கள் கட்சி முடிவெடுத்திருந்தது. இதுதொடர்பாக, தி.மு.க-வின் தொகுதிப் பங்கீட்டுக் குழுவுடன் ம.ம.க நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வலியுறுத்தியதால் ம.ம.க மறுத்துவிட்டது என்ற தகவல் வெளியானது. இருப்பினும், தி.மு.க அணிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என ஸ்டாலின் தெரிவித்ததாகச் செய்திகள் வெளிவந்தன. தி.மு.க-வில் கதவுகள் அடைக்கப்பட்டதால், அடுத்து என்ன செய்வது? என்ற ஆலோசனையில் அக்கட்சி நிர்வாகிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், தி.மு.க-வில் சீட் மறுக்கப்பட்டதன் பின்னணியில் ஹைதர் அலி இருக்கிறார் என்பதால் ஜவாஹிருல்லா கடும் கோபத்தில் இருக்கிறார் என்ற தகவல் வெளிவரத் தொடங்கியுள்ளது. தவிர, அமைப்பை சீர்குலைக்கும் சதி ஆலோசனைகளைச் செய்ததாகக் கூறி ஹைதர் அலியிடம் விளக்கக் கடிதம் கேட்டுள்ளதாகவும் ம.ம.க நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.



மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகள் சிலரிடம் பேசினோம். தி.மு.க-வுடன் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடந்தபோது, ஹைதர் அலிக்குத்தான் சீட் கொடுப்போம்’ எனக் கூறிவிட்டனர். ஆனால், ஜவாஹிருல்லாதான் களத்தில் நிற்பார் என நிர்வாகிகள் தெரிவித்தனர். சீட் கிடைத்தால் திருச்சி அல்லது வேலூரில் போட்டியிட விரும்பினார் ஜவாஹிருல்லா. இதற்கு தி.மு.க தரப்பில் இசைவு தெரிவிக்கப்படவில்லை. ஸ்டாலினின் குட்புக்கில் ஹைதர் அலி இருப்பதால், ஜவாஹிருல்லாவுக்கு அவர்கள் சீட் கொடுக்க விரும்பவில்லை. ஹைதரால்தான் சீட் பறிபோனது என்ற மனநிலைக்கு ஜவாஹிருல்லா வந்துவிட்டார். இதன்பிறகு, தாம்பரம் யாகூப் என்பவர் மூலமாக, மாநிலம் முழுவதும் ஒரு தகவலை அனுப்பியுள்ளனர். அதில், ஹைதர் அலி ஏறக் கூடிய மேடையில் ஜவாஹிருல்லா இருக்க மாட்டார் எனக் கூறியுள்ளனர்.

நாகர்கோவிலுக்கு ஹைதர் அலி சென்றபோது, இதுதொடர்பாகப் பேசிய தகவல் கிடைத்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, இயக்கத்துக்கு எதிராக சதிவேலை செய்கிறீர்கள்’ எனக் கூறி, விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியிருக்கிறார் ஜவாஹிருல்லா. இந்த விளக்கம் கேட்பு கடிதத்தை ஹைதர் அலி எதிர்பார்க்கவில்லை. இதன் விளைவாக, கடும் கோபத்துடன் 18 பக்கங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில், பி.ஜெய்னுல் ஆபிதீன் விலகல், தி.மு.க-வுடன் கூட்டணிப் பேச்சு, கனிமொழியிடம் 6 கோடி ரூபாய் வாங்கியதாக எழுந்த சர்ச்சை, கோவை குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காகத் திரட்டப்பட்ட நிதி எனப் பல விஷயங்களை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார் ஹைதர் அலி’’ என விவரித்தவர்கள், அந்த 18 பக்கக் கடிதத்தை நமக்குக் கொடுத்தனர்.

அந்தக் கடிதத்தில் உள்ள விவரங்கள் பின்வருமாறு:

த.மு.மு.க-வின் கண்ணியத்தைக் குலைக்கும் வகையில் நான் நடந்துகொண்டதாகக் கூறி விளக்கக் கடிதம் கேட்டுள்ளீர்கள். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்துக் கடைசியாக மனிதனைக் கடித்த கதையாக உங்கள் கதை இருக்கிறது. சமீபகாலமாக, காரணம் கேட்காமல் நேரடியாகவே நீக்குவது போன்ற பாசிச நடவடிக்கையாகவே இருக்கிறது தங்களது செயல். எனக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் நீங்கள் மிகவும் குழம்பியுள்ளீர்கள் என்பது தெரிகிறது. பிப்ரவரி 5, 2019 அன்று நாகர் கோவிலில் ஒரு சதி ஆலோசனைக் கூட்டத்தில் நீங்கள் பங்கு கொண்டுள்ளீர்கள். பொதுச் செயலாளர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பலருக்கும் அழைப்பு கொடுத்துள்ளீர்கள்’ எனக் கூறியிருக்கிறீர்கள். பிப்ரவரி 2-ம் தேதி தலைமை நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சிலர், இத்தகைய கூட்டம் நடைபெறுவதை குறிப்பிட்டு நீங்கள் கலந்துகொள்வது அமைப்பின் கட்டுக்கோப்பை சீர்குலைக்கும் எனச் சுட்டிக் காட்டிய பிறகும் கலந்து கொண்டீர்கள் எனக் கூறுகிறீர்கள். இது கள்ள மசூரா எனக் கூறுகிறீர்கள். யாருக்கும் தெரியாமல் நடத்தப்படுவதுதான் கள்ள மசூரா. ஆனால், இன்று வரையில் நீங்கள்தான் அப்படி ஒரு சதி ஆலோசனையை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களோடு இருப்பவர்களுக்குத் தெரியும். பலர் என்னிடமும் சொல்லியிருக்கிறார்கள். அது உங்களுடைய பிறப்புரிமை.

அக்டோபர் மாதம் 7-ம் தேதி அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம் என்ற பெயரில் திருச்சியில் ஒரு மாநாட்டைக் கூட்டினோம். மறுநாள் பெமினா லாட்ஜில் உங்களோடு நெருக்கமாக இருப்பவர்களைக் கூப்பிட்டு, ஹைதர் இந்த மாநாட்டுக்கு எப்படியெல்லாம் இடையூறு செய்தார் எனச் சொல்லுங்க எனப் பேசியிருக்கிறீர்கள். என்னை த.மு.மு.க-வில் இருந்து தூக்கி எறிய வேண்டும் எனக் கூறி, அப்போது அலுவலகத்தை எப்படிக் காப்பாற்றுவது என்ற பேச்சு வந்தபோது, உங்கள் பங்குதாரரான தாம்பரம் யாகூப், நான் 50 பேரைக் கூட்டி வருகிறேன். அவர் எப்படி வருகிறார் எனப் பார்ப்போம் எனப் பேச வைத்தீர்கள். இதன் பெயர்தான் சதி ஆலோசனை.

த.மு.மு.க-வை எப்படிக் காப்பாற்றுவது, அதை எப்படிப் பொழிவோடு எடுத்துச் செல்வது என்பது பற்றித்தான் நாங்கள் ஆலோசித்தோம். தவிர நீங்கள் செய்தது போல ஆலோசனைகளைச் செய்யவில்லை. 2004-ல் பி.ஜே போயிட்டார். அதன்பிறகு 2004-ல் நடந்த சம்பவம் ஒன்று. 2 முறை பொறுப்பில் இருந்தவர்கள் மீண்டும் பதவிக்கு வரக் கூடாது. அடுத்த தலைமுறைகளைக் கொண்டு வர வேண்டும் என நான் சொன்னேன். அதை மூன்று முறை என மாற்றம் செய்தோம். அப்போது நடந்த பொதுக்குழுவில், பிஜே போய்ட்டார். இப்ப இயக்கம் தூய்மையாக இருக்கிறது. கட்டமைப்பைச் சரியாகக்கொண்டு செல்லுங்கள். நான் இதிலிருந்து விடுபட்டுக் கொள்கிறேன் என அன்றைக்கே பதிவு செய்தேன். பொறுப்பின் மீதான வெறித்தனம் என்னிடம் இல்லை.

2009 மக்களவைத் தேர்தலுக்கு முன்பு, 2 எம்.பி சீட் வேண்டும் எனக் கேட்டபோது, ஒரு சீட் தர்றோம். ராமநாதபுரம் தொகுதி என தி.மு.க-வில் சொன்னார்கள். 2 சீட் என்பதில் நீங்கள் உறுதியாக இருந்தீர்கள். அ.தி.மு.க-வில் 2 சீட் கிடைக்கும் எனப் பேசப்பட்டு வந்தது. ஆனால், நிர்வாகக் குழுவில் பேசிய சமது, 2009-ம் ஆண்டு சீட் கிடைக்காமல் போனதற்கு இவர்தான் காரணம். இவர் நினைத்திருந்தால் சீட் வாங்கியிருக்கலாம். கலைஞர்கிட்ட பேசியிருக்கலாம் எனச் சொன்னார். அப்போது பேசியது ஞாபகம் இருக்கிறதா பேராசிரியரே, ஒரு சீட் வாங்கிக்குவோம். ஜெயிச்சா மந்திரி போஸ்ட் தருவாங்களான்னு கண்டிஷன் போடுங்கள் எனச் சொன்னீர்கள். அப்படிப் போய்க் கேட்டா காரித் துப்ப மாட்டாங்களா. இப்பத்தான் பாராளுமன்றமே போறாங்க. இவ்வளவு அற்பத்தனமா இருக்காங்களேன்னு நினைக்க மாட்டார்களா... எனச் சத்தம் போட்டேன். அந்த நிகழ்வு நடக்காமலேயே நாமெல்லாம் சுயேட்சையாக நின்று தோற்றோம். இதனால் என்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனப் பார்க்கிறோம்.

இது நடந்து முடிந்து, நீங்கள் எம்.எல்.ஏ-வாக ஆகிவிட்டீர்கள். ஆனால் மக்கள் மத்தியில் அ.தி.மு.க-வின் சிண்டிகேட் போலவே செயல்பட்டீர்கள். அதேநேரம், கனிமொழிக்காக 6 கோடி ரூபாய் வாங்கிட்டீங்க எனச் சொல்லி அ.தி.மு.க-வில் சீட் மறுக்கப்பட்ட பிறகுதான், அவசரம் அவசரமாக தி.மு.க அணிக்குப் போனோம். அப்போது பேசிய ஸ்டாலின், ‘கடைசி நாள் சட்டமன்றம் முடியும் வரையில் அந்த அம்மாவைத்தானே புகழ்ந்தீர்கள் எனச் சொல்லும்போது நீங்கள் தலையைக் குனிந்துகொண்டு நின்றீர்கள். அதன்பிறகு கலைஞர்கிட்ட சண்டை போட்டு சீட் வாங்கினோம். சட்டமன்றத் தேர்தலில் நின்றவர்கள் நிற்கக் கூடாது என நிர்வாகக் குழுவில் பேசினோம். ஆனால், நீங்களே மீண்டும் நிற்கக் கூடிய சூழலை ஏற்படுத்திக்கொண்டீர்கள்என விவரித்தவர், இறுதியாக, ‘நீங்கள் அனுப்பிய காரணம் கேட்பு கடிதத்தைத் திரும்பப் பெற்று உங்களுடைய தவற்றைத் திருத்திக்கொள்ளவும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஹைதர் அலியின் கடிதம் தொடர்பாகப் பேசிய ம.ம.க நிர்வாகி ஒருவர், தலைமை நிர்வாகக் குழு என ஒன்று இருக்கிறது. தலைவர் என்று ஒருவர் இருக்கிறார். அதற்கு நேர்மாறான செயல்பாடுகளில் ஹைதர் அலி ஈடுபட்டு வருகிறார். இது அமைப்புக்குள் தேவையற்ற விவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. போட்டியாக ஓர் ஆலோசனைக் கூட்டம் என்ற பெயரில் அவர் செயல்படுகிறார். இந்த நிலையில், 20 பேர் மீது நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். இதை விரும்பாதவர்கள், இப்படியெல்லாம் தகவல் பரப்புகிறார்கள். தி.மு.க-வில் சீட் தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தைக்கும் இதற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. த.ம.மு.க என்பது 23 ஆண்டுக்கால அமைப்பு. 2012 முதல் 2018 வரையில் ஹைதர் அலி எந்தப் பொறுப்பிலும் இல்லை. அதன்பிறகுதான் அவரைச் சேர்த்துக் கொண்டோம். தொடர்ச்சியாக முரண்பாடான செயல்களில் அவர் ஈடுபட்டு வருகிறார் என்றார் கொதிப்புடன்.

ஹைதர் அலியைத் தொடர்பு கொண்டோம். ‘வெளிநாட்டு சுற்றுப்பயணத்தில் இருக்கிறேன்’ என்றதோடு முடித்துக் கொண்டார்.

நன்றி: ஆனந்த விகடன்

# கேள்விக்குறியாகும் ஜனநாயகம்!

நடைபெறவிருக்கும் மக்களவைத் தேர்தலில், திமுக தலைமையிலான கூட்டணி இறுதி செய்யப்பட்டுவிட்டது. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடப்போகின்றன என்ற விவரங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. விசிக தலைவர் தொல்.திருமாவளவன் சிதம்பரத்தில் போட்டியிடக்கூடும் என்று தெரிகிறது. ஆனால், விசிக எந்தச் சின்னத்தில் போட்டியிடப்போகிறது என்று இன்னும் அறிவிக்கப்படவில்லை.

தனியாக நின்று தேர்தலைச் சந்தித்தால் தோல்வியடைய நேரலாம் என்ற முன்னுணர்வின் காரணமாகவே அவை தேர்தல் கூட்டணி அமைத்துக் கொள்கின்றன. வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட அரசியல் கட்சிகளையும் கூட்டணியில் இணைத்துக்கொள்கின்றன. இந்நிலையில், பெரிய கட்சிகளின் தேர்தல் சின்னத்தில் சிறிய கட்சிகள் தேர்தலைச் சந்திப்பது என்பது அரசியல் எதிர்காலம் என்பதைத் தாண்டி கொள்கையளவிலும் ஒரு தற்கொலை முயற்சியாகத்தான் அமையும். அவை தனிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் மட்டுமே நாடாளுமன்றத்திலோ சட்டமன்றங்களிலோ சுயேச்சையாகச் செயல்பட முடியும். தங்களது கட்சியின் கருத்துகளை மன்றத்தில் விவாதிக்க முடியும்.



ஏற்கெனவே திமுக கூட்டணியில் போட்டியிடுவதற்கு ஒரு தொகுதியைப் பெற்றிருக்கும் கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியும் இந்திய ஜனநாயகக் கட்சியும் திமுகவின் தேர்தல் சின்னத்தில்தான் போட்டியிடப்போகின்றன. எனவே, விடுதலைச் சிறுத்தைகளுக்கும் அத்தகையதொரு நிர்ப்பந்தம் எழக்கூடும்.

### பெரிய கட்சிகள் தரும் அழுத்தம்

சிறிய கட்சிகள் தங்களது சின்னத்தில் போட்டியிட்டால் குறைந்த இடங்களே ஒதுக்கப்படும். அதற்கு மாறாக, கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் கட்சியின் தேர்தல் சின்னத்தில் போட்டியிட்டால் அதிகத் தொகுதிகளில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறலாம் என்று செல்வாக்கு பெற்ற பெரிய கட்சிகள் வலியுறுத்துகின்றன. தனிச் சின்னத்தில் நின்று போட்டியிடுவதா அல்லது அதிக இடங்களைப் பெறுவதா என்ற கேள்விக்கு முன்னால் சிறிய கட்சிகள் தவிர்க்க முடியாத நிலையில் இரண்டாவது தேர்வை நோக்கியே தள்ளப்படுகின்றன.

2001 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் விசிக அங்கம் வகித்தது. அப்போது, திமுகவின் தேர்தல் சின்னத்தில் நின்றுதான் திருமாவளவன் போட்டியிட்டு வெற்றிபெற்றார். கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக அவர் பதவியிலிருந்து விலகினார் என்பது இப்போதும் நினைவில் கொள்ளத்தக்கது. 2009 மக்களவைத் தேர்தலின்போதும் 2011, 2016 சட்டமன்றத் தேர்தல்களின் போதும் தனிச் சின்னத்தில் நின்றுதான் விசிக தேர்தலைச் சந்தித்தது.

திமுக கூட்டணியில் விசிக இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டிருக்கிறது என்றால், அதிமுக கூட்டணியில் புதிய தமிழகமும் இதே சிக்கலை எதிர்கொண்டுள்ளது. சமீபத்தில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கிருஷ்ணசாமி எதிர்கொண்ட முக்கியமான கேள்வியே, நீங்கள் அதிமுகவின் தேர்தல் சின்னத்தில் போட்டியிடப் போகிறீர்களா? என்பதுதான். மற்ற கட்சிகளின் சின்னத்தில் போட்டியிடுவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அந்தச் சிக்கல்கள் குறித்து விளக்காமல் கவனமாகத் தவிர்க்கவும் செய்தார். புதிய தமிழகம் கட்சி, 1998-லிருந்தே தனிச் சின்னத்தில் போட்டியிட்டுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### பறிபோகும் கொள்கைப் பிடிப்பு

கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் கட்சிகள் தாங்கள் அதிகத் தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும், அந்தப் பெரும்பான்மையின் அடிப்படையில் மத்திய அமைச்சரவையில் இடம்பிடிக்க வேண்டும் என்று விரும்புகின்றன.

தேர்தலுக்காகவே அமைகிற கூட்டணிகள் தேர்தல் முடிந்தும் தொடர வேண்டிய அவசியங்கள் ஏதுமில்லை. அத்தகைய நிலையில், பெரிய கட்சிகளின் தேர்தல் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சிறிய கட்சிகள் தங்களது கொள்கைகளை அடகுவைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். முரண்பாடுகள் எழுந்தாலும்கூட அதை நாடாளுமன்றத்திலோ சட்டமன்றங்களிலோ பிரதிபலிக்க முடியாது. எப்படியாவது ஒரு பதவி கிடைத்தால் போதும் என்று நினைப்பவர்கள் வேண்டுமானால், இந்தச் சமரசத்துக்கு எளிதில் தலையசைத்துவிடலாம். ஆனால், தனக்கென்று ஒரு தனித்த செயல்திட்டத்தின் அடிப்படையில் செயல்படும் கட்சிகளுக்கு இது மிகப் பெரிய சாபம்.

இயற்றப்படும் சட்டங்களுக்கு ஆதரவளிப்பது தொடங்கி அமைச்சரவையின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு வரை எதிலும் தனது சொந்தக் கருத்தை வெளிப்படுத்த முடியாது என்பது பெரிய கட்சிகளின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெறும் சிறிய கட்சிகள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் துயரம். கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெறும் வேட்பாளர்கள் அனைவரும் கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும் என்று ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்தமும் கட்சித் தாவல் தடைச்சட்டமும் ஜனநாயகத்துக்கு வலிமை சேர்ப்பதற்குப் பதிலாகக் கேடு பயப்பதற்கே பெரும்பாலும் பயன்பட்டுவருகிறது. கட்சியின் தேர்தல் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெறுபவர்கள் அனைவரையும் கொறடாவின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆக்குகிறது.

### மறுக்கப்படும் சுயமரியாதை

இந்தியாவின் எந்தப் பெரிய கட்சியிலும் உட்கட்சி ஜனநாயகம் என்பதெல்லாம் வெறும் பெயரளவுக்குத்தான் இருக்கிறது. நியாயமான கருத்து மாறுபாடு என்றாலும் அக்கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டவர்கள் அதை வெளிப்படுத்த முடியாது. பதவி விலகுவது ஒன்றுதான் தீர்வு. அப்படி வீம்பாக வெளியேறுபவர்கள் மீண்டும் தனித்து நின்று வெற்றிபெறுவது என்பதும் இன்றைய தேர்தல் முறையில் சாத்தியமில்லாத ஒன்று. எனவே,

15 ஆம் பக்கம் பார்க்க....

## கத்தோலிக்கர்..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

மடு மாதா திருச்சொரூபம் இருந்ததாகவும், ஒல்லாந்தர் வருகையால், மாதாவின் திருச்சொரூபத்தை அங்கிருந்து கத்தோலிக்கர்கள் மடுக்காட்டுக்கு எடுத்துச்சென்று மருதமரம் பொந்தில் வைத்ததாக வரலாறு.

திருக்கேதீஸ்வரத்தில் உள்ள இந்த கத்தோலிக்க ஆலயத்தை யாழ்ப்பாணம்-மன்னார் வீதிக்கு மறுபக்கத்தில் அமைய வேண்டும் என்று இந்துக்கள் கோரிக்கை விடுத்துவந்தனர். இதுவே இரு சாரார் மத்தியிலும் மனக்கசப்புக்கள் வளர்ந்து, மதக்குரோத உணர்வுகள் உருவாகின்ற அளவுக்கு விரிசலடைந்து நீண்டகாலமாக காணப்படுகிறது என்று கூறப்படுகிறது. அப்போது தமிழரசுக்கட்சியின் மன்னார் தொகுதி எம்.பியான வீ.ஏ.அழகக்கோன் இதில் எதுவித நிலைப்பாட்டையும் எடுக்கமுடியாமல் போய்விட்டது. காரணம் அவர் கத்தோலிக்கர். அத்துடன் தமிழரசுக்கட்சியும் இதில் தலையிட்டு ஒரு பக்கம் சார்வதன் மூலம் தமது அரசியல் சம பலத்தை இழக்க விரும்பவில்லை என்பதையே கட்சியின் நிலைப்பாடு காட்டியது.

மன்னார் மறை மாவட்டம் யாழ்.மறை மாவட்டத்தில் இருந்து 1981 இல் பிரிக்கப்படும் வரையும் யாழ்.ஆயரின் நிர்வாகத்தின் கீழ் மன்னார் மறை மாவட்டம் இணைந்திருந்தது. அப்போது யாழ். ஆயரான அதி.வண.ஜே.எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் காலத்திலும் இங்கு இந்த பிரச்சினை ஏற்பட்டதுடன், அவரும் சமரசமாக தீர்க்க நடவடிக்கை எடுத்திருந்தார் என மூத்த கத்தோலிக்க குருவானவர் ஒருவர் கூறினார். அதன் பின் மன்னார் மறை மாவட்டம் உதயமானதுடன் நாட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டது.

1974 அழகக்கோனின் மறைவையடுத்து இடம்பெற்ற இடைத்தேர்தலில் எஸ்.ஏ.றஹீம் என்ற முஸ்லிம் எம்.பியானார். அவரும் இப்பிரச்சினையை தீர்க்க முடியவில்லை. 1977 தமிழர் விடுதலைக்கூட்டணி எம்.பியான பீ.எஸ்.சூசைதாசன்ன் இப்பிரச்சினையில் தலையிட்டு சமரசப்படுத்த நடவடிக்கை எடுத்தபோதிலும் நாட்டின அரசியல் பிரச்சினைகள், யுத்தம் ஏற்பட்டுவிட்டது. அதன் பின்னர் இராணுவத்தினர் இப்பகுதியில் ஆக்கிரமித்தனர். ஆலய வழிபாடுகளும் தடைப்பட்டன. மக்களும் இடம்பெயர்ந்தனர்.

இப்போது யுத்தம் முடிவுற்று இயல்பு நிலை தோன்றியுள்ளது.எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்படி வெளிநாடுகளை,ஐ.நா.சபையை கோரும் நாம் இந்த பிரச்சினையை நமக்குள் பேசி தீர்வைக் காணவேண்டியது அவசியமாகும். சிலர்,கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ மதகுருமார்களையும் கண்டபடி விமர்சிக்கின்றனர். யுத்த காலத்தில் மன்னாரில் வண.ஜெயராஜசிங்கம் என்ற மெதடிஸ்த சபையின் மதகுரு வாகனத்துடன் எரிக்கப்பட்டார். வங்காலை பங்குக் குரு வண.மேரி.பஸ்ரியன் காணாமல் போனார். இப்படி பல சம்பவங்களை கூறலாம். மன்னார் ஆயர் அதி.வண. இராயப்பு ஜோசப் யுத்த காலத்தில் ஆற்றிய துணிச்சலான பணிகளை இன்றும் எவருமே மறக்க முடியாது. எனவே இப்பிரச்சினையை அரசியல் வேறுபாடு இன்றி தீர்க்க சகலரும் முன்வர வேண்டியதும் அவசியம். மத வேறுபாடு இன்றி தமிழர்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதையே சகலரும் விரும்புகின்றனர்.

## காணாமல்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆமைவேகத்தில் செயற்படுவது மிகவும் வேதனைக்குரியதென அரசியல்விமர்சகர்கள் கூறிவருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அனைத்தும், ஐநா கூட்டத்தொடருக்கு அண்மையிலே இடம்பெற்றிருந்தமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது. யுத்தத்தினை வெற்றிகொண்டதாக கூறும் அரசாங்கம், இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதென்பது இலகுவானதொன்றே. அவ்வாறிருந்தும், இன்னும் தேடுதல்களை மேற்கொள்ளாமல் இருப்பதும், காலத்தினை நீடித்து செல்வதும் தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக இலங்கை அரசின் மீதான நம்பிக்கையினை குறைத்து கொண்டு செல்வதாகவே இருக்கின்றது.இதனால்தான் சர்வதேசத்திற்கு தொடர்ச்சியாக அழுத்தங்களையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நாட்டிலே மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆட்சி உருவாக்கப்பட்டபோது, தமிழ் தலைமைகளும், தமிழ்மக்களும் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர். இன்று அந்நிலை மாற்றமுற்று, சர்வதேசத்தினையே முழுமையாக நம்பவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதே நிதர்சனம்.



# பிரியங்காவின் வருகை ‘கை’கொடுக்குமா?

**பி**ரம்மாஸ்திரம் - காங்கிரஸ் கட்சியின் கிழக்கு உத்தர பிரதேச பகுதிக்கு பொதுச் செயலாளராக, ஜனவரி 23-ல் நியமிக்கப்பட்ட பிரியங்கா காந்தியை காங்கிரஸ்காரர்கள் இப்படித்தான் நம்புகிறார்கள். காங்கிரஸ் இல்லா இந்தியா என்று மேடைக்கு மேடை முழங்கிவரும் மோடி - அமித் ஷாவின் வியூகங்களை முறியடிக்க பிரியங்காதான் பொருத்தமானவர் என்று காங்கிரஸ் கட்சிக்குள் நம்புபவர்களுக்கு அவரது வருகை உற்சாகத்தைத் தந்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், பிரியங்கா எனும் அஸ்திரம் உண்மையில் கைகொடுக்குமா?

மிகத் தாமதமாக நேரடி அரசியலுக்குள் நுழைந்திருந்தாலும், தாய் சோனியாவுக்காகவும் அண்ணன் ராகுலுக்காகவும் ராய் பரேலியிலும் அமேதியிலும் பிரச்சாரம் செய்த அனுபவம் கொண்டவர் பிரியங்கா. கட்சிப் பணிகள், சுற்றுப்பயணங்களில் ராகுலுக்கு உதவுவதைத் தொடர்ந்து செய்துவந்தார். இந்தத் தேர்தலிலும் பின்னணியிலிருந்து பணிபுரிவது, தேவைப்பட்டால் பிரச்சாரம் செய்வது என்று களமிறக்கப்படுவார் என்றே எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தேர்தல் பொறுப்பை அவருக்குக் கொடுத்து ஆச்சரியப்படுத்தினார் ராகுல். பிரியங்காவின் பொறுப்பில் உத்தர பிரதேசத்தின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 42 தொகுதிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இந்திரா நினைவு எனும் பலம்

1972-ல் பிறந்த பிரியங்கா, டெல்லியிலேயே பள்ளிப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் முடித்தவர். உளவியலில் இளங்கலைப் பட்டம் பெற்றவர். பௌத்தத்தின் மீது ஈர்ப்பு கொண்டவர். ‘விபஸ்ஸனா’ தியான முறையைப் பயிற்சி செய்கிறவர். நடிகர் அமிதாப் பச்சனின் தாயார் தேஜி பச்சனிடம் இந்தி பயின்றதால், உத்தர பிரதேசத்தின் அயோத்தி பகுதி மக்களுடைய உச்சரிப்பில் ஏற்ற இறக்கங்களோடு பேசக்கூடியவர். மிக முக்கியமாக, இந்திரா காந்தியை நினைவுபடுத்தும் தோற்றம் அவரது மிகப் பெரிய பலம்.

பிரியங்கா காந்தி அரசியல் பிரவேசத்தைத் தொடக்கத்தில் பாஜக சற்றுப் பதற்றத்துடன்தான் பார்த்தது. அவரைப் பற்றித் தரம் தாழ்ந்த விமர்சனங்களையும்கூட சில பாஜக தலைவர்கள் முன்வைத்தனர். ஆனால், இது பிரியங்காவுக்கே சாதகமாகிவிடும் என்பதை பாஜக தலைமை விரைவில் உணர்ந்துகொண்டது. இன்றைக்கு, பிரியங்காவை நேரடியாக விமர்சிப்பதைத் தவிர்ப்பது என்றே முடிவுக்குவந்திருப்பதுபோலத் தெரிகிறது.

அரசியல் அனுபவம் இல்லாத பிரியங்காவைப் பற்றிப் பேசி அவருக்கு முக்கியத்துவம் ஏற்படுவதை பாஜக விரும்பவில்லை. ரஃபேல் பேர விவகாரம் தொடங்கி, பல்வேறு விஷயங்களில் பாஜகவுக்குத் தலைவலியாக இருக்கும் ராகுலை மட்டும் குறிவைத்தால் போதும் என்பதை அது வியூகம் ஆக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதேசமயம், பிரியங்காவின் கணவர் ராபர்ட் வாத்ரா மீதான நில மோசடி வழக்குகள், அமலாக்கத் துறை விசாரணைகள் என்று மறைமுக அஸ்திரங்களைக் கையில் எடுத்திருக்கிறது.

கவனிக்கப்படும் பேச்சும் எதிர்கொள்ளும் சவாலும்

அரசியல் களத்தில் ஓங்கிக் குரல் எழுப்பிப் பேசாமல், இயல்பான உடல் மொழியில் புன்னகை தவழும் முகத்துடன் தனிப்பட்ட வகையில் யாரையும் தாக்காமல் பேசும் பிரியங்காவை ஆர்வத்துடன் பார்க்கிறார்கள் மக்கள். பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதிகள் எங்கே போயின என்று ஒவ்வொன்றாகப் பட்டியலிடும் பிரியங்கா சாமானியர்களின் மொழியில் பேசுவது மக்கள் இடையே நல்ல வரவேற்பைப் பெறுகிறது.

உத்தர பிரதேசத்தைப் பிடித்தால் நாடாளுமன்றத்தையே பிடித்துவிடலாம் என்பார்கள். எட்டு பிரதமர்களைத் தந்த மாநிலம் அது. ஒருகாலத்தில், காங்கிரஸுக்குப் பெரும் வெற்றிகள் தந்த மாநிலம். 1984 தேர்தலில் 51% வாக்குகளைப் பெற்று 83 தொகுதிகளில் (அப்போது உத்தர பிரதேசம் பிரிக்கப்படவில்லை) வென்ற காங்கிரஸ் அடுத்தடுத்த மக்களவைத் தேர்தல்களில் தோல்விகளையே சந்தித்தது. 1985 சட்டமன்றத் தேர்தலில் தோற்ற பின்னர், அம்மாநிலத்தில் ஒருபோதும் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் திணறிவருகிறது காங்கிரஸ்.

இன்றைய சூழலில், ஒருபக்கம் பாஜக கொடுக்கும் அழுத்தம், மறுபக்கம் சமாஜ்வாதி - பகுஜன் சமாஜ் கட்சிகளின் கூட்டணியால் உருவாகியிருக்கும் அழுத்தம். இந்தச் சூழ்நிலையில், உத்தர பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறுவது என்பது காங்கிரஸுக்கு மிக முக்கியம். பிரியங்காவின் வருகையின் பின்னணி இதுதான்.

கணக்குகள் சொல்வது என்ன?

உத்தர பிரதேச வாக்காளர்களில் பிராமணர்கள் 13%, தலித்துகள் 22%, முஸ்லிம்கள் 9%, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 40% உள்ளனர். மேல் சாதியினரில் பிராமணர்கள், தாக்கூர்கள் உள்ளனர். முதல்வர் ஆதித்யநாத் தாக்கூர் சமூகத்தைச் சேர்ந்தவர். தாங்கள் ஓரங்கட்டப்படுவதாக பாஜகவைச் சேர்ந்த பிராமணர்கள் கருதுகின்றனர். எனவே முஸ்லிம்கள், குர்மிகள், ஜாதவ்கள் அல்லாத தலித்துகள், யாதவர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிராமணர்கள் ஆகியோரைத் தங்கள் வசம் திருப்ப பிரியங்காவைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முயல்கிறது காங்கிரஸ்.

பகுஜன் சமாஜ்- சமாஜவாதி கூட்டணி தங்களுடைய வாக்கு வங்கியான பிற்படுத்தப்பட்ட மக்கள், தலித்துகள், சிறுபான்மையோர் உதவியுடன் 2019 மக்களவைத் தேர்தலிலும், பிறகு சட்டமன்றத் தேர்தலிலும் அதிக இடங்களில் வென்று ஆட்சியைப் பகிர்ந்துகொள்ள திட்டமிட்டு காயை நகர்த்துகின்றன. காங்கிரஸை ஒற்றை இலக்க தொகுதிகளுக்குள் முடக்க முற்படும் அவற்றின் திட்டத்துக்கு ராகுல் பதிலடி தர விரும்புகிறார். காங்கிரஸை எப்போதும் ஆதரித்துவந்த முற்பட்ட வகுப்பினர், குறிப்பாக பிராமணர்கள், தாக்கூர்கள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தலித்துகள், முஸ்லிம்கள் ஆகியோரைத் தங்கள் பக்கம் திருப்ப அவர் திட்டமிடுகிறார்.

உத்தர பிரதேச காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பிரியங்காவுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. கட்சியினரின் வார்த்தைகளுக்கு பிரியங்கா காது கொடுக்கிறார். அவர்களுடன் தரையில் அமர்ந்து பேசுகிறார். அத்துடன், கள நிலவரம் குறித்து கட்சியினர் சொல்லும் விஷயங்களைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்.

2007-ல் காங்கிரஸ் பொதுச் செயலாளராக ராகுல் காந்தி பொறுப்பேற்றபோதும் இதே அணுகுமுறையைக் கையாண்டார். அண்ணனின் பாதையைத் தங்கை பின்பற்றுகிறார். கட்சியின் மாநிலத் தலைவர் ராஜ் பப்பருடனும், மேற்கு உத்தர பிரதேசத்தின் 38 தொகுதிகளுக்குப் பொறுப்பேற்றிருக்கும் ஜ்யோதிராதித்யா சிந்தியாவுடனும் இணைந்து தேர்தல் பணிகளில் ஈடுபடுகிறார்.

இப்போதைக்கு காங்கிரஸ் தனியாகவும் சமாஜவாதி-பகுஜன் சமாஜ் ஆகியவை தனியாகவும் இருந்தாலும் தேர்தல் தேதி அறிவிப்புக்குப் பிறகு இவ்விரண்டு அணிகளும் கூட்டணி அல்லது தொகுதி உடன்பாடு செய்துகொண்டுவிடும் என்ற பேச்சும் அடிபடத்தான் செய்கிறது. ஒருவேளை அப்படி நடந்தால், பாஜகவுக்குப் பெரிய சவாலாகிவிடும்; அப்படி நடக்காவிட்டால், காங்கிரஸுக்கு உயிர்ப் போராட்டமாக மாறிவிடும். அந்தச் சுமை முழுமையும் பிரியங்காவின் தோள்களில் இறங்கும். இவ்வளவுக்கு இடையில்தான் பிரியங்கா களம் இறங்கியிருக்கிறார்; ஒருவகையில் இந்தத் தேர்தல் அவருடைய அரசியல் வாழ்வையும் சேர்த்து தீர்மானிக்கும் தேர்தலாகிவிட்டிருக்கிறது என்பதுதான் உண்மை!

நன்றி: த ஹிந்து



# தவறான சமன்பாடுகளுடன் தேர்வுக்கு தயாராகும் தேமுதிக!

**தே**ர்தல் நெருங்க நெருங்க கூட்டணி பேரங்களின் தரம் குறைந்துகொண்டேபோவதை உணர்த்துகின்றன சமீபத்திய அரசியல் நிகழ்வுகள். குறிப்பாக, எல்லா திசைகளிலும் கூட்டணிக்கான சமிக்ஞைகளைப் பரப்பிவிட்டு, ‘நிபந்தனை’கள் ஏற்றுக்கொள்ளப்படும் அளவைப் பொறுத்து, பேரத்தை இறுதிசெய்யும் பாணியைத் தமிழக அரசியலுக்கு விரிவாகக் கற்றுக்கொடுத்திருக்கிறது தேமுதிக. தேர்தல் அரசியலுக்கு வந்து ‘அனுபவம்’பெற்ற சில காலத்திலிருந்தே அக்கட்சி இதைத்தான் செய்கிறது என்றாலும் இந்த முறை இந்த பாணிக்குப் புதிய வடிவத்தையும் கொடுத்திருக்கிறது.

ஒரே நாளில் பாஜக - அதிமுக கூட்டணியுடன் பேசிக்கொண்டிருக்கும்போதே, திமுகவுடனும் கூட்டணி குறித்துப் பேசியது அக்கட்சியின் நோக்கம்தான் என்ன என்று அரசியல் பார்வையாளர்களையும் மக்களையும் அயர வைத்திருக்கிறது. ஒருபுறம் கட்சியின் துணைச் செயலாளர் சுதீஷ் பாஜகவுடனும், மறுபுறம் கட்சியின் சில நிர்வாகிகள் திமுகவுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதெல்லாம் பெரும் அவலம். தேமுதிக நிர்வாகிகள் திமுக கழகப் பொருளாளர் துரைமுருகனுடன் கூட்டணி பற்றிப் பேசவில்லை; தனிப்பட்ட காரணங்களுக்காகவே அவரைச் சந்தித்தனர் என்று சொன்னதைத் தமிழகத்தில் குழந்தைகூட நம்பவில்லை. இவ்விஷயத்தில் திமுக நடந்துகொண்ட விதம் விமர்சனத்துக்குரியது. ஆனால், தரம் தாழ்ந்த விதமாக அதற்கு எதிர்வினையாற்றி, தனது அனுபவமின்மையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது தேமுதிக.

அரசியல் எல்லைகளைத் தாண்டி, தனிப்பட்டரீதியிலான பலவீனங்களை ஆயுதமாக்கிக் குற்றம்சாட்டிக்கொள்வதைப் பெரும்பாலும் பரஸ்பர அரசியல் எதிரிகள் தவிர்க்கவே செய்வார்கள். தேர்தல் நேரத்தில்கூட அப்படி நடந்துகொள்ள மாட்டார்கள். ஆனால், அனுபவமின்மையும், கூட்டணி பேரத்துக்கான ஆயுதம் எனும் அளவில் மட்டுமே அரசியலைக் கருதும் நிலைப்பாடும் தேமுதிகவிடமிருந்து இப்படியான எதிர்வினையை வெளிப்படுத்தியிருக்கின்றன.

திரைமறைவு பேரங்களைப் பொதுவெளியில் சொல்வதன் மூலம், சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்துவது ஒரு தந்திரம். தேமுதிக தலைவர் விஜயகாந்தை, ‘நலம் விசாரிக்க’ சென்றுவந்த திமுக தலைவர் ஸ்டாலினின் நோக்கம் குறித்து, பிரேமலதா வெளிப்படையாகப் பேசியதும், அதிமுகவுடனான பேரத்தை உயர்த்தும் நோக்கிலேயே திமுகவுடன் அக்கட்சி பேரம் பேசிவந்தது என்ற தகவலும் திமுக தரப்பைக் கொந்தளிக்க வைத்துவிட்டன என்கிறார்கள். அதிமுகவுக்கு முன்னதாகவே கூட்டணியை திமுக இறுதி செய்தது, தேமுதிகவுக்குப் புகட்டப்பட்ட மறைமுகப் பாடம் என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். இதன் தொடர்ச்சிதான் கடந்த மூன்று நாட்களாக நடந்துவரும் அரசியல் அவலம்.

2006 சட்டமன்றத் தேர்தலில் முதன்முதலாகக் களம் கண்ட தேமுதிக, தனித்துப் போட்டியிட்டு ஒரே ஒரு வெற்றியுடன் 8.4% வாக்குகளைப் பெற்றதுதான் இன்றுவரை அக்கட்சி தொடர்பாக, தேர்தல் நேரத்திலாவது, பிற கட்சிகள் அக்கறை கொள்வதற்கான காரணியாக இருக்கிறது. 2011 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக துணையுடன் 7.9% வாக்குகள் பெற்று 29 இடங்களில் வென்றாலும், அடுத்தடுத்த தேர்தல்களில் அக்கட்சியின் வாக்கு சதவீதம் குறைந்தே வந்திருக்கிறது. 2016 சட்டமன்றத் தேர்தலில் 104 இடங்களில் போட்டியிட்டு வெறும் 2.4% வாக்குகளைத்தான் பெற்றது. குறிப்பாக, நாடாளுமன்றத் தேர்தல்களில் தேமுதிகவுக்கு வெற்றி கிடைத்ததே இல்லை.

2016 தேர்தலுக்குப் பின்னர், தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலம் குன்றி முடங்கிவிட்ட நிலையில், கட்சி கிட்டத்தட்ட செல்லரித்த நிலையில் இருக்கிறது. மாவட்டச் செயலாளர்கள் உட்பட பலர் வேறு கட்சிகளுக்கு மாறிவிட்டிருக்கின்றனர். கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியிலும் பிரேமலதா - சுதீஷின் குடும்ப அரசியல் எல்லா நம்பிக்கைகளையும் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைத்துவிட்டது என்ற எண்ணமே மேலோங்கிவருகிறது. இவ்வளவையும் தாண்டி தேமுதிகவுக்கு இப்போது உண்டான மவுசு என்பது, கூட்டணியை வலுவாக அமைக்காவிட்டால் பலத்த போட்டியைச் சந்திக்க நேரிடும் என்ற நிர்ப்பந்தத்தில் உள்ள ‘பாஜக - அதிமுக’ கூட்டணி, ஒவ்வொரு சதவீத ஓட்டும் முக்கியமானது என்ற வியூகத்தினூடாக இத்தேர்தலை அணுகுவதன் விளைவால் உண்டானது. இதையே துருப்புச் சீட்டாக மாற்றியது தேமுதிக.

இன்றைக்கு ஏதேனும் ஒரு பெரிய கட்சியைச் சார்ந்துதான் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியும் எனும் சூழலிலும், தேமுதிக இத்தனை முரண்டுபிடிப்பதற்கான முக்கியக் காரணம் அது தன்னிலை மறந்துவிட்டதுதான் என்கிறார்கள். எப்படியும் கூட்டணிக்குள் தேமுதிகவைக் கொண்டுவர எண்ணி, அதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்துவந்த பாஜகவினர், பிரதமர் மோடி கலந்துகொண்ட நிகழ்ச்சியையேகூட அக்கட்சி பொருட்படுத்தாத சூழலில், தூக்கிவீசவும் தயாராகிவிட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

பாஜக - அதிமுக கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் பாமகவுக்கு இணையாகத் தொகுதிகளை தேமுதிக கேட்பதாகவும், சட்டமன்ற இடைத்தேர்தல், உள்ளாட்சித் தேர்தலில் கணிசமான இடங்களைக் கேட்பதாகவும் செய்திகள் வெளியானாலும் தொகுதிகளுக்கு அப்பாற்பட்ட பேரங்களும் நடப்பதாக வெளிப்படையாகவே பேசப்படுகிறது. கட்சியைப் பணம் காய்ச்சி மரமாகவே பிரேமலதாவும் சுதீஷும் பார்க்கிறார்கள் என்று வெளிப்படையாகவே பேசத் தொடங்கியிருக்கிறார்கள் தேமுதிக தொண்டர்கள்.

இதற்கிடையே, அதிமுக-பாஜக, திமுக மட்டுமல்லாமல் டிடிவி தினகரனின் அமமுகவுடனும் தேமுதிகவின் பேரம் நடந்திருப்பதாக வெளிவரும் தகவல்கள் ‘கொள்கை என்றால் என்ன?’ என்று கேட்கும் நிலையிலேயே அக்கட்சி இருப்பதைச் சொல்கின்றன.

இதையெல்லாம் தாண்டிய கேள்வி என்னவென்றால், இனி அதிமுகவுடன் கூட்டணி அமைந்தாலும் பாமகவுக்கு வழங்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் மீதான அதிருப்தியை வெளிப்படையாகப் பேசி, பிரதான கட்சியான அதிமுகவையே அலையவிட்டு, அதிமுக தரப்புக்குத் தலையையும், திமுக தரப்புக்கு வாலையும் காட்டி, இரு தரப்புகள் மத்தியிலும் அம்பலப்பட்டு நிற்கும் தேமுதிகவுடன் ஏனைய கட்சியினர் எந்த அளவுக்கு ஆத்மார்த்தமாகத் தேர்தல் பணியாற்றுவார்கள் என்பதுதான். பேராசைக்கான பலன், தேர்தலுக்கு முன்பே தேமுதிகவுக்குக் கிட்டத் தொடங்கியிருக்கிறது என்றே அரசியல் களத்தில் எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். பாவம் விஜயகாந்தும் அவரது தொண்டர்களும்!

**கேள்வி...**

14 ஆம் பக்கத் தொடர்ச்சி

கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் வாயிலாகத் தங்களது பெரும்பான்மையை அடுத்த தேர்தல் வரைக்கும் தக்கவைத்துக்கொண்டிருக்கும் பெரிய கட்சிகள், அந்த வலைக்குள் கூட்டணியில் இடம்பெறும் சிறிய கட்சிகளையும் இழுத்துப் போட்டுக்கொள்கின்றன என்பதுதான் உண்மை.

இது ராஜதந்திரமாகக் கணக்கில் கொள்ளப்படலாம். ஆனால், ஜனநாயக நெறிமுறைகளுக்கு முரணானது. தமிழகத்தில் இப்படியொரு ஜனநாயக விரோத உத்தியைத்தான் ஜெயலலிதா கடந்த தேர்தல்களில் தொடர்ந்து கையாண்டார் (கருணாஸ், தமிமுன் அன்சாரி, தனியரசு ஆகியோர் விதிவிலக்குகள். அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு மற்ற சிறிய கட்சிகளுக்கு அமைவதற்கு வாய்ப்பே இல்லை). ஜெயலலிதாவை எதிர்த்து நின்ற திமுகவும் இன்றைக்கு அவரையே பின்பற்றுகிறது. பதவி கிடைத்தால் போதும் என்று நினைப்பவர்கள் வேண்டுமானால், இந்தச் சமரசத்துக்கு எளிதில் தலையசைத்துவிடலாம். ஆனால், தனக்கென்று ஒரு தனித்த செயல்திட்டத்தின் அடிப்படையில் செயல்படும் கட்சிகளுக்கு இது மிகப் பெரிய சாபம்!




# மாறட்டும் பெண் சமூகத்தின் மீதான பார்வை

ஒரு நாட்டின் ஆண்களும் பெண்களும் முழு ஆற்றலுடனும் திறன்களுடனும் வாய்ப்புகளுடனும் முழுமையான வாழ்க்கை வாழ்வதைத்தான் மனித வளமேம்பாடு என்று சொல்ல வேண்டும். ஆனால், இங்கு ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கு ஆற்றலும் திறன்களும் இருந்தாலும், ஆண்களுக்கு இணையாக வாய்ப்புகள் இல்லை என்பதுதான் உண்மை.

இன்றைக்கு மகளிர் தினம். முதலில் அனைத்துலக உழைக்கும் மகளிர் தினம் என்றுதான் அறியப்பட்டது. தற்போது அதை மகளிர் தினம் என்று மட்டுமே குறிக்கிறார்கள். ஒரு வேளை எல்லாப் பெண்களுமே, ஏதோ ஒரு விதத்தில், வீட்டிலோ அல்லது பணியிடங்களிலோ வேலை பார்ப்பவராக இருப்பதால் இப்படி மாறியிருக்கலாம். நகர்ப்புறங்களில் படித்த, அலுவலகங்களில் ஆணுக்குச் சமமான அளவில் வேலை பார்க்கும் பெண்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு, முன்பைவிட பெண்கள் முன்னேறிவிட்டார்கள் என்று நாம் சொல்லிக்கொள்கிறோம். உண்மை அதுவல்ல!

### அங்கீகாரமற்ற உழைப்பு

உழைக்கும் மகளிரில் வெறும் 11% பெண்கள் மட்டுமே, ஒருங்கிணைக்கப்பட்ட துறைகளில் பணிபுரிகின்றனர். மீதமுள்ள 89% பெண்கள் வேலை உத்தரவாதமில்லாத, சமமான ஊதியமில்லாத, பாலியல் துன்புறுத்தல் நிறைந்த சூழலிலேயே வேலை பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஒருங்கிணைக்கப்படாத துறைகளில் பெரும்பாலும் சம ஊதியம் கிடைப்பதில்லை. சம வேலைக்குத்தானே சம கூலி என்று, வேலைகளையே இது ஆணுக்கானது, இது பெண்ணுக்கானது என்று பிரித்துவிடுகிறார்கள். சட்டத்திலிருந்து தப்பும் உத்தி இது.

காலங்காலமாகக் கட்டுமானத் துறையில் உழைக்கும் ஒரு பெண்ணால், தன் அனுபவ அறிவால் மேஸ்திரியாக முடியாதா? நாள் முழுவதும் குனிந்து நாற்று நடும் பெண்களால் டிராக்டர் ஓட்டக் கற்றுகொண்டு ஓட்ட முடியாதா? படப்பிடிப்புத் தளங்களில்கூட யாரோ சமைத்ததைப் பரிமாறும் ஆணைவிட அத்தனை பாத்திரங்களையும் தேய்த்துக்கொண்டிருக்கும் பெண்களுக்குக் கூலி குறைவுதான். திரைப்படங்களில் ஆணுக்கு இணையான அளவு காத்திரமான பாத்திரத்தில் நடிக்கும் எந்த நடிகைக்கும் ஆண் நடிகர் அளவு சம்பளம் தரப்படுவதில்லை. ஆக, இங்கு திறமையைவிட பாலினம்தான் முக்கியத்துவம் பெறுகிறது. என்ன இருந்தாலும் பெண்தானே என்று இன்னமும் இரண்டாம் வரிசையில்தான் பெண்ணை நிறுத்துகிறது சமூகம்.

மேம்பட்ட வாழ்வுக்கான சமன்

இப்படியான இரண்டாம் தர நிலைப்பாடு, குடும்பம் தொடங்கி நாடாளுமன்றம் வரை எதிரொலிக்கிறது. இதைக் கணக்கில் கொண்டுதான் இந்த ஆண்டுக்கான மகளிர் தினத்துக்கான கருத்தாக்கம் மேம்பட்ட வாழ்வுக்கான சமன் (பேலன்ஸ் ஃபார் பெட்டர்) என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சமன் தேவைப்படுவது பெண்களின் மேம்பாட்டுக்காக மட்டுமல்ல. சமுதாயத்தின் மேம்பட்ட வாழ்வுக்கான முழக்கம் இது. சமூகத்தில் சரிபாதி அளவில் உள்ள பெண்களின் வாழ்க்கை முடக்கப்பட்டிருக்கும் சூழலில் அந்தச் சமூகம் எப்படி மேம்பட முடியும்?

பொருளீட்டாத பெண்ணை வீட்டில் சும்மா இருக்கிறாள் என்று பேசும் சமூக நிலைதான் இன்றும் தொடர்கிறது. வீட்டைப் பராமரிப்பதில் பெண்ணுடைய உழைப்பின் நேரம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. பெண்கள் உலகின் வேலைப் பளுவில், இரண்டில் ஒரு பங்கை செய்கிறார்கள். 10-ல் ஒரு பங்கை ஊதியமாகப் பெறுகிறார்கள். 100-ல்

ஒரு பங்கினர்தான் சொத்துக்கு உரிமையாளராக இருக்கிறார்கள். ஆக, மேம்பட்ட வாழ்வுக்கான சமன் என்பதற்கு முதலில் நாம் அங்கீகரிக்க வேண்டியது பெண்களின் கண்ணுக்குத் தெரியாத, கணக்கில் வராத உழைப்பைத்தான்!

குடும்பம் தொடங்கி நாட்டின் ஆட்சி அமைப்பு வரை, பெண்களைச் சிந்திக்கத் தெரிந்தவர்களாக அங்கீகரிப்பது மிக அரிதாகவே நிகழ்கிறது. உனக்கு ஒண்ணும் தெரியாது வாயை மூடு என்று வீடுகளில் ஒலிக்க ஆரம்பிக்கும் குரல் பெண் மீதான மிகப் பெரிய புறக்கணிப்பு. அதனால் ஆணுக்குச் சமமான அளவில் அறிவுத்திறன் இருந்தாலும், உயர்மட்டங்களில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் சம அளவில் அளிக்கப்படுவதில்லை.

இதையெல்லாம்விட முக்கியமான பிரச்சினை பாதுகாப்பின்மைதான். பாலியல் சீண்டல்கள் தொடங்கி பலாத்காரம் வரை நீள்கின்ற இந்த வன்முறை, சிறுமிகள், பெண்களின் சுதந்திரமான நடமாட்டத்தை அச்சுறுத்துகிறது. உறவினர், தெரிந்தவர், தெரியாதவர் என எல்லாத் தரப்பிலும் இருந்து பெண் குழந்தைகள் தொடங்கி, வயதான மூதாட்டி வரை பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

ஒரு குடும்பத்தில் ஒரு பெண் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளானால், அது அந்தக் குடும்பத்தின் ஆண்களையும் பாதிக்கிறது. ஆண்கள் பற்றிய அவநம்பிக்கை பெண்களிடம் உருவாகிறது. இது ஆண்-பெண் இருவரின் வாழ்க்கையையும் பாதிக்கிறது.

பாரபட்சம்

ஆண் மையச் சமூகத்தில் பாலியல் கொடுமை என்பது ஒரு அத்துமீறலாகப் பார்க்கப்படுவது இல்லை. குழந்தை பிறந்ததிலிருந்து தொடங்கி ஆண்களையும் பெண்களையும் சமூகம் வெவ்வேறு விதமான மதிப்பீடுகளோடு வளர்க்கிறது. குடும்பங்களும் இதைத்தான் வாழ்வியல் முறையாக ஏற்றுக்கொள்கின்றன. ஆண், பெண் குழந்தைகளை வளர்க்கும் விதத்தில் காட்டப்படும் வேறுபாடு, பாரபட்சம் இதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. தட்டு கழுவுவதிலிருந்து, உள்ளாடைகளைத் தோய்த்துத் தருவது, ஊட்டச்சத்தான உணவை அதிகமாக அளிப்பது, எவ்வளவு சம்பாதித்தாலும் பெண், தன் தேவைகளுக்காக கணவரின் அனுமதியைக் கோரவேண்டிய சூழல் என இந்தப் பாலின அதிகாரம் ஒவ்வொரு செயலிலும் கடைபிடிக்கப்படுகிறது.

பெண்கள் கட்டப்பட்டிருந்த முளைக்குச்சியின் கயிற்றின் நீளம் முன்பைவிட இன்றைக்கு அதிகரித்திருக்கிறது என்று சொல்லலாமே தவிர, பெண்கள் கட்டுகள் அற்று, சுதந்திரமாக இயங்க முடியாத சமூக கட்டமைப்பில்தான் நாம் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறோம்.

மாற்றத்தைத் தொடங்குவோம்

மகளிர் தினத்தை வெறும் கொண்டாட்ட தினமாக மட்டும் குறுக்கிவிடாமல், வெற்றுக் கோஷங்களுக்கான தினமாக மட்டும் கருதிவிடாமல், உண்மையான சமத்துவத்துக்கான செயல்பாட்டை எல்லா மட்டங்களிலும் அமல்படுத்த உறுதி எடுப்போம்.

1. வீடுகளில் ஆண் குழந்தைகளுக்கும் வீட்டுப் பொறுப்புகளைச் சொல்லித் தருவோம். பெண் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் அறச்சீற்றத்தையும் குழந்தைப் பருவத்திலிருந்தே ஊட்டி வளர்ப்போம்.

2. பாடத்திட்டங்கள், ஊடகங்கள் என அனைத்திலும் ஆண்-பெண் சித்தரிப்பில் சக மனிதர்கள் என்ற பார்வையை முன்வைக்க முயல்வோம். கவர்ச்சிப் பாவை எனும் சித்தரிப்பும் வேண்டாம். தாய் என்ற பீடமும் வேண்டாம்.

3. ஒருங்கிணைக்கப்பட்ட, படாத என அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதோடு சம அந்தஸ்தையும் ஊதியத்தையும் பெற்றுத்தரப் போராடுவோம்.

3. பாலியல் சீண்டல் தொடங்கி பலாத்காரம் வரை அனைத்தும் நிகழாமல் இருக்க வேண்டும் என்றால், ஆண் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் பெண் நடுங்கி ஒடுங்க வேண்டும் என்ற கற்பித்தலோடு ஆணையும் பெண்ணையும் வளர்ப்பதற்குத் முற்றுப் புள்ளி வைப்போம்.

4. 2021-ல் வருகிற மக்கள்தொகைக் கணக் கெடுப்பிலாவது பெண்களின் கண்ணுக்குத் தெரியாத உழைப்பு நாட்டின் ஜிடிபியில் கணக்கில் எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவோம்.

இவற்றையெல்லாம் செய்யத் தவறினால் திரும்பவும் சமத்துவமற்ற ஒரு சமூகத்தைத்தான் வளர்த்துக்கொண்டிருப்போம். அத்தகைய சமூகம் நாளடைவில் குடும்பத்தை மட்டும் பாதிக்காது. மொத்த சமூகத்தின் வளர்ச்சியையுமே சிதைத்துவிடும்!

# பழங்குடிகள் இல்லாத வனம் பாலைவனமே!

பழங்குடிகளையும் வனத்தைச் சார்ந்து வாழும் மக்களையும் அவர்களின் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளியேற வகைசெய்யும் உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்து நாடு தழுவிய அளவில் போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. உலக அளவில் தலைசிறந்த உயிரியல், சூழலியல் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆர்வலர்கள், அமைப்புகள், நிறுவனங்கள் கூட்டாகக் கையெழுத்திட்டு, இத்தீர்ப்பு இந்தியாவின் பாதுகாப்புக்கு ஒரு பின்னடைவு என்று கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக, கடந்த நான்கு விசாரணைகளில் பங்கேற்காமல் தவிர்த்துவந்த மத்திய அரசு அவசர அவசரமாக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. உச்ச நீதிமன்றம் தனது உத்தரவை நிறுத்திவைத்திருக்கிறது என்றாலும் அந்த உத்தரவைத் திரும்பப் பெறவில்லை. வன உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்று மாநில அரசுகளிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

### கிராம சபைக்கே அதிகாரம்

பல பத்தாண்டுகள் போராட்டத்துக்குப் பிறகுதான் 'பழங்குடியினர் மற்றும் வனத்தைச் சார்ந்து வாழும் மக்களின் (காடுகளின் மீதான உரிமைகளை அங்கீகரிக் கும்) வன உரிமைச் சட்டம், 2006' இயற்றப்பட்டது. தலைமுறை தலைமுறையாக வனத்தில் வாழ்பவர்கள் வனச் சிறு மகசூலான சீமார் புல், தேன், நெல்லி, கடுக்காய், பூச்சக் காய், புளி, மூங்கில் (ஒரு முறை அறுவடை செய்தால் மீண்டும் விளையக்கூடியவை) போன்ற பொருட்களை அறுவடை செய்து பயன்படுத்திக்கொள்ளும் உரிமை, விவசாயம் செய்து வந்த வன நிலத்துக்கான உரிமை, சமூக வன ஆதார உரிமை என மூன்று வகையான உரிமைகளை இந்தச் சட்டம் பழங்குடி மக்களுக்கு வழங்குகிறது.

இந்த உரிமைகளைப் பெறுவதற்கான வழிமுறை விதிகள் 2008, 2015-ம் ஆண்டுகளில் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி, ஒரு குறிப்பிட்ட வனப் பகுதியைப் பயன்படுத்தி வாழ்ந்து வருகிற பழங்குடி ஆண்கள், பெண்கள் அனைவரையும் உறுப்பினர்களாகக் கொண்ட கிராம சபை அமைக்கப்பட வேண்டும். அக்கிராம சபை 15 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட தலைவர், செயலாளரை உள்ளடக்கிய வன உரிமைக் குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இக்குழுவில் 5 பெண்கள் இடம்பெறுவது கட்டாயம். இதுவரை பழங்குடியினருக்கு எந்தச் சட்டமும் வழங்காத உரிமையை முதல் முறையாக இச்சட்டம் வழங்கியிருக்கிறது.

கிராம சபை உறுப்பினர்கள் தங்களது உரிமை குறித்த கேட்பு மனுக்களை வன உரிமைக் குழுவிடம் வழங்க வேண்டும். இக்குழு மேற்படி மனுக்களைப் பரிசீலித்து அதன் பரிந்துரைகளை கிராம சபைக்கு வழங்க வேண்டும். கிராம சபை கூடி விவாதித்து தீர்மானம் நிறைவேற்றி உட்கோட்ட குழுவிற்கு அனுப்ப வேண்டும். இதற்குரிய வழிகாட்டுதலைப் பழங்குடி நலத் துறை செய்ய வேண்டும்.



### உரிமைகளைத் தடுக்கும் முயற்சி

வன உரிமைச் சட்டமும் விதிகளும் வழங்கியுள்ள உரிமைகளைப் பழங்குடிகளுக்கு வழங்கக் கூடாது, இதனால் வனம் அழியும் என இச்சட்டத்தை எதிர்த்து ஓய்வுபெற்ற வனத் துறை அலுவலர்கள், முன்னாள் ஜமீன்தார்கள், சில தொண்டு நிறுவனங்கள் சேர்ந்து வழக்கு தொடுத்தனர். இவ்வழக்கில், தள்ளுபடி செய்யப்பட்ட 18 லட்சம் கேட்பு மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட குடும்பங்களை உடனடியாக வெளியேற்றும்படி கடந்த பிப்ரவரி 13-ல் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அருண் மிஸ்ரா, நவீன் சின்கா, இந்திரா பானர்ஜி ஆகியோர் அடங்கிய அமர்வு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவால், தமிழ்நாடு, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், உத்தர பிரதேசம், சத்தீஸ்கர், உத்தராகண்ட், பிஹார் உள்ளிட்ட 16 மாநிலங்களைச் சேர்ந்த பழங்குடிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தமிழ்நாட்டில் மட்டும் 9,029 கேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

நீண்ட காலப் போராட்டத்துக்குப் பிறகு பெற்ற சட்ட உரிமையை முழுமையாகப் பரிசீலிக்காமல் அவசர கோலத்தில் அள்ளித் தெளித்ததாகவே இத்தீர்ப்பு அமைந்துள்ளது. வனத்தை நம்பியே வாழ்ந்து வருகிற பல லட்சம் பழங்குடிகளை ஒரே உத்தரவில் வனத்தை விட்டு வெளியேற்றச் சொல்வதில் எந்த நியாயமும் இல்லை.

வன உரிமைச் சட்டப்படி உட்கோட்டக் குழுவுக்கு கிராம சபை அனுப்பிய தீர்மானத்தின் மீது உட்கோட்டக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். உட்கோட்டக் குழுவில், கோட்டாட்சியர், வனத் துறை அலுவலர், பழங்குடி நலத் துறை தாசில்தார், பழங்குடி பஞ்சாயத்து உறுப்பினர்கள் மூன்று பேர் இடம்பெற்றிருப்பார்கள். மூன்று உறுப்பினர்களில் கண்டிப்பாக ஒரு பெண் இடம் பெற்றிருக்க வேண்டும். கிராம சபை தீர்மானத்தை உட்கோட்டக் குழு விவாதித்து, அதை ஏற்று மாவட்ட அளவிலான குழுவுக்கு அனுப்ப வேண்டும். தீர்மானத்தில் தெளிவின்மையோ குறைகளோ இருந்தால் அதைச் சரிசெய்து அனுப்பச் சொல்லி அத்தீர்மானத்தை கிராம சபைக்கே திருப்பியனுப்பி, தேவையான உதவிகளைச் செய்ய வேண்டுமேயன்றி நிராகரிக்கக் கூடாது. வன உரிமைச் சட்டப்படி எந்த உட்கோட்டக் குழு உறுப்பினர்களுக்கும், மாவட்ட அளவிலான குழு உறுப்பினர்களுக்கும் கேட்பு மனுக்களை நிராகரிக்க உரிமை கிடையாது.

எத்தனை இடங்களில் சட்டப்படி முறையாக கிராம சபைகள், வன உரிமைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை கேட்பு மனுக்கள் தீர்மானங்களாக உட்கோட்டக் குழுவுக்குச் சென்று விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன? இந்தக் கேள்விகளை உச்ச நீதிமன்றம் கேட்கவும் இல்லை. பதில் சொல்ல வேண்டிய, வாதாட வேண்டிய மத்திய அரசு வழக்குரைஞர்கள் யாருமே கடந்த நான்கு விசாரணைகளில் பங்கேற்கவும் இல்லை.

### வனங்களை அழிப்பது யார்?

ஆங்கிலேயர்களின் வனக் கொள்ளைக்கு எதிராக முதல் சுதந்திரப் போரைத் தொடுத்தவர்கள் பழங்குடிகளே. இன்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் காணிக்காரப் பழங்குடிகள் இறந்தவர்களை வனங்களில் புதைத்து, புதைகுழியின் மீது மரக்கன்றுகளை நட்டு, வளர்த்து இந்த மாமரம் எனது தாத்தா, இந்தப் பலாமரம் எனது அம்மா, இந்தக் கிராம்பு மரம் எனது குழந்தை என்று அனைத்து மரங்களையும் தங்களது மூதாதையர்களாகவும், வாரிசுகளாகவும் வணங்கிப் பாதுகாக்கும் கலாச்சாரத்தைப் பார்க்க முடிகிறது. இவர்களா வனத்தை அழிப்பவர்கள்?வனச் செல்வங்களைக் கொள்ளையடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகப் பழங்குடிகள்தான் போராடி, துப்பாக்கிச்சூட்டுக்கு பலியாகிவருகிறார்கள். இவர்கள்தான் காட்டை அழிக்கிறார்கள் என்று வழக்குப் போடுகிறது வனத் துறை.

சத்தீஸ்கர் மாநில அரசு, வேதாந்தா கம்பெனிக்கு வனத்தைத் தாரைவார்த்ததற்கு எதிராகப் போராடிய பழங்குடிகளை ஒடுக்க 'சல்வா ஜுடும்' என்ற துப்பாக்கிப் படையை உருவாக்கியது. பழங்குடி இளைஞர்களை வைத்தே பழங்குடி மக்களை வேட்டையாடியது. அதற்கு எதிராக 2007-ல் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சுதர்சன் ரெட்டி, சுரீந்தர் சிங் நிஜ்ஜார் வழங்கிய தீர்ப்பினை, இன்றைய நீதிபதிகள் கொஞ்சம் புரட்டிப் பார்ப்பது நல்லது. இலவச நிலம், இலவச நீர், இலவச மின்சாரம் எனப் பெருநிறுவனங்களைக் கொழுக்கச் செய்துகொண்டே, வறுமையில் வாடும் பழங்குடி மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துதர மறுக்கும் அரசைக் கடுமையாகக் கண்டித்தது அத்தீர்ப்பு.

2006-ல் இயற்றப்பட்ட வன உரிமைச் சட்டம்தான் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கி இன்றைய சுதந்திர இந்தியா ஆட்சி வரையில் பழங்குடிகளுக்கு இழைக்கப்பட்டுவந்த வரலாற்று அநீதியைப் போக்கியுள்ளது. ஆகவே, தற்போதைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். தேவையெனில், பழங்குடிகளின் வன உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத் திருத்தங் களைச் செய்யவும் மத்திய அரசு முன்வர வேண்டும். சட்டப்படி பழங்குடிகள் வன உரிமைகளைப் பெறவும், வன மேம்பாடு தொடர்பான திட்டங்கள், நிதிகள் ஆகியவை கிராம சபை மூலம் செயல்படுத்தப்படவும் இனிமேலாவது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**- வி.பி.குணசேகரன், பழங்குடி உரிமைகள் செயற்பாட்டாளர்**

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 10.03.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# கிழக்கு மாகாணத்தில் விசேட கல்வி அபிவிருத்தி திட்ட கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது




**க.விஜயரெத்தினம்**

கிழக்கு மாகாணத்தில் வறுமையினாலும்,யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட கல்வி அபிவிருத்தி திட்டகட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினாலும்,வறுமையினாலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக சுவிஸ் உதயம் அமைப்பினால் விஷேட வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்கான புதிய கட்டடத் தொகுதிக்கு மட்டக்களப்பு திராய்மடுவில் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது.

2004ம் ஆண்டு தொடக்கம் கிழக்கு மாகாணத்தில் கல்விக்காக அளப்பரிய சேவையாற்றிவரும் சுவிஸ் லாந்தினை தலைமையகமாகக் கொண்டு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த சேவையாளர்களினால் உருவாக்கப்பட்ட இவ் அமைப்பானது இதுவரையில் வாடகைக் கட்டிடங்களில் தனது பணியினைத் தொடர்ந்தபோதும் சுவிஸ் உதயம் அமைப்பின் முன்னாள் செயலாளர் குணதாசன், பொருளாளர் துரைநாயகம் மறறும் தலைவர் சுதர்சன் ஆகியோரில் அயராத முயற்சியின் பயனாக முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவருமான சி.சந்திரகாந்தனின் வழிநடத்தலின் கீழ் தமக்கெனப் பெற்றுக்கொண்ட காணியிலேயே இவ் அடிக்கல் நாட்டப்பட்டது.

பலதடைகள் வந்தபோதும் முன்னால் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவருமான சி.சந்திரகாந்தனின் பணிப்பிற்கு அமைய தம்முடன் இணைந்து பயணித்ததன் விழைவாகவே இக்காணியை விரைவாகப்பெற்றுக்கொள்ள முடிந்ததாக இங்கு உரையாற்றிய கிழக்கு சுவிஸ் அமைப்பின் தலைவர் விமலநாதன் குறிப்பிட்டார்.

இவ் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாளேந்திரன்,முன்னால் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன்,சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளர் துரைநாயகம், மகளீர் அணித்தலைவியும், மாநகரசபை உறுப்பினருமான திருமதி.செல்வி மனோகர், மாநகரசபை உறுப்பினர் காந்தராஜா,உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




## மட்டு. தமிழ் இளைஞர்கழக நிர்வாகிகள் தெரிவு



மட்டக்களப்பில் பல பயனுள்ள செயல்திட்டங்களை திறம்பட செய்து வருகின்ற அமைப்பான மட்டக்களப்பு தமிழ் இளைஞர் ஏற்ப்பாட்டில் உப்போடை பல்நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது எதிர்கால நலனை கருத்தில்கொண்டு மட்டு தமிழ் இளைஞர் சமூக அமைப்பின் யாப்பு முழுவதுமாக சபையில் அலசி ஆராயப்பட்டு அதற்கமைய புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தமிழ் இளைஞர் சமூக அமைப்பின் தலைவராக க.ஜனகன் தெரிவு செய்யப்பட்டார்.உபதலைவராக த.கிருஷ்ணகாந் அத்துடன் செயலாளராக ந.துஷி, உபசெயலாளர் பா.சுதன், பொருளாளர் செ.ஞானச்செல்வன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக நா.திவாகர், அ. ஜனார்த்தன், மு.நமசிவாயம் ல.விஜி, து.சிவனந்தன், சு.சியாம், ம.செந்தூர்வாசன், இ.அன்புராஜ், ம.ஜீவகன் மற்றும் சி.மேகராஜ் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக மயூரன், பி.பிரவாகரன், வ.சுரேந்திரன் , க.ரொனி ப்ரின்சொன், து.மதன் மற்றும் ஆலோசகர்களாக வே.பிரபாகாரன், த.தரனிராஜ் ஆகியோர் இதன்போது தேர்வு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## இயக்குநர் இளந்திரையனின் தந்தை காலமானார்



ஈழவள திருநாட்டின் மட்டக்களப்பு கலுவஞ்சிகுடியை பிறப்பிடமாக கொண்டு தற்போது அவுஸ்திரேலியாவின் சிட்னியில் வசித்துவரும் சர்வதேச திரைப்பட இயக்குனரான ஆறுமுகம் இளந்திரையனின் தந்தையார் சுகயீனமுற்றிருந்த நிலையில் சிட்னியில் காலமாகியதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகவும், திருப்பழுகாமத்தை வதிவிடமாகவும் கொண்டு சமகாலத்தில் அவுஸ்திரேலியாவில் வசித்துவந்த இளைப்பாறிய அதிபருமான ஆறுமுகம் கதிரேசப்பிள்ளை (சிவபாதம்) தனது 83 வயதில் இறைபதம் அடைந்துள்ளதுள்ளார்.

அன்னார், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பி குருக்கள் தம்பதிகளின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கதிரேசபிள்ளை சிந்தாமணி தம்பதிகளின் அன்பு இளைய புதல்வரும், காலஞ்சென்ற திரு. திருமதி தோம்புதோர் குமரசுவாமி தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கியரெத்தினம்(ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், ஐந்து பிள்ளைகளின் தந்தையுமாவார்.

# தமிழ்த்தலைமைகளை இன்னுமா நம்புவது?



கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த திராணி இல்லாத தமிழ்த் தலைமைகளை இன்னுமா நம்புவது? தமிழ்த் தலைமைகளுக்கு சாணக்கியமுமில்லை திறமையுமில்லை! ரணில் அரசாங்கத்தை பாதுகாத்த த.தே. கூட்டமைப்பினர் அதற்கு பிரதியுபகாரமாக கிழக்கு தமிழ் மக்களுக்கு எதனைச் செய்தார்கள்? கல்முனையில் கிழக்கு தமிழர் ஒன்றியத்தலைவர் சட்டத்தரணி த.சிவநாதன் தெரிவிப்பு.

யுத்தம் மௌனித்த பின்னர் கடந்த 10 வருடகாலமாக கிழக்குவாழ் தமிழர்களுக்கு தமிழ்த்தலைமைகள் என்ன செய்தார்கள்? என்ன முயற்சி எடுத்தார்கள்? என்பதை பகிரங்கமாக கூறட்டும். ரணிலைக் காப்பாற்றியமைக்கு இந்த தமிழ்த்தலைமைகள் கிழக்கு தமிழ் மக்களுக்கு பதிலுக்கு பெற்றுக்கொடுத்ததென்ன என்று கூறுவார்களா? இவ்வாறு கிழக்கு தமிழர் ஒன்றியத்தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி தட்சணாமூர்த்தி சிவநாதன் கல்முனையில் உரையாற்றும்போது இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

கேவலம் கல்முனை தமிழ்ப்பிரதேச செயலகத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கத் திராணி இல்லாத, தகுதியில்லாத தமிழ்த்தலைமைகளை இன்னுமா நம்புவது? என்றும் காட்டமாகக் கேள்வியெழுப்பினார்.

கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் கல்முனைப்பிராந்திய நிருவாகக்குழுவைத்

தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் ஒன்றியத்தின் அம்பாறை மாவட்டத்தலைவர் சிரேஸ்ட்ட பொறியியலாளர் ரி.சர்வானந்தா தலைமையில் கல்முனை நற்பிட்டிமுனை சுமங்கலி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தலைமைகளுக்கு சாணக்கியமும் இல்லை தகுந்த திறமையும் இல்லை' என்று கூறிய தலைவர் த.சிவநாதன் மேலும் உரையாற்றுகையில்:

70 வருடங்களாக தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடினர். பின்னர் கடந்த 30 வருடங்களாக ஆயதப்போராட்டத்தில் ஈடுபட்டனர். அக்காலகட்டத்தில் புலிகள் அரசியல் பற்றிப்பேச அனுமதிக்கவில்லை. ஒரு வழிக்கு அதுசரி. ஆனால் அந்த ஆயுதப்போராட்டம் 2009 இல் மௌனித்த பின்பு தமிழ்மக்கள் மத்தியில் நிறைய எதிர்பார்ப்புகள் பயங்கள் தேவைகள் எழுந்தன. நிலைமை தலைகீழாக மாறின. போருக்குப் பின்னர் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ்மக்கள் மாகாணத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் வாக்களித்து அனுப்பிவைத்தார்கள். இதுவரைக்கும் அவர்கள் சாதித்தது என்ன? இன்று தமிழ்மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வது யார்? தமிழ்த்தலைமைகளை எமது தமிழ்மக்கள் நிறைய நம்பியிருந்தனர் ஆனால் அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள்.

கடந்த 10 வருடங்களாக தமிழ்த்தலைமைகள் எதைச்சாதித்தன? இந்த தமிழ்மக்களைத் தொடர்ந்து கஸ்ட்டத்தில் இருக்கச்செய்துள்ளனர். தற்போது கிழக்கில் மற்றுமொரு சமுகத்தின் ஆதிக்கத்தின்கீழ் திண்டாடவைத்துள்ளது. அவர்களுடன் ஈடுகொடுக்கமுடியுமா? இந்த நியாயமான கேள்விக்கு அவர்கள் விடைகூறுவார்களா? முடியாது நாம்தான் அதற்கு விடையிறுக்கவேண்டும்.

கிழக்கில் தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்தனர். இந்த கல்முனை எல்லைகளை அறிவோம். தற்போதுள்ள கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த முடியாத தமிழ்த்தலைமைகளை இன்னும் தொடர்ந்து நம்பலாமா?

நிதி, காணி அதிகாரத்திற்கு இன்னுமொருவரிடம் கையேந்த வேண்டிய நிலையிலுள்ள கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த தகுதியில்லாத தமிழ்த்தலைமைகள் தொடர்ந்து இருக்கட்டும் என்றுகூறி கண்ணை மூடிக்கொண்டு மௌனியாக இருப்பதா? அல்லது மாற்றுவழியைத் தேடுவதா? அதற்காகவே கிழக்கு தமிழர் ஒன்றியம் கிழக்குவாழ் தமிழ்மக்களை

கட்சி அரசியலுக்கு அப்பால் சாதிமத பேதமின்றி ஒன்றுதிரட்டி வருகிறது. அதற்காக இது வடக்கிற்கு எதிரானதோ, முஸ்லிம்களுக்கு எதிரானதோ அல்ல. வடக்கு கிழக்கு இணைந்த தாயகமே எமது இலக்கு ஆகும். கிழக்குவாழ் தமிழர்கள் ஒன்றுபடாவிட்டால் எதிர்காலம் சூனியமாகும். எந்தவித சாத்தியமான நலனையும் பெறமுடியாது சாதிக்கமுடியாது.

ஒற்றுமைப்பட்டு எமது இருப்பைக் காப்பாற்றுவது தொடர்பில் சிந்திக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு காலம் காலமாக வாக்களித்துவந்தோம். ஆனால் அவர்கள் சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கிறது. வாக்களியுங்கள் என்றுகூறி மக்களை தொடர்ந்து ஏமாற்றிவருகிறார்கள். இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கும் கதையைச் சொல்லப்போகிறார்கள்? தீர்வு வருகிறது என்று காலத்தைக்கடத்துகிறார்கள். அனைத்தும் கைநழுவிப் போனதும் சர்வதேசம் அதனைப்பார்த்துக்கொள்ளும் என்றுகூறி வாழாவிருப்பார்கள். தேர்தல்கள் காலத்தில் வந்து ஏமாற்றுகின்ற இந்தபோர்வழிகளை எமது காலடிக்குக் கொண்டு வரவேண்டுமானால் மக்கள் ஒன்றுபடவேண்டும், அவர்கள் இவ் ஒன்றியத்தை கவிழ்க்க சதிசெய்கிறார்கள்.

சர்வதேச நாடுகளின் கருணையை கட்டாயம் பெறவேண்டும். இந்திய இலங்கை ஒப்பந்தத மூலம் வடகிழக்கு மாகாணசபை வந்ததை நாமறிவோம். எனவே இலங்கையில் தமிழ்மக்களுக்கு ஏதாவது விமோசனம் என்றால் இந்தியாவின் தலையீடு இல்லாமல் ஒன்றுமே நடக்காது. இந்தியாவின் காலடியில்வீழ்ந்திருந்தால் தமிழ்மக்களுக்கான தீர்வு ஓரளவாவது எட்டப்பட்டிருக்கும். அதனைச்செய்தார்களா? இதுவரை அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சாதித்தவைகளை பகிரங்கமாகச் சொல்லட்டும். வடக்கு கிழக்கை ஒரே சமன்பாட்டில் பார்க்கமுடியாது. வடக்கின் நிலை வேறு வடக்கில் தேவையான அபிவிருத்தி வேலைகள் ஆரம்பித்துள்ளன. இன்னும் கோடிக்கணக்கில் கொட்டுகிறார்கள். அது தேவையானதே. அப்படியெனின் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கை அபிவிருத்தி செய்வது யார்? வடக்கில் போராட்டகாலத்திலும் மகேஸ்வரன் போன்ற அமைச்சர்கள் இருந்தார்கள். அபிவிருத்தி செய்தார்கள். ஆனால் கிழக்கில் அது முடிந்ததா? வடக்கை வெறுப்பதாகச் சொல்லவில்லை, யதார்த்தத்தைக்கூறுகின்றேன், எமக்கு பின்புலத்தில் யாரும் இல்லை. ரணிலுக்கு முட்டுக்கொடுத்த தமிழ்த் தலைமைகளால் கிழக்கிற்கு எதனைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது? அவர்கள் தமது சுயநலத்திற்கு எதையாவது பெற்றிருக்கலாம். ஆனால் தமிழ்மக்களுக்கு இவர்களால் எந்தப்பயனுமில்லை .

அரசியல் சாணக்கியம் என்கிறார்கள். அது உருவத்தில் வருவதுஇல்லை, மண்டையைப் பயன்படுத்தவேண்டும், சாணக்கியம் வார்த்தையில் அல்ல செயலில் வரவேண்டும், நாம் த.தே.கூட்டமைப்பிற்கு எதிரானவர்களல்ல, ஆனால் தொடர்ந்து ஏமாற்ற இடமளிக்கமுடியாது. இவர்களை தொடர்ந்து தலைவர்களாக ஏற்றுக்கொள்வதா அல்லது ஓரங்கட்டுவதா? என்பதை மக்கள்தான் தீர்மானிக்கவேண்டும். கிழக்கில் புதிய அரசியல் தலைமைகள் பாரமெடுக்கவேண்டும், காலாவதியாகிப்போன சுயநலஅரசியல் தலைமைகளைக் களையவேண்டும்.

யார் யார் தலைவர்களாக வரவேண்டும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்கவேண்டும்? அண்மையில் நான் மூதூர் வெருகல் பிரதேசத்திற்கு விஜயம்செய்தேன். மூதூரில் 22தமிழ் கிராமசேவையாளர் பிரிவுகளும் 19முஸ்லிம் கி.சே.பிரிவுகளுமுள்ளன. ஆனால் மூதூர் பிரதேசசெயலகத்தில் ஒரு தமிழர்கூட கடமையில் இல்லை.அனைவரும் மாற்றினத்தவர்களே.

அங்கு பூர்வீகமாக தமிழர்வாழ்ந்துவந்த காணியை ஒரு மாற்றினத்தவர் அபகரித்துள்ளார். அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கஉத்தியோகத்தர்கள் தொடக்கம் சம்பந்தர் வரை சென்றுள்ளனர்.அந்த மக்கள் பார்க்கிறேன் பார்க்கிறேன் என்றாராம் சம்பந்தர். ஆனால் ஒன்றுமே செய்யவில்லை.இன்னமும் பார்த்துக்கொண்டிருக்கிறார். மக்கள் இவற்றை நம்பாமல் பேராட்டத்திலீடுபட்டார்கள், விளைவாக இன்று அக்காணி மீண்டும் உரியதமிழரிடம் வந்துள்ளது, எனவே மக்கள் ஒன்றுபட்டால் சக்தி அதிகம், இந்த கையாலாகாத தலைமைகளை

விரட்டமுடியும், விரட்டியே ஆகவேண்டும், எனக்கு அரசியலில் ஈடுபடவேண்டிய தேவையே இல்லை, அரசியலுக்கு வரப்போவதுமில்லை.

எனவே கிழக்குத்தமிழர்கள் தீர்க்கமாகச் சிந்தித்துச்செயற்பட்டால் தமது இருப்பைத்தக்க வைத்துக் கொள்ளலாம் என்றார். கூட்டத்தில் கிழக்குதமிழர் ஒன்றியத்தின் செயலாளர் டாக்டர் கே.அருளாநந்தம் பொருளாளர் கே.மகேந்திரநாதன் உள்ளிட்ட பல முக்கியபிரமுகர்களும் கலந்துகொண்டனர். கல்முனைப் பிராந்தியத்தைச் சேர்ந்த பெரியநீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, நற்பிட்டிமுனை, மணற்சேனை, சேனைக்குடியிருப்பு, துரைவந்தியமேடு, ஆகிய கிராமங்களைச்சேர்ந்த பொது பிரமுகர்கள் கலந்துகொண்டார்கள், புதிய நிருவாகக்குழுவும் ,இதன்போது தெரிவானது.

## பற்றைக்காடாக மாறியுள்ள சந்தைக் கட்டடம்

**துறைநீலாவணை நிருபர்**



நாவிதன்வெளி பிரதேச சபை பராமரிப்புக்குட்பட்ட மத்தியமுகாம் சந்தை கவனிப்பாரற்று பாழடைந்த நிலையில் காணப்படுவதாக சமூக மட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மத்தியமுகாம் 06 ஆம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள இச்சந்தை புற்புதர்கள் சூழ்ந்து பற்றைகள் அடர்ந்த நிலையில் கால்நடைகளினதும் நுளம்புகளினதும் பாம்பு போன்ற விஷ ஜந்துக்களினதும் உறைவிடமாக மாறியுள்ளதென அருகிலுள்ள பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



இச் சுற்றுப்புறச்சூழல் பற்றைகளால் மண்டி கால்நடைகளின் எச்சங்கள் நிறைந்து டெங்கு நுளம்பு பெருகும் அபாய இடமாக மாறியுள்ளதனால் சந்தைக்கு அருகிலுள்ள கண்ணகி வித்தியாலய மாணவர்கள் நாளாந்தம் நுளம்புக்கடிக்கு ஆளாகுவதாக தெரியவருகிறது.

கடந்த பல வருடங்களாக செயற்பாடற்று பராமரிப்பின்றி காடுகளால் மண்டிக் காணப்படும் குறித்த சந்தையின் சுற்றுப்புறச் சூழல் இவ்வாறு இருந்தும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் அசமந்தப்போக்குடனே செயற்படுவதாக அருகிலுள்ள பிரதேச வாழ் பொதுமக்கள் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

முறையாக துப்பரவு மற்றும் புனரமைப்புச் செய்து தோட்டச்செய்கையாளர்களதும் பொது மக்களதும் தேவையறிந்து குறித்த சந்தையினை இயங்க வைக்குமாறு பிரதேச வாழ் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





பிரசித்திபெற்ற பெரியகல்லாறு சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆலய வண்ணக்கர் மூ.மன்மதராஜா மற்றும் பூஜை உபயகாரரான கோயிலார்குல மக்களின் அடப்பன் த.விமல் ஆகியோர் சகிதம் சிவஸ்ரீ பிரதீஸ்வர குருக்களால் 4 சாமப் பூஜைகளும் வெகு சிறப்பாகநடாத்தப்படுவதைபடுவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

படம்: பெரியகல்லாறு நிருபர்




## மூன்று கிளைகள் பரப்பி காய்த்திருக்கும் தென்னை



**பெரியகல்லாறு நிருபர்**

பெரியகல்லாறு உதயபரம் காளி கோயில் வீதியை அண்மித்துள்ள ஒருவரின் வீட்டில் மூன்றுகிளைகள் பரப்பி மூன்று கிளைளிலும் தேங்காய் இருப்பதை படங்களில் காணலாம். ஒருவித்திலை தாவரமான தென்னை 3 கிளைவிட்டிருப்பதை மாணவர்களும் ஆசிரியர்களும்ஆச்சரியத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

## இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள மூங்கிலாற்றுப் பாலம்

**துறைநீலாவணை நிருபர்**

போரதீவுப்பற்று பிரதேச செயலக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட இறாணமடு மூங்கிலாற்றுப் பாலத்தின் புனரமைப்பு பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாக சமூக மட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

போரதீவுப்பற்று, நாவிதன்வெளி ஆகிய பிரதேச செயலகத்தை இணைக்கும் மட்டு அம்பாறையின் எல்லையிலுள்ள இப்பாலம் 1956 ஆம் ஆண்டு கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பாலம் உடைந்து பல வருடங்களாகியும் கடந்த 2017 இல் முன்னெடுக்கப்பட்ட புனரமைப்பு பணிகள் இற்றைவரை பூர்த்தியாகாத நிலையிலுள்ளதனால் 200 மீற்றர் கடந்து செல்ல வேண்டிய தூரத்தை மழை வெள்ள காலங்களில்போது சுமார் 25 கிலோமீற்றர் மாற்றுப் பாதையால் சுற்றிச் சென்றே தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



பாலத்தின் கட்டுமான நிர்மானப் பணிகள் முடிவுறும் காலம் கடந்தும் இற்றை வரை நிறைவுறாத நிலையில் பயனாளிகளின் தேவை கருதி குறித்த பாலத்தின் புனரமைப்பு பணிகளை தூரித கதியில் முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்

## ஏ.ரீ.எம்.வசதிகளை ஏற்படுத்தக் கோரிக்கை

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலையிலுள்ள தோப்பூர் வங்கிக் கிளைகளில் ஏரீ.எம்.தன்னியக்கப் பணப்பரிமாற்றல் வசதிகள் இல்லையென இப்பகுதி வாழ் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தோப்பூரில் இலங்கை வங்கி மக்கள் வங்கி ஆகிய இரு வங்கிக் கிளைகள் நீண்டகாலமாக இயங்கிவருகின்றபோதும் இன்னும் இவ்விரு வங்கிகளிலும் ஏ.ரீ.எம், வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் இங்குள்ள வங்கி வாடிக்கையாளர்களும் பொதுமக்களும் பெரிதும் சிரமப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தோப்பூர் பகுதியில் சுமார் 21 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். மேலும் இங்கு சந்தை, வைத்திய சாலை பிரதேச சபை. உப யிரதேச செயலகம் உள்ளிட்ட தேவைகளுக்கும் மற்றும் இப்பகுதி வீதியூடாக லங்கா பட்டுன சேருவில விகாரை உள்ளிட்ட தூர இடங்களை பார்வையிடவரும் மக்களும் இரவு பகல் நேரங்களிலும் வங்கி நடவடிக்கைகள் நடைபெறாத தினங்களிலும் அவசர தேவைகளுக்கு வங்கி வாடிக்கையாளர்களான பொதுமக்கள் ஏ.ரீ.எம்.வசதிகள் இன்மையால் வங்கியிலிருந்து பணத்தை மீளப் பெறமுடியாது சிரமப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இங்குள்ள மக்கள் 500 ரூபா பணமொன்றை அவசரத்துக்கு வங்கியில் இருந்தே பெறவேண்டுமாகவிருந்தால் 200 ரூபாவுக்குமேல் போக்குவரத்துக்கு பணத்தை செலவிட்டு 15 கிலோமீற்றருக்கும் அப்பாலுள்ள மூதூர், சேருவில ஆகிய இடங்களுக்கு செல்லவேண்டிய அவல நிலை காணப்படுவதாகவும் இவர்கள் கூறுகின்றனர். ஏ.ரீ.எம்.வசதிகள் வரவிருப்பதாக நீண்ட காலமாக கூறப்படுகின்றபோதும் இன்னும் அது நடைபெற வில்லையென இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனை கருத்திற்கொண்டு ஏ.ரீ.எம்.வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு பொதுமக்கள் அதிகாரிகளை கேட்டுள்ளனர்.

## கணித பாட ஆசிரியர்கள் இல்லை; கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு!

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட மூதூர் கல்வி வலயத்திலுள்ள. தோப்பூர் அல் ஹம்றா மத்திய கல்லூரியில் கணித பாடத்தினை கற்பிப்பதற்கு கணித பாட ஆசிரியர்கள் இல்லையென பெற்றார்களும். மாணவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியானது 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 1 அஆ. தரப்பாடசாலையாகும்.

இங்கு 14 வகுப்புகளில் தரம் 6 முதல் தரம் 13 வரையில் 480 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

இப் பாடசாலையில் 3 கணித பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றபோதும் எந்தவொரு கணித பாட ஆசிரியர்களும் கணித பாடத்தினை கற்பிப்பதற்கு இங்கு இல்லையென விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்களின் நன்மை கருதி ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே கணித பாடத்தினை இங்கு கற்பிக்க வேண்டிய அவல நிலை நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது

இதனால் இங்கு க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த.உயர்தரத்தில் B - tech பிரிவிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் ஏனைய வகுப்பு மாணவர்களுக்கும் முழுமையான கணித பாட அறிவினை பெற்றுக்கொடுப்பதென்பது இங்கு

பெரும் சவாலாக மாறியுள்ளதென சமூக ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும் இப்பாடசாலையில் அண்மையில் கணித பாடத்திற்கென நியமிக்கப்பட்ட விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் கடந்த மாதம் தனது சொந்த இடத்திற்கு இட மாற்றம் பெற்று இணைப்பினை பெற்றுச்சென்றிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு குறித்த கணித ஆசிரியர் இணைப்பு பெற்றுச் சென்ற விடயமானது பாடசாலை அதிபரினது சம்மதத்துடன் இடம்பெறவில்லையெனவும் கூறப்படுகின்றது

இது விடயமாக கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம். மூதூர் வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றின் கவனத்திற்கு தெரியப்படுத்ததும் இப்பாடசாலையில் நிலவும் கணித பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடம் இதுவரை நிவர்த்திக்கப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே மாணவர்களின் நன்மை கருதி தோப்பூர் அல் ஹம்றா மத்திய கல்லூரியில் நிலவுகின்ற கணித பாட ஆசிரியர்களை நியமித்துத்தருமாறு பெற்றோர்களாலும் மாணவர்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பாடசாலையில் வெளி இடங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் இங்கு தங்கி கற்பிப்பதற்கான ஆசிரியர் விடுதிகள் இதுவரை நிர்மாணிக்கப்படவில்லையெனவும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும்

கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோர்கள் துரித கவனம் செலுத்தி இப் பாடசாலையில் நிலவும் வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தித்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.





**அல்-முபஸ்ஸிரா பாலர் பாடசாலை 2019ற்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அச்சங்கத்தின் பாலர் பாடசாலைத் தலைவர் ஹில்மி தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் சங்கத்தின் பிரதான ஆலோசகர்களான ஜே.எம்.மாஹீர் - அதிபர் மற்றும் மௌசூன் ஹாஜி அவர்களும் கலந்து கொண்டதோடு பிரதம மற்றும் விசேட விருந்தினர்களாக மூதூர் பிரதேச சிறுவர் நண்ணடத்தை அதிகாரிகள் கலந்து கொண்டதோடு பாலர் பாடசாலையின் பிள்ளைகள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.**

**படம்: மூதூர் நிருபர்**

## கிழக்குப்பல்கலைக்கழகத்தில் முதன்முதல் நடைபெற்ற தொழிற்சந்தை நிகழ்வு

இலங்கையின் பிரதான பிரச்சனையாக உருவெடுத்திருக்கும் இளைஞர்களின் வேலையின்மை இன்று எல்லாராலும் சிலாகிக்கப்படுகின்றது. நாட்டில் 4.2 விகிதத்தினர் வேலையில்லாமல் இருப்பதாகவும் அதிலும் இளைஞர்கள் 50 சதவிகிதமாக உள்ளதாகவும் தரவு சொல்லுகின்றது. இந்த பிரச்சினைக்கு பிரதான காரணமாக இளைஞர்களிடையே காணப்படும் குறைந்தளவான விழிப்புணர்வும், தனியார் மற்றும் அரச ஸ்தாபனங்களுக்கான குறைந்தளவான பங்குபற்றல், வேலை தேடுபவர்கள் மற்றும் வேலை கொடுப்பவர்களுக்கிடையேயான தொடர்பின்மை போன்றவை காணப்படுகின்றன.









இந்த சவால்களை முறியடிக்கும்வண்ணம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சில் அமைந்துள்ள இலங்கை தேசிய மனிதவளங்கள் அபிவிருத்திச்சபை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் யுவிஎல் இன் ஒத்துளைப்புடன் இப்பல்கலைக்கழகத்தில் முதலாவது மாபெரும் தொழிற்சந்தையும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கினையும் 28.02.2019 அன்று ஒழுங்கு செய்திருந்தது. இதில் சுமார் 2,000 பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டிருந்தனர். அங்கு 20 துறைசார் கம்பனிகளும் 18 கல்வி நிறுவனங்களும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுக்கு மனிதவலு மற்றும் தொழில் திணைக்களம், யூலீட், வெரண்டினா, அவுஸ்த்திரேலியா எயிட் நிறுவனம், மட்டக்களப்பு மாவட்ட விவசாய கைத்தொழில் வர்த்தக சம்மேளனம் ஆகியன ஒன்றிணைந்து இத்திட்டத்தினை சிறுப்புற நடாத்த அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு பல்கலைக்கழகத்தின் பிரதான மண்டபத்தில் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு காலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் தகைமைகள் அடங்கிய தரவுவேற்று மையம் பேராசிரியரும் இப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமாகிய எப்.சி.ராகல் மற்றும் சிரேஸ்ட்ட விரிவுரையாளரும் யுவிஎல் பணிப்பாளருமாகிய கலாநிதி ஏ.அன்ரு அவர்களினாலும் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதனை தொடந்து, அவர் உரையாற்றுகையில். இந்த நிகழ்வு இப்பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக் நடைபெறுவதையிட்டு இவற்றை ஒழுங்கு செய்த அனைவருக்கும் பல்கலைக்கழகம் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்.

இவற்றைத்தொடந்து இந்த நிகழ்வின் நோக்கம் பற்றி இந்நிகழ்வுக்கு பொறுப்பாக அமைச்சில் இருந்து வருகைதந்த உதவிப்பணிப்பாளர் சி.தணிகசீலன் அவர்கள் எடுத்துரைத்தார். அதனைத்தொடர்ந்து, விரிவுரையாளர் ச.சசிதரன் அவர்கள் மாணவர்களை வழிகாட்டும் வண்ணம் ஆற்றுப்படுத்தல் நிகழ்வினை தொடர்ந்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பிரதான தொழில் தருனர்கள் மற்றும் கல்வி சார் பிரதிநிதிகளின் சுருக்கமான தொழில் சந்தை நிலவர கலந்துரையாடலை மாணவர்களுக்கு தெரியப்படுத்தும் வண்ணம் சி.தணிகசீலன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இவை அனைத்தும் நிறைவுபெற்றதும், அமைச்சின் ஆய்வு உத்தியோகத்தரும் திட்டப் பொறுப்பாளருமான த.செந்தில்நாதன் அவர்களின் நன்றியுரையினைத் தொடர்ந்து அதிதிகள் தொழில் சந்தை திறப்பு விழாவினை மிகச்சிறப்பாக சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தனர். இதில் இப்;பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், கலாநிதி ஏ.அன்ரு, சிரேஸ்ட்ட விரிவுரையாளர் சு.ஜெயப்பிரபா, பதிவாளர், பல்கலைக்கழக பொருளாளர் இவர்களுடன் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சி.தணிகசீலன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.










# உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஓர் பகிரங்க மடல்

**மூதூர் ஏ ஜாசீர்**

உள்ளூராட்சி மன்றங்கள் எனப்படுவது ஓர் உள்ளக அரசாங்கமாகும். பாதீடுகளை தயாரித்து மக்களுக்கு சேவை செய்யும் மூன்றாவது அரசாங்கமாகவும் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் திகழ்கிறது. அத்துடன் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் தங்களுக்கு வரையறுத்துக்கொண்டுள்ள அதிகார எல்லையினுள் உள்ள வருமானங்களை திரட்டி அவற்றை நெறிப்படுத்தி மக்களுக்கு சேவை வழங்குவதே இவை ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து முற்றிலும் வேறுபடுவதற்கான முக்கிய காரணமாகும்.

இவற்றுக்கும் மேலாக உள்ளூராட்சி மன்றங்களாக அடையாளப்படுத்தும் பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபைகள் என்பன சட்டவாக்க அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டு செயற்படுவதானது ஒரு பிரதேசத்தின் அனைத்து துறைகளையும் மேம்படுத்தி அவற்றை நெறிப்படுத்தவும் பெரிதும் பங்களிக்கிறது. உள்ளூராட்சி எனும் பதம் ஓர் பாரிய விளக்க பகுதியினை கொண்டிருப்பினும் எனது தலைப்புக்கு ஒப்பாக உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளின் கடமை என்ன? அவர்களின் வினைத்திறன் மிக்க சேவைகளை எவ்வாறு அந்த சமூகத்திற்கு நல்கலாம் போன்ற முக்கியமான விடயங்கள் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும் என்று நினைக்கின்றேன்.

அந்தவகையில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் தனக்கென சில வருமான மூலங்களை கொண்டு காணப்படும். அவை அதிகமாக மக்களின் வரிப்பணமாகவே காணப்படும்.

இவ்வாறு மக்களின் வரிப்பணத்தின் ஊடாக ஈட்டப்படுகின்ற வருமானங்களை செலவிட இந்த உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் யாவரும் தேவை இல்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும் காரணம். மக்களின் வரிப்பணங்களை அறவிட்டு அவற்றை சரிவர அடையாளப்படுத்தப்பட்ட, அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் செலவு செய்ய அந்த உள்ளூராட்சி மன்றத்தில் ஒரு நேர்மையான செயலாளர் இருந்தால் மாத்திரம் போதுமானது.

அவர் நேரடி களவிஜயம் மூலமோ அல்லது பொது மக்களின் முறைப்பாடுகள் மூலமோ குறித்த பிரதேசங்களில் உள்ள குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்திக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இதனை விடுத்து சபையின் இயல்பான வருமானத்தை மக்களுக்கு சேவை வடிவில் பகிரவென இந்த மக்கள் பிரதிநிதிகளை கோடிகளை கொட்டி தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தேவைப்பாடும் இல்லை அத்துடன் அவர்களுக்கான சம்பளம், கிம்பளம், செய்கூலி சேதாரம் என அத்தனையையும் மக்களுக்கு சேவைகளாக கைமாறு செய்யவும் முடியும்.

அப்படியாயின் ஜனநாயகத்தின் விழுதுகளாக தெரிவுசெய்யப்படும் இந்த மக்கள் பிரதிநிதிகளின் கடமைகள் தான் என்ன? ஆம் அதைத்தான் அவர்களின் தலைவர்கள் தேர்தல் காலங்களில் மேடைகள் அதிர பேசித் தீர்த்து விட்டு சென்று விட்டார்கள். என்னவாம் நீங்கள் எங்களுக்கு வாக்களிக்காத பட்சத்தில் எங்களுடைய கட்சி சபையை கைப்பற்ற முடியாத சந்தர்ப்பம் ஏற்படும் அவ்வாறு நடக்கும் பட்சத்தில் எங்களால் மத்திய அரசின் திறைசேரியின் நிதியில் இருந்து கொண்டு வரப்படும் சேவைகளை செய்ய முடியாத சந்தர்ப்பம் ஏற்படும் என்றெல்லாம் பன்னீர் கொப்பளித்து சென்றதை நாமெல்லாம் நன்கறிவோம்.

ஆனாலும் இன்று பல உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் சபையின் நிதியில் இருந்து போடப்படுகின்ற தெருவிளக்குகளும், மழை காலங்களில் சபையின் பொறுப்பில் உள்ள JCB போன்ற வாகனங்களை கொண்டு வடிகான்களில் உள்ள தடுப்புகளை அகற்றுவதும் தான் தங்களது கடமைகளும் பொறுப்புக்களும் என்று நினைத்து செயற்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. ஆனாலும் சபையின் வருமானம் என்பது வரையறுக்கப்பட்ட மிக குறுகிய அளவிலே ஈட்டக்கூடியதாக இருப்பதால் சேவைகள் அளவில் அந்த சமூகம் பெரிதும் பின்னடைவு காண்பதை அவதானிக்க முடிகின்றது. ஆகவே அழுத்தங்களை பிரயோகித்து உங்களை சார்ந்த கட்சிகளிடம் இருந்து நிதிகளை கொண்டு வந்து மக்களிடம் கையளிப்பதுடன் சபையின் வருமானத்தை நிலையாக அதிகரிக்கும் முகமாக வருமான மூலங்களையும் அதிகரிக்க வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டியது அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் மக்கள் பிரதிநிதிகளின் தலையாய கடமையாகும்.

இவை மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் மயப்படுத்தப்பட்ட சேவை மற்றும் நிதி சார் பொருப்புக்களாக இருப்பினும் இவற்றை சாராத பல பொறுப்புக்கள் பலவும் இவர்களின் தலையில் சாட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் அதிகமானோர் இவற்றில் கரிசனை காட்டுவதில்லை என்பதே உண்மையாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளுக்கு ஒப்பீடாக ஒரு வசனம் பயன்படுத்தப்படுவதுண்டு உள்ளூராட்சி மன்றங்கள் எனப்படுவது கருவறை தொட்டு கல்லறை வரை சேவை வழங்கும் ஓர் நிறுவனமாகும் இது முற்றிலும் உண்மையுமாகும். அத்துடன் சமூகம் சார்ந்து எவ்வித நலன் பயக்கும் விடயங்களையும் உப சட்டவாக்கங்கள் ஊடாக இந்த உள்ளூராட்சி மன்றங்கள் கையகப்படுத்தவும் முடியும் என்பது இங்கு உள்ள பெரும் வரமாகவும் உள்ளது. இதனடிப்படையில் குறிப்பிட்ட ஓர் விடயத்தை தன்னிச்சையாக உருவாக்கி அதற்கான சபை தீர்மானத்தை எடுக்கும் பட்சத்தில் அது ஓர் பலம் மிக்க சட்டமாக கூட வாய்ப்புள்ளது.

மேலும்

1962/15 ஆம் இலக்க இடர் சட்டம்

1969/09 ஆம் இலக்க இடுகாடுகள் சட்டம்

1980/26 ஆம் இலக்க உணவுச் சட்டம்

1915/19 ஆம் இலக்க வீடமைப்பு சட்டம்

1893/09 ஆம் இலக்க ஆயக் கட்டளைச் சட்டம்

1861/10 ஆம் இலக்க பெருந்தெருக்கள் சட்டம்

இது போன்ற இன்னோரன்ன சமூக நலன்னோம்பும் பயன்தரு சட்டங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களூடாக மக்கள் பிரதிநிதிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இவற்றையும் கருத்திற் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் வினைத்திறன் மிக்க சேவைகளை மக்களுக்கு கையளிக்க முன்வர வேண்டும் என்பது பொதுமக்களின் சிற்றவாவாகும்.




## கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

**கரடித்தோட்ட நிருபர்**

காரைதீவு அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர அலங்கார உற்சவம் 12 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாவதை முன்னிட்டு முதன் நாளான திங்கட்கிழமை மாலை அனுஞ்ஞை வாஸ்து சாந்திக் கிரியைகள்இடம்பெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து 12 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை தினமும் காலை 10.00 மணிக்கு கும்ப பூஜையும் பகல் 12.00 மணிக்குவிசேட பூஜையும் மாலை 6.30 மணிக்கு இரவுப் பூஜைகள் ஆரம்பமாகி 7.00 மணிக்கு நற்சிந்தனையும் அதனைத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜையும் அம்பாள் உள்வீதி வெளிவீதி திருவுலா வருதலும் இடம்பெறும்.

18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலிருந்து பாற்குட பவனியும் 20 ஆம் திகதிபுதன்கிழமை அம்பாள் விநாயகர் முருகப்பெருமான் சகிதம் அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்புரத்தில் தேரோடும் வீதி வழியாக திருவுலாவருதலும் 21 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சமூர்த்திரத் தீர்த்தோற்சவமும் இடம்பெற்று அன்று மாலை அம்பாள் திருவூஞ்சலும் 22 ஆம்திகதி ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் வைரவர் பூஜையுடனும் உற்சவம் இனிதே நிறைவுபெறும்.

உற்சவ காலப் பூஜைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வரக் குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ சத்தியோஜாதன் ஐயா சகிதம்நடைபெறவுள்ளது.

## கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராக மீண்டும் மன்சூர் நியமிக்கப்பட்டுள்ளார்

**சின்னக் கிண்ணியா நிருபர்**

கல்விப்பணிப்பாளராக மீண்டும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாந்தர அதிகாரியான எம்.கே.எம். மன்சூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் வழங்கிய விசேட தீர்ப்பின் பிரகாரம் அவர் மீண்டும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக தான் ஏலவே பணியாற்றி வந்த நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக அவர் திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்நிலையில், ஒரு மாத காலத்தின் பின்னர் குறித்த வழக்கிற்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரோஹித போகொல்லாகம அவரது பதவி காலத்தின்போது மாகாண கல்விப் பணிப்பாளராக இருந்த எம்.ரீ.எம்.நிசாமை நீக்கிவிட்டு, எம்.கே.எம். மன்சூரினை கல்விப் பணிப்பாளராக நியமித்திருந்தார்.

4 மாதங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளராக மன்சூர் கடமையாற்றி வந்த வேளை கடந்த பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் மாகாண கல்விப்பணிப்பாளராக எம்.ரி.எ.நிசாம் புதிய ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தனது பதவி பறிக்கப்பட்டமை அநீதி என குறிப்பிட்டு கல்விப் பணிப்பாளர் மன்சூர் திருகோணமலை உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்த நிலையில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களை அமுல்படுத்தக்கூடாது என நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், ஆளுநர் ஹிஸ்புல்லாஹ், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் எதிர்வரும் 19 ஆம் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறும் உத்தரவிடப்பபட்டுள்ளது.

## கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையினால் பலவேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு



**கல்முனை நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் மலசலகூடம் இல்லாத வறிய குடும்பங்களுக்கு மலசலகூடங்களை நிர்மாணித்து சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த திட்டத்தினூடாக பொத்துவில் பிரதேசத்திலும் மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. பொத்துவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கான காசோலை வழங்கும் நிகழ்வு பொத்துவில் பிரதேச சபையில் தவிசாளர் எம்.எஸ்.அப்துல் வாசித் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சருமான எம்.எஸ்.சுபையிர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு காசோலையினை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளரும், பிரதேச சபை உறுப்பினருமான அப்துல் மஜீட், பிரதேச சபை உறுப்பினர் அன்வர் சதாத், வீடமைப்பு அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் எம்.பீ.எம்.அஷாட் ஆகியோர் கலந்துகொண்டனர்.



**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட பொருளாளருமான ஏ.சி.யஹியாகான் சாய்ந்தமருது தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு ஒரு தொகுதி மின் விசிறிகளை அன்பளிப்பு செய்துள்ளார். அவற்றை பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் அவர் கையளிப்பதை படத்தில் காணலாம்.**

**படம்: சாய்ந்தமருது நிருபர்**

## கல்முனை வட்டாரம் 15க்கான இளைஞர்கள் காங்கிரஸ் மத்தியகுழு தெரிவு

**எம்.என்.எம்.அப்ராஸ்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை வட்டாரம் 15க்கான இளைஞர்கள் காங்கிரஸ் மற்றும் செயற்குழுக்கூட்டம் கல்முனை அல் ஸுஹறா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் 15ம் வட்டார உறுப்பினரும் ஏ.எம்.ரோஷன் அக்தர் தலைமையில் நடைபெற்றது.இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சடடத்தரணி ஆரிப் சம்சுதீன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்காளான ஏ.சி. ஏ.சத்தார் , எம்.எஸ்.எம்.நிசார் (ஜே.பி) மற்றும் வட்டார முக்கிஸ்தகர்கள்,இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மெஸ்ரோ அமைப்பின் ஆளுமைக்கான இளைஞர்கள் தலைமைத்துவ செயலமர்வு

**மருதமுனை நிருபர்,**

மெஸ்ரோ அமைப்பின் ஏற்பாட்டில் 'வலிமையான சமூகத்திற்கு ஆளுமையான இளைஞர்கள்'எனும் தொனிப்பொருளில் சமூக மாற்றத்திற்கான தலைமைத்துவ செயலமர்வு சம்மாந்துறை தொகுதி இளைஞர்களுக்கு சம்மாந்துறை மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது.

இச்செயலமர்வில் சம்மாந்துறை, சென்றல் கேம், சவளக்கடை, கொலணி, இறக்காமம், வரிப்பெத்தான்சேனை, வாங்காமம், மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு பிரதேசங்களைச் சேர்ந்த பல இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்.



இந்நிகழ்வில் வளவாளர்களாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், கலாநிதி ஏ.எம்.பாசில், கலாநிதி ரவூப் செய்ன், உளவளத்துறை வைத்தியர் எம்.சறாப்டீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நாட்டின் முரண்பாட்டுச் சூழலில் இளைஞர்களின் வகிபாகம், போதையற்ற இளைய தலைமுறை எனும் பல்வேறு தலைப்புக்களில் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

## உள்நாட்டு யுத்தம் முடிந்த பிறகு தேசத்தைப் பற்றி சிந்திக்கின்ற ஒரு சிறந்த தலைவர் எங்களிடம் இல்லை

**சின்னக் கிண்ணியா நிருபர்**

**கியாஸ் ஷாபி**

உள்நாட்டு யுத்தம் முடிந்த பிறகு தேசத்தைப் பற்றி சிந்திக்கின்ற ஒரு சிறந்த தலைவர் எங்களிடம் இருந்திருப்பாரானால், சுதந்திரத்திற்கு முன்பிருந்த 'நாம் இலங்கையர்'என்ற சமூகத்தைப் மீண்டும் உருவாக்கியிருக்க முடியும். ஆனால் அந்த சந்தர்ப்பத்தையும் இழந்து விட்டோம் என ராவய பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் விக்டன் ஐவர் தெரிவித்தார்.

தேசத்தை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் மறுமலர்ச்சி இயக்கமும் ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான நிலையமும் இணைந்து கிண்ணியாவில் நடைபெற்ற சமூக ஆர்வலர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்தித்ததன் விளைவாகத்தான் இரத்தம் தோய்ந்த வரலாறு இந்த நாட்டில் 30 வருட காலமாக நீடித்தது. இன்று யுத்தம் இல்லாவிட்டாலும் இரத்தம் தோய்ந்த மிக ஆபத்தான ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம். தினம் தோறும் ஒரு வங்குரோத்து நிலையினை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் யாப்பு ஒன்று இந்த நாட்டில் இல்லாத நிலையொன்று தோன்றியிருக்கிறது. சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்த ஒரு அரசும் நிறைவேற்றத் தவறியுள்ளதால்தான் இந்த நாட்டில் அரசியல் யாப்பு ஒன்று இருக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த நாட்டில் அரசியல் யாப்பு ஒன்று இருந்திருக்குமானால், கண்டி திகன சம்பவம் நிகழ்ந்திருக்க முடியாது. பேருவெல அளுத்கம பிரதேசங்கள் தீயில் எரிந்திருக்க முடியாது. அம்பாறையில் அழிவு ஏற்பட்டிருக்க மாட்டாது. ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள்.

புலிகள் மற்றும் ஜே.பி.பி யின் போராட்டங்கள் எழுந்திருக்க முடியாது.

எனவே , நாட்டு மக்களைப் பாதுகாக்கின்ற அரசியல் யாப்பு இந்த தேசத்துக்கு தேவையாக இருக்கின்றது. அரசியல் தலைவர்களை பாதுகாக்கும் அரசியல் யாப்பு இந்த நாட்டுக்கு தேவையில்லை. அரசியல்வாவாதிகளால் அரசியல் யாப்பு உருவாக்கப்படக் கூடாது. மக்களுக்கு தேவையான அரசியல் யாப்பினை மக்களே உருவாக்க வேண்டும். இந்த நாட்டை எல்லோரும் சேர்ந்து பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. 18 வது திருத்தமோ 19 வது திருத்தமோ அரசியல்வாதிகள் வர்த்தகம் செய்யக் கூடாது என்று கூறவில்லை. இப்போது ஜே.வி.பி. கொண்டு வந்திருக்கின்ற 20 வது திருத்தில் கூட அரசியல் வாதிகள் வியாபாரம் செய்யக் கூடாது என்று ஏன் கூறவில்லை.

1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரச சொத்துக்களை கொள்ளையிடுவதென்பது அரசியல் வாதிகளின் இலச்சினையாக மாறிவருகின்றது. இன்று அரச காணிகளை எடுத்து அரசாங்கத்துடன் வர்த்தகம் செய்து தொழில் அதிபராக மாறிய பாராளமன்ற உறுப்பினர்களையே இப்போது இலங்கை அரசியலில் காணக் கூடியதாகவுள்ளது.

மொத்த தேசிய வருமானத்தில் பெரும் பகுதியினை அரசியல்வாதிகளும் செல்வந்தர்களுமே அனுபவிக்கின்றனர். இந்த நிலை வளர்ந்து கொண்டே செல்கின்றது. இதில் இருந்து தேசத்தை விடுவித்து பாதுகாப்பதற்கு பேதங்களுக்கு அப்பால் நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று தெரிவித்தார்.




## கட்டாக்காலி நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த நடவடிக்கை

**கிண்ணியா நிருபர்**

கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை தடுப்பதற்கு திருகோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் விசர்நாய் தடுப்பூசி மற்றும் கருத்தடை சிகிச்சைகள் செய்வதற்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் இணைந்து நகரசபையால் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக நகர சபை அறிவித்துள்ளது.

இவ்வேலைத்திட்டம் வட்டாரம் 02 இல் எதிர்வரும் மார்ச் மாதம் 12ம் 13ம் திகதிகளில் காலை 9.00மணி முதல் மாலை 4.00 மணி வரை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே அவ்வட்டாரத்தில் உள்ளவர்கள் தமது வளர்ப்பு நாய்களை அவ்விடத்திற்கு எடுத்து சென்று இச்சேவையை பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டம் மற்றைய

வட்டாரங்களுக்கும் நடாத்தப்படும் திகதி விரைவில் தரப்படும் எனவும் மேலும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக நகராட்சி மன்றம் தெரிவித்துள்ளது.

மூதூர் தள வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு மிக விரைவில் மூதூர் தள வைத்தியசாலை தரமுயர்த்தப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு.

மூதூர் தள வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு மிக விரைவில் மூதூர் தள வைத்தியசாலை தரமுயர்த்தப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு.

(ஆளுநர் ஊடகப்பிரிவு)

யுத்த சூழ்நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டு பல்வேறு அடிப்படை தேவைகளுடன் இயங்கும் திருகோணமலை மூதூர் வைத்தியசாலையின் அத்தியவசியத் தேவைகள் மிக விரைவில் தீர்க்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தலைமையிலான மாகாண சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர் நேற்று மாலை மூதூர் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு காணப்படும் பல்வேறு தேவைகள் குறித்து ஆராய்ந்ததுடன் அங்கு காணப்படும் நிலை குறித்தும் கண்டறிந்து கொண்டனர்.

இதில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார் உள்ளிட்ட அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் இதில் பங்கேற்றனர்.

## சிறந்த கல்வி சேவையை வழங்கிய காரணத்தினாலேயே உயர்ந்த பரிசை இறைவனிடம் பெற்றுள்ளார் குணாளினி



**கரடித்தோட்ட நிருபர்**

ஏழை மாணவர்களுக்கு மிகவும் சிறந்த கல்வி சேவையை வழங்கிய காரணத்தாலேயே இறைவன் மிக உயர்ந்த பரிசை பாலசுப்பிரமணியம் குணாளினிக்கு வழங்கியுள்ளார் என்று அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் எஸ். ரகுநாதன்தெரிவித்தார்.

அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் இரு வருடங்களுக்கு முன்னர் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவைக்கு இம்முறை தெரிவாகியுள்ள பாலசுப்பிரமணியம் குணாளினியை பாராட்டிக் கௌரவிக்கும்நிகழ்வு அட்டப்பள்ளம் நிநாயகர் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றபோது அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்

பாலசுப்பிரமணியம் குணாளினிக்கான முதலாவது ஆசிரியர் நியமனம் இங்குதான் கிடைத்திருந்தது. கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியான இவர் திறந்த போட்டி பரீட்சை மூலமாக இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது கல்முனை கல்வி வலயத்தில் அதிகஷ்ட பிரதேச பாடசாலையாகவுள்ள இங்கு பயில்கின்ற ஏழை மாணவர்களுக்கு ஆசிரியர் சேவையை நேர்த்தியாக செய்த காரணத்தாலேயே இறைவனின் ஆசிர்வாதத்தை பாலசுப்பிரமணியம்குணாளினி பெற்றுள்ளார். இவர் இதய சுத்தியுடன் விஞ்ஞான பாடத்தை திறம்பட கற்பித்து கொடுத்தார். இவருடைய காலத்தில் மாணவர்கள் விஞ்ஞான பாடத்தை விரும்பி கற்றனர் என்பதை பரீட்சைகளில் அவர்கள் பெற்ற அடைவு மட்டத்தின்மூலம் அறிய முடிந்தது. இவர் ஒரு வருட காலம் எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றியபோது இரு தினங்கள் மாத்திரமே விடுமுறை பெற்றிருக்கின்றார் என்பதையும் இவ்விடத்தில் சுட்டி காட்ட விரும்புகின்றேன். எனத் தெரிவித்தார்

பிரதி அதிபர் த. நடேசலிங்கம் உரையாற்றுகையில்

கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு மாத்திரம் அன்றி கற்கின்ற மாணவர்களுக்கும் முன்னுதாரணமாக பாலசுப்பிரமணியம் குணாளினி காணப்படுகின்றார். கற்பிப்பவராக மாத்திரம் அன்றி எப்போதும் கற்பவராகவும் சிறந்த ஆசிரியர் விளங்குவார்என்பதற்கு இவர் கண் கண்ட உதாரணமாக உள்ளார். இப்பாடசாலையின் அப்போதைய அதிபரான இராசையா அவரின் மாணவியான இவரை பகீரத பிரயத்தனங்களுக்கு மத்தியில் இப்பாடசாலைக்கு ஆசிரியராக கொண்டு வந்தார். இவர் இங்குதிறம்பட கற்பித்து வந்த நிலையில் இரசாயன பாட ஆசிரியராக பதவி உயர்வு பெற்று தேசிய பாடசாலையான சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு செல்ல நேர்ந்தது. குணாளினியின் பெற்றோர் விதி வசத்தால் சுகவீனமுற்றுஉள்ளபோதிலும் அவர்களையும் கவனித்து கொண்டு விடாமுயற்சி, தீவிர நம்பிக்கை ஆகியவற்றுடன் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையை எழுதி சித்தி அடைந்துள்ளார். இவர் சட்ட கல்வி மாணவியாகவும் படித்து கொண்டிருக்கின்றார்.இவரின் சகோதரி வைத்திய கலாநிதியாகவும், சகோதரன் நில அளவையியல் விஞ்ஞான பட்டதாரியாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் மேலும் உயர்வு பெற்று முன்னேற வாழ்த்துகிறேன் எனத் தெரிவித்தார்.

## மூதூர் தள வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு மிக விரைவில் தரமுயர்த்தப்படும்

யுத்த சூழ்நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டு பல்வேறு அடிப்படை தேவைகளுடன் இயங்கும் திருகோணமலை மூதூர் வைத்தியசாலையின் அத்தியவசியத் தேவைகள் மிக விரைவில் தீர்க்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தலைமையிலான மாகாண சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர் மூதூர் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு காணப்படும் பல்வேறு தேவைகள் குறித்து ஆராய்ந்ததுடன் அங்கு காணப்படும் நிலை குறித்தும் கண்டறிந்து கொண்டனர்.

இதில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார் உள்ளிட்ட அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் இதில் பங்கேற்றனர்.



## 20 கழகங்களுக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

**கிண்ணியா நிருபர்**

கிண்ணியாவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ரூபா பெறுமதியான சுமார் 20 கழகங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன .

10 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை ஆரம்ப கட்டமாக வழங்கி வைக்கப்பட்டன தொடர்ந்தும் அடுத்தடுத்த கட்டங்களில் ஏனைய கழகங்களுக்கும் வழங்கவுள்ளதாக பிரத்தியேகச் செயலாளர் இதன் போது தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனி, பிரதியமைச்சரின் இணைப்பாளர் ஈ.எல்.அனீஸ் போன்றோர்கள் உடனிருந்து வழங்கி வைத்தார்கள்.



துறை முகங்கள் மற்றும் கப்பற்றுரை பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா அவர்களினால் கிண்ணியா பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த உபகரணங்களை மீள்குடியேற்ற செயலணியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தலா 50000



## துரித கிராமிய வசந்தம்-2020 திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள 20 கோடி பெறுமதியான அபிவிருத்தி திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு



**மூதூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், கல்வி அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பிரும், திருகோணமலை மற்றும் மூதூர் தொகுதியின் ஐக்கிதேசிய கட்சியின் பிரதான அமைப்பாளருமான கௌரவ இம்றான் மகரூப் அவர்களினால் கெம்பரலிய வெலைத்திட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு கின்னியா பிரதேசத்தில் நடைபெற்றது இதில் கௌரவ நளீம், நகரசபை பிரதேச சபை உறுப்பினர்கள்,வேட்பாளர்கள், அஜ்மல் உட்பட ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் இந்நிகழ்வில் மாற்று கட்சி ஆதரவாளர்கள் பலர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்டமை குறுப்பிடத்தக்கது.

இன்றைய நிகழ்வில் பின்வரும் திட்டங்களுக்கான அடிக்கல் நடப்பட்டது.

1-ரஹ்மானியா கரையோர வீதி
2-அனிபா ஹாஜியார் வீதி -மாஞ்சோலைசேனை
3-பொலிஸ் நிலைய வீதி
4-மாஞ்சோலைசேனை மையவாடி குறுக்கு வீதி
5-தாமரைவில் அல்றவ்லா பாடசாலை வீதி
6-மகரூப் நகர் இரண்டாம் குறுக்கு வீதி
7-மதீனா நகர் இரண்டாம் குறுக்கு வீதி
8-நெடுந்தீவு மைதானம்
9-நெடுந்தீவு மையவாடி வீதி
10-சமாச்சதீவு பாடசாலை வீதி
11-சமாச்சதீவு மைதானம்

## தோப்பூரில் வீட்டுத் திட்டம் கையளிப்பு

**தோப்பூர் நிருபர்**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தோப்பூரில் ISRC நிறுவனமொன்றின் உதவியுடன் Qatar charity இன் நிதி உதவியுடன் தோப்பூரில் 22 வீடுகள் அமைக்கப்பட்டு வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் இவ் வமைப்பின் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் ஹாலித் ஹொதா. ISRC இன் பணிப்பாளர் மிஹ்லார். மூதூர் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.தானீஸ் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஏனைய முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.



## மூத்த எழுத்தாளர் மர்ஹும் மருதூர்க்கனி எழுதிய ஐந்து நூல்களின் அறிமுக விழா

**கலாபூஷணம்-பி.எம்.எம்.ஏ.காதர்-**

மருதமுனையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஹும் யூ.எம்.ஹனீபா மருதூர்க்கனி(லங்காதீப)எழுதி வெளியிட்ட ஐந்து நூல்களின் அறிமுக விழா அண்மையில்;(2019-02-24) மருதமுனை மருதூர்க்கனி நூலக கேட்போர் கூட மண்டபத்தில் எழுத்தாளர் மர்ஹும் வி.எம். இஸ்மாயில் மருதூர் கொத்தன் நினைவரங்கில் நடைபெற்றது.கவிஞர் மருதமுனை ஹஸன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவை மருதூர்க்கனி மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.இங்கு மண் பூனைகளும் எலி பிடிக்கும்,அந்த மழை நாட்களுக்காக,மருதூர்க்கனியின் கவிதைகள்,என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்,சந்தணம் பெட்டகமும் கிலாபத் கப்லும் ஆகிய ஐந்து நூல்களுமே அறிமுகம் செய்யப்பட்டது.

இங்கு பேராசிரியர் சி.மௌனகுரு சிறப்புரையாற்றினார்;;,பேராசிரியர் செ.யோகராசா,ஆய்வாளர் சிறாஜ் மசூர்,கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ், விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அகமட் ஆகியோரும் நூல்கள் பற்றி உரையாற்றினார்கள். மருதூர்க்கனியின் புதல்வி டொக்டர் வஜ்னா றபீக், மருமகன் சட்டத்தரணி இஸ்மாயில் பி.மாரிப் ஆகியோர் ஏற்புரையும், நன்றியுரையும் நிகழ்த்தினார்கள். மருதூர்க்கனியின் மனைவி காமிலா பேராசிரியர் சி.மௌனகுருவுக்கு நூல்களை வழங்கி கௌரவித்தார்.ஆசிரியரும், கவிஞருமான எம்.எம். விஜிலி நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இங்கு பேராசிரியர் றமீஸ் அப்துல்லா உரையாற்றுகையில்:-

ஒரு எழுத்தாளனுக்கு நாம் செய்கின்ற பெரும் கைங்கரியம் அவனுடைய எழுத்துக்களை மிள்;வாசிப்புச் செய்வதாகும்.மருதூர்க்கனியின் நூலை வாசிக்கின்ற பொழுது அவர் எம்முள்; உள்நுழைந்து அவரின் நூலைப் போன்று இன்னும் ஒரு நூலை உருவாக்கக்கூடிய ஆர்வத்தினை எங்களுக்கு ஏற்படுத்திவிட்டார்.அதுதான் ஒரு கவிஞனுடைய முக்கியமான வெற்றி என்று நான் கருதுகின்றேன.;

மருதூர்க்கனி மருதமுனையின் முக்கியமான அடையாளம்.மருதூர்க்கனி ஆரம்பத்திலே ஒரு இடதுசாரியகவும்,எழுத்தாளராகவும், ,கவிஞனாகவும்,அரசியல் செயற்பாட்டாளராகவும் நம்மத்தியில் வலம் வந்தவர். பிற்காலத்திலே நம் எல்லோருக்கும் சகஜமாகன ஒரு அரசியல் வாதியாக அடையாளப்படுத்தப்பட்டார்.முஸ்லிம் அரசியலின் மூத்த போராளிகளில் ஒருவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மூத்த துணைத் தலைவராக அடையாளப்படுத்தப்பட்டார்.

முஸ்லிம் அரசியலின் எதிர்வினைகளையும்,ஆதரவினையையும் திரட்டிக் கொடுப்பதிலே மிக முக்கிய பங்காற்றிய ஒரு புனலாக மருதூர்க்கனி திகழ்ந்திருக்கின்றார்.ஒரு நல்ல எழுத்தாளனை நாங்கள் பார்கிறபொழுது அவனுடைய நூலின் எல்லாப் பகுதிகளும் முக்கியமாக இருக்கும்; அந்தப் பண்பு மருதூர்க்கனியினுடைய நூல்களில் இருக்கிறது.எங்களிடம் சில பலவீனம் இருக்கிறது நாங்கள் சிலதை வாசிப்பதில்லை ஆனால் மருதூர்கனியை வாசிக்கிறபோது நிறைய விடையங்களை அறியக்கூடியதாக இருக்கிறது.

மருதூர்க்கனியின் அந்த மழை நாட்களுக்காக என்ற நூலை வாசிப்பதன் மூலம் வெளிவருகிற மிக முக்கியமான விஷயம் அவர் கவிதை எழுதியிருக்கிறார் என்பதை விட பல ஆவணங்களின் பெட்டகமாக இந்த நூல் அமைந்திருக்கிறது.பல செய்திகளை இந்த நூல்களுக்குள்ளே அவர் கொண்டு வந்திருக்கின்றார்.தாயை அவர் வரணித்து தாய்க்காக கவிதை எழுதினார் என்பதை விட தாயின் பல்வேறு உரையாடல்கள் ஊடாக இந்த சமூத்தினுடைய விமர்சனத்தை செய்ய அவர் முற்பட்டிருக்கின்றார்.



இன நல்லுறவு என்பது எழுத்தாளர்களால்தான் உருவாக்கப்பட வேண்டும்;. அந்தக் காலத்திலே அதுதான் நடந்திருக்கின்றது.ஈழத்து தமிழ் கவிதைப் பரப்பிலே அதிகமான உவமைகளை அல்லது படிமங்களை உருவாக்குவதில் முஸ்லிம் கவிஞர்கள் முக்கிய இடத்திலே இருக்கிறார்கள் என்பது எனது அபிப்பிராயமாகும் இதை ஒரு ஆய்வாக யாரும் செய்து பார்க்கலாம். மருதூர்க்கனியின்; கவிதையைப்பார்த்து நீலாவணன் விழித்துப் போகின்றார்.

பால் போல் நிலா வெளியில் நெய்ப் பானை கவிழ்ந்தது போல் ஒளிவெள்ளம் என்ற வரிகளைப் படித்துவிட்டு இந்த வரிகளை நீதானா எழுதியனாய் என்று ஆச்சரியப்பட்டு நீ கவிஞன்தான் என்று அங்கீகாரம் வழங்கி மருதூர்க்கனியின் தோழிலே தட்டி அவரை கவிஉலகுக்குக் கொண்டு வந்திருக்கின்றார் நீலாவணன்.இதுதான் இன உறவின் முக்கிய அடையாளமாகும். இவ்வாறாக தமிழ்,முஸ்லிம் இன நல்லுறவையும்.ஒற்றுமையையும் இலக்கியத்தின் ஊடாக கட்டியெழுப்ப தமிழ்,முஸ்லிம் எழுத்தாளர்கள் முன்வரவேண்டும்.பன்முக ஆளுமையின் திரட்சிதான் மருதூர்க்கனி அவர் இன ஒற்றுமையின் பிரதிபலிப்பை சமூகத்தில் கொண்டு வரப்பாடுபட்டவர்.இன்றைய சூழலுக்கு மருதூர்க்கனி போன்ற சிந்தனையாளர் நமக்குத் தேவைப்படுகின்றார் எனத் தெரிவித்தார்.

## பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் மகளிர் தின விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணத்தில் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் பெண்களே அணிதிரள்வீர் என்ற அறைகூவலுடன் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு, சமூக மேம்பாட்டுக் கழகம், சமூக மேம்பாட்டு இணையம் ஆகிய பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின விசேட பொதுக்கூட்டம் 10.03.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் யாழ் மாவட்டத்திற்கான தலைவர் திருமதி சிவாஜினி சுரேஸ்குமார் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையினை சமூக, அரசியல் செயற்பாட்டாளர் திருமதி வசந்திரா தேவி கதிர்காமநாதன் அவர்களும், விசேட உரைகளை சர்வதேச ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான செல்வி துளசி முத்துலிங்கம் அவர்களும், தொழிற்சங்க செயற்பாட்டாளர் திருமதி தீபா ஸ்ரீதரன் அவர்களும், வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் சசி நந்தினி தேவன் அவர்களும், ஆசிரியை திருமதி உமாதேவி பார்த்தீபன் அவர்களும் ஆற்றவுள்ளனர்.

இவ் விசேட உரைகளைத் தொடர்ந்து கருத்துரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அனைவரையும் இம் மகளிர் தின விசேட பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் அடங்கிய குழுவினர் கிளிநொச்சி, முகமாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்

நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் அடங்கிய குழுவினர் கிளிநொச்சி முகமாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். குறித்த குழுவினர் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றம் செயற்பாடுகளை பார்வையிட்டதுடன், தொடர்ந்து குறித்த செயற்பாட்டினை முன்னெடுக்கும் நிறுவனத்தில் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.



நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் குறித்த விஜயம் முக்கியம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

குறித்த விஜயத்தின்போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த தூதுவர், இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக நோர்வே அரசாங்கம் இலங்கைக்கு 3 ஆண்டுகளிற்கு உதவ உள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பில் பிரதமரிற்கு நோர்வே அரசு வாக்குறுதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார். குறித்த பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றி முடிப்பதற்கு முயல்வதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். மிகவும் பயங்கரமான வெடிபொருட்கள் அப்பகுதியில் காணப்படுவதாகவும், அவர் தன்போது தெரிவித்தார். குறித்த 3 ஆண்டு காலப்பகுதிக்குள் கண்ணிவெடிகளை அகற்றி முடிப்பது தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## வடக்கு தந்தி

## கம்பெரலிய திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பில் முறைகேடுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் கம்பெரலிய திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி புனரமைப்பில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளது என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். குறித்த வீதி புனரமைப்பு பணிகள் தொடர்பில் மாவட்ட மட்ட உயரதிகாரிகளை கவனம் செலுத்துமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

மேற்படி இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களில் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் மாவட்டத்தில் சில வீதிகள் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளப்படுகின்றன. இந்தப் பணிகளின் தொழிநுட்ப மேற்பார்வை அந்தந்த பிரதேச சபைகள். ஆனால் இங்கு முறையான தொழிநுட்ப மேற்பார்வையோ, அல்லது ஒப்பந்தத்தின் குறிப்பிடப்பட்ட



நியமங்களுக்கு அமைவாகவோ பணிகள் மேற்கொள்ளப்படாது தரமற்ற அபிவிருத்திப் பணிகளை ஒப்பந்தகாரர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இதனை மேற்பார்வை செய்கின்றவர்களும் அதனை கவனத்தில் எடுக்காது செயற்படுகின்றனர் எனத் தெரிவிக்கும் பொது மக்கள் குறித்த வீதி அபிவிருத்திப் பணிகளின் தரம் தொடர்பில் முறையான தொழிநுட்ப மேற்பார்வை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு மாவட்ட உயரதிகாரிகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

# அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராக பெண்களை அணிதிரளுமாறு சிந்தனை அமைப்பு அறைகூவல்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டுப் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆண்டுதோறும் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாக முன்னெடுக்கப்படுகின்றது. 1975 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை இந்த தினத்தை சர்வதேச பெண்கள் தினமாக அறிவித்திருந்தபோதும், வரலாற்றில் இந்நாள் 1917 ஆம் ஆண்டு சுமார் இரண்டு லட்சம் ரஷ்யப் பெண்கள் ஜார் மன்னரின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த நிகழ்வை நினைவுகூரும் நாளாகும். ஜார் ஆட்சிக் காலத்தில், முதலாம் உலகப்போரின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான ரஷ்ய ஆண்கள் மடிந்தனர்;, காணாமல் ஆக்கப்பட்டனர்;. பஞ்சம் தலைவிரித்தாடியது. தமது கணவன்மாரைப் போருக்குப் பலிகொடுத்துவிட்டு, குழந்தைகள் பசியில் வாடுவதைப் பொறுக்க முடியாத பெண்கள் ரொட்டிக்காகவும், போருக்கு எதிராகவும் என்ற தொனிப் பொருளை மையமாகக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் பெண்கள் எழுச்சியின் தொடர்ச்சியாகவே மாபெரும் ரஷ்ய அக்டோபர் புரட்சி ஏற்பட்டது. அதற்கு நன்றி கூறும் விதமாக, லெனின் தலைமையிலான சோவியத் அரசு மார்ச் 8 ஆம் திகதியை மகளிர் தினமாக அறிவித்து ரஷ்யப் பெண்களை கௌரவித்தது.

இன்று பெண்கள் அனுபவிக்கும் மகப்பேற்று விடுமுறை, பாலூட்டும் தாய்மாருக்கான நேரச்சலுகை உட்படப் பல்வேறு உரிமைகள் ரஷ்ய சோஷலிசப் புரட்சி எமக்குப் பெற்றுத் தந்த உரிமைகளாகும். ஆனாலும், தமது பல்வேறு உரிமைகளுக்காக உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடுகளிலும் பெண்கள் இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது நாட் சம்பளம் ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அதேபோல், யுத்தத்தில் காணமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத் தரும்படி வடக்கு கிழக்கில் பெண்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர்;.

அத்துடன், தமது பூர்வீக வாழ்விடங்களை மீட்டுத் தரும்படி கேப்பாபிலவு, சிலாவத்துறை மக்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர்;. புத்தளம் பிரதேசத்தில் கொழும்பு, வெளிநாட்டு திண்மக் கழிவுகளை கொட்டும் திட்டத்திற்கு எதிராக மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர்;. இந்த எல்லா போராட்டங்களிலும் சளைக்காமல் ஓர்மத்துடன் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பது பெண்களே.

10 இலிருந்து 50 வயதுக்கு இடைப்பட்ட பெண்களையும் ஐயப்பன் கோயில் தரிசனத்திற்காக அனுமதிக்க வேண்டும் என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும் கூட, வழிபாட்டுக்கு சென்ற பெண்களை பிற்போக்கு ஆணாதிக்க மதவாத சக்திகள் தடுத்ததுடன், அவர்களுக்கு எதிராகத் தாக்குதலும் நடத்தினர். இதற்கெதிராக, தமது வழிபாட்டு உரிமைக்காக, சுமார் 5 லட்சம் கேரள பெண்கள் திரண்டெழுந்து மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தி தமது உரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்விலிருந்து புலனாவது என்ன? சட்டங்களாகக் காகிதங்களில் இருக்கும் பெண்களின் உரிமைகள் நடைமுறைக்கு வர வேண்டுமானால் கூட பெண்கள் போராட வேண்டியிருக்கிறது. பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக பல்வேறு சட்டங்கள் வெறும் காகிதங்களில் மட்டுமே இருக்கின்றன. பல்கலைக்கழக விரிவுரையாளரான போதநாயகி, ஹட்டன் தனியார் வைத்தியசாலை தாதி சாந்தினி உட்படப் பல பெண்கள் குடும்பத்தில், வேலையிடத்தில் நிகழும் வன்முறைகள், அத்துமீறல்களால் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். குடும்ப உறுப்பினர்களால் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் பல முறைப்பாடாகக் கூடப் பதிவாவதில்லை.

வருமானத்திற்கான உழைப்பிலும் குடும்பத்திற்கான உழைப்பிலுமாக பெண்கள் இரட்டைச் சுமைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதுபற்றி முதலாளித்துவ சட்டங்கள் கண்டுகொள்வதில்லை. அதைப்பற்றிப் பேசினால், முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இருப்பிற்கு அச்சுறுத்தலாகும் என்பதால், பெண்விடுதலை என்பதாக மேட்டுக்குடிப் பெண்களின் பார்வையில், அவர்களின் கோரிக்கைகளை மட்டும் முன்னிறுத்தி, உழைக்கும் பெண்களின் கோரிக்கைகளைப் புறந்தள்ளிவிடுகின்றனர்.

உண்மையில் உழைக்கும் பெண்களின் விடுதலை சமூக விடுதலையுடன் இணைந்திருந்திருக்கிறது. உழைக்காத பெண்கள் என எவருமே இல்லை. சில பெண்களிற்கு உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கிறது. அவர்களின் உழைப்பிற்குப் பணப் பெறுமதி இருக்கிறது. பணப்பெறுமதியற்ற குடும்ப உழைப்பில் பெண்களின் ஆயுளும் ஆரோக்கியமும் தேய்ந்து மடிந்து போவதை எவரும் கண்டுகொள்வதில்லை.

1990 களில் வெனிசூலா நாட்டின் இல்லத்தரசிகள், தமது குடும்ப உழைப்பையும் சமூக உழைப்பாக கருதித் தமக்கும் ஒய்வூதியம் வழங்க வேண்டும், என்ற கோரிக்கையுடன் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டனர்.

குடும்ப உழைப்பில் 8 மணி நேரம் என்ற நேர வரையறை இல்லை. காலை கண்விழித்ததிலிருந்து உறங்கச் செல்லும் வரை ஓய்வற்ற உழைப்பில் பெண்கள் சலிப்பின்றி உழைப்பது பற்றி எந்தக் கவலையும் யாருக்கும் இல்லை.

பெண்கள் பல பணியிடங்களில் ஆண்களுக்கு நிகரான சம்பளம் வழங்கப்படாமல் சுரண்டப்படுகின்றனர். பாலியல் வசவுகள், பாலியல் அத்துமீறல்கள் எனப் பணியிடங்களில் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் குரல் உயர்த்துபவர்கள் தனிப்பட்ட பழிவாங்கல்கள் மூலம் அச்சுறுத்தப்படுகின்றனர். அதற்குப் பயந்து பல்வேறு வன்முறைகள் வெளித்தெரியாமல் அமுக்கி வைக்கப்படுகின்றன.

இலங்கையில் யுத்தத்தின் காரணமாகச் சுமார் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் தலைமையேற்ற குடும்பங்கள் உருவாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இத்தகைய தலைமை தாங்கும் பெண்கள் நிரந்தர வேலை இன்மை, வறுமை காரணமாகப் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நுண்கடன் நிறுவனங்கள் பெண்களை மேலும் சுரண்டுகின்றனர். நுண்கடன் நிறுவனங்களின் அத்துமீறல்களால் பல பெண்கள் தற்கொலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

உழைக்கும் பெண்களே...!

உலகெங்கிலுமுள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குச் சட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட தீர்வுகள் சொற்பமே. இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுகள் யாவும் பெண்களின் ஓர்மமான, விடாப்பிடியான போராட்டங்களின் மூலமே பெற்றுக்கொள்ளப்பட்டன.

பெண்கள் அமைப்பாவதும், அவ் அமைப்புக்குள் தமது அனுபவங்களை, துன்பங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் தீர்வுகளை தேட முயற்சிப்பதுமே எமக்கான விடுதலைக்கான திறவுகோலாகும். நீங்கள் நடக்கத் தொடங்கும் வரை, உங்கள் கால்கள்

சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பது உங்களுக்கே தெரியாது. என்ற ரோசா லக்சம்பர்க் கூற்றின் படி, எமது விடுதலைக்காக எமது கால்கள் நகரும் போதுதான், எம்மைப் பிணைத்துள்ள அடிமைச் சஙகிலிகளை நாம் உணரத் தொடங்குவோம். அவ்வாறு உணரத் தொடங்கும் போது, எம்மைச் சரியான திசையில் வழிநடத்த, அமைப்பாக அணி திரள்வது தான் பெண்களின் இன்றைய அடிப்படைத் தேவையாகும். பெண்களை அடக்குமுறைகளுக்குள் கட்டுப்பட்டு நிற்கும், தனித்தனித் தீவுகளாக வைத்திருக்கும் வரை நமக்கு விடுதலை என்பது எட்டாக் கனியே.

திருமணமானபின் தமது உணர்வுகளை வெளிப்படையாகப் பகிர்ந்துகொள்ளக்கூட தோழிகளின்றி, மனவுளைச்சலுக்கு ஆளாகியிருக்கும் பெண்கள் அநேகர். வெளிப்படையாகப் பேசிக்கொள்ள யாருமின்றி இருப்பது துன்பம். இதைக் களையப் பெண்கள் முன்வர வேண்டும். தம்மை அமைப்பாக்கிக் கொண்டு, தமக்கு எதிரான குடும்ப, சமூக, அரச வன்முறைகளை இனங்கண்டு களைய, போராட அணிதிரளவேண்டும்.

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பானது பெண்கள் மீதான அனைத்து வன்முறைகளுக்கும் எதிராக அமைப்பாக்கம் பெற்றுப் போராட உங்களை அழைக்கிறது. சும்மா கிடைக்க சுதந்திரம் என்பது சுக்கா மிளகா கிளியே என்ற பாரதிதாசனின் கேள்விக் கேற்ப எமக்கான விடுதலையை நாம் சும்மா பெற்றுவிட முடியாது. இதுவரை பெறப்பட்ட அனைத்து உரிமைகளும் யாரோ போராடி எமக்கு வாங்கித் தந்தவைகளே. எமக்கும் எமது அடுத்த சந்ததிக்குமாக விடுதலைக்கான போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும்.

அமைப்பாக்கம் பெற்ற போராட்டங்களை முன்னெடுப்போம்! விடுதலைக்கான கதவுகளைத் திறப்போம்! எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கலாச்சார பாரம்பரியங்கள் நாடக ஆற்றுகைகள் எமது மண்ணில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்



வலிவடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள ஆரோகண அரங்க கல்லூரியின் 3 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆற்றுகை நிகழ்வுகள் ஆரோகண அரங்க முன்றலில் கடந்த வாரம் இடம்பெற்றிருந்தது.

ஆரோகண அரங்க கல்லூரி இயக்குனர் து.அயூரன் தலைமையில் இடம்பெற்றிருந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றிய தலைவர், முன்னாள் விவசாய பிரதி அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள் பிரதம அதிதியாக இணைந்திருந்தார்

கலாச்சார பாரம்பரியங்கள் நாடக ஆற்றுகைகள் எமது மண்ணில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். என ஆரோகண அரங்க நிகழ்வில் உரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள் நிகழ்வில் உரையாற்றும் பொழுது குறிப்பிட்டிருந்தார்.

வேகமாக நகரும் உலகில் மக்களின் நாடி துடிப்பை கண் முன்னே மெருகேற்றுவது அற்புதமானது. எமது கலைஞர்களின் திறமைகளும் பாராட்டப்பட வேண்டியது. கூடவே அவர்களுக்கான களங்களை ஏற்படுத்தி எமது பழைய மரபு ரீதியான வெளிப்படுத்தும் பண்புகளை பாதுகாப்பதோடு, கிராம மட்டத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளுக்காக இயக்குனர்களினதும்,கலைஞர்களினதும் எண்ணக்கருக்கள் மக்கள் மத்தியில் சிறந்த மாற்ற பிரதிபலிப்பை ஏற்படுத்த வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

சிறப்பு விருந்தினராக மகாஜன கல்லூரி அதிபர் திரு.ம.மணிசேகரம்,செயல்திறன் அரங்க இயக்க இயக்குனர் தேவானந்,கௌரவ விருந்தினராக நில அளவையாளர் நாடக ஆர்வலருமான திரு.சி.மகாலிங்கம் ,ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் யாழ் மாவட்ட தலைவரும் வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினருமான பொன்னம்பலம் ஆதவன்,மற்றும் 500 க்கும் மேற்பட்ட பிரதேச மக்கள் ஆகியோர் நிகழ்வில் ஒன்றினைந்திருந்தனர்.

சிரேஷ்ட நாடக கலைஞர்களை கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள் கௌரவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



**கிளிநொச்சி மாவட்டத்தில் ஆராதி நகரில் 12 வீடுகளும், சஞ்சிவ நகரில் 20 வீடுகளும் யுத்தத்தினால் பதிக்கப்பட்டவர்களுக்காக கிளிநொச்சி மவாட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அடிப்படை வசதிகள் நீர், மின்சாரம் உள்ளக பாதைகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவ் வீடமைப்புத திட்டங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எஸ்.பலன்சூரிய அங்கு விஜயம் செய்து நிர்மாணப்பணிகளை பார்வையிட்டார். அத்துடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நீர்தாங்கிகளும் கையளிக்கப்பட்டன.**

**படம்: அஷ்ரப் ஏ சமத்**




## வெடிபொருட்கள் அகற்றப்படவில்லை; மக்கள் அச்சம்!



கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன் கோயிலடி கிராமத்தில் வீதி புனரமைப்பின் போது அடையாளம் காணப்பட்ட வெடி பொருட்கள் இதுவரை அகற்றப்படாமல் இருப்பதனால் அச்ச நிலைமை காணப்படுவதாக பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன் கோயில் அடி கிராமத்திலிருந்து வடடக்கச்சி வரை செல்லுகின்ற பிரதான வீதி தற்காலிகமாக புனரமைப்பு செய்யப்பட்டது இதன் போது ஐயன் கோயிலடிக்கு அண்மித்த பகுதியில் புனரமைப்பு பணியின்போது நிலத்தில் புதையுண்ட நிலையில் இரண்டு நிலக்கண்ணிவெடிகள் காணப்பட்டுள்ளன .

குறித்தவெடி பொருட்கள் அப்பகுதியில் பணியில் ஈடுபட்டவர்களால் பாதுகாப்பற்ற ஓரிடத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் குறித்த பிரதேசத்தில் இளைஞர்கள் சிறுவர்கள் என பலர் பல்வேறு தேவைகளையும் விவசாய தேவை கருதியும் இந்தவீதியூடாக சென்று வருவதனால் மேற்படி வெடிபொருள் இருப்பது எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெடி பொருள் இருப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நீண்ட நாட்கள் ஆகியும் இதுவரை அந்த வெடிபொருட்களை அகற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்ட பிரதேச மக்கள் இதனை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மதவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்

### சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அறிக்கை

கடந்த வாரம் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மாதவாத மக்கள் விரோத செயற்பாடுகள் இடம்பெறுவது அதிகரித்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது என அண்மைய மத வன்முறைகள் தொடர்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவ்வமைப்பின் தலைவர் க.ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச. தனுஜன், அ. சீவரத்தினம் ஆகியோரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், ஏற்கனவே, ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் திட்டமிட்ட வகையில் பௌத்த மதத்தவர்கள் எவரும் வசிக்காத பகுதிகளிலும், ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்கு உள்ளேயும் புத்தர் சிலைகளைக் கொண்டுவந்து வைக்கின்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அதேநேரம், சில இடங்களில் புத்தர் சிலைகளைச் சேதப்படுத்தும் செயற்பாடுகளும் அரங்கேற்றப்படுகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக, சைவ சமயத்தவர்களால் புனித நாளாகக் கொண்டாடப்படும் சிவராத்திரி தினம் நெருங்கும் வேளையில், மிகவும் புகழ்பெற்ற திருத்தலங்களாக அனைத்து மதத்தவர்காளலும் அடையாளப்படுத்தப்படும் திருகோணமலை திருக்கோணேச்சரம், மன்னார் திருக்கேதீச்சரம் ஆகிய ஆலயங்களுக்கு அண்மையில் வைக்கப்பட்டிருந்த சிவலிங்கம் மற்றும் வரவேற்பு வளைவு ஆகியன விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளமை வன்மையான கண்டனத்திற்குரிய செயல்களாகும்.

அதேநேரம், சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் வீதியோரமாக இனந்தெரியாத நபர்களால் உயரமாக மண் குவிக்கப்பட்டு, நான்கு அடிவரை உயரமான சிவலிங்கம் ஒன்று கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளது. இது போன்றதொரு செயற்பாடு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் பொன்னாலைப் பகுதியிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அரச காணிகளையும் தனியார் காணிகளையும் அனுமதிகள் எதுவுமின்றிச் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து இரவோடு இரவாக இடம்பெறுகின்ற இத்தகைய மதவாத முன்னெடுப்புகளும் கண்டிக்கப்பட வேண்டியவையே.

இத்தகைய செயற்பாடுகளை திட்டமிட்ட வகையில், தொடர்ச்சியாக மேற்கொள்வதனூடாக, மதவாதத்தைத் தூண்டி, மக்களைப் பிரித்தாள நினைக்கின்ற சமூக விரோத சக்திகளை மக்கள் இனங்கண்டு நிராகரிப்பதோடு, அவர்களுக்கு எடுபிடிகளாகச் செயற்படுவோரை எதிர்த்து நின்று விரட்டியடிக்கவும் வேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக்கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடிநீர் தேவையை தீர்த்து வைக்க முடியாத புதுக்குடியிருப்பு பிரதேச சபை

புதுக்குடியிருப்பு பிரதேச சபை பிரிவிற்கு உட்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள செல்வபுரம் மக்களிற்கான குடிநீர் திட்டத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாத பிரதேச சபைக்கா நாம் வாக்களித்தோம் என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த மக்களின் குடிநீர் தேவைக்காக பல லட்சம் ரூபா செலவில் நீர் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறித்த திட்டம் முழுமை பெறாமை தொடர்பில் ஏற்னவே மக்கள் கவலை தெரிவித்திருந்தனர்.

குறித்த திட்டம் கொண்டு வரப்படுவதற்காக குடும்பம் ஒன்றிடமிருந்து 100 ரூபா பணம் சேகரிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் குறித்த திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் குடியிருக்கும் பகுதிகளிற்கு அருகில் பொது குழாய்கள் பொருத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. பிரதேச சபையினரிடம் மக்களின் வீடுகளிற்கு குறித்த இணைப்புக்களை வழங்கி மாதாந்த அறவீடு மேற்கொள்ளுமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டது. எனினும் அதனை பொருட்படுத்தாத பிரதேச சபையினர் திட்டத்தை நடைமுறைப்படுத்தினர். பிரதேச சபையினரால் நீர் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டமையை அடுத்து மக்களும் குடிநீர் வசதியை பெற்றுக்கொண்டனர்.

இந்த நிலையில் குறித்த வசதிக்காக பயன்படுத்தப்பிட்ட மின்னலகு 35 ஆயிரம் ரூபாவிற்கு அதிகமாக சென்ற நிலையில் மின்சார சபையினரால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. குறித் விடயம் தொடர்பில் பிரதேச சபை தவிசாளரின் கவனத்திற்கு மக்கள் கொண்டு சென்ற போதிலும் அவர் அலட்சிய போக்கை கடைப்பிடித்ததாகவும், அந்த மின் கட்டணத்தை மக்களே செலுத்த வேண்டும் என தெரிவித்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மக்கள் குடிநீருக்காக அங்கலாய்த்து வரும் நிலையில், இவ்வாறானவர்களிற்கா நாம் வாக்களித்தோம் என விரக்தியடைந்துள்ளனர்.

இவ்வாறான நிலை ஏற்படும் என்பதாலேயே தாம் வீட்டுக்கு இணைப்பு வழங்குமாறும், பாவனை கட்டணத்தை தாம் செலுத்துவதாக கூறியதாகவும் தெரிவிக்கும் மக்கள், இவ்வாறு பாரிய தொகை ஒன்றை மக்களிடம் சுமத்தியமை தொடர்பில் பிரதேச சபையினர் மீதும் கடும் அதிர்ப்தியினை வெளியிடுகின்றனர்.

பாரிய செலவில் அமைக்கப்பட்டுள்ள குறித்த குடிநீர் திட்டம் தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பிரதேச சபையினரின் அசமந்த புாக்கு தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தி குடிநீர் தேவையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் குறித் திட்டத்தினை விரிவுபடுத்தி, வீட்டுக்கு வீடு இணைப்பினை வழங்கி கட்டணத்தை அறவிடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சமூக வளங்களை ஒருங்கிணைக்கும் நிறுவனத்தினால் உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன





கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சமூக வளங்களை ஒருங்கிணைக்கும் நிறுவனத்தினால் உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேசத்தில் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனமான அமெரிக்க அம்கோர் நிறுவனத்தினால்சுமார் 1451குடும்பங்களுககு இவ் உலர்உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

கிளிநொச்சி கண்டாவளை ஊரியான், முரசுமோட்டை ஆகிய பகுதிகளில இந்த உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 9ஆயிரத்து 202 ரூபா பெறுமதியான அரிசி, கோதுமை மா, பருப்பு, சமையல் எண்ணை, சீனி, உள்ளிட்ட பொருட்கள் வழங்கி வைக்கபபட்டுள்ளன.

சுமார் 13.6 மில்லியன் ரூபாசெலவில் இந்த ஆயிரத்து 451 குடும்பங்களுக்கு இவ் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பயிற்சி சான்றிதழ் வழங்கல்

**அஷ்ரப் ஏ சமத்**



வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசாவின் ஆலோசனையின் பேரில் அவரது அமைச்சின் கீழ் உள்ள நிர்மாணத்துறை கட்டுமான அதிகார சபையினால் வேலையற்ற மற்றும் மேசன் தொழில்களில் ஈடுபடும் 400 இளைஞர்களுக்கு சீடா நிறுவனத்தினால் சில்ப சவிய திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு நைட்டா நிறுவனத்தின் - என்.வி.கியு தரம் 2- 3- 4 எனும் அரச தரச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அன்மையில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் விஜித்த கமகே தலைமையில் நடைபெற்றது. இப் பயிலுனர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எஸ்.பலன்சூரிய மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் சிவமோகனும் கலந்து கொண்டனர்.

## நுண்நிதி நிறுவனங்களுக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்




**வவுனியா நிருபர்**

வவுனியாவில் நுண்நிதி நிறுவனங்களுக்கு எதிராகவும், அரசாங்கம் குடும்ப பெண்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் வவுனியா பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

உலக பெண்கள் தினமான இன்று 'துன்புறுத்தும் தனியார் நுண்கடன் கம்பனிகளை எதிர்த்து நில்' என்ற தொனிப்பொருளில் உழைக்கும் பெண்கள் விடுதலை முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்ட இவ் ஆர்ப்பாட்டத்தில் பெண்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தியுள்ள அனைத்து நுண்கடன்களையும் இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் பெண்களின் உடல், உள, சமூக பொருளாதார கட்டமைப்புக்களை சீரழிக்கும் சாராய பார், கள்ளு கடைகளை இழுத்து மூடுமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்கள், மத்திய வங்கியே இன்னும் உறக்கமா? நுண்நிதிக்கடன் திட்டமா அல்லது இன அழிப்பு திட்டமா? கடன் கொடுத்து குடும்பத்தை குலைக்காதே, கடனே குடும்ப வன்முறைக்கு காரணம், பெண்களின் உடல் வியாபாரப் பொருளா? யுத்தத்தில் துப்பாக்கி நல்லாட்சியில் நுண் கடனா போன்ற பதாதைகளை தாங்கி நின்றனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் ஒன்றியம், வவுனியா இளைஞர் முன்னணி, பசுமைத்தொழிலாளர் நலன்புரிச் சங்கம், வவுனியா நகர சிறுவியாபாரிகள் சங்கம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் பல கிராமங்களிலிருந்து வருகை தந்திருந்த பெண்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## வவுனியா கல்வியல் கல்லூரியில் குவைத் நாட்டு நிதி உதவியில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு

**வவுனியா நிருபர்**



வவுனியா பூந்தோட்டம் கல்வியல் கல்லூரியில் குவைத் நாட்டு நிதி உதவியுடன் குடி நீர் சுத்திகரிப்பு இயந்திரம் அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பினரால் அன்பளிப்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா கல்வியில் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.சுவர்ணராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின் செயலாளர் எம்.ஏ.ஏ. நூறுல்லா கலந்துகொண்டு குடி நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்தார்.

வவுனியா கல்வியல் கல்லூரியில் இலங்கையின் பல மாவட்டங்களிலுள்ள மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில் கல்லூரியின் பீடாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைவாக நான்கு இலட்சம் ரூபா செலவில் குடிநீர் அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பினரால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் பெண்கள் பிரிவுக்கு புதிதாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று பொருத்தப்படுமென அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின் செயலாளர் எம்.ஏ.ஏ. நூறுல்லா தெரிவித்தார்.

நிகழ்வில் வடமாகாணத்திற்கான அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின இணைப்பாளர் எம்.எஸ். ஏம். ஜாபிர், கல்லூரியின் பீடாதிபதிகள் மற்றும் மாணவர்கள் கலந்;துகொண்டிருந்தனர்.









அண்மையில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகக் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற, திருமதி ரூபவதி நடராஜா எழுதிய, 'யாழ்ப்பாணப் பொது நூலகம் அன்றும் இன்றும்' நூல் வெளியீட்டு நிகழ்வில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் இவை.

படம்: அ.யேசுராசா

## சிறுகதை

# தொலைத்திட்ட கணங்கள்

திறந்திருந்த அந்த விசாலமான கேற்றினூடு தனது காரை இலாவகமாக வளைத்துத் திருப்பி அந்தப்பெரிய பலமாடிக் கட்டடத்தின் அடிப்பக் கத்திற்கொண்டுபோய் நிறுத்தினான் விக்னேஷ். கார்களை நிறுத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த இடமொன்றிலே பாதுகாப்பாக அதைப் பார்க் செய்துவிட்டு இறங்கிய விக்னேஷ் மூன்றாவது மாடியை அடைந்து வரிசையாக இருந்த பல அறைகளைக் கடந்து அதன் முடிவிலிருந்த அந்த விசாலாமான அறையின் கதவின் முன் நின்றான். டொக்டர் காயத்திரி, மனநலவியல் மருத்துவ நிபுணர் எனக் கதவில் மாட்டப்பட்டிருந்தது அறிவிப்புப் பலகை. அந்த அறிவிப்புப் பலகையை நோட்டம் விட்ட படியே கதவை மெதுவாகத் தட்டினான்.

'யெஸ் கம் இன்' என உள்ளே இருந்து வந்த அந்த காயத்திரியின் குரலைக் கேட்டு கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே சென்றவன் அங்கே புன்னகையுடன் அமர்ந்திருந்த காயத்திரியைப் பார்த்து ஒரு கணம் கண்களை இமைக்க மறந்து போய் நின்றான். வா விக்னேஷ் உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கின்றேன். உட்கார் என்றவளின் உதடுகள் புன்னகை மாறாமலே இருக்கக் கண்கள் அவனை உற்று நோக்கியது. எதுவுமே பேசாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்த விக்னேஷைப் பார்த்து அவளது புன்னகையை மேலும் அகலமாக்கிய காயத்திரி, என்ன அப்படிப்பார்க்கிறாய் என்றும் கேட்டாள். ' எத்தனை வருடங்கள் இருக்கும் காயத்திரி?' என்று கேட்டவனின் குரலில் ஒரு ஏக்கம் குடிகொண்டிருந்ததை காயத்திரி கவனிக்கவே செய்தாள்.

'இருபது நீண்ட வருடங்கள்' என்ற காயத்திரி ஆனால் இந்த இருபது வருடங்களில் நீ எந்தளவிற்கு உச்சியில் போய் அமர்ந்துவிட்டாய் என்றும் சொன்னாள். சே! எதற்கு அந்தளவிற்கு உச்சிக்குப் போனேன் என்று இப்போது மனதுக்குள் ஒரு கேள்வி கேட்டுக்கொண்டிருக்கின்றேன் என்ற விக்னேஷின் குரலில் மெல்லிய சலிப்பு இழையோடி இருந்தது. என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? நீ மருத்துவத்துறையில் அறுவைச்சிகிச்சையில் பல மைல் கல்களை எட்டிப்பிடித்தவன். அதுவும் மிகச் சிறிய வயதிலேயே அந்த ஏணியின் உச்சிக்குப்போய் அமர்ந்தவன். உன் இடைவிடாத உழைப்புத்தான் உன்னை இந்தநிலைக்கு உயர்த்தியிருக்கிறது.

அந்த நாட்களில் ஒரு பளிங்கு போன்ற தூய்மையான நட்பு இராச்சியத்தில் என்னை உலாவ விட்டவன் நீ, இப்போது என்னைத்தேடி இங்கு எதற்கு வந்திருக்கின்றாய்? உனக்கு உதவ நான் கடமைப்பட்டவள், சொல்லு என்றாள் காயத்திரி. விக்னேஷ் எதுவுமே பேசத்தோன்றாமல் காயத்திரியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தவன், நீ இன்னும் மாறவே இல்லை காயத்திரி, ஒரு நல்ல சிநேகத்தின் விழுதுகள், ஒரு நட்புக்கு எவ்வளவு தேவையானவை என்பதை இப்போது உன்னைப் பார்க்கும்போது புரிகிறது. இருபது வருடங்களின் பின்பும், அவை எவ்வளவு ஆழமாக உன்னில் வேர் விட்டிருக்கின்றன என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது என்றான். ஏன்? நீ அந்த நட்பை, என்னுடனான அந்த ஸ்நேகத்தைத் தொலைத்துவிட்டாயா? உன்னுள்ளே என்னுடனான அந்த நட்பின் சுவடுகள் எல்லாம் அழிந்துபோய்விட்டனவா?

இல்லை, அவ்வாறிருந்தால் இப்போது உன்னைத்தேடி வந்திருப்பேனா? உன்னுடனான அந்த நட்பின் ஸ்நேகம் என்னுள்ளேயும் இன்னும் ஊடுருவி, வேரூன்றி உயிர்வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது காயத்திரி.

சரி என்னதான் உன்னுடைய பிரச்சினை சொல்லு?

நான் மருத்துவத்துறையில் பல மைல்கல்களை எட்டிப்பிடித்தவன் என்று சொன்னாய். அந்த அவசரத்தில், வாழ்வின் மிக உன்னதமான கணங்களைத் தொலைத்துவிட்டேனோ என்று சந்தேகமாக உள்ளது. என்றவனை ஊடுருவிப்பார்த்தாள் காயத்திரி. வாழ்க்கை என்பது மைல்கல்களை மட்டும் அடைகின்ற ஒரு சமாச்சாரம் இல்லைத்தான். ஆனால் அந்த மைல்கல்களைத் தருவதும் ஒரு உன்னதமான கணம் தானே? அதுதானே வாழ்க்கை?

இல்லை காயத்திரி, வாழ்க்கையில் அடைய வேண்டிய மைல்கல் எது என்பதில்தான் அந்தக் காலத்தின் மதிப்பு உள்ளது. சில சமயங்களில் சில மைல்கல்களுக்காக வாழ்க்கையின் நீண்ட காலங்களைக் கடக்கும்போது வாழ்வின் மறுபக்கத்தில் அடையவேண்டிய மிக முக்கியமாமன மைல்கல்களுக்கான காலங்களைத்தவற விட்டுவிடுகின்றோமோ? என்பதுதான் எனது சந்தேகம்.

அவனை மேலும் மிக அழமாக ஊடுருவி நோக்கிய காயத்திரி தீப்திக்கும் உனக்கும் என்னபிரச்சினை? என்னைத்தேடி வருமளவிற்கு உங்களுக்குள் இடைவெளி விழுந்துவிட்டதா என்றும் கேட்டாள்?

மைல்கல்களைத் தொடுகின்ற அவசரத்திலும் ஆர்வத்திலும் அவளுக்கும் எனக்குமுள்ள இடைவெளியை அதிகமாக்கிக் கொண்டேனோ என்று சந்தேகப்டுகிறேன் காயத்திரி.

இது நடுத்தர வர்க்கத்தில், உயர் மட்டத்தில் இருப்பவர்களின் உரிமையாகிப் போய்விட்டது. வாழ்க்கையின் புறத்தேவைகளுக்கான போட்டிக்குள் புகுந்துவிடும் அவர்கள் வாழ்வின் அக உணர்வுகளைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள். எனக்குள்ளே எத்தனை பேர் அவ்வாறு திக்குத்திசை தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என உனக்குத் தெரியுமா? என்று ஒரு கேள்வியை அவனிடம் வீசினாள் காயத்திரி.

அது எனக்குத்தெரியாது காயத்திரி ஆனால் நான், நீ சொல்கின்ற அந்த வர்க்கத்தினுள் அடக்கப்பட வேண்டியவன் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் என்னால் முடியாது காயத்திரி. தீப்தியை என்னால் இழக்க முடியாது என்றான்.

என்னோடு எந்தளவிற்குத் தீவிரமாக நட்போடு இருந்தாயோ அதைவிடத் தீவிரமாக நீ தீப்தியைக் காதலித்துக் கல்யாணமும் செய்துகொண்டாய் சொல்லு தீப்தி எப்படி இருக்கிறாள்?

நீ சொன்ன அந்தத் தீவிரமான அந்தக்காதல் உடைந்துபோய் விடுமோ என்று பயமாக இருக்கின்றது. அவளை இழந்துவிடுவேனோ என்று மனதிற்குள் ஒரு அலாரம் அடித்துக்கொண்டே இருக்கின்றது என்றவனின் குரல் உடைந்துபோயிருந்தது. நாற்பத்தி ஐந்து வருடங்கள் கடந்துவிட்ட ஒரு ஆண்மகன் அதுவும் வாழ்வில் அடையவேண்டிய உச்சப்பதவியில் அமர்ந்திருக்கும் ஒரு அதிபுத்திசாலி தன்னுடைய அதே வயதுடைய ஒரு பெண்ணின்முன்னால் , மனதால் உடைந்து நொருங்கிப் போயிருந்தான். கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தது.

ஏன்? உனக்கும் அவளுக்கும் என்ன பிரச்சினை? அவளை நன்றாகத்தானே நீ வைத்திருக்கிறாய்?

நீ அப்படிச் சொல்கிறாய், நானும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அவள் அதை மறுக்கிறாளே? நான அவளை நன்றாக வைத்திருக்கவில்லை என்கிறாளே? இந்த வீடும் வாசலும், காசும் பணமும் என்னுடைய பதவியும் பட்டமும் அவளுக்குத் திருப்தி இல்லை என்கிறாளே?

ஓ.! என ஒரு பெருமூச்சு விட்ட காயத்திரி இது நான் சொன்னதுபோல, நடுத்தர வர்க்கத்தினரை நிரந்தரமாக நெருடுகின்ற ஒரு பிரச்சினையாகப் போய்விட்டது. சிலர் வெளிப்படையாகவே சொல்லிக்கொள்ள பலர் உள்ளுக்குள்ளேயே குமைந்துகொண்டிருக்கும் வாழ்க்கைப்பிரச்சினையாகப் போய்விட்டது என்றவள் சொல்லு நான் உனக்கு இப்போது என்ன செய்ய வேண்டும்? என்று அவனிடம் கேட்டாள்.

எங்கே? எதை? நாம் தீப்திக்கு செய்யாமல்விட்டிருக்கின்றேன் என்று சொல்லு?. எனக்கும் அவளுக்கும் இடையில் எவ்வாறு ஒரு இடைவெளி வந்தது என்று சொல்லு. அந்த இடைவெளியை நிரப்ப நான் என்ன செய்யவேண்டும்? இதற்கான வழிகள் என்ன என்று சொல்லு, இவை போதும் என்றான்

அவனை நோக்கி ஒருவசீகரமான புன்னகையை வீசிய காயத்திரி உனக்கும் தீப்திக்கும் உள்ள இடைவெளியை நிரப்பவேண்டுமாயின் உனக்கும் எனக்கும் உள்ள இந்த இருபது வருட இடைவெளியில் நடந்தவற்றையெல்லாம் நீ எனக்குச்சொல்ல வேண்டும் என்றவள் நீயும் நானும் தூரத்தில் இருந்தாலும் வெளியில் நடைபெற்ற உன்னைப் பற்றிய ஒவ்வொரு செய்தியும் எனக்கு வந்துகொண்டுதான் இருந்தது. இந்த இருபது வருட காலத்தினுள் நீ மருத்துவ உலகில் அடைந்த வெற்றிகளும் பெற்ற விருதுகளும் எனக்குத் தெரியும். அந்தப் புற வாழ்க்கையை விடு.

அந்த வாழ்க்கையை எவ்வாறு தள்ளி வைப்பது காயத்திரி?அந்த வாழ்வின் நிகழ்வுகள்தான் எனக்கும் தீப்திக்கும் ஒரு இடைவெளியை உருவாக்கிவிட்டனவோ? என்று எனக்குச் சந்தேகமாக உள்ளது.

உண்மைதான் அந்தப்புற வாழ்க்கையின் வெற்றிகளில் நீ பெற்றுக்கொண்டவை அந்தஸ்தும் புகழும் மாத்திரமல்ல இப்போது உன்னைச்சுற்றியுள்ள சகல பொருளாதார வசதிகளும்தான். இல்லை என்கிறாயா?

சத்தியமான உண்மைகள். ஒவ்வொரு வசதிக்காகவும் நான் காலத்தை விரயமாக்கும்போது தீப்தியைத் தள்ளி வைத்திருக்கிறேன். ஒரு வசதியை எட்டிப்பிடித்தவுடன் இன்னொன்றுக்கு மனம் அடம்பிடிக்கும், அந்த இலக்கை நோக்கி ஓட்டம் ஆரம்பமாகிவிடும்.

சரிதான். இவ்வாறான உனது இலக்குகளின் சடுகுடு விளையாட்டில் நீ சம்பாதித்தது என்ன தெரியுமா? அந்த இலக்குகளை எல்லாம் எட்டிப்பிடித்து அவற்றிற்கு நீ அதிபதியாகிவிட்டாய். ஆனால் அக வாழ்வின் நுணுக்கமான நுட்பமாமன உணர்வுகள் எல்லாம் உன்னை விட்டு ஓடியே போய்விட்டன. அதன் விளைவாக உனக்கும் தீப்திக்கும் இடையே பெரிய இடைவெளி ஒன்று உருவாகிவிட்டது. அப்படித்தானே?

தெரியவில்லை காயத்திரி. நீ சொல்வது சரியாக இருக்கலாம். சரியாகவே எனக்குப்படுகின்றது என்றான் விக்னேஷ்.

சந்தோஷம் எங்கிருந்து எப்படி வருகின்றது என்பது உனக்குத்தெரியுமா? அது நாம் எதிர்பாத்த்துக்கொண்டிருக்கும் நேரத்திலோ அல்லது எதிர்பார்த்த விதத்திலோ வருவதில்லை.

அந்த வார்த்தைகளின் அர்த்தம் தெரியாமல் குழம்பிப்போனான் விக்னேஷ்.

அது எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத திசையிலிருந்து, நாம் திறந்து வைக்க மறுத்துவிட்ட கதவொன்றின் ஊடாகத் திடீரென வந்து உன்னைத் தாலாட்டிவிட்டுச் செல்கிறது என்றாள் காயத்திரி.

அப்போ நான் திறந்து வைக்காத கதவு ஏதாவது இருக்கிறதா? சொல் காயத்திரி?

நிச்யமாக என்றவள் அந்தக்கதவு எங்கிருக்கின்றது? அதைத்திறப்பதற்கான தடைகள் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும். அப்போதுதான் எதிர்பாராத நேரத்தில் ஒரு சந்தோசச் சாரல் உனக்குள்ளே வந்து வீசிவிட்டுப் போகும். அது வீசுவதற்கான தடைகளை உடைத்து எறிந்தால் நிரந்தரமாக அந்தச் சாரல் உனக்குள்ளே வீசிக்கொண்டிருக்கும்.

அத்தடைகளை உடைப்பதற்கு உன்னால் முடியுமா? உடைத்து ஒரு சந்தோஷச்சாரலை எனக்குள்ளே வீச வைக்க உன்னால் முடியுமா? சொல்லு காயத்திரி?

சொல்கிறேன். உனக்கு அதை நான் செய்யாது விட்டால் இந்த ஸ்நேகத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடும். இப்போது சொல்லு அந்த இருபது வருட இடைவெளியில் உனக்கும் தீப்திக்கும் உள்ள அகவாழ்க்கையைப்பற்றி மாத்திரம்சொல்லு. உன் பிரச்சினையின் வேர் எங்கிருக்கிறது என்றும் உங்கள் இருவருக்குமிடையில் ஓர் இடைவெளி எவ்வாறு உருவானது என்றும் அவற்றினுள்ளே புகுந்து நான் ஊடுருவிப் பார்க்க வேண்டும் என்றாள் காயத்திரி.

அந்த இருபது வருட காலத்தில் அவனுக்கும் அவனது மனைவி தீப்திக்கும் இடையே நடந்து முடிந்த அந்தரங்க அகவாழ்வு நிகழ்வுகளை தன் தோழியிடம் உடைக்கத்தொடங்கினான் விக்னேஷ். ஏனெனில் அவனுக்கு அவனது மனைவி தீப்தி வேண்டும்.

எப்போதாவது உன்னை நீ நேசித்திருக்கிறாயா விக்னேஷ் என்ற அவளது கேள்விக்கு ஒரு பதிலைத் தேட முடியாது திகைத்துப்போய் என்ன கேள்வி இது காயத்திரி? என அவளையே திருப்பிக் கேட்டான் விக்னேஷ். உன்னை நீ எப்போதாவது நேசித்திருக்கிறாயா? என்று கேட்டேன் என்றவள் தன்னை நேசிக்க அறியாத ஒருவர் எப்படி மற்றவர்களை நேசிக்க முடியும்? அதுவெல்லாம் வெறும் சுயநல நேசிப்பு. அது உண்மையான நேசமில்லை. என்றாள் காயத்திரி புன்னகையுடனே.

திகைப்பினுள் விழுந்த விக்னேஷ் நீ சொல்வது உண்மைதான் என்றான்.

உனது மனதுக்குப் பிடித்த உனது சித்தங் கவர்ந்த ஒரு பாடலை ஐந்து நிமிடங்களுக்கு அமைதியாக இருந்து கண்களை மூடி அமைதியாக இருந்து ரசித்துக் கேட்டிருக்கின்றாயா? உண்மையைச் சொல்கின்றேன் காயத்திரி. நீசொன்னதுபோல ஒரு ஐந்து நிமிடங்கள் அமர்ந்திருந்து ஒரு பாடலைக்கேட்கும் அளவிற்குக்கூட எனக்கு நேரமில்லை என்பதுதான் உண்மை என்றான் பரிதாபமாக.

உன் மனதுக்குப் பிடித்த ஒரு பாடல் அந்தப்பாடல் காற்றிலே கரைந்து அலை வடிவத்தில் உன் செவிகளில் வந்து மோதி உள்ளே புகுந்து இதயச் சுவர்களைத்தழுவும்நேரம் கண்களை மூடி அமைதியாக அமர்ந்திருந்து உன் இதயத்தினுள் இறங்கிய அந்த அற்புதத்தை உனது மனதினை ஆக்கிரமித்துள்ள அந்த ஆனந்தத்தை உனது உடலில் ஒவ்வொரு செல் இலும் புகுந்து உன்னை நீயாக உணர வைத்திருக்கின்ற அந்த மாயத்தை அந்த மர்மம் பொதிந்துள்ள கணங்களை நீ உணரவேண்டும் விக்னேஷ். அது நீ உன் வாழ்க்கையை உனக்காக வாழ்கின்ற உன்னதமான கணங்கள். அதுதான் உன்னை நீ நேசிக்கின்ற உத்தமமான கணங்கள். உன் மன உணர்வுகளை நீ மதிக்கின்ற கணங்கள். நீ அதை அனுபவித்திருக்கின்றாயா விக்னேஷ்?

காயத்திரியின் சாசுவாதமான அந்த வார்த்தைகளின் விளக்கம் விக்னேஷை சம்மட்டியால் தாக்கியதுபோல் ஒரு உணர்வை அவனுள் ஏற்படுத்த, நான்தான் சொன்னேனே காயத்திரி? ஒரு பாடலை இரசித்துக் கேட்டு அனுபவிக்கும் அளவிற்கு எனக்கு நேரம் ஒதுக்க முடிவதில்லை என்றான் விக்னேஷ்.

அரண்மனை போன்ற வீடு உன்னிடம் இருக்கின்றது. இது ஒரு அடிப்படைத் தேவைதானே?

ஒத்துக்கொள்கின்றேன். அந்த வீட்டில் இருந்து நீயும் தீப்தியும் உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து உணவை ரசித்துச்சுவைத்த நாள் எப்மீபொது? நீ தீப்தியோடு சமயலறையில் ஒரு பேச்சுததுணையாக எப்போதாவது இருந்திருக்கிறாயா?

இதுவெல்லாம் ஒரு பிரச்சினையா?

காயத்திரி புன்னகைத்தாள். இவற்றைப் பிரச்சினையாகக் கருதாமல்விடடதே உனக்கு இப்பொது பிரச்சினையாகி;விட்டது.

விக்னேஷ் திகைப்புடன் அவளைப்பார்த்தான்

தீப்தி உன்னைப்பற்றித் தன் மனதினுள்ளே என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாள் என்று நீ எப்போதாவது உணர முற்பட்டிருக்கின்றாயா? அவளைப்பற்றி உனக்குள்ள அக உணர்வுகளின் அபிமானத்தை அவளுடைய உள் உணர்வுகளுக்கு உணரவைக்க நீ எப்போதாவது முயற்சித்திருக்கிறாயா? இவை எல்லாம் நீ உன்னை நேசிக்கும் கணங்கள். அவ்வாறு நீ வாழும் கணங்களே மற்றவர்ளையும் உன்னோடு சேர்ந்து வாழ வைக்கும் உன்னத நிமிடங்கள்.

காயத்திரி கேள்விகளை அடுக்கிக்கோண்டே போக விக்னேஷ் அந்தக்கேள்விகளுக்கு மத்தியில் பதிலின்றி பரிதாபமாகிப்போனான்.

உன் குழந்தைகளோடு ஒரு உள்ளார்ந்த குதூகலத்தோடு கூடியிருந்;த நாட்கள் உனக்கு ஞாபகமிருக்கிறதா? அவர்களோடு சேர்ந்து உனக்காக நீயம் அவர்களுக்காக அவர்களும் வாழ்ந்த நாட்கள் உன் நிடினைவுக்கு வரும்தூரத்தில் இருக்கிறதா,?

காயத்திரியின் இந்தக்கேள்விகள் விக்னேஷை அவனது குடும்பத்திலிருந்து அவனை அந்நியனாக்கி விட்டன.

திடீரென அந்தக்கேள்வியை காயத்திரி கேட்டாள். நீ கடைசியாக தீப்திக்கு கடமைக்கு கணவனாக அல்லாது ஒரு அந்தரங்க ஆண்மகனாக எப்போது இருந்தாய்.?

அந்தக்கேள்வி அவனுக்குள் ஒரு அதிர்ச்சியை உருவாக்கிவிட அடிப்பாவி நீ ஒரு ராட்சசி என்று கூறிப்புன்னகைத்தான்.

அவளுடைய இதழ்களிலும் புன்னகை பூத்;திருக்க இப்போதுதான் நீ என் ;தோழன். இவை நீ என்னுடன் தோழனாக வாழும் கணங்கள். இவை



நீ உன்னை நேசிக்கும் கணங்கள். நீ உனக்காக வாழும் கணங்கள். நீ உனக்காக வாழும் இக்கணத்தில் ஒரு நல்ல தோழியாக என்னையும் உன்னோடு சேர்ந்து வாழவைக்கிறாய். இந்த அக உணர்வுகளின் சங்கமத்தின்போதுதான் நாம் நம்மை நேசிக்கின்றோம். இந்த நேசிப்பும் வாழ்வும் அதன் சங்கமும்தான் தீப்தியின் தேவையாக இருக்கிறது. நீயும் வாழ்ந்து அவளையும் வாழ் வைக்கும் நிகழ்காலக் கணங்களைத்தான் அவள் உன்னிடம் யாசித்துக் கொண்டிருக்கிறாள். அதை உன்னிடம் தேடித்தேடிக் கிடைக்காமல் சலிப்பின் எல்லைக்குள் பிரணாயம் செய்துகொண்டிருக்கிறாள் என நீண்ட விளக்கமளித்தாள் காயத்திரி.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்.?

நீ உன்னை நேசிக்க வேண்டும். நீ உன்னை நேசிப்பதற்கு நேரம் ஒதுக்கவேண்டும். உனக்கு உன்னைநேசிக்க நேரம் ஒதுக்க முடியாவிட்டால் உன்னை மற்றவர்கள் நேசிப்பதற்கு நேரம் ஒதுக்க வேண்டும் என நீ எதிர்பார்க்கக் கூடாது. அவ்வாறு எதிர்பார்ப்பது உனது முட்டாள்தனம்.

விக்னேஷ் எதுவுமே பேசாமல் அவளையே பார்த்தபடி இருந்தான்.

நீ உன்னை நேசிக்கும்போதுதான் தீப்தியை உன்னால் நேசிக்கவும் அவளுடைய அக உள்ளுணர்வுகளையம் புரிந்துகொள்ளவும் முடியும். அப்போதுதான் அவள் உன்னை நேசிப்பது உனக்குப்புரியம். அந்த நேசிப்பு அவள் உன்னிடம் யாசிப்பாது எதுவென்று உனக்குப்புரிய வைக்கும். தன்னை நேசிக்காத மனிதனுக்கு மற்றவர்களை நேசிக்கவும் தெரியாது. தன்னை மற்றவர்கள் நேசிப்பததைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

விக்னேஷ் அசந்துபோய் அமர்ந்திருந்தான் .

இது அக உணர்வுளின் அலைவரிசைகளின் சங்கமத்தினால் உருவானது. உனக்கும் எனக்கும் உள்ள சிநேகம்போல அந்த அக உணர்வுகளின் தூண்டுதல்தான் உனக்கு ஒரு உதற முடியாத பிரச்சினை என்னும்போது உனது மனம் என்னிடம் ஓடு என்று உன்னைத் தூண்டியிருக்கின்றது என்றாள் காயத்திரி.

இவை எல்லாம் ஒரு இமெஜ் ஸ்டேடஸ். இரண்டையும் நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தின் விளைவுதான் என்றான் விக்னேஷ்.

மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஒதுக்க வேண்டிய நேரத்தை இந்த இமேஜிற்காகவும் ஸ்டேடஸிற்காகவும் நாம் அவர்களிடமிருந்து பறித்துவிடுகின்றோம். அதனால் அவர்களுடைய அக உள்ளுணர்வுகள் எல்லாம் நசுக்கப்பட்டு கவனிப்பாரற்றுப் புறந்தள்ளப்பட்டுவிடுகின்றன அப்படித்தானே?

ஒருநாளைக்கு 24 மணித்தியாலங்களே போதாது என்ற நிலைக்கு நாம் இப்போது தள்ளப்பட்டிருக்கின்றோம். அதனால் ஏற்பட்ட விளைவுதான் இந்த சலிப்பும் விரக்தியும்.

இல்லை விக்னேஷ். வரம் என்று நினைத்து நாமே நமக்கு ஏற்படுத்திக்கொண்ட சாபம்தான் இது. இலத்திரனியலில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியோடு உலகம் சுருங்கி நமது கைகளுக்குள் அடங்கிவிட்டது என்கிறார்கள். இது எந்தளவிற்கு உண்மையோ அந்தளவிற்கு மற்றொரு உண்மையையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மனித மனங்களின் புற அக நுட்பமான உணர்வுகளும் சுருங்கி நசுங்கி அழிந்துவிட்டன என்பதுதான் அது.

அந்த உண்மை விக்னேஷைப் பலமாகத் தாக்கியது. மனிதமனங்களில் ஏற்படும் நுட்பமான உணர்வுகள் இன்று கணவன் மனைவிக்கிடையே கூட மதிக்கப்படுவதில்லை. சுருங்கிவிட்ட உலகம் அவற்றை அவர்களிடையே நசுங்க வைத்துவிட்டது என்கிறாயா காயத்திரி? என்று விக்னேஷ் கேட்டதுமே கயாத்திரி புன்னகைத்தாள். அதே புன்னகையோடு அதற்கு உதாரணம்தான் நீயும் தீப்தியும் என்று சொன்னாள்.

திருமணம் என்பது ஒரு ஆணினதும் பெண்ணினதும் புறஅக விருப்புக்களை ஒத்திசைய வைக்கும் மாபெரும் முயற்சி. அவ்வாறு அந்தத் தம்பதியினரின் இருப்புகளிடையே ஒரு ஒத்திசைவு ஏற்படும் நாளில்தான் அந்தத் திருமணம் வெற்றியடைகின்றது. ஒரு இனத்தின் விழுமியங்களைப் பாதுகாப்பதிலும் அடுத்த பரம்பரைக்கு எடுத்துச் செல்வதிலும் ஒரு ஆணினதும் பெண்ணினதும் புற அக இருப்புகளை ஒத்திசைய வைக்கும் திருமணங்களே மகத்தான வகிபாகங்களாகும்.

இந்த இயந்திரத்தனமான வாழ்க்கை ஒரு கணவன் மனைவிக்கிடையே உள்ள காதல் வாழ்க்கையைப் பறித்துவிட்டு அவர்களுக்கு விவாகரத்து கொடுத்து விட்டிருக்கின்றது. விவாகரத்து என்பது ஒரு கணவனையும் மடினைவியையும் சட்ட ரீதியில் பிரிக்க நீதிமன்றங்களால் வழங்கப்படுவது மாத்திரமல்ல. ஒரே கூரையின்கீழ் இன்று மனத்தால் விவாகரத்துப்பெற்ற தம்பதியினர் பலர்வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த இயந்திர வாழ்க்கையைத் தவிர்த்து வைப்பது இயலாது என்பதும் அவை அத்தியாவசியத் தேவை என்பதும் இன்று கட்டாயப்படுத்தப்பட்டதாடல் ஒரு குடும்பத்திலுள்ள கணவன் மனைவி குழந்தைகள் எல்லோருடைய வாழ்க்கையிலும் உள்ள அன்பு பாசம் காதல் போன்ற மனிதநேய உணர்வுகளை உணர்வதற்கான கால அவகாசம் அற்றுப்போய் விட்டது.

அந்த நுட்பமான அகமன உணர்வுகளை விருத்தி செய்வதற்கான நாம் அவற்றினுள்ளே புகுந்து, அவற்றை அடையாளங்கண்டு அவற்றோடு உறவாடுவதற்கான கால அவகாசம் பலவந்தமாகப் பறிக்கப் பட்டுவிட்டது.

அப்படியாயின் இந்தச் செல்வங்கள், இமேஜ், அந்தஸ்து எதுவும் தேவையற்றனவா? அவை அவசியமற்றனவா?

அவை வேண்டும் என்று விரும்பு. விரும்பி அவற்றைப் பெற்றுக்கொள். ஆசைப்படு, அளவோடு அவற்றை நிறுத்திக்கொள். பேராசைப்படாதே. பேராசைப்பட்டு அவற்றின்பின் ஓடாதே. ஓடினால் உன்னைவிட்டு சந்தோஷம் ஆனந்தம் எல்லாமே ஓடிவிடும்.

மனத்தின் அகத்தே அன்பின் அரவணைப்பிற்காக ஆர்ப்பரிக்கும், நுட்பமான மெல்லிய உணர்வுகளின் உள்ளே, ஒருமுறை பயணஞ்செய்து பார். இந்த நுட்பத்தின் சூட்சுமத்தை அடையாளம் காண்பதற்கே உனக்கு அன்பும் , காதலும். ஏன்? காமமும் கூடக் கடவுளால், கருவிகள் போலத்தரப்பட்டுள்ளன. அந்தக் கருவிகளை மதிநுட்பத்துடன் உபயோகித்து உன் மனைவியை அக உணர்வுகளினுள் ஒழிந்து இருக்கும் உண்மைகளைத்தேடு. அவளின் அக உணர்வுகளின் அலைகளோடு உனது அக உணர்வுகளின் அலைகளை சங்கமிக்க வைக்கும் அந்த நாளில் நீ மானிடனாகப் பிறந்ததற்கான அர்த்தத்தை உணர்வாய். செய்கிறேன் காயத்திரி, தீப்தியே அதை உனக்கு செய்யும்படி, அவளுடைய நுட்பமான அக உணர்வுகளை தொடுவதுதான் இனி என்முக்கிய பணி என்பவனின் முகம் பிரகாசமாகித் தெளிவுற்ற மனதின் தன்மையை காயத்திரிக்குக் கூறியது.

அவன் உடலின் பாகங்களுக்குத்தான் சத்திர சிகிச்சை செய்து அவற்றைச் சீர்செய்வான். ஆனால் அவளோ அவனுடைய மனதையே சத்திரசிகிச்சை செய்து சீராக்கி நேராக்கிவிட்டாள்.



**எ**ல்லாம் நல்லபடியாக நடந்தால், ஏப்ரலில் ‘எனை நோக்கி பாயும் தோட்டா’ரிலீஸாகும் என தயாரிப்பாளர் மதன் தெரிவித்துள்ளார்.

கௌதம் மேனன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ‘எனை நோக்கி பாயும் தோட்டா’. தனுஷ் ஹீரோவாக நடித்துள்ள இந்தப் படத்தில், ஹீரோயினாக மேகா ஆகாஷ் நடித்துள்ளார். 2016-ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கிய இந்தப் படம், சில பிரச்சினகளால் பாதியில் நின்றது.


பின்னர், விக்ரமை வைத்து ‘துருவ நட்சத்திரம்’ படத்தைத் தொடங்கினார் கௌதம் மேனன். அதுவும் பாதியிலேயே நிற்க, மறுபடியும் ‘எனை நோக்கி பாயும் தோட்டா’வைக் கையில் எடுத்தார். முக்கியக் கதாபாத்திரத்தில் சசிகுமார் நடிக்க, மீதியுள்ள படப்பிடிப்பு முடிவடைந்தது.

படத்தின் போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் முடிந்து, படத்தைத் தணிக்கைக்கு அனுப்பினார் கௌதம் மேனன். படத்தைப் பார்த்த தணிக்கைக்குழு உறுப்பினர்கள், யு/ஏ சான்றிதழ் அளித்தனர். எனவே, படத்தை ரிலீஸ் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், இந்தப் படத்தைத் தயாரித்துள்ள எஸ்கேப் ஆர்ட்டிஸ்ட் நிறுவனம் ஏற்கெனவே வைத்துள்ள கடன் பாக்கிகள், ‘அச்சம் என்பது மடமையடா’ படத்துக்காக கௌதம் மேனன் வாங்கிய கடன் என எல்லாமே ‘எனை நோக்கி பாயும் தோட்டா’ மீது வைக்கப்பட்டுள்ளன.

எனவே, விநியோகஸ்தர்கள் சங்கத்தில் பைனான்சியர்களுடனான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், தயாரிப்பாளர் மதன் ஒரு ட்வீட் செய்துள்ளார்.

அதில்,‘எனை நோக்கி பாயும் தோட்டா’ ட்ரெய்லர் ரெடி. படத்தை வெளியிடுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. எல்லாம் நல்லபடியாக நடந்தால், ஏப்ரலில் படம் ரிலீஸாகும் எனத் தெரிவித்துள்ளார் மதன்.





**பு**லன் விசாரணை, த்ரில்லர், காமெடி என முக்கோண வடிவில் உருவாகும் கதையில் நந்திதா முதன்முறையாக ஆக் ஷன் நாயகியாக வருகிறார். "IPC 376' என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில் நந்திதா காவல்துறை ஆய்வாளராக நடிக்கிறார். படம் குறித்து இயக்குநர் ராம்குமார் சுப்பராமன் கூறியதாவது:

இது ஹீரோக்கள் நடிக்க வேண்டிய கதை. ஆனாலும் ஹீரோக்கள் செய்ய முடியாத கதையும்கூட.

பெண்கள் குறித்து தரக்குறைவான பார்வையில் வெளிவரும் படங்களுக்கு இடையே அவர்கள் கொண்டாட வேண்டிய படமாக உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறோம் என்றார்.

இப்படத்துக்கு ‘தகராறு’, ‘அண்ணாதுரை’ படங்களின் ஒளிப்பதிவாளர் தில்ராஜும் ‘கோலமாவு கோகிலாபடத்தின் எடிட்டர் நிர்மலும் தங்கள் பங்களிப்பை வழங்கவுள்ளனர்.

## காவல்துறை ஆய்வாளராக நந்திதா

# ஐந்தடிக்கு அப்பால் காதலி!



**ஐ**ந்தடிக்கு அப்பால் நின்று அவர்கள் காதல் வளர்க்கலாம். ஒருவரையொருவர் நெருங்கும் ஒவ்வொரு அங்குலமும் இருவரின் உயிருக்கும் ஆபத்தாகலாம். இந்தச் சூழலில் இளம் காதலர்களும் அவர்களின் காதலும் என்னவானது என்பதே ‘ஃபைவ் ஃபீட் அபார்ட்’ என்ற ஹாலிவுட் திரைப்படம்.

மரபு ரீதியிலான பாதிப்பாக, நுரையீரல் உள்ளிட்ட உள்ளுறுப்புகளைப் பாதித்து வாழ்நாளை இரக்கமின்றி வரையறுக்கும் ‘சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ்’ நோய்க்கு 17 வயதான இளம்பெண் பாதிக்கப்படுகிறாள். மரணத்துக்கு எதிரான போராட்டத்தில் அவளது பெரும்பாலான பொழுதுகள் மருத்துவமனையிலேயே கழிகின்றன. ஆனபோதும் தனக்கு விதிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு உற்சாகம் குறையாது வாழ்வினைக் கழிக்கிறாள். ஒரு நாள் அதே உடல்நலப் பாதிப்பு கொண்ட இளைஞனை அவள் சந்திக்கும்போது இருவரும் காதலைச் சுவாசிக்கத் தொடங்குகிறார்கள். அதன் பின்னர் உயிரின் மீதும் உயிருக்கு நிகரான காதல் மீதுமாக இருவரும் பெரும் ஆசை கொள்கிறார்கள்.

இளம் காதலர்களின் காதலர் பூங்காவாகும் மருத்துவமனை, ஒரு நிபந்தனையுடன் அவர்களின் காதலை அங்கீகரிக்கிறது. ஐந்தடி அகலத்தில் மானசீக அகழி கட்டி அவர்கள் காதல் வளர்க்க அனுமதி கிடைக்கிறது. சற்று நெருங்கினாலும் இருவரில் ஒருவரின் உடல்நலனுக்கு அது ஆபத்தாகும்.

ஆனால், அவர்களது நோய்மையும் இளமையும் வாசலுக்கு வந்துவிட்ட வாழ்வின்மையும் கட்டுப்பாடுகளை உடைத்துக் கொண்டு இருவரையும் கைகோக்க ஈர்க்கிறது. படம் முழுக்க இளமைத் துள்ளலும், நிறைவில் உருக்கமான காட்சிகளுமாகக் காதலைக் கொண்டாடுகிறது ‘ஃபைவ் ஃபீட் அபார்ட்’.

படத்தின் ட்ரெய்லர் 5 ஆண்டுகளுக்கு முன் வந்த ‘தி ஃபால்ட் இன் அவர் ஸ்டார்ஸ்’ படத்தை நினைவூட்டுகிறது. ஹேலி ரிச்சர்ட்சன், கோல் ஸ்ப்ரௌஸ் முதன்மைக் கதாபாத்திரங்களில் தோன்ற, சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் பாதித்த சம வயது நிஜ நோயாளிகளை உடன் நடிக்க வைத்துள்ளனர். ஜஸ்டின் பல்டோனி இயக்கி உள்ள ‘ஃபைவ் ஃபீட் அபார்ட்’ மார்ச் 15 அன்று திரைக்கு வருகிறது.

# சிவா இயக்கத்தில் சூர்யா?

**‘வி**ஸ்வாசம்’படத்தைத் தொடர்ந்து சிவா இயக்கத்தில் சூர்யா நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

சிவா இயக்கத்தில் அஜித், நயன்தாரா, அனிகா, விவேக், ஜெகபதி பாபு, ரோபோ சங்கர் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் ‘விஸ்வாசம்’. ஜனவரி 10-ம் தேதி ரஜினி நடிப்பில் வெளியான ‘பேட்ட’ படத்துடன் வெளியானது.

இப்படம் தமிழகத்தில் பல்வேறு வசூல் சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

இப்படத்தைத் தொடர்ந்து சிவா யாரை இயக்கவுள்ளார் என்பது குறித்து பல்வேறு தகவல்கள் வெளியான வண்ணமுள்ளன.

இதில் மீண்டும் அஜித்துடன் இணையவுள்ளதாகவும், இதனை விநியோகஸ்தர்கள் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.



இதில் யாரும் எதிர்பாராத விதமாக இயக்குநர் சிவா அடுத்ததாக சூர்யாவை இயக்கவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக விசாரித்த போது, இது தொடர்பான பேச்சுவார்த்தை நீண்ட வருடங்களாகவே நடைபெற்று வருகிறது.

ஆனால் தொடர்ச்சியாக அஜித்துடன் படம் செய்து கொண்டிருந்ததால் இப்பேச்சுவார்த்தை தடைப்பட்டது.

‘சிறுத்தை’ படம் இயக்கும் போதே, ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் 2 படங்கள் இயக்குவதாக தான் சிவாவை ஒப்பந்தம் செய்தார்கள்.

அந்த ஒப்பந்தத்தின்படி ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் தயாரிக்கும் படத்தை அடுத்ததாக இயக்கவுள்ளார். இக்கதையில் யார் நடிப்பார்கள் என்பது இன்னும் சில நாட்களில் இறுதியாகிவிடும்என்று தெரிவித்தார்கள்.

தன் அடுத்த படத்துக்கான கதை விவாதத்தில் ஈடுபட்டு வருகிறார் இயக்குநர் சிவா. அக்கதையை முடித்தவுடன் தான் நாயகன் உள்ளிட்ட விஷயங்கள் முடிவாகும் எனத் தெரிகிறது.




## நேகா மாலிக்



**ரா**ஜமவுலி இயக்கத்தில் பிரபாஸ் நடித்த பாகுபலி படத்தை இந்தியில் வெளியிட்டவர் இயக்குனர் கரண்ஜோஹர். பிரபலங்களுடன் அவர் உரையாடல் நிகழ்ச்சி ஒன்றை நடத்தி வருகிறார். அவரது நிகழ்ச்சியில் ராஜமவுலி, ராணா, பிரபாஸ் உள்ளிட்ட அனைத்து பிரபல நட்சத்திரங்களும் கலந்து கொண்டுள்ளனர். அமிதாப்பச்சன், டாப்ஸி நடித்த படம் பிங்க். இப்படம்தான் தற்போது தமிழில் நேர்கொண்ட பார்வை பெயரில் ரீமேக் ஆகிறது. அமிதாப்பச்சன் வேடத்தில் அஜீத் நடிக்கிறார். வித்யாபாலன், ஸ்ரத்தா ஸ்ரீநாத், அபிராமி, ஆண்ட்ரியா நடிக்கின்றனர்.

ஸ்ரீதேவி கணவர் போனிகபூர் தயாரிக்கிறார். பிங்க் (இந்தி) படத்தில் நடித்தவர்களை கரண்ஜோஹர் தனது நிகழ்ச்சிக்கு அழைத்து உரையாடினார். இப்படத்தில் முக்கிய வேடத்தில் நடித்த டாப்ஸியை அவர் அழைக்கவில்லை. பேட்டியை கண்ட ரசிகர்கள் டாப்ஸியிடம் குசலம் விசாரிக்க தொடங்கினர். படத்தில் முக்கிய வேடத்தில் நடித்த நீங்கள் பேட்டியில பங்கேற்காதது ஏன் என்றனர். பலரும் இதுபோல் கேட்டதும் அப்செட் ஆனார் டாப்ஸி. ஆனாலும் சிரித்தபடி சமாளித்தவர், ‘நல்ல கேள்வி... எனக்கு (டாப்ஸி) அந்த பேட்டியில் பங்கேற்கும் தகுதி இன்னும் வரவில்லை... அதற்கான தகுதிக்கு எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறேன்’ என்று விரக்தியாக பதில் அளித்தார் டாப்ஸி. இந்த பதிலை கண்ட ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்து, ‘எல்லாவற்றிலும் நீங்கள் புத்திசாலி.. எல்லா தகுதியும் உங்களுக்கு உண்டு’ என ஆறுதல் கூறத் தொடங்கினார். உடனே டாப்ஸி...‘உங்களிடமிருந்து நான் ஜாலியான பதிலைத்தான் எதிர்பார்த்தேன். மற்றபடி எனக்கு எந்த வருத்தமும், விரக்தியும் இல்லை’ என்றார்.

# லனாகும் சிம்பு!

ஜாவாத்தான் வருவேன்' படத்திற்கு மிதமான வரவேற்பே சிம்புவுக்கு அடுத்தடுத்து படங்கள் வந்தவண்ணம் உள்ள ஹன்சிகா நடித்துவரும் 'மஹா' படத்தில், ஸ்பெஷல் ல் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் சிம்பு.

ல் வாகை பழையநிலைக்கே கொண்டுவர லண்டனில் சிகளை மேற்கொண்டுவரும் இவர், 'மஹா' படத்தை வெங்கட் பிரபு இயக்கும் 'மாநாடு' படத்தில் நடிக்க டியோ கிரீன் நிறுவனத்துக்காக ஞானவேல்ராஜா தயாரிக் டத்தில் நடிக்கவிருக்கிறார் சிம்பு, கன்னடத்தில் சிவராஜ் ரி ஆகியோர் நடித்து வெற்றிபெற்ற 'மஃப்டி' படத்தின் தப் படம் என்பது குறிப்பிடத்தக்கது.

த்தில் கதாநாயகனாக ஆர்யா நடிக்கிறார். அவருக்கு வில் டிக்கிறார். முக்கியமான கதாபாத்திரத்தில் சரத்குமார் நடிக் விரைவில், இப்படத்தின் தயாரிப்பு வேலைகள் தொடங்க றாரு கதாநாயகன் படத்தில் சிம்பு வில்லனாக நடிப்பது முறை.

'போங்கு' படத்தில் ஹீரோயினாக அறிமுகமானவர் ருஹி சிங். இந்தியில் காலண்டர் கேர்ள்ஸ், இஷ்க் ஃபார் எவர் உள்ளிட்ட படங்களிலும் நடித்திருக்கிறார். கடந்த ஒரு மாதமாக இவருக்கு செல்போனில் வாலிபர் ஒருவர் மிரட்டல் விடுத்து டார்ச்சர் செய்துகொண்டிருக்கிறார். இதுபற்றி ருஹி கூறியதாவது: அனுராக் கஷ்யப் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு நபர் எனக்கு அடிக்கடி செல்போனில் ஆபாச மெசேஜ், மிரட்டல் மெசேஜ் அனுப்பி வருகிறார். ஆரம்பத்தில் அந்த மெசேஜை நான் கண்டு கொள்ளவில்லை. ஆனால் தொடர்ந்து அதேபோல் செய்துவருகிறார்.

அவரது நம்பரை நான் பிளாக் செய்துவிட்டேன். ஆனாலும் புதுப்புது நம்பர்களிலிருந்து எனக்கு மெசேஜ் அனுப்புகிறார். இதுகுறித்து போலீசில் புகார் அளித்தேன். அவர்கள் இதுகுறித்து விசாரிப்பதாக கூறினர். ஆனாலும் எந்த பலனும் இல்லை. மீண்டும் அந்த நபர் ஆபாச மெசேஜ் அனுப்பிக்கொண்டே இருக்கிறார். அவரிடம் தொலைபேசியில் நானே பேசி, இதுபோல் செய்வது தவறு, சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்று எச்சரித்தேன்.

அவரோ, நானே ஒரு போலீஸ் அதிகாரிதான். நான் ஜெயிலுக்கு செல்ல தயார் உன்னால் முடிந்ததை செய் என்கிறார். பின்னர் அவர் அனுப்பிய மெசேஜில், நான் எப்போது எங்கு வந்து தன்னை சந்திக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். என்னைப்பற்றிய நிறைய விஷயங்களை அந்த நபர் தெரிந்து வைத்திருக்கிறார். யாருடன் நான் பேசுகிறேன், யாரை சந்திக்கிறேன் என்பதை எல்லாம் பெயர் விபரங்களுடன் சொல்கிறார். எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை.

இதுபோன்ற நபர்களை சும்மாவிடக்கூடாது. அதனால் தான் இந்த விஷயங்களை பகிரங்கமாக சொல்கிறேன். இதுபோல் தொந்தரவு அனுபவிக்கும் வேறு எந்த பெண்ணும் பயப்படக்கூடாது என்பதே எனது நோக்கம். யார் தொந்தரவு செய்தாலும் உடனடியாக சைபர் கிரைமில் புகார் செய்யுங்கள். இவ்வாறு ருஹி சிங் கூறினார்.



# எனக்கு ஆபாச செய்திகள் அனுப்புகின்றனர்




விஷால் நடித்து வரும் 'அயோக்யா' திரைப்படம் ஏப்ரல் 19-ம் தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

'சண்டக்கோழி 2' படத்துக்குப் பிறகு விஷால் நடித்து வரும் படம் 'அயோக்யா'. ஏ.ஆர்.முருகதாஸிடம் உதவியாளராகப் பணியாற்றிய வெங்கட் மோகன் இயக்கி வருகிறார். இப்படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கோடை விடுமுறையை முன்வைத்து, ஏப்ரல் 19-ம் தேதி 'அயோக்யா' வெளியாகும் என்று படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இப்படம் தெலுங்கில் வெளியான 'டெம்பர்' படத்தின் ரீமேக் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஷி கண்ணா, பார்த்திபன், இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார் உள்ளிட்ட பலர் விஷாலுடன் நடித்துள்ளனர். சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார். சமீபத்தில் வெளியிடப்பட்ட இப்படத்தின் டீஸருக்கு இணையத்தில் நல்ல வரவேற்பு கிடைத்தது நினைவு கூரத்தக்கது.

கோடை விடுமுறை வெளியீடாக இப்படம் வெளியாகவுள்ளது. லகரி மியூஸிக் நிறுவனம் இதன் இசை உரிமையைக் கைப்பற்றியுள்ளது.

# கார்த்தி படத்தில் ஜோ!



'தேவ்' படத்தை அடுத்து ரெமோ பட இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கும் புதிய படத்தில் நடிக்க கார்த்தி ஒப்பந்தமாகியுள்ளார். கைதி என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிக்கிறது. இந்நிலையில் ஜீத்து ஜோசப் இயக்கத்தில் உருவாக உள்ள படத்தில் நடிகர் கார்த்திக்கு இணையான முக்கியமான கதாபாத்திரத்தில் நடிகை ஜோதிகா நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

படத்தின் தொழில்நுட்பக் குழுவினரை இறுதி செய்யும் பணிகள் முடிந்த பின் விரைவில் படத்தின் மற்ற அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பாக்கப்படுகிறது. ஜீத்து ஜோசப் தமிழில் பாபநாசம் படத்தை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஓய்வென்பது எனக்கு இல்லை!

நாயகனுடன் டூயட், காதல் காட்சிகள் என் தே நாயகியின் பணியாக இருந்துவந்தது. ற்போது அதை உடைத்து நாயகிக்கு முக்கியத் துவம் கொடுத்துப் பல படங்கள் வரத் தொடங் கியுள்ளன. அந்த வரிசையில் 'கண்ணே கலைமானே' படமும் அமைந்துள்ளது. பாரதி என்ற கதாபாத்திரம் குறித்து படக்குழுவினர் புகழ்ந்து வரும் வேளையில், அதை ஏற்று நடித்திருக்கும் தமன்னாவைச் சந்தித்துப் பேசியதிலிருந்து

**'கண்ணே கலைமானே' படம் எப்படித் தொடங் கியது?**

உதயநிதி ஹீரோவாக இக்கதையில் நடித்துத் தயாரிக்கிறார். எதற்கும் கதையைக் கேளுங்கள் என்றவுடன், கதையைக் கேட்டுவிட்டு உதயநிதிக்குப் பேசினேன். 'இக்கதையில் நீங்கள் நடித்து, தயாரிக்கிறீர்களா?' என்று கேட்டேன். அவரோ 'ஆமாங்க ஏன்?' என்றார். 'உங்களோட கதாபாத்திரத்துக்குச் சரி சமமாக என்னோட கதாபாத்திரமும் இருக்கிறது. அந்தச் சந்தேகத்தில் கேட்டேன்' என்றேன்.

அவரோ 'எனக்குக் கதை ரொம்பப் பிடிச்சிருக்கு. ஏன் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?' என்று கேட்டுச் சிரித்தார். ரொம்பவே பிடிச்சிருக்கு என்று ஷூட்டிங் போனோம். உண்மையைச் சொன்னால், வெவ்வேறு படங்களில் நடித்து வருவதால் இப்படத்தைச் சமீபத்தில் பார்த்து ரொம்பவே ஃபீல் பண்ணிட்டேன். அந்த அளவுக்குப் பாரதி கதாபாத்திரத்தில் நடித்திருப்பதாக நம்புகிறேன். எனக்கு நானே மார்க் போட்டுக்கொள்வதைவிட மக்கள் பார்த்துவிட்டுக் கூறட்டும் என்று காத்திருக்கிறேன்.

**சீனு ராமசாமி உங்களுக்காகவே இந்தக் கதாபாத்திரத்தை உருவாக்கி இருக்கிறார் போலத் தோன்றுகிறதே?**

அதை நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும். 'தர்மதுரை' படத்தில் ரொம்ப அழுத்தமான கதாபாத்திரம் கொடுத்தார். அதைப் போலவே இதில் வங்கி அதிகாரியாக அழுத்தமான கதாபாத்திரத்தைக் கொடுத்துள்ளார். சில காட்சிகளில் அவர் எதிர்பார்த்தைவிட நான் நன்றாக நடித்ததாக ஸ்பாட்டிலேயே பாராட்டினார். அது பெரிய விஷயம். தன்னைச் சிறப்பாக நடிக்க வைத்ததால் முத்தம் கொடுத்து சீனு சாரைப் பாராட்டினார் உதயநிதி. உதயநிதிக்குப் பாட்டியாக நடித்த வடிவுக்கரசி அம்மாவுடன் பல காட்சிகளில் போட்டி போட்டு நடித்துள்ளேன்.

**தமன்னாவின் சினிமா வாழ்க்கை முடிந்துவிட்டது என்று சமூக ஊடகங் களில் செய்திகள் அவ்வப்போது வருவதைப் படித்துவிட்டு என்ன நினைப்பீர்கள்?**

நடிப்பு வாழ்க்கை முடியப் போகிறது என்று சொல்லும் ட்வீட் களையும் கிசுகிசுக்களையும் படிப்பது பிடிக்கும். என் கதை முடிந்துவிட்டது என்று சொல்லும்போதெல்லாம் எனக்கு அதிலிருந்து அதிக உற்சாகம் கிடைக்கும். ஏனென்றால், அப்போது நான் ஒரு புதுமுகம் போல உணர்வேன். அது என்னை இன்னும் அதிகமாக உழைக்க வைக்கும். நானும் உழைப்பேன். எனது நடிப்பு வாழ்க்கையிலேயே மிக மோசமான நிலையில் இருக்கிறேன் என்று வரும் ட்வீட்டுகளைப் படிக்கும்போது எனக்கு த்ரில்லிங்காக இருக்கும். ஆம்! இதற்காகத்தான் காத்திருந்தேன் என்று சொல்லிக்கொள்வேன்.

அப்படி இதற்குமுன் அப்படியான தோல்வி முகத்தில் நான் இருந்தபோதுதான் 'பாகுபலி'வாய்ப்பு வந்தது. உங்கள் தொழில் வாழ்க்கை முடிந்துவிட்டது என யாராலும் முடிவுசெய்ய முடியாது. ஒரு நடிகையாக நடிப்பு வாழ்க்கை போதும் என்று நான் நினைக்கும்போதுதான் எனது தொழில் வாழ்க்கை முடியும். எனக்குள் இருக்கும் நடிகைக்கு எப்போதும் ஓய்வில்லை.

**கதாநாயகனுக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில்தான் உங்களைக் காண முடிகிறது?**

இதுவரை பல கமர்ஷியல் படங்களில் நடித்திருக்கிறேன். நாயகனுக்கு முக்கியத்துவம் இருக்கும் திரைப்படங்களில் என் கதாபாத்திரத்தை மக்கள் ரசித்திருக்கிறார்கள். வழக்கத்தை உடைப்பது என்பது மிகப் பெரிய சவால். ஏனென்றால், பெரும்பாலான கதைகள் நாயகனை மையமாக வைத்து வருபவையே. கடந்த சில வருடங்களாக, வலிமையான பெண் கதாபாத்திரங்கள் இருக்கும் படங்களில் நடித்திருக்கிறேன். அவை இப்போதுதானே தலைகாட்டத் தொடங்கியிருக்கின்றன.

இந்த கட்டமைப்புக்குள் எனக்கென ஒரு இடத்தை என்னால் உருவாக்கிக்கொள்ள முடிந்ததில் எனக்கு மகிழ்ச்சி. நான் படக்குழுவோடு இணக்கத்துடன் இருப்பவள். எனது கதாபாத்திரம் என்று வரும்போது எனக்கு அதில் எந்தப் பேராசையும் கிடையாது. நன்றாக ஓடும் படங்களில் நான் பங்காற்ற வேண்டும். அதற்கு எனது தற்போதைய நடிப்புத்திறன் கைகொடுக்கும் என்று நம்புகிறேன்.

**இது வெப் சீரிஸின் காலம். அதில் நடிக்கும் எண்ணம் இருக்கிறதா?**

இன்று மக்களுக்குக் கிடைக்கும் டிஜிட்டல் பொழுதுபோக்கின் அளவைப் பார்க்கும்போது, ஒரு நடிகருக்கு, தன் நடிப்பைக் காட்ட இதற்கு முன் இவ்வளவு தளங்கள் இல்லை என்பது புரிகிறது. எனக்கும் நிறைய வெப் சீரிஸ் வாய்ப்புகள் வருகின்றன. நான் நிறைய திரைப்படங்களில் நடிப்பதால் வெப் சீரிஸ் வாய்ப்புகள் இன்னும் அதிகமாக என்னை ஈர்க்க வேண்டும்.

ஆனால், விரைவில் அப்படி ஏதாவது ஒன்றில் நடிக்க ஆர்வமாயிருக்கிறேன். நான் என்னை எப்போதும் ஒரு நட்சத்திரமாக எண்ணியதில்லை. நான் ஒரு நடிகை. நான் நடிக்க நினைக்கும்வரை எனக்கான கதவு திறந்திருக்கும். ஏனென்றால் என்னை எல்லோருக்கும் பிடிக்கும்.



# தனுஷ் படத்தில் சினேகா

துரை செந்தில்குமார் இயக்கும் படத்தில் தனுஷ், சினேகா இணைய உள்ளனர். இதில் தந்தை, மகன் என இரு வேடங்களில் தனுஷ் நடிக்கவுள்ளார். தந்தை தனுஷுக்கு ஜோடியாகத்தான் சினேகா நடிப்பதாக தெரிகிறது. செல்வராகவன் இயக்கிய படம் 'புதுப்பேட்டை'. கடந்த 2006ம் ஆண்டு திரைக்கு வந்த இப்படத்தில் தனுஷ், சினேகா ஜோடியாக நடித்திருந்தனர். 13 வருடங்கள் கழித்து இந்த ஜோடி புதிய படத்தில் இணைய உள்ளது.

ஏற்கனவே துரை செந்தில்குமார் இயக்கிய 'கொடி' படத்தில் தனுஷ் ஹீரோவாக நடித்திருந்தார். சத்யஜோதி ஃபிலிம்ஸ், நிறுவனம் இந்த படத்தை தயாரிக்கிறது. தனுஷ் மற்றும் சினேகா நடிக்கும் முதல் கட்ட படப்பிடிப்பு குற்றாலத்தில் துவங்கியுள்ளது. தொடர்ந்து 30 நாட்கள் அங்கு நடைபெறும் படப்பிடிப்பில் படத்தின் முக்கிய காட்சிகள் படம் பிடிக்கப்பட உள்ளன. ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு செய்ய, இரட்டை இளம் இசையமைப்பாளர்கள் விவேக் - மெர்வின் இசையமைக்கிறார்கள்.



ராகுல் ப்ரீத் சிங் தமிழ் மற்றும் தெலுங்கில் மாறி மாறி முன்னணி ஹீரோக்களோடு நடித்து வருகிறார். அவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்த தேவ் படம் பிளாப் ஆன பிறகு அவர் நடிக்கவிருந்த சில படங்கள் கைநழுவி போனது என கூறப்படுகிறது.

மேலும் ராகுல் ப்ரீத் சிங் அடுத்து நடிகர் நாகார்ஜூனா ஜோடியாக நடிக்கும் படத்தில் ஒன்றரை கோடி ரூபாய் சம்பளமாக கேட்டுள்ளாராம்.

இதுவரை ஒருகோடி ரூபாய் சம்பளமாக வாங்கி வந்த அவர் தற்போது 50 லட்சம் அதிகரித்துள்ளார். இனி மற்ற படங்களுக்கும் இதே சம்பளத்தை தான் அவர் கோரவுள்ளாராம்.



# சுந்தர்.சி இயக்கத்தில் விஷால்

சுந்தர்.சி இயக்கத்தில் விஷால் நடிக்கும் படத்தின் ஷூட்டிங், மார்ச் 15-ம் தேதி தொடங்க இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சுராஜ் இயக்கத்தில் 2016-ம் ஆண்டு ரிலீஸான படம் 'கத்தி சண்டை'. விஷால் - தமன்னா இருவரும் இந்தப் படத்தில் ஜோடியாக நடித்தனர்.

முக்கியக் கதாபாத்திரத்தில் வடிவேலு நடித்தார். தெலுங்கு மற்றும் இந்தியிலும் இந்தப் படம் டப் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

இந்நிலையில், 'கத்தி சண்டை' படத்தைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக விஷாலுடன் ஜோடி சேர்கிறார் தமன்னா. விஷால் ஃபிலிம் ஃபேக்டரி மற்றும் ட்ரைடென்ட் ஆர்ட்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து இந்தப் படத்தைத் தயாரிக்கின்றன.

இந்தப் படத்தின் ஷூட்டிங், கடந்த ஜனவரி மாதம் தொடங்குவதாக இருந்தது. ஆனால், சிம்புவை வைத்து சுந்தர்.சி இயக்கிய 'வந்தா ராஜாவாதான் வருவேன்' படத்தின் ரிலீஸ் தாமதமானதால், படப்பிடிப்பு தள்ளிப்போனது.

மார்ச் முதல் வாரத்தில் தொடங்கப்பட இருந்த படப்பிடிப்பு, விஷாலின் 'அயோக்யா' பட ரிலீஸ் வேலைகளால் தள்ளிப்போய், தற்போது மார்ச் 15-ம் தேதி தொடங்க இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்துக்கு 'ஹிப் ஹாப் தமிழா' ஆதி இசையமைக்கிறார்.



# ஸ்மார்ட் போன்களும் பெற்றோர்களின் கடமையும்

இந்தக் காலத்தில் பள்ளி மாணவ, மாணவிகள் எல்லோருடைய மனதையும் எந்தளவுக்கு 'பேஸ் புக்', இன்ஸ்டாகிராம், 'வாட்ஸ் அப்' எல்லாம் ஆக்கிரமித்திருக்கிறது என்று நினைக்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது. டாஸ்மாக் பற்றி கருத்து சொல்லும் நாம் அதை ஒழிப்பதே மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற ஒருமித்த கருத்தை சொல்லி விடுவோம். அதைபோல் 'பேஸ் புக்', 'வாட்ஸ் அப்'பை எல்லாம் ஒழிக்க வேண்டும் என்று நம்மால் சொல்ல முடியாது. அதில் பல நன்மைகளும் இருக்கின்றன. ஆனால் இன்று பெரும்பாலான மாணவர்கள் தேடிப் போவது தீமைகளை நோக்கித்தான். அதையும் நம்மால் மறுக்க முடியாது. அதனால் இன்றைய பெற்றோர்கள் நிலை இரு தலைக்கொள்ளி எறும்பு நிலை தான். பத்து, பதினைந்து வயசு பள்ளிச் சிறுவர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் கூட தங்களுடைய பெரும்பான்மையான நேரத்தை 'பேஸ் புக்', 'வாட்ஸ் அப்'பில் தான் கழிக்கிறார்கள். அவர்கள் செயல்களை கவனித்துப் பார்த்தால், அவர்கள் படிப்பு தொடர்பாகவோ, எதிர்கால முன்னேற்றத்திற்குரிய செய்திகளையோ அவர்கள் அதில் பார்ப்பதில்லை.

அவர்களின் பள்ளித் தோழிகள், நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் படங்களையும் இதர செய்திகளையும் தான் பரிமாறிக் கொள்கிறார்கள். அல்லது அவர்களுக்குப் பிடித்த நடிகர், நடிகைகள் புகைப்படங்கள், பார்த்த சினிமா, அதைப் பற்றிய கருத்துகளே அதில் நிறைந்திருக்கும். அவர்கள் தங்கள் பாட சம்பந்தமாகவோ வேறு நல்ல விஷயங்களையோ அவர்கள் பரிமாறிக்கொள்வதாக தெரியவில்லை. கல்லூரி மாணவர்கள், அவர்கள் வயதை ஒத்த இளைஞர்களின் பேஸ் புக், வாட்ஸ் அப் செய்திகள் இன்னும் மோசமாக இருக்கின்றன.

தங்களுக்குப் பிடித்த நடிகைகளின் கவர்ச்சி படங்கள், அவர்களின் அந்தரங்க வாழ்க்கை பற்றிய செய்திகள், தங்களுடைய வீர தீர செயல்களைக் காட்டும் பல போஸ்களில் போட்டோக்கள், அவைகளுக்கு 'லைக்'குகள், 'கமெண்ட்ஸ்'கள் என்று அவர்கள் படிக்க வேண்டிய நேரங்களை எல்லாம் இந்த 'வாட்ஸ் அப்'பும், 'பேஸ் புக்'கும் விழுங்கியிருக்கும். அதோடு அவர்கள் நிற்பதில்லை. இணையதளங்களில் இருந்து நிறைய ஆபாச வீடியோக்களை எடுத்து, அதை தங்கள் நண்பர்களுக்கு அனுப்புகிறார்கள்.

அல்லது புலி, சிங்கம் மனிதனை அடித்துக் கொல்லும் காட்சி, இயற்கைப் பேரழிவுகள் நாடு நகரங்களை அழிக்கும் காட்சிகள் அதில் நிறைந்திருக்கும். கல்லூரி மாணவர்களுக்கு 'அரியர்ஸ்' அதிகம் ஏற்படக் காரணம் அவர்களின் படிப்புக்குச் செலவிட வேண்டிய நேரம் முழுவதையும் 'பேஸ் புக்', 'வாட்ஸ் அப்'எடுத்துக் கொள்வது தான். இளைஞர்களும், யுவதிகளும் வீட்டில் தங்கள் அறைக் கதவை மூடிவிட்டு, பேஸ் புக்கில் மூழ்கி இருக்கிறார்கள் என்றால், அவர்கள் 'சாட்டிங்'கில் இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

அது இன்னும் மோசமாகப் போய் முடிகிறது. ஆரம்பத்தில் ஆண்கள் பெண்களிடமும், பெண்கள் ஆண்களிடமும் பொதுவான விஷயங்களையே பேச ஆரம்பிப்பார்கள். போகப் போக தங்கள் குடும்ப விஷயங்களைப் பரிமாறி, மெதுவாக அந்தரங்கமான விஷயங்களைப் பேசி, தங்களுடைய கவர்ச்சிப் படங்களை பரிமாறும் நிலைக்குப் போய் விடுவார்கள். பின்னர் செல்போனில் பேச்சு தொடரும். பின்னர் நேரில் சந்திக்க விரும்புவார்கள். அதன் பின் இருவரும் சேர்ந்து அவரவர் குடும்ப மானத்தை காற்றில் பறக்கவிடுவார்கள்.

ஒரு வாலிபனின் தந்தை மேல் நடுரோட்டில் லாரி மோதி விட்டது. அந்தச் செய்தியைச் சொல்ல ஒருவர் அவனை செல்போனில் தொடர்பு கொள்ள முயற்சி செய்திருக்கிறார். அந்த மாணவன் 'சாட்டிங்'கில் மும்முரமாக இருந்ததால் அவன் செல்போனை எடுக்கவில்லை. அவன் தந்தை சரியான உதவியின்றி நடு ரோட்டில் உயிர் விட நேர்ந்தது. இதையெல்லாம் பார்க்கும் போது அறிவியல் சாதனையால் நமக்கு கிடைத்த சமூக வலைத்தளங்களால் மாணவ, மாணவிகளுக்கு பெரிய அளவில் நன்மை கிடைப்பதாகத் தெரியவில்லை.


பெரியவர்களும் மாணவ, மாணவிகளுக்கு புத்தி சொல்லும் தகுதியை இழந்து வருகிறார்கள். இன்று அவர்களும் நிறைய நேரத்தை அதில் செல விடுகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், பிரபலங்களாக இருக்கும் அரசியல்வாதிகள், நடிகர், நடிகைகள், எழுத்தாளர்கள் என்று பல ஆயிரம் 'பேஸ் புக்' நண்பர்கள் அவர்களுக்கு இருப்பார்கள். நடிகர் நடிகைகள் அவர்கள் நடித்த படம், அவர்களுக்கு கிடைத்த சிறப்புகள் பற்றியும், எழுத்தாளர்கள் அவர்கள் எழுதி வெளிவந்த கதை, கட்டுரைகள் பற்றிய செய்திகளையும், அரசியல்வாதிகள், அவர்களுக்கு கிடைத்த பதவி, மாலை மரியாதைகளைப் பற்றிய செய்திகளையும் சமூக வலைத்தளங்களில் வெளியிடுவார்கள்.


பேஸ் புக்கில் இருக்கும் நண்பர்கள் விழுந்து விழுந்து 'லைக்' போடுவார்கள். பலர் 'கமெண்ட்ஸ்' என்ற பெயரில் மணிக்கணக்கில் நேரத்தை செலவு செய்து பாராட்டுப் பத்திரங்கள் படிப்பார்கள். அதை அந்தப் பிரபலங்கள் தங்களுக்கு எத்தனை 'லைக்ஸ்' கிடைத்தன என்று பத்திரிகைகளில் தம்பட்டம் அடித்துக்கொள்ள பயன்படுத்திக்கொள்வார்கள். அவர்கள் பெருமை பேசிக்கொள்ள காரணமாக இருந்த 'பேஸ் புக்', 'வாட்ஸ் அப்' நண்பர்கள் அவர்களுக்கு கிடைத்த ஒரு பாராட்டையோ, அல்லது ஒரு நல்ல கருத்தையோ தங்கள் 'பேஸ் புக்'கில் போட்டால் எந்தப் பிரபலங்களும் 'லைக்' கூட போடாது.

சாதாரண மக்கள் அவர்களைப் பொறுத்தவரை உயிர் இல்லாத பொம்மைகள்தான். அவருக்கு லைக் போடுவதும், பாராட்டுத் தெரிவிப்பதும் அவர்களுக்கு முன் பின் தெரியாத அந்த சாதாரண மக்கள் தான். நிறையப் பேர் பிரபலங்களுக்குத் துதி பாட தங்கள் வாழ்க்கையில் நிறைய நேரத்தை செலவிடுகிறார்கள். பொதுவாகப் பார்க்கும் போது இந்தப் 'பேஸ் புக்', 'வாட்ஸ் அப்' மோகத்தால் மனிதனின் நேரமும், ஆற்றலும் வீணடிக்கப்படுகிறது என்பதை நம்மால் மறுக்க முடியாது. கஞ்சா, அபின் போன்ற போதை வஸ்துகளில் இருந்து கூட இன்றைய இளைய தலைமுறை தப்பித்துக்கொள்ள முடியும்.

இந்தப் 'பேஸ் புக்', 'வாட்ஸ் அப்' மோகத்திலிருந்து தப்பிக்க வழியே இல்லை போலிருக்கிறது. மாணவ, மாணவிகளுக்கு இந்த மோகம் நல்லதல்ல. அதை எப்படியாவது பிரியமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லி புரிய வைத்து, அவர்களை ஸ்மார்ட் போன் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும். பெற்றோர்கள் தான் குழந்தைகளுக்கு 'ரோல் மாடல்' என்று சொல்வார்கள்.

நம்மிடம் இருக்கும் குறைகள் தான் அவர்களிடமும் படியும். நாமே எந்த நேரமும் ஸ்மார்ட் போனும் கைகளுமாக இருந்தால், நம் குழந்தைகளுக்கு எப்படி அதன் தீமையை எடுத்துச் சொல்வது. குழந்தை வளர்ப்பில், ஸ்மார்ட் போன்கள் மாணவ, மாணவியர்களின் எதிர்காலத்தை பாதிக்காதபடி பார்த்துக்கொள்வது, பெற்றோர்களுக்கு ஒரு முக்கிய கடமையாக இன்று மாறிவிட்டது.



# எலும்பு வலிகள்
## வருவதற்கான காரணமும் அறிகுறிகளும்

எலும்புகள் திடீரென மென்மையான மாதிரி உணர்தல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எலும்புகளில் வலி மற்றும் அசௌகரியமான உணர்வு போன்றவையே எலும்பு வலியாக கருதப்படுகிறது. எலும்பு வலி என்பது தசை மற்றும் மூட்டு வலியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. உடல் இயக்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எலும்பு வலி இருக்கும். எலும்புகளின் அமைப்பு மற்றும் சாதாரண இயக்கங்களை பாதிக்கிற நோய்களின் விளைவால் எலும்பு வலி ஏற்படக்கூடும்.

எலும்பு வலி ஏன் ஏற்படுகிறது? அதன் அறிகுறிகள்

★ கீழே விழுவது, வாகன விபத்துகளின் போது பலமாக அடிபட்டு கொள்வது போன்றவற்றால் எலும்பு வலி வரலாம். அப்படி விழுவதன் விளைவால் எலும்புகள் உடைந்து, ஃபிராக்சர் ஏற்படலாம். எலும்புகளுக்கு ஏற்படும் எந்தவகையான பாதிப்பும் இதற்கு காரணமாகலாம்.

அறிகுறிகள் : வீக்கம், அசௌகரியமான உணர்வு, எலும்புகளின் அமைப்பில் வித்தியாசம் தெரிவது, எலும்புகள் அசையும்போது வித்தியாசமான சத்தம் வருவது.

★ எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு பலவகையான ஊட்டச்சத்துக்கள் அவசியம். மிக முக்கியமானவை கால்சியம் மற்றும் வைட்டமின் டி. இவை இரண்டும் குறையும் போது ஆஸ்டியோபொரோசிஸ் எனப்படுகிற நோய் ஏற்படுவது சகஜம். இந்த நோய் தீவிர நிலையை எட்டும்போது எலும்புகளில் வலி ஏற்படும்.

அறிகுறிகள் : தசை மற்றும் திசுக்களில் வலி, தூக்கமின்மை, தசைபிடிப்பு, அதிக களைப்பு, பலவீனமாக உணர்தல்.

★ உடலின் ஏதோ ஒரு பகுதியில் புற்றுநோய் உண்டாகி, அது சீக்கிரமே கவனித்து சிகிச்சை அளிக்கப்படாமல் விடப்பட்டால் மற்ற உடல் உறுப்புகளுக்கும் பரவும். மார்பகம், சிறுநீரகம், நுரையீரல், தைராய்டு புற்றுநோய்கள் தீவிரமடையும்போது எலும்புகளுக்கும் பரவும். அதன் காரணமாக எலும்புகளில் கடுமையான வலி ஏற்படும்.

அறிகுறிகள் : தலை வலி, நெஞ்சு வலி, ஃபிராக்சர், மயக்கம், மஞ்சள் காமாலை, வயிறு வீக்கம், மூச்சுவிடுவதில் சிரமம்.

★ எலும்புகளிலேயே உருவாகும் புற்று நோய் இது. இது மிக அரிதான புற்றுநோய் என்றாலும் ஏற்பட்டுவிட்டால் எலும்புகளின் அடிப்படை அமைப்பையே சிதைத்துவிடும். எலும்புகளில் வலி அதிகரிக்கும்.

அறிகுறிகள் : எலும்புகள் உடைதல், மரத்து போதல், தோலின் அடியில் வீக்கம்.

★ சில நோய்கள், உதாரணத்துக்கு 'சிக்கெல் செல் அனீமியா' போன்றவை எலும்புகளுக்கு செல்லும் ரத்த ஓட்டத்தை தடை செய்பவை. போதுமான ரத்த ஓட்டம் இல்லாவிட்டால் எலும்பு திசுக்கள் அழிந்துவிடும். இதனால் எலும்புகள் பலவீனமாகி, அவற்றில் வலியும் ஏற்படும்.

அறிகுறிகள் : மூட்டு வலி, மூட்டுகளை அசைக்க முடியாத நிலை, பலவீனம்.

★ எலும்பு மஜ்ஜைகளில் ஏற்படும் புற்று நோய்க்கு லுகேமியா என்று பெயர். எலும்பு செல்களின் உற்பத்திக்கு காரணமான எலும்பு மஜ்ஜை எலும்புகளில் காணப்படும். அவற்றில் உண்டாகும் புற்றுநோய் கடுமையான எலும்பு வலியை கொடுக்கும். கால்களில் இந்த வலி அதிகமாக இருக்கும்.

அறிகுறிகள் : தோல் வெளிறிப் போதல், களைப்பு, உடல் எடை குறைவது, மூச்சு விடுவதில் சிரமம்.

# குளியலறையுடன் கூடிய கழிப்பறை நல்லதா?

வாழ்வின் ஒவ்வொரு துணுக்கையும் சுத்தம் என்ற பூதக் கண்ணாடியையும், சுகாதாரம் என்ற நுண்ணோக்கியையும் வைத்து நோக்குகின்ற இன்றைய தலைமுறையினர், தங்கள் வீடுகளில் உள்ள ஒரு சுகாதார குறைபாட்டைப் பற்றி கொஞ்சமேனும் விழிப்புணர்வு பெற்றுள்ளதாக தெரியவில்லை. அதுதான், டாய்லெட் எனப்படுகின்ற குளியலறையுடன் கூடிய நவீன கழிப்பறை அல்லது கழிப்பறையுடன் கூடிய குளியலறை.

அதாவது, வீட்டுக்குள்ளேயே அமைக்கப்படுகின்ற குளியலறையுடன் கூடிய கழிவறை. தனித்தனி வீடுகளின் அளவு குறையத் தொடங்கியதாலும், அடுக்குமாடி வீடுகள் பெருகியதாலும், இடவசதி கருதி கழிவறைகளை குடியிருப்புக்குள்ளேயே கட்டிக் கொள்வது வழக்கமாகிப் போனது. இப்படி இருந்த போதிலும், நமக்குத் தெரிந்து 1980-களின் தொடக்கம் வரை, வீட்டிற்குள்ளேயேகூட குளியலறையும், கழிவறையும் தனித்தனியாகத்தான் அமைக்கப்பட்டன. அதன் பின்புதான் குளியலறை, கழிவறை இரண்டையும் இணைத்து, ஒரே அறையாக வடிவமைக்கும் போக்கு வளரத் தொடங்கியது.

தமது கடைசி காலத்தில், பிள்ளையின் சொந்த வீட்டில் நகர வாழ்க்கை வாழ ஆசைப்பட்டு வந்த முந்தைய தலைமுறையைச் சேர்ந்த தாய் தந்தையர் பலர், இந்த அதிசய டாய்லெட்டுகளைக் கண்டு அதிர்ந்து, தங்களது பழைய வீடுகளுக்கே சென்றுவிட்டனர். ஆதரிக்க வேறு யாரும் இல்லாத பெரியவர்கள் சிலர் இந்தப் புதிய அலர்ஜி கலாசாரத்தை சகித்துக்கொள்ள பழகிக்கொண்டதும் நடந்தது.

மனிதன், பழக்கத்தின் அடிமை என்பதை நிரூபிப்பது போன்று, இப்போது உள்ள பழைய தலைமுறையினரும் இதைப் பற்றி பெரிதாக அலட்டிக்கொள்வதாக தெரியவில்லை. இத்தகைய நவீன டாய்லெட்டில் அமைந்துள்ள மேற்கத்திய கழிவறை பீங்கானை மூடிவிட்டு குளிக்கிற வழக்கமிருக்கிறது. ஆனாலும், அந்த மூடி மேலேயே குளியல் சோப்பு, ஷாம்பு போன்றவற்றை வைத்து, அவற்றைப் பயன்படுத்தி குளிக்கின்றனர். கேட்டால் இட வசதி குறைவு என்கிறார்கள்.

சில வீட்டில் கழுவுவதற்கான சமையல் பாத்திரங்கள், மேற்கத்திய பாணி கழிவறைப் பீங்கானின் பக்கத்தில் குவிக்கப்படுகின்றன. கேட்டால், அவர்கள் வீட்டின் சிறிய சமையலறையில் பாத்திரங்களை கழுவ போதிய இடமில்லை என்று பதில் வந்தது. இது மிகப் பெரிய சுகாதாரக்கேடு.

# உடல் ஆரோக்கியத்திற்கு செய்யவேண்டியவை

சீனி உண்பதினை நிறுத்துங்கள். சர்க்கரை, வெள்ளை சர்க்கரை விஷம்தான். இன்று புற்று நோய்க்கு கூட ஒரு முக்கிய காரணமாக வெள்ளை சர்க்கரையை குறிப்பிடுகின்றனர். சர்க்கரை சுவை ஒருவரை அடிமைப்படுத்தி விடும். சர்க்கரை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியினை குறைத்து விடும். உடலிலுள்ள தாது உப்புகளை அழிக்கும். அதிக சர்க்கரை சாப்பிட வேண்டும் என்ற ஆசையினைத் தூண்டும். அதிக பசியினைத் தூண்டும். எனவே அனைவருமே வெள்ளை சர்க்கரையினை தவிர்த்து விடுங்கள்.

உண்ணா விரதம்:- சாப்பிடும் பொழுது உடலில் உள்ள செல்கள் பெருகி, வளர்ந்து வரும். உண்ணாவிரதம் இருக்கும் பொழுது குறிப்பாக 10 மணி நேரங்கள் சென்று செல்கள் உடலை பராமரிக்க ரிப்பேர் செய்யவும் செய்கின்றது. நோய் தீருதல், புண்கள் ஆறுதல் இவை நிகழ்கின்றன. இது குறிப்பிட்ட நேரங்கள் வரை நிகழும். எனவே உண்ணாவிரதம் என்பது மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை இருக்கலாம். தண்ணீர் மட்டும் குடிக்கலாம். இல்லையெனில் அவ்வப்போது சில மணி நேரங்கள் உண்ணாது இருக்கலாம். ஒருவேளை மட்டும், காய்கறிகளோ, பழங்களோ மட்டும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவ்வப்போது நீர் குடியுங்கள் என அறிவுறுத்தப்படுகின்றது.

உடற்பயிற்சி: தினமும் அரை மணி நேரம் நடங்கள். கை, கால்களுக்கு பலம் சேர்க்கும் பயிற்சிகளை வாரம் 2 முறையாவது செய்யுங்கள். ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை நாற்காலியில் இருந்து எழுந்து நடங்கள்.

பயிர் விளையும் நிலத்தில் மண் வளம் குறைந்து இருக்கும் வாய்ப்புகள் அதிகம். அதுபோல் நமது உடலில் வலிமையேற்ற மருத்துவம் மூலம் தேவையான சத்து மாத்திரைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

கண்டிப்பாக தியானம் செய்ய கற்றுக் கொள்ளுங்கள். இது ஆரோக்கியம் சம்பந்தப்பட்டது.

# கோடையின் தாக்கத்தை சமாளிப்பது எப்படி?



கோடை காலம் மார்ச் மாதம் தொடங்கி ஏப்ரல், மே மாதங்கள் வரை நீடிக்கும். தற்போது கோடை காலம் தொடங்கி உள்ளதால் கோவையில் வெயில் சுட்டெரிக்க தொடங்கி உள்ளது. வெயிலி.

கோடை கால வெயிலுக்கு சின்னம்மை, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்கள் ஏற்படும். வெயிலின் தாக்கத்தால் உடலில் தண்ணீரின் அளவு குறைந்து விடுகிறது. இதனால் உயர் ரத்த அழுத்தம், தூக்கமின்மை, நீர்க்கடுப்பு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களும் உருவாகும். இதில் இருந்து தப்பிக்க தினசரி, 2ட முதல் 3 லிட்டர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும். கோடையில் குழந்தைகளுக்கு தடிமனான ஆடைகளை உடுத்தக் கூடாது.

தோல் வறட்சியானால், சிறுநீர் சரியாக கழிக்க முடியாது. வியர்வை அதிகமாக வரும் போது, வியர்க்குருவும் வரும். இதனால் உடலில் தடிப்பு போன்று இருக்கும். அதை தவிர்க்க, தினமும் காலை, மாலை என இரண்டு முறை குளிக்க வேண்டும்.

வெயில் காலத்தில் வெளியில் சென்று வந்த உடன், குளிர்ந்த தண்ணீரை குடிக்க கூடாது. வெதுவெதுப்பான தண்ணீரை அருந்தலாம். கோடையில் சிறுநீர்க்கடுப்பு அதிக தொல்லை தரும். அளவுக்கு மீறி வியர்வை வெளியேறுதல் மற்றும் தேவையான அளவு தண்ணீர் குடிக்காதது இதற்கு முக்கிய காரணம் ஆகும். உடலில் தண்ணீரின் அளவு குறையும்போது சிறுநீரின் அளவும் குறைந்துவிடும். சிறுநீரின் மூலம் வெளியேற வேண்டிய உப்புகள் கடினமாகி, சிறுநீர் பாதையில் படிகங்களாக படிந்துவிடும்.

இதன் விளைவுதான் நீர்க்கடுப்பு. அதிகளவு தண்ணீர் குடித்தால் இந்த பிரச்சினை இருக்காது.

வெயில் காலத்தில் இளநீர், மோர், பதநீர், நுங்கு போன்ற குளிர்ச்சியானவற்றை எடுத்துக் கொள்ளலாம். இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கால்சியம், மக்னீசியம் ஆகிய தாதுக்கள் உடலில் உள்ள வெப்பத்தை உள்வாங்கி, சுற்றுச்சூழல் வெப்ப நிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தை குறைக்கிறது.

அத்துடன் தர்ப்பூசணி, வெள்ளரி, கொய்யா, பப்பாளி, சாத்துக்குடி, ஆரஞ்சு, திராட்சை, கிர்ணி போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களையோ பழச்சாறுகளையோ சாப்பிடலாம்.

இருசக்கர வாகனம் ஓட்டுபவர்கள் வெயிலில் அதிக நேரம் பயணிக்க வேண்டியிருந்தால், கண்களுக்கு 'சன் கிளாஸ்' அணிந்து கொள்ளலாம். இதுபோன்று செயல்பட்டால் கோடை வெயிலால் ஏற்படும் நோய்களில் இருந்து தப்பிவிடலாம்.




# ஸ்மார்ட்போன்களின் பட்டரி ஆயுள் நீடிக்க...

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போனில் எப்போதும் தீராத பிரச்சனையாக இருக்கும் பட்டரி பக்கப் நேரத்தை அதிகரிக்க நீங்கள் என்ன செய்யலாம்.

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் தீர்வு காண முடியாத பிரச்சனையாக அதன் பட்டரி பக்கப் இருக்கிறது. முந்தைய மொபைல் போன்களில் வாய்ஸ் கால், எஸ்எம்எஸ் என குறைந்த அம்சங்கள் இருந்ததால் பேட்டரி பக்கப் குறைந்தபட்சம் இரண்டு நாட்களுக்கு நீடித்தது. ஆனால் இன்றைய ஸ்மார்ட்போன்களில் தகவல் பரிமாற்றம் மட்டுமின்றி பொழுதுபோக்கு, கேமிங் என பல்வேறு வசதிகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்மார்ட்போன்களில் அதிகப்படியான அம்சங்கள் நமக்குத் தேவையான பல்வேறு வசதிகளை வழங்கினாலும், சில மணி நேரங்களில் ஸ்மார்ட்போனை ஆஃப் செய்துவிடுகிறது. இதை எதிர்கொள்ள பேட்டரி திறனை அதிகரிப்பது, எந்நேரமும் கையில் வைத்திருக்க கூடிய பவர் பேங்க் உள்ளிட்ட சாதனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எனினும் பட்டரி பேக்கப் நேரத்தை அதிகரிக்கும் திறன் கொண்ட பேட்டரி இன்றளவும் கண்டறியப்படவில்லை.

### பட்டரி பக்கப்

ஸ்மார்ட்போன் பட்டரி நீண்ட நேரம் நீடிக்க அதன் பட்டரி சேவர் மோடினை ஆன் செய்யலாம். இதை செய்ய ஸ்மார்ட்போனின் செட்டிங்ஸ் -- பட்டரி -- மெனுவில் உள்ள பட்டரி சேவர் மோடினை ஆன் செய்ய வேண்டும்.

பட்டரி சேவர் மோடினை ஆன் செய்ததும் ஸ்மார்ட்போன் திரையின் மேல் மற்றும் கீழ் பகுதிகளின் நிறம் இளஞ்சிவப்பு நிறத்தில் மாறியிருப்பதை காணலாம்.

ஸ்மார்ட்போன் பட்டரி நிறைவுறும் போது பட்டரி சேவர் மோடினை தானாக இயக்கச் செய்யும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது. இதை இயக்க 'Turn on automatically' ஆப்ஷனில் பட்டரி சதவிகிதத்தை குறித்து ஆக்டிவேட் செய்யலாம். இவ்வாறு செய்ததும் நீங்கள் ஆக்டிவேட் செய்திருந்த அளவில் பேட்டரி வரும் போது தானாக பேட்டரி சேவர் மோட் இயக்கப்பட்டு விடும்.

# வேகமாக சார்ஜ் செய்வது எப்படி?

ஸ்மார்ட்போனினை வேகமாக சார்ஜ் செய்ய ஸ்மார்ட்போனினை சார்ஜரில் வைத்து, ஸ்மார்ட்போன் செட்டிங்ஸ் -- பேட்டரி செட்டிங்ஸ் -- ரேபிட் சார்ஜிங் வசதியை இயக்க வேண்டும். இவ்வாறு செய்ததும் ஸ்மார்ட்போனில் வேகமாக சார்ஜ் ஏற்றப்படும்.

### ஸ்மார்ட்போன் பிரைட்னஸ்

ஸ்மார்ட்போனின் செட்டிங்ஸ் -- டிவைஸ் -- டிஸ்ப்ளே ஆப்ஷனை கிளிக் செய்ய வேண்டும். இனி அடாப்டிவ் பிரைட்னஸ் (Adaptive brightness) ஆப்ஷனை கிளிக் செய்து ஆன் செய்ய வேண்டும். இந்த ஆப்ஷன் ஸ்மார்ட்போன் திரை பிரைட்னஸ் அளவை பேட்டரி பேக்கப் நேரத்திற்கு ஏற்ப தானாகவே மாற்றியமைக்கும்.


இதுதவிர ஸ்மார்ட்போன் பேட்டரியை மேம்படுத்த தேவையற்ற நேரங்களில் மொபைல் டேட்டா மற்றும் வைபை, ஜி.பி.எஸ்., ஸ்மார்ட்போன் லொகேஷனை உள்ளிட்டவற்றை ஆஃப் செய்து வைக்கலாம். ஸ்மார்ட்போன் திரையில் கருப்பு நிற வால்பேப்பர்களை வைப்பது அதன் பேட்டரி பேக்கப் நேரத்தை அதிகரிக்கும்.

# நேர்காணல்; இனி பயமில்லை

வேலைவாய்ப்புக்கான நேர்காணலுக்குச் செல்லும்போது சற்றுத் தயக்கமும் பதற்றமும் ஏற்படுவது இயல்பு. நேர்காணலை நம்பிக்கையோடு எதிர்கொள்ள வழிகாட்டுகிறது 'இண்டர்வியூபுட்டி' என்ற (https://interviewbuddy.in/ ) இணையதளம்.

வேலைவாய்ப்பு தேடலில் ஈடுபட்டுள்ளவர்கள், 'மாக் இண்டர்வியூ' எனச் சொல்லப்படும் சோதனை நேர்காணலில் ஈடுபட்டு தங்களை தயார்படுத்திக் கொள்ள இத்தளம் உதவுகிறது. இந்தத் தளத்தில் பதிவு செய்துகொண்டால், துறை சார்ந்த வல்லுநர்கள் நடத்தும் நேர்காணலில் பங்கேற்கலாம். கேள்விகளுக்குப் பதில் அளித்து பயிற்சி பெறலாம். இணையம் மூலம் நேர்காணலில் பங்கேற்கலாம். நேர்காணல் செயல்பாடு தொடர்பான மதிப்பெண்களையும் பெறலாம்.

நேர்காணலை மீண்டும் பார்த்துக்கொள்ளும் வசதியும் உண்டு. ஆனால், இதற்காகக் கட்டணம் செலுத்த வேண்டும். மாணவர்களுக்குச் சலுகை உண்டு. 'இண்டர்வியூபிட்' (https://www.interviewbit.com/) என்ற இணையதளமும் இதேபோன்ற சேவையை அளிக்கிறது.




# டைப் செய்யாமல் தகவல் அனுப்புவது எப்படி?

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போனில் டைப் செய்யாமலேயே டைப் செய்து, மற்றவர்களுக்கு குறுந்தகவல் அனுப்புவது எப்படி?

வாகனங்களை ஓட்டும் போது ஸ்மார்ட்போன்களில் பேசுவதும், டெக்ஸ்ட் செய்வதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் ஆகும். இந்த கவலையை போக்கவே ஆண்ட்ராய்டில் ஸ்பீச் டு டெக்ஸ்ட் வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வசதியை கொண்டு ஸ்மார்ட்போனில் பேசினாலே டெக்ஸ்ட் டைப் செய்யப்படும்.

★ உங்களது ஸ்மார்ட்போனில் டைப் செய்ய வேண்டிய ஆப்ஷனில் கீபோர்டு செயலியை ஓபன் செய்ய வேண்டும்.

★ இனி கீபோர்டின் ஓரத்தில் காணப்படும் மைக்ரோபோன் பட்டனை கிளிக் செய்ய வேண்டும்.

★ இனி ஸ்பீக் நௌ (Speak Now) ஆப்ஷன் தெரிந்ததும், நீங்கள் டைப் செய்ய வேண்டியவற்றை பேச துவங்கலாம்.

★ அடுத்து சிறப்பு குறியீடுகளை டைப் செய்ய வேண்டுமெனில், அதற்கேற்ற வார்த்தைகளை கூற வேண்டும்.

★ புதிய பத்தியை துவங்க அதற்கேற்ற கட்டளையை கூற வேண்டும்.

# ஸ்மார்ட்போன்களை மால்வேர் பாதிப்பிலிருந்து பாதுகாப்பது எப்படி?

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் எவ்வித மால்வேர் பாதிப்புகளிலும் சிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் .

உலகம் முழுக்க மால்வேர் சார்ந்த சைபர் அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது. சமீபத்திய ரான்சம்வேர் தாக்குதல்கள் இணைய உலகின் அபாயத்தை நமக்கு உணர வைத்தது. உலகின் பெரும் நிறுவனங்களும் மால்வேர் பாதிப்புகளில் சிக்கின.

கணினிகளை போன்றே, ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் இண்டர்நெட் அத்தியாவசிய தேவையாகி விட்டது. இண்டர்நெட் நமக்கு பல்வேறு வசதிகளை வழங்கினாலும் அவை நமக்கு வம்பிழுக்கவும் வாய்ப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

இவ்வாறு இண்டர்நெட் மூலம் ஏற்படும் அபாயங்களில் மால்வேர் தாக்குதல் முக்கியமானதாக உள்ளது.

### பிரான்ட்டெட் செயலிகள்

ஸ்மார்ட்போன்களுக்கான செயலிகளை எப்போதும் தரமான பிளே ஸ்டோர்களில் இருந்து மட்டுமே டவுன்லோடு செய்ய வேண்டும். பொதுவாக கூகுள், அமேசான், சாம்சங் மற்றும் சில நிறுவனங்கள் தங்களது பிளே ஸ்டோர்களில் உள்ள செயலிகளை பாதுகாப்பாக வைத்து கொள்கின்றன.



இதனால் நீங்கள் டவுன்லோடு செய்யும் செயலி பாதுகாப்பானதாகவும், சாதனத்திற்கு மால்வேர் பாதிப்பை ஏற்படுத்தாமல் தடுக்கவும் செய்யும். இதற்கென செயலிகளில் சீரான இடைவெளியில் அப்டேட்கள் வழங்கப்படுகின்றன.

### போலி செயலிகள்

ஸ்மார்ட்போன்களில் டவுன்லோடு செய்யும் செயலிகள் உண்மையானவை தானா என்பதை உறுதி செய்ய வேண்டும். போலியான செயலிகளை நம்ப முடியாத வசதிகள், குறைந்த வாடிக்கையாளர் மதிப்பீடு (ரீவியூ) உள்ளிட்டவற்றை கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

போலியான செயலிகளில் ஸ்மார்ட்போன் சாதனங்களை பாதிக்கும் மால்வேர்கள் அடங்கியிருக்கும். இவை எந்நேரத்திலும் நமது தனிப்பட்ட தகவல்கள் மற்றும் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

### செட்டிங்ஸ்

மால்வேர் தாக்குதல்களை எதிர்கொள்ள ஆண்ட்ராய்டு இயங்குதளம் தயாராகி வருகிறது. அந்த வகையில் ஆண்ட்ராய்டு 2.2 மற்றும் அதற்கும் அதிகமான பதிப்புகளில் இருந்தே ஆண்ட்ராய்டு சாதனங்களை பாதுகாக்கும் வசதி வழங்கப்படுகிறது.

இதனால் பிளே ஸ்டோர்களில் இருந்து டவுன்லோடு செய்யப்படும் செயலிகளில் ஏதேனும் பாதிப்பு இருக்கும் பட்சத்தில் அதனை கூகுள் ஸ்கேன் செய்து உங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து விடும்.

இதே வசதியை கூகுள் செட்டிங்ஸ் பகுதிக்கு சென்றும் இயக்க முடியும். ஆண்ட்ராய்டு 4.2 மற்றும் அதற்கும் அதிகமான பதிப்புகளில் இந்த வசதியை இயக்க, செட்டிங்ஸ் -- செக்யூரிட்டி -- வெரிஃபை ஆப்ஸ் பகுதிக்கு சென்று பாதுகாப்பற்ற செயலிகளை கண்டறிய முடியும்.

### மென்பொருள் அப்டேட்

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் வழங்கப்படும் மென்பொருள் அப்டேட்களை சீரான இடைவெளியில் டவுன்லோடு செய்ய வேண்டும். ஸ்மார்ட்போன்களை அடிக்கடி அப்டேட் செய்யும் போது அவை அனைத்து வித மால்வேர் மற்றும் இதர பாதிப்புகளில் சிக்காமல் தவிர்க்க முடியும்.

ஸ்மார்ட்போன் மட்டுமின்றி நீங்கள் பயன்படுத்தும் பிளே ஸ்டோர்களுக்கு சென்று செயலிகளையும் அப்டேட் செய்து கொள்ள வேண்டும். உங்களது சாதனத்தை போன்றே செயலிகளும் அப்டேட் செய்யப்பட்டிருப்பது, மால்வேர் தாக்குதல்களை தவிர்க்க உதவும்.

### ஆண்டிவைரஸ் மென்பொருள்

ஸ்மார்ட்போன்களில் ஆண்டிவைரஸ் போன்ற மென்பொருள்களை டவுன்லோடு செய்வது குறித்து பல்வேறு புரளிகள் இருந்தாலும், இவை சாதனங்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பது மட்டும் உறுதியானதாகும்.

மேலும் இதுபோன்ற மென்பொருள்கள் சாதனங்கள் ஏதிர்கொள்ளும் பாதிப்புகளை, தடுத்து நிறுத்துவதோடு சாதனத்தினுள் எவ்வித வைரஸ் மற்றும் மால்வேர்களையும் அனுமதிக்காது.

ஆண்டிவைரஸ் மென்பொருள்களை தேர்வு செய்வது அவரவர் விருப்பம் தான். எனினும் பிரபலமான ஆண்டிவைரஸ் நிறுவனங்களை தேர்வு செய்வது நல்லது.

# இமோஜிகள் உங்கள் கைககளில்...





ஸ்மார்ட்போனில் வாழ்த்து செய்தி அனுப்புவதாக இருந்தாலும் சரி, சாதாரண வாட்ஸ் அப் செய்தி அனுப்புவதாக இருந்தாலும் சரி, இமோஜி எனப்படும் சித்திர எழுத்துகளை நாடுவதே பலரது வழக்கம். தேவையான இமோஜிகளை தேர்வு செய்யும் வசதி போன் விசைப் பலகையிலேயே இருக்கிறது என்றாலும், இதற்கென பிரத்யேக செயலிகளும் இல்லாமல் இல்லை. அந்த வகையில் 'டெக்ஸ்ட் டு இமோஜி' செயலி வார்த்தைகளை இமோஜிகளாக மாற்றித்தருகிறது.

இதில் உள்ள தேடல் கட்டத்தில் ஆங்கில வார்த்தைகளை டைப் செய்து அதற்கு பொருத்தமான இமோஜிகளை கண்டுபிடிக்கலாம். இது தவிர ஆயிரக்கணக்கான இமோஜிகளிலிருந்தும் தேர்வு செய்து கொள்ளலாம்.

இமோஜி வாசகங்களை விருப்பம்போல மாற்றிக்கொள்ளும் வசதியும் இருக்கிறது. இவற்றை சமூக ஊடகங்களில் பகிரும் வசதியும் இருக்கிறது. இமோஜிகளை நகலெடுக்கும் வசதியும் இருக்கிறது. இமோஜி பிரியர்களுக்கு சுவாரஸ்யமான அனுபவமாக இந்தச் செயலி அமைந்துள்ளது.

மேலும் தகவல்களுக்கு: http://bit.ly/2tBl6vn

# யூடியூப் வீடியோக்களை பின்னணியில் Play செய்வது எப்படி?




யூடியூப் பயன்படுத்தும் போது மற்ற செயலிகளை இயக்கினால் யூடியூப் செயலியும் ஸ்டாப் ஆகிடும். இங்கு யூடியூப் வீடியோக்களை பார்க்கும் போது நோட்டிபிகேஷன்களால் இடையூறு ஏற்படாமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்.

யூடியூப் தளம் பொழுதுபோக்கு முதல் பல்வேறு தகவல்களை வீடியோ வடிவில் பார்த்து தெரிந்து கொள்ள வழி செய்கிறது. ஸ்மார்ட்போன்களில் யூடியூப் பயன்படுத்தும் போது நோட்டிபிகேஷன் அல்லது குறுந்தகவல்களை அனுப்பும் போது வீடியோவும் நிறுத்தப்பட்டு விடும். ஆனால், யூடியூப் வீடியோ நிறுத்தப்படாமல் மற்ற செயலிகளை பயன்படுத்தவே பலரும் விரும்புவர்.

கணினிகளில் யூடியூப் வீடியோக்களை பின்னணியில் இயக்கி மற்ற செயலிகளை பயன்படுத்துவதை போன்று ஸ்மார்ட்போனிலும் வீடியோக்களை பின்னணியில் இயக்க சில வழிமுறைகள் உள்ளன. இங்கு ஸ்மார்ட்போன்களில் யூடியூப் வீடியோக்களை நிறுத்தமால் மற்ற செயலிகளை பயன்படுத்த என்ன செய்ய வேண்டும்

### ஃபயர்பாக்ஸ் பிரவுசர்

ஸ்மார்ட்போனில் ஃபயர்பாக்ஸ் பிரவுசர் பயன்படுத்துவோருக்கு இந்த வழிமுறை தெரிந்திருக்க வாய்ப்புகள் இருக்கிறது. யூடியூப் செயலியை ஃபயர்பாக்ஸ் செயலியில் பயன்படுத்தும் போது வீடியோக்களை ஸ்கிரீன் ஆஃப் மோடில் பயன்படுத்தும் வசதியை வழங்குகிறது. இதனால் ஸ்மார்ட்போனில் மற்ற செயலிகளை பயன்படுத்தும் போதும் யூடியூப் வீடியோ இயங்கும்.

### யூடியூப் ரெட்

அடுத்து யூடியூப் ரெட் சேவைக்கு பதிவு செய்யலாம். எனினும் யூடியூப் ரெட் சேவைக்கு மாதம் ரூ.666.83 செலுத்த வேண்டும். இந்த செயலியில் பேக்கிரவுண்டு பிளே எனும் ஆப்ஷன் வழங்கப்படுகிறது, இதனால் வீடியோக்களை பின்னணியில் இயக்கி மற்ற செயலிகளை பயன்படுத்த முடியும்.

இந்த சேவையில் யூடியூப் விளம்பரங்கள் நீக்கப்பட்டு கூகுள் பிளே மியூசிக் சேவையும் வழங்கப்படுகிறது. மேலும் ஏற்கனவே கூகுள் பிளே மியூசிக் சேவையை பயன்படுத்துவோர் யூடியூப் ரெட் சேவையை இலவசமாக பெற முடியும்.

### ஐபோனில் என்ன செய்யலாம்

சஃபாரி பிரவுசரில் யூடியூப் தளம் சென்று வீடியோவை பிளே செய்ய வேண்டும். அடுத்து ஹோம் பட்டனை கிளிக் செய்து கண்ட்ரோல் சென்டரில் மீண்டும் பிளே பட்டனை கிளிக் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும் போது வீடியோ மீண்டும் பிளே ஆகும். இதனால் எவ்வித மூன்றாம் தரப்பு செயலி மற்றும் கட்டண சேவைகளையும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

# விண்கல்லில் சவாரி செய்யும் விண்கலம்

ஜப்பானிய விண்வெளி அமைப்பான, 'ஜாக்சா' அனுப்பிய, 'ஹயாபுசா - 2' விண்கலம், வெற்றிகரமாக இரண்டு சாதனைகளை செய்திருக்கிறது. முதலாவது, பூமிக்கு அருகில் கடந்து செல்லும் விண்கல்லான, 'ரியுகூ'வின் மேல் பத்திரமாகச் சென்று அமர்ந்து கொண்டது. அடுத்தது, 1 கி.மீ., நீளமுள்ள அந்த விண்கல்லை குடைந்து, அதன் துகள்களை சேகரித்திருப்பது.

கடந்த, 2014ல் ஏவப்பட்ட ஹயாபுசா - 2 விண்கலம், 2018 ஜூனில் ரியுகூவின் சுற்றுவட்டப்பாதையை நெருங்கியது. பின், செப்டம்பர், 2018ல் இரண்டு துரப்பணக் கருவிகளை வெற்றிகரமாக ரியுகூவின் மேல் அமரச் செய்தது.

அந்த இரண்டு துரப்பணக் கருவிகளும் ரியுகூவின் மேற்பரப்பைக் கிளறி, துகள்களை சேகரித்தன. ஆனால் ரியுகூ விண்கல் கணித்ததைவிட கடினமாக இருந்ததால், பிற சோதனைகளை முடித்த பின், ரியுகூவை துளையிடும் கடினமான பணியை செய்யலாம் என, ஜாக்சா விஞ்ஞானிகள் ஒத்திவைத்தனர்.

விண்கல்லிலிருந்து, 20 கி.மீ., துாரத்தில் கண்காணிப்பிலிருந்த, ஹயாபுசா - 2 விண்கலம், கடந்த வாரம் பத்திரமாக ரியுகூ மீது தரையிறங்கியது. அடுத்த, 18 மாதங்களுக்கு அது அங்கேயே இருக்கும். துரப்பணக் கருவிகள் ரியுகூவை குடைந்து, மேலும் துகள் மாதிரிகளை எடுத்து, 2022ல் பூமிக்கு திரும்பும்.

பிரபஞ்சத்தில், 4.6 பில்லியன் ஆண்டுகளுக்கும் முந்தைய விண்கற்களின் மாதிரிகளை ஆராய்ந்தால், நமது சூரிய மண்டலம் உருவான விதம், உயிர்கள் உருவான விதம் போன்றவற்றை அறிய முடியும் என, விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# ஹோலோ லென்ஸ் 2



மைக்ரோசாப்ட் வெளியிட்டுள்ள ஹோலோ லென்ஸ் - 2 என்ற தலை அணி கருவி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 'விர்ச்சுவல் ரியாலிட்டி' எனப்படும் மெய்நிகர் மற்றும், 'ஆக்மென்டெட் ரியாலிட்டி' எனப்படும் மேம்படுத்தப்பட்ட மெய்நிகர் ஆகிய, இரு தொழில்நுட்பங்களைக் கலந்தது தான் ஹோலோ லென்ஸ் - 2.

ஏற்கனவே, 2015ல் வெளியிடப்பட்ட ஹோலோ லென்சில் இருந்த குறைகளை நீக்கி, பல புதிய வசதிகளுடன் வந்திருக்கிறது இரண்டாம் பதிப்பு. கண்ணாடி போல அணிந்துகொள்ளும் இக்கருவி, கண் விழிகள், கை விரல்களின் அசைவுகளை துல்லியமாக அறிந்து செயல்படக் கூடியது. இதை அணிபவரின் கண்களுக்கு முன்னே திரை இல்லாமலே காட்சிகள் முப்பரிமாணத்தில் விரியும். இதை மற்றவர்கள் பார்க்க முடியாது. தொழில்துறைக்கான வடிவமைப்பு, தொலைதூர இயக்கம் போன்ற பல இடங்களில், ஹோலோ லென்ஸ் பயன்படும் என்கிறது மைக்ரோசாப்ட். இது நம்மை போன்றவர்களுக்கானது இல்லை என்பது மட்டும் புரிகிறது.

## மிக்ஸி வாங்கும் போது கவனிக்கவேண்டியவை...

சமையல் என்றாலே மசாலா அரைக்காமல் எந்த சமையலும் இல்லை எனலாம். அந்த அளவிற்கு தேங்காய், மசாலாப் பொருட்கள், வெங்காயம், தக்காளி என்று தினசரி சமையலுக்கே மிக்ஸி இல்லாமல் முடியாது. எனவே ஒவ்வொரு சமையலறையில் அவசியம் இருக்க வேண்டும். மிக்ஸி, கிரைண்டரை அவ்வப்போது மாறவும் வேண்டியிருக்கும். எனவே அடுத்த முறை புதிய மிக்ஸி வாங்கும்போது கீழ் வருவனவற்றை அவசியம் கவனத்தில் கொள்ளுங்கள்.

**லாக்கிங் சிஸ்டம்**

மிக்ஸியின் அடிப்புறத்தில் (பேஸ் யூனிட்) தரையோடு சேர்த்து பிடித்துக் கொள்ளக்கூடிய வாக்யூம் கப் உள்ளதா என்று கவனியுங்கள். இல்லையென்றால் மிக்ஸி ஓடும்போது அதிர்வினால் மிக்ஸி நழுவி கீழே விழுந்துவிடும் அபாயம் இருக்கிறது. அதேபோல் மூடியிலும் லாக்கிங் சிஸ்டம் இருக்க வேண்டும். அதாவது மூடி சரியாக மூடவில்லையென்றால் மிக்ஸி சுத்தாது. இந்த முறையினால் மிக்ஸி ஓடும்போது மூடி திறந்து பொருட்கள் வெளியே சிதறிவிடும் அபாயம் இருக்காது.

**ஓவர் லோட் பாதுகாப்பு**

மிக்ஸியில் அதிக அளவு போட்டு அதிக விரைவில் அரைத்தால் மோட்டார் திணறும். கஷ்டப்பட்டு வேலை செய்யும் மோட்டார் வெடித்துவிடும் அபாயமும் கூட ஏற்படலாம். எனவே அதிக கடினம் ஏற்படும்போது மிக்ஸியின் மின்சார ஓட்டம் தற்காலிகமாக தடை செய்யப்பட்டு மிக்ஸி நின்றுவிடும். மிக்ஸியின் சூடு குறைந்தவுடன் மீண்டும் ஆன் செய்தால் ஓட ஆரம்பிக்கும். இந்த வசதி மிக்ஸியில் அவசியம் இருக்க வேண்டும்.



**மின்சார வசதி**

பொதுவாக நாம் அரைக்கும் சட்னி, பொடி வகைகள் போன்றவைகளுக்கு 400 வாட்ஸ் சக்தி கொண்ட மோட்டார் போதுமானது. ஒருவேளை வெட் கிரைண்டர் செய்யும் வேலையான இட்லி, தோசை மாவு அரைக்க வேண்டும் என்றால் 750 வாட்ஸ் மோட்டார் இருப்பது அவசியமாகும்.

**மோட்டாரின் வேகம்**

ஒரு நிமிடத்திற்கு மிக்ஸியின் ப்ளேட் எத்தனை சுழற்சி செய்கிறது என்பதை ஆர்.பி.எம். என்கிறார்கள். அந்த ஆர்.பி.எம். 18000 முதல் 22000 என்ற அளவில் பெரும்பாலான மிக்ஸிகள் இருக்கும். இவற்றை இயக்கும்போது மீடியம் ஆர்.பி.எம். இயக்குவது நல்லது. அந்த வேகத்தில் தான் அரைக்கும் பொருள் எல்லா பகுதிகளிலும் நன்கு சுழன்று சரியாக அரைபடும்.

**ஜூசர் வசதி மிக்ஸியில் இருப்பது நல்லது**

மிக்ஸியிலேயே ஜூஸ் பிழியும் வசதி இருப்பது நல்லது. இதற்கு தனியாக ஜூசர் வாங்குவது வீண் செலவு. மிக்ஸி ஜாரில் ஒன்று ஜூசராகவும், ஒன்று குறைவான மசாலா பொருள் அரைக்கவும், மற்றொன்று தேங்காய் சட்னி போன்றவை அரைக்கவும் என்று இருப்பதே போதுமானது.

**விற்பனைக்குப் பின் சேவை மற்றும் உத்திரவாதம்**

மின்னணு சாதனங்கள் கொஞ்ச நாள் பயன்பாட்டில் பழுதாகலாம். சின்ன பழுதுகளை சரி செய்யவும். சிறு பாகங்களை மாற்றவும் சரியான சேவை மையம் கொண்ட பிராண்டை தேர்ந்தெடுப்பது நல்லது. அதேபோல் சரியான உத்திரவாதம் அளிக்கும் நிறுவனமாக பார்த்து தேர்ந்தெடுப்பதும் மிகவும் அவசியம். மிக்ஸி அடிக்கடி மாற்றும் பொருள் இல்லை என்பதால் உத்திரவாதத்தில் சமரசம் செய்வது கூடாது.

## நகைகளை பாதுகாப்பது எப்படி?



தங்க நகைகளை, தனித்தனிப் பெட்டிகளில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். அப்போது தான், அதில் கல் மற்றும் முத்து போன்றவை பதிக்கப்பட்டிருந்தால் அவை விழாமல் இருக்கும். ஒன்றோடு ஒன்றாக பலவற்றை சேர்த்தால், நகைகளில் கீறல் ஏற்படும், நிறமும் மங்கி விடும். தங்க நகைகளுடன் பிற கவரிங் நகைகளை சேர்த்து அணியக் கூடாது.

அவ்வாறு அணிந்தால், தங்க நகைகள் சீக்கிரம் தேய்ந்து விடும். தங்க நகைகளை, பூந்திக் கொட்டையை தண்ணீரில் ஊற வைத்து அந்த தண்ணீரால் கழுவலாம். இவ்வாறு செய்தால், அழுக்கு நீங்கி நகைகள் பளபளப்பாக இருக்கும். சிறிதளவு பற்பசை அல்லது தரமான பல்பொடியை, பழைய பிரஷில் வைத்து, நகைகளை சுத்தம் செய்யலாம். ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை தரமான ஷாம்பூ அல்லது சோப்பு தூளும், மஞ்சள் தூளும் கலந்த நீரில், நகைகளை போட்டு, ஐந்து நிமிடம் சூடாக்கி விட்டு கழுவினால், நகைகள் அழுக்குகள் நீங்கி, பளபளவென்று ஜொலிக்கும்.

**கற்கள் பதித்த நகைகள்**

கற்கள் பதித்த நகைகளை தினசரி அணிந்தால், ஒளி மங்கி விடும். இதற்கு சிறிது நீல நிற பற்பசையை கற்கள் மீது பூசி, மென் தன்மையுடைய பிரஷ்ஷால் மெதுவாக தேய்க்க வேண்டும். பின்பு தூய நீரில் கழுவி, நீராவியில் காண்பித்தால், அவற்றிலுள்ள எண்ணெய்ப் பிசுக்கு போன்றவை வெளியேறிவிடும். இதில், முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று, கற்களில் கீறல் விழுவதை தவிர்க்க, கற்கள் பதித்த நகைகளை சுத்தம் செய்ய டிஷ்யூ பேப்பர் அல்லது மென்மையான பனியன் துணி ஆகியவற்றையே பயன்படுத்த வேண்டும். கல் பதித்த நகைகளை, சுடுநீரில் போட்டு விடக் கூடாது. இவ்வாறு செய்தால், கற்களுக்கு சேதம் ஏற்பட்டு, அதன் கவர்ச்சி தன்மை நீங்கி விடும்.

**வெள்ளி நகைகள்**

வெள்ளி நகைகளை இரும்பு பீரோவில் வைக்காமல், மரப்பெட்டி அல்லது நகைப் பெட்டியில் வைத்தால் பளபளப்பாக இருக்கும். அலுமினியப் பாத்திரத்தில் நீரை கொதிக்க விட்டு, அதில் வெள்ளி நகைகளை போட்டு சிறிது நேரம் கழித்து எடுத்துத் துடைத்தால் அழுக்குகள் நீங்கி விடும். மிதமாக சுட வைத்த தண்ணீரில் சிறிதளவு டிடர்ஜென்ட் தூள் கலந்து அதில் வெள்ளி நகைகளை ஊற வைத்து சுத்தம் செய்தால், நகைகள் பளபளக்கும். வெள்ளி கொலுசுகளின் பளபளப்பு மங்கி விட்டால் வெள்ளி கொலுசில் சிறிதளவு பற்பசையை தேய்த்து சிறிது நேரம் ஊறிய பின் பிரஷ்ஷால் தேய்த்து கழுவினால் பளபளவென்று ஆகி விடும்.பருத்தித் துணியினுள் வைக்க வேண்டும்.

## விலை உயர்ந்த உடைகளை பாதுகாப்பது எப்படி?



காஞ்சிபுரம் பட்டுப் புடவை என்றாலும் ஃபேன்சி பனாரஸ் புடவை என்றாலும் அதன் அழகு ஜரிகை அமைப்பில் உள்ளது என்பது பெண்கள் அறிந்த ஒன்று.

எனவே பட்டுப்புடவைகளை கெடாமல் பாதுக்காப்பது அவசியமாகும். இந்த விலை உயர்ந்த புடவைகளின் அழகே அதன் ஜரிகை தான். பெண்கள் தங்களது

விலை உயர்ந்த ஆடைகளை பாதுகாப்பது எப்படி என்று பார்க்கலாம்.

ஜரிகை மற்றும் விலை உயர்ந்த உடைகளை பாதுகாக்க சில குறிப்புகள்

★ விலை உயர்ந்த புடவையோ வேறு எந்த உடையோ வாங்குவதற்கு முன் அதை கடையை விட்டு வெளியில் சூரிய வெளிச்சத்தில் சரி பார்த்து வாங்கவும்.

★ விலை உயர்ந்த புடவையை அணிவதற்கு முன், மறக்காமல் அதில் ஃபால்ஸ் தைத்து அணியவும். ஃபாலைத் துவைத்து இஸ்திரிப் போட்டு நல்ல தரமான நூலால் தைக்கவும்.

★ அணிந்து கழற்றியவுடனே துணிகளை மடித்து வைப்பதை தவிர்க்கவும். இவ்வாறு செய்தால் துணிகளில் உள்ள வியர்வை கறைகளை ஏற்படுத்தக் கூடும்.

★ விலை உயர்ந்த ஆடையில் ஏதேனும் கறை பட்டால் உடனே தண்ணீரால் லேசாக அந்த இடத்தை சுத்தம் செய்யவும்.

★ விலை உயர்ந்த உடைகளை வைக்கும் அலமாரியில் பூச்சிகளை விரட்ட ஓடோனில்லை ஒரு துணியில் சுற்றி வைக்கவும். நேரடியாக வைத்தால் இதன்

வாசனை துணிகளில் ஒட்டிக் கொள்ளும். அணியும் போது அலமாரியின் வாசனையை தரும்.

★ ரச கற்பூரத்தை தவிர்க்கவும். இதில் உள்ள ரசாயணப் பொருட்கள் ஜரிகை கறுப்பதற்கு காரணமாக அமைகிறது. பர்ஃயூம் போன்ற வாசனைப் பொருட்களை நேரடியாக ஜரிகையில் தெளிப்பதை தவிர்ப்பது நல்லது.

★ அணியும் போது உடைகள் கசங்குவது சகஜம். அதனால் அணிந்தபின் உடைகளை இஸ்திரி செய்து வைக்கவும்.

★ விலை உயர்ந்த துணி வாங்கி உடைகள் தைக்க வேண்டும் என்றால் அதற்கு மறக்காமல் நல்ல தரமான, அதே நிறத்தில் உள்ள லைனிங் துணியை வாங்கவும். லைனிங் வைக்கவில்லை என்றால் வியர்வையால் உடை கெட்டுப் போக வாய்ப்புண்டு.

## நகங்களின் ஆரோக்கியம்!



பெண்கள் முகத்திற்கு காட்டும் அக்கறையை விரல் நகங்களுக்கும் காட்ட வேண்டும். பெண்களுக்கு அழகுக்கு அழகு சேர்ப்பவை விரல்கள் மற்றும் நகங்கள். இவைகளை அழகுற பாதுகாத்தால் கை, கால்களின் வசீகரம் கூடும். அதற்கான சில டிப்ஸ்...

★ விரல்கள் மற்றும் நகங்கள் சொர சொரப்பு நீங்கி பளபளக்க நல்லெண்ணெயைத் தடவி மசாஜ் செய்யலாம்.

★ ஆலிவ் எண்ணெயை லேசாக சூடாக்கி விரல்களின் மீது தேய்த்து ஊறவைத்து பின்பு கழுவி வந்தால் நகங்கள் உடையாமல் இருக்கும்.

★ நகம் கருமை நிறமாக மாறி சொத்தையாகி இருந்தால் துத்தி இலையை சாம்பிராணியுடன் சேர்த்து அரைத்து தடவினால் விரைவில் சொத்தை மறையும். கருமை நிறமும் மாறும்.

★ உடலில் கால்சியம் சத்து குறைவதால் நகங்கள் பாதிக்கப்படுகின்றன. கால்சியம் மாத்திரைகளையோ அல்லது கால்சியம் சத்து நிறைந்த உணவுகளையோ உட்கொள்ளுதல் நல்ல பலனைத் தரும்.

★ நகங்களைச் சுற்றி தடித்தும், வலியும் இருந்தால் வெதுவெதுப்பான தண்ணீரில் டெட்டால், பெப்பர்மின்ட் ஆயில் சேர்த்து அதில் நகங்கள் படும்படி வைத்து பின்பு கழுவினால் வலி நீங்கி நகங்கள் சுத்தமடையும்.

★ வெற்றிலையில் சிறிதளவு வெள்ளை சுண்ணாம்பு கலந்து அரைத்து நகத்தில் தடவினால் நகத்தைச் சுற்றி வரும் புண் குணமாகும்.

★ வெள்ளை ஜெலட்டின் (கால்சியம் சத்துள்ளது) இரண்டு தேக்கரண்டி எடுத்து நான்கு தேக்கரண்டி இளஞ்சூடான தண்ணீரில் கரைத்து விரல்களின் மீது பூசி ஊறவைத்து கழுவி வர நகங்கள் உடையாது.




## குடும்பப் பிரச்சினையை படுக்கையறையில் பேசாதீர்கள்!



இல்லற வாழ்க்கையை இனிமையுடன் தொடங்கும் மணமகனுக்கு மனக்குழப்பமும் பின் தொடர்ந்து விடுகிறது. தாய் - மனைவி இருவரில் யாருக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்ற தவிப்புக்கு ஆளாகுவார்கள். அதுநாள் வரை வளர்த்து ஆளாக்கிய தாயை விட்டுக்கொடுக்க முடியாது. தன்னை மட்டுமே நம்பி வந்திருக்கும் மனைவியை தவிர்க்க விட முடியாது.

இருவரில் யாராவது ஒருவருக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்க முன்வந்தாலோ, இருவரில் யாராவது ஒருவர் அதிக உரிமை கொண்டாட நினைத்தாலோ பிரச்சினை உருவாகி விடும். பெரும்பாலும் திருமணத்திற்கு பிறகு மகன் தன்னை விட்டு பிரிந்து விடுவானோ, அதற்கு மருமகள் காரணமாகி விடுவாளோ என்ற கவலை தாய்க்கு இருக்கும்.

அந்த கவலையை புறந்தள்ளிவிட்டு ஒருசில தாய்மார்கள் ஆரம்பத்திலேயே மருமகளிடம் இணக்கமான உறவை கடைப்பிடித்து குடும்பத்தில் சுமுகமான சூழல் நிலவ வழிவகுப்பார்கள். மருமகளுக்கும் புகுந்த வீட்டினரின் அன்பை பெற வேண்டும் என்ற ஆர்வமும், லேசான பயமும் இருக்கும். அந்த வாய்ப்பை ஆண்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தாயார் தன் மீது கொண்டிருக்கும் அன்பையும், எடுத்துக்கொள்ளும் உரிமையையும் தட்டிப்பறிக்கும் எண்ணம் மனைவியிடம் தோன்றாத அளவிற்கு இருவரிடமும் சரிசமமான அணுகுமுறையை கடைப் பிடிக்க வேண்டும். யாரை பற்றியும் குறை கூறக் கூடாது. மனைவி தன் தாய் மீது புகார் கூறினால் அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டி விடக்கூடாது.

கண்டும் காணாமல் இருந்துவிடவும் கூடாது. இருவரில் யார் பக்கம் தவறு இருக்கிறது என்பதை கண்டறிந்து பக்குவமாக எடுத்துரைக்க வேண்டும். ஒருவரை சமாதானப்படுத்த வேண்டும் என்பதற்காக மற்றவரிடம் அவரை பற்றி தவறான கருத்துக்களை கூறிவிடக்கூடாது. புதிதாக வந்திருக்கும் மனைவிக்கு தங்கள் குடும்ப நிலவரத்தை எடுத்துரைத்து குடும்பத்தினர்கள் ஒவ்வொருவருடைய சுபாவத்தையும் கூறி அதற்கு தக்கப்படி நடந்து கொள்ள வழிகாட்ட வேண்டும்.

குடும்பத்தில் உள்ளவர்களும் புதுப் பெண் அதுவரை வாழ்ந்த சூழல் வேறு என்பதை தெளிவுபடுத்தி இணக்கமான உறவு ஏற்பட இணைப்பு பாலமாக விளங்க வேண்டும். மனைவியின் குடும்ப நிலவரத்தையும் கேட்டு தெரிந்து கொண்டு அவர்களிடம் சுமுகமான உறவை பேண வேண்டும்.

புகுந்த வீட்டில் உள்ள உறவுகளிடம் மனைவி எத்தகைய அணுகு முறையை பின்பற்றுகிறாரோ அதுதான் இல்லற பந்தத்தை மகிழ்ச்சியுடன் வழி நடத்தி செல்ல வழி வகுக்கும் என்பதை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். புதிய இடத்தில் தயக்கமோ, பயமோ இன்றி மனைவி இல்லற வாழ்க்கையை தொடங்குவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பது கணவரின் பொறுப்பு தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

தாயார்-மனைவி இருவருக்கும் இடையே விரிசல் ஏற்படுவதற்கு ஆண்கள் காரணமாகிவிடக்கூடாது. இருவருடைய சமையலையும் ஒரே மாதிரி பாராட்ட வேண்டும். குறிப்பாக ஒருவருடைய சமையல் ருசியாக இருந்தால் மற்றவர் முன்பு 'ஆஹா, ஓஹோ' என்று புகழ்ந்து தள்ளக்கூடாது. அப்படி பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் தனியாக பாராட்ட வேண்டும்.

அதேவேளையில் தனியாக இருக்கும்போது ஒருவரை பற்றி மற்றவரிடம் புகழ்ந்து பேசுவது, புறங்கூறுவது போன்றவற்றை தவிர்த்துவிட வேண்டும். தாய்-மனைவி இருவருக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டால் ஒருவருக்கு சாதகமாக பேசக்கூடாது. சமாதானம் செய்யும் போது வார்த்தைகளையும் கொட்டிவிடக்கூடாது.

கணவன், மனைவியின் தனிப்பட்ட விஷயங்களில் குடும்ப உறுப்பினர்கள் தலையிடுவதையும் தவிர்க்கச் செய்ய வேண்டும்.

சரியான அணுகுமுறைதான் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சுலபமாக தேடி தரும் என்பதை தம்பதிகள் புரிந்து கொள்ள வேண்டும். கணவன்-மனைவி இருவரும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி தனிமையில் மனம் விட்டு பேச வேண்டும். அதற்கான சூழ்நிலை கணவர் உருவாக்க வேண்டும். கிடைக்கும் வாய்ப்புகளை துணையுடன் மகிழ்ச்சியாக கழிக்க பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




## கரட் - கிழங்கு சூப்

**தேவையான பொருட்கள்**

கரட் - 1
உருளைக்கிழங்கு - 1
வெங்காயம் - 1
உப்பு - தேவையான அளவு
மிளகுத்தூள் - தேவையான அளவு
வெண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

கரட், உருளைக்கிழங்கு, வெங்காயத்தை தோல் நீக்கி பொடியாக நறுக்கி கொள்ளவும்.

குக்கரில் வெண்ணெய் விட்டு உருக்கியதும் வெங்காயத்தை சேர்த்து நன்றாக வதக்கவும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் கரட், உருளைக்கிழங்கு சேர்த்து வதக்கி தேவையான அளவு தண்ணீர் விட்டு மூடி 3 விசில் விட்டு இறக்கவும்.

விசில் போனவுடன் குக்கர் மூடியை திறந்து மத்தால் லேசாக மசித்து உப்பு, மிளகுத்தூள் சேர்த்து மீண்டும் 5 நிமிடம் கொதிக்க வைத்து இறக்கி பரிமாறலாம்.

சூப்பரான கரட் - உருளைக்கிழங்கு சூப் ரெடி.



## வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ள...



நம் வீடு சிறியதோ பெரியதோ, வீட்டை சுத்தம் செய்து அழகாக வைப்பது நமது கடமை அல்லவா. எனவே, வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ள எப்படி அட்டவணை போட்டுக் கொண்டு செயல்படுவது என்பதைப் பார்க்கலாம்...

கிச்சன்: பாத்திரங்களைக் கழுவி ஸிங்க்கை சுத்தம் செய்யுங்கள். திட்டுகளையும் டேபிள்களையும் சுத்தமாக வையுங்கள். தரை அழுக்காக இருந்தால், அதைக் கூட்டுங்கள் அல்லது துடையுங்கள்

பாத்ரூம்: வாஷ் பேஸினையும் டாய்லெட்டையும் கழுவுங்கள். பொருட்களை அவற்றிற்குரிய இடங்களில் வையுங்கள்

வரவேற்பறை மற்றும் பிற அறைகள்: அறையை ஒழுங்குபடுத்துங்கள். ஃபர்னிச்சர்களைத் தூசிதட்டி விடுங்கள். தேவைப்பட்டால் தரையைப் கூட்டித் துடையுங்கள், அல்லது வாக்யூம் க்ளீனரால் சுத்தம் செய்யுங்கள்

வீடு முழுவதும்: குப்பைகளை அகற்றுங்கள்

பெட்ரூம்: படுக்கை விரிப்புகளை மாற்றுங்கள். தேவைப்பட்டால் தரையைக் கூட்டித் துடையுங்கள் அல்லது வாக்யூம் செய்யுங்கள். ஃபர்னிச்சர்களைத் தூசிதட்டி விடுங்கள்

கிச்சன்: ஸ்டவ்வையும், திட்டின் மேல் வைக்கப்படும் மிக்ஸி போன்ற சாதனங்களையும், பாத்திரம் கழுவுகிற ஸிங்க்கையும் சுத்தம் செய்யுங்கள். தரையைத் துடைத்து சுத்தம் செய்யுங்கள்

பாத்ரூம்: சுவர்கள், வாஷ் பேஸின் போன்றவற்றைக் கழுவிவிடுங்கள். டாய்லெட்டையும், ஷெல்ஃபையும், மற்ற இடங்களையும் சுத்தம் செய்வதற்குக் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துங்கள். டவல்களைத் துவையுங்கள். தரையைப் கூட்டிவிட்டுத் துடையுங்கள்

பாத்ரூம்: சுவர் முழுவதையும் நன்றாகக் கழுவிவிடுங்கள்

# கரடியின் இலவச உணவு



உணவு தேடி வந்துகொண்டிருந்தது நரி. எதிரில் வந்த காட்டுப் பூனையைப் பார்த்ததும், ஐயோ என்ன ஆச்சு? ஒரு காலைத் தூக்கிக்கிட்டு நடந்து வர்றே? என்று கேட்டது.

உனக்கு விஷயமே தெரியாதா? போன வாரம் மரத்திலிருந்து இறங்கும்போது தவறி விழுந்துட்டேன். இன்னும் குணமாகலை. நம்ம கரடி உடல் நலம் இல்லாதவங்களுக்குத் தினமும் உணவு கொடுக்குது. அதை வாங்கிச் சாப்பிடுவதற்காகத்தான் போயிட்டிருக்கேன் என்றது காட்டுப்பூனை.

ஓ கரடி எப்ப இந்த வேலையை ஆரம்பிச்சது? எனக்குத் தெரியாதே?

ஆறு மாசத்துக்கு முன்னால கரடிக்கு ஜுரம் வந்து படுத்தபோது, உணவுக்காக ரொம்பக் கஷ்டப் பட்டுச்சாம். உதவி செய்ய ஆளே இல்லையாம். தான் பட்ட கஷ்டத்தை இனி யாரும் படக் கூடாதுன்னுதான் ஆறு மாசமா இலவச உணவு சேவையை வழங்கிட்டு இருக்கு.

ஓ யார் போனாலும் சாப்பாடு கொடுக்குமா?

இல்ல, உடம்பு சுகமில்லாதவங்களுக்குத்தான் கொடுக்கும். நான் வரேன் என்று கிளம்பியது காட்டுப்பூனை.

அப்போது வயதான சிங்கம் ஒன்று மெதுவாக நடந்து வந்தது.

அதைப் பார்த்தவுடன், என்ன தாத்தா, எங்கே கிளம்பிட்டே? என்று கேட்டது நரி.

இப்ப என்னால வேட்டையாட முடியறதில்லை. கரடிதான் தினமும் சாப்பாடு தருது. அங்கேதான் போயிட்டிருக்கேன் என்று மெலிந்த உடலை இழுத்துக்கொண்டு நடந்தது சிங்கம்.

கரடி அப்படி என்ன உணவுதான் கொடுக்கும்?

ம் அசைவம் சாப்பிடற வங்களுக்கு இறைச்சி சூப், மீன், சைவம் சாப்பிடறவங்களுக்கு காய்கறி சூப், பழங்கள்னு கொடுக்கும். கரடி சமைக்கும் உணவு ரொம்பச் சுவையா இருக்கும். நான் வரேன் என்றபடி சென்றது சிங்கம்.

அடடா! இத்தனை நாளும் இந்த விஷயம் நமக்குத் தெரியாமல் போயிருச்சே! எப்படியாவது கரடியின் உணவைச் சாப்பிட்டே ஆகணும். ஏதாவது உடம்பு சரியில்லைன்னு பொய் சொன்னால், ஒரு மாதமாவது ஜாலியாக உட்கார்ந்து சாப்பிடலாம். காய்ச்சல்னு சொன்னால், உணவு கொடுக்காமல் சூப் மட்டும் கொடுத்துவிட்டால் என்ன செய்வது? வயிற்று வலின்னு சொன்னால், உணவே சாப்பிட வேணாம்னு சொல்லிட்டால்? ஐயோ நான் என்ன காரணத்தைச் சொல்ல முடியும்? அதோ கரடியின் வீடே வந்துருச்சு. சரி, கால் ஒடிந்ததாகவே சொல்லிடலாம் என்று நினைத்த நரி, காலில் கட்டுப் போட்டுக் கொண்டு நடந்தது.

கரடி வீட்டு வாசலில் வரிசையாக விலங்குகள் நின்றன. நரியும் வரிசையில் சேர்ந்துகொண்டது. அதைக் கண்ட காட்டுப்பூனை, என்னப்பா, இப்பதான் நல்லா பேசிட்டு இருந்தே. அதுக்குள்ளே எப்படிக் காலை உடைச்சிக்கிட்டே? என்று ஆச்சரியமாகக் கேட்டது.

ஒரு பள்ளத்தைக் கவனிக்காமல் தவறி விழுந்துட்டேன். கால் உடைஞ்சிடுச்சு. வலி உயிர் போகுது. வரிசையில் நிக்க முடியலை. என்னை முன்னால விட முடியுமா? என்று கேட்டது நரி.

முயல், மான், சிங்கம் எல்லாம் கொஞ்சம் வழி விடுங்க. நரியால் நிக்கக்கூட முடியல. சாப்பாடு வாங்கிட்டுப் போகட்டும் என்றது காட்டுப்பூனை.

வரிசையில் நின்ற விலங்குகள் நரியை முன்னால் அனுப்பின.

'அடடா! வாசனை மூக்கைத் துளைக்குது. இரவு சாப்பாட்டையும் வாங்கிட்டுப் போயிடணும். ஒரு காலைத் தூக்கிட்டு நடக்கக் கஷ்டமா இருக்கு' என்று நரி நினைத்துக்கொண்டிருந்த போது, வெளியே வந்த கரடி விசாரித்தது. ஓர் உணவு பொட்டலத்தைக் கொடுத்தது.

என்னால் இரவு வர முடியாது. இன்னும் ஒரு பொட்டலம் கொடுத்தால் நல்லது என்று பாவமாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டது நரி.

இதைச் சாப்பிடு. கிளம்பும்போது இன்னொரு பொட்டலம் தரேன். ரொம்ப வலியா இருந்தால் உன் வீட்டுக்கே சாப்பாட்டை அனுப்பி வைக்கிறேன். அலைய வேண்டாம் என்றது கரடி.

நரியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மற்ற விலங்குகளோடு அமர்ந்து சாப்பிட்டது. உடனே தூக்கம் வந்தது. எதையும் யோசிக்காமல் கரடி வீட்டை விட்டு வெளியே வந்தது. சிறிது தூரம் வந்த பிறகு, காலில் உள்ள கட்டை அவிழ்த்து வீசியது.

அப்பாடா! ஒரு காலைக் கட்டிக்கிட்டு காயம் பட்டதுபோல் நடிக்கிறது ரொம்பக் கஷ்டமா இருக்கு. நல்லவேளை, நாளை வீட்டுக்கே உணவு வந்துடும். ஒரு மாசத்துக்கு உட்கார்ந்து சாப்பிடலாம். ஜாலியான வாழ்க்கை என்று தனக்குத்தானே நரி பேசிக்கொண்டே நடந்தபோது, கரடி அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தது.

ஐயோ எதுக்கு இந்தக் கரடி என்னைத் துரத்திட்டு வருது? நான் ஏமாத்தியதைக் கண்டுபிடிச்சிருச்சோ? சிக்கினால் தர்ம அடிதான். வேகமா ஓடித் தப்பிச்சிடலாம் என்று ஓட ஆரம்பித்தது நரி.

கரடியும் அழைத்துக்கொண்டே ஓடிவந்தது. இதைக் கண்ட நரி வேகத்தை அதிகரித்தது. எதிரில் விழுந்து கிடந்த பெரிய மரத்தைப் பார்க்காமல் தடுக்கி விழுந்தது. நிஜமாகவே கால் உடைந்துவிட்டது. வலியில் அலறியது.

அருகில் வந்த கரடி, ஐயோ பட்ட காலிலேயே பட்டுருச்சே ஏன் இப்படி அடிபட்ட காலோடு ஓடினே? இரவு சாப்பாடு கேட்டியே, வாங்கிக்காமல் போயிட்டியேன்னு எடுத்துட்டு வந்தேன். இந்தா சாப்பாடு என்று பக்கத்தில் வைத்துவிட்டுக் கிளம்பியது கரடி.

சாப்பாடா முக்கியம்? நிஜமாவே கால் உடைஞ்சிருச்சு. என்னை வைத்தியர் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போ என்று கெஞ்சியது நரி.

நீ ஓடும்போதே எனக்குத் தெரிஞ்சுருச்சு, உன் கால் நல்லா இருக்குன்னு. பக்கத்தில்தான் வைத்தியர் வீடு, மெதுவா போய் வைத்தியம் பண்ணிக்க. எனக்கு நிறைய வேலை இருக்கு என்று சொல்லிவிட்டு நடந்தது கரடி.

ஐயோ உன்னை ஏமாத்தினது தப்புதான். இனி யாரையும் ஏமாத்த மாட்டேன். உழைக்காமல் எதையும் சாப்பிட மாட்டேன் என்று கத்தியது நரி.

வைத்தியர் வீட்டில் நரியை விட்டுவிட்டுச் சென்றது கரடி.

# பூமியின் காந்தப்புலம்!



காந்தக் கட்டை (magnet) பற்றி நீங்கள் படித்திருக்கலாம். காந்தக் கட்டையைச் சுற்றிக் காந்தப் புலம் இருக்கும். பூமியின் மையத்தில் ராட்சத காந்தக் கட்டை இருந்தால் எப்படி இருக்கும்? அது மாதிரி பூமிக்கும் காந்தப் புலம் உள்ளது. பூமியின் இந்தக் காந்தப் புலம்தான் பூமியில் உள்ள உயிரினத்தைக் காப்பாற்றிவருகிறது. இந்தக் காந்தப் புலம் பூமியைச் சுற்றி அமைந்துள்ளது. இதை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் நுட்பமான கருவிகள் மூலம் பூமியின் காந்தப் புலத்தை அறியமுடியும். பூமியின் இந்தக் காந்தப் புலம் நமக்கு எப்படி உதவுகிறது?

பூமியிலிருந்து சுமார் 15 கோடி கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சூரியனிலிருந்து ஓயாது ஆற்றல் மிக்கத் துகள்கள் வெளிப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு ஆங்கிலத்தில் குணிடூச்ணூ ஙிடிணஞீ என்று பெயர். தமிழில் இதைச் சூரியக் காற்று என்று சொல்ல முடியாது. ஏனெனில் உண்மையில் இது காற்று அல்ல. ஆனால் எப்படியோ இந்தத் துகள்களுக்கு விஞ்ஞானிகள் 'சூரியக் காற்று' என்று பொருள்படும்படியாக ஒரு பொருத்தமில்லாத பெயரை வைத்து விட்டனர். சூரியத் துகள் வீச்சு என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

சூரியத் துகள்கள் சூரியனிலிருந்து நாலா புறங்களிலும் மணிக்கு சுமார் 14 லட்சம் கிலோ மீட்டர் வேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் துகள்களின் அளவும் வேகமும் மாறுபடுவது உண்டு. சூரிய மண்டலத்தில் உள்ள கிரகங்களை இந்தத் துகள்கள் தாக்குகின்றன.

பூமியைச் சுற்றி உள்ள காந்தப் புலமானது இந்தத் துகள்களைத் தடுத்து விடுகின்றன. இவை பூமியில் உள்ள உயிரினங்களைத் தாக்குமானால் கடும் பாதிப்பு ஏற்படும். விண்வெளியிலிருந்து காஸ்மிக் கதிர்களும் வருகின்றன. இவையும் உயிரினத்தைப் பாதிக்கக்கூடியவையே. பூமியின் காந்த மண்டலமும் காற்று மண்டலமும் சேர்ந்து காஸ்மிக் கதிர்களைத் தடுத்துவிடுகின்றன,



பூமி எப்படிக் காந்தப் புலத்தைப் பெற்றிருக்கிறது? பூமியின் மையத்தில் மிகுந்த வெப்பத்தில் ஏராளமான இரும்பு உள்ளது. கடும் அழுத்தம் காரணமாக இது குழம்பு வடிவில் இன்றி, கெட்டியாக உள்ளது. அதைச் சுற்றி இரும்பு, நிக்கல் மற்றும் பல உலோகங்களால் ஆன நெருப்புக் குழம்பு உள்ளது. இது மையத்தில் உள்ள கெட்டி இரும்பைச் சுற்றிச் சுற்றிவருகிறது. இதன் விளைவாகவே பூமிக்குக் காந்தப் புலம் உள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

நதியின் நீரானது நதியின் நடுவே உள்ள தீவைத் தாண்டும்போது இரண்டாகப் பிரிந்து செல்வதைப்போல, சூரியத் துகள்கள் பூமியின் காந்தப் புலத்தைத் தாண்டும்போது பக்கவாட்டில் பிரிந்து சென்று விடுகின்றன. இப்படித் தாண்டியதும் அவற்றில் சில துகள்கள் பூமியின் வட, தென் துருவ முனைகளை நோக்கி வருகின்றன. இதன் விளைவாக துருவப் பகுதிக்கு மேலே வண்ண வான் ஒளிகள் தெரிகின்றன. வட துருவத்துக்கு மேலே தெரியும் இந்த ஒளியை அரோரா பொரியாலிஸ் (Aurora Borealis) என்று அழைக்கின்றனர்.

தென் துருவப் பகுதிக்கு மேலேயும் இப்படி அதிசய ஒளி தெரியும். ஆனால் வட துருவ ஒளிதான் பார்ப்பதற்கு மிக அழகாகத் தெரியும். துருவப் பகுதிகளுக்கு மேலே காற்று மண்டலத்தின் உயரே உள்ள அணுக்கள் மீது சூரியத் துகள்கள் மோதும் போது ஏற்படும் விளைவுகளால் இந்த ஒளிகள் தோன்றுகின்றன.

பூமியுடன் ஒப்பிட்டால் செவ்வாய் கிரகத்துக்கு காந்தப் புலம் கிடையாது. இதன் விளைவாக சூரியத் துகள்கள் செவ்வாய் கிரகத்தின் மெலிந்த காற்று மண்டலத்துடன் நேரடியாக மோதுகின்றன. இதனால் செவ்வாய் கிரகம் தனது காற்று மண்டலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவருகிறது. செவ்வாய் கிரகத்துக்கு அமெரிக்காவின் நாஸா அனுப்பிய 'மாவென்' என்னும் பெயர் கொண்ட விண்கலம் இதை அண்மையில் உறுதிப்படுத்தியுள்ளது.

பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய் கிரகம் அடர்த்தியான காற்று மண்டலத்தைப் பெற்றிருக்க வேண்டும். சூரியத் துகள்களின் தாக்குதலால் அந்தக் காற்று மண்டலம் அடர்த்தியை இழந்திருக்க வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். செவ்வாயின் காற்று மண்டலம் அடர்த்தியாக இருந்த காலத்தில் செவ்வாயில் நதிகள் பெருக்கெடுத்து ஓடியிருக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். செவ்வாயில் இன்று தண்ணீர் இல்லை. ஆனால் நதிகள் பெருக்கெடுத்து ஓடியதற்கான தடங்கள் மட்டும் இருக்கின்றன.

பூமிக்கு உள்ளதைப் போலவே செவ்வாயிலும் அதன் மையத்தில் இரும்புக் குழம்பு இருந்திருக்க வேண்டும். ஆனால் பூமியைவிட வடிவில் சிறியதான செவ்வாய் கிரகத்தின் மையத்தில் இருந்த இரும்புக் குழம்பு ஏதோ ஒரு கால கட்டத்தில் ஆறிப் போனதால் காந்தப் புலம் இல்லாமல் போய் விட்டது. எனவே அது கொஞ்ச நஞ்ச காற்று மண்டலத்தையும் இழந்துவருகிறது.

# வானவில் குளிர்பானம்

**தேவையான பொருட்கள்.**

5 கண்ணாடி கோப்பை, சீனி, ஸ்பூன், குளிர்ந்த நீர், உணவு கலர் பவுடர்

**செய்முறை**

5 கண்ணாடி கோப்பைகளை டேபிளில் வரிசையாக வைக்கவும். அந்தக் கோப்பைகளில் குளிர்ந்த நீரை ஒவ்வொன்றிலும் கால் பங்கு ஊற்றவும்.

பிறகு, 1ம் கோப்பையில் ஒரு ஸ்பூன் சீனியும், 2ம் கோப்பையில் 2 ஸ்பூன் சீனியும், 3ம் கோப்பையில் 3 ஸ்பூன் சீனியும், 4ம் கோப்பையில் 4 ஸ்பூன் சீனியும் போட்டு, ஸ்பூனால் ஒவ்வொரு கோப்பை தண்ணீரையும் நன்கு கலக்கவும்.

பின்னர், ஒவ்வொரு கோப்பையிலும் ஒவ்வொரு கலர் பவுடரை சேர்க்கவும். பிறகு, நன்கு கலக்கவும். இந்த ஏற்பாட்டை செய்தபின் பார்வையாளர்களிடம்,

''இப்போது இந்த நான்கு கலரும் சேர்ந்து வானவில் வண்ணத்தில் குளிர் பானமாக மாறும் பாருங்கள்'' என்று கூறிவிட்டு, 5ம் கோப்பையில் முதல் கோப்பையிலிருந்து ஒரு கலர் தண்ணீரை ஒரு ஸ்பூன் எடுத்துவிடவும்.

அடுத்து, 2ம் கோப்பையிலிருந்து ஒரு ஸ்பூன் கலர் தண்ணீரும், 3ம் கோப்பையில் இருந்து ஒரு ஸ்பூன் தண்ணீரும், 4ம் கோப்பையிலிருந்து ஒரு ஸ்பூன் கலர் தண்ணீரும் எடுத்து வரிசைப்படி ஐந்தாவது கோப்பையில் விடவும்.

இப்போது 5வது கோப்பையில் அடுக்கடுக்காக வண்ணத்தில் தண்ணீர் இருக்கும். இது வானவில் வண்ணத்தில் இருக்கும். இந்தக் கோப்பையில் இருந்து தண்ணீரை பருகும் போது ஒவ்வொரு கலராக படிப்படியாக குறைவதை பார்வையாளர்கள் ரசிப்பார்கள்!

**மேஜிக் சீக்ரட்!**

நான்கு கோப்பை தண்ணீரிலும் சம அளவு சீனியை கலந்திருந்தால் ஐந்தாவது கோப்பையில் விடும் போது எல்லாக் கலரும் ஒன்றாக கலந்துவிடும். ஆனால், ஒவ்வொரு கோப்பையிலும் கூடுதலாக சீனி கலந்திருப்பதால் தண்ணீரின் அடர்த்தி, பாகு நிலை அதிகரித்திருக்கும். இதனால் ஒரு கலர் தண்ணீர் அடுக்கிலிருந்து இன்னொரு கலர் தண்ணீர் அடுக்கிற்கு சவ்வூடு பரவல் எளிதில் நடக்காது.இதன்காரணமாக ஒன்றோடு ஒன்று கலக்காமல் தனித்தனியாக இருக்கும்.




## விடுகதைகளும் விடைகளும்

கீழே வரும் ஆனால் மேலே போகாது. அது என்ன?
அடிப் பாதை இருக்கும் கால் இருக்காது. அது என்ன?
இளமையில் உயரம் முதுமையில் கட்டை அது என்ன?
மாடிகளற்ற வீட்டில் எல்லா பொருட்களும் நீல நிற பூச்சு பூசப்பட்டிருப்பின் அதன் படிகள் எந்த நிறத்தில் இருக்கும்?
உலகம் முழுதும் சுற்றும் ஆனால் ஒரே இடத்திலேயே இருக்கும்,அது என்ன??
கைகள் இருக்கும் ஆனால் கைதட்ட முடியாது, அது என்ன?
இறக்கையை விட மென்மையானது, ஆனால் உலகின் பலமிக்க மனிதராலும் சில நிமிடங்கள் பிடித்து வைத்திருக்க முடியாது. அது என்ன?
சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கும், அதை வாசித்தால் அதன் அர்த்தம் முறிந்து விடும். அது என்ன?
கண் உண்டு, ஆனால் பார்க்க முடியாது. அது என்ன?
வெள்ளை வீடு கருப்புக் கல்லாலும், கருப்பு வீடு வெள்ளை கல்லாலும் கட்டப்பட்டிருப்பின் பச்சை வீடு எதனால் கட்டப்பட்டிருக்கும்?

**விடைகள்**

மழை
நத்தை
மெழுகுவர்த்தி
படிகள் இருக்காது
முத்திரை
கடிகாரம்
மூச்சு
அமைதி
ஊசி
கண்ணாடி

# மிகப்பெரிய ஆலமரம்!

ஆலமரம்தான் இந்தியாவின் தேசிய மரம். இந்தியாவில் உள்ள ஆலமரங்களில் மிகப் பெரியது கொல்கத்தா ஆச்சார்ய ஜகதீஷ் சந்திரபோஸ் இந்தியத் தாவரவியல் தோட்டத்தில் இருக்கிறது. 270 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள இந்தத் தோட்டம், கி.பி 1786-ல் கிழக்கிந்திய கம்பெனியில் வேலை செய்த கர்னல் அலெக்சாண்டர் கிட் என்பவரால் உருவாக்கப்பட்டது. சுதந்திரம் அடையும்வரை 'கம்பெனி தோட்டம்' என்றே அழைத்துவந்தனர். சுதந்திரத்துக்குப் பிறகே இந்தியத் தாவரவியல் பூங்காவாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

12,000 வகை தாவரங்கள் இங்கே உள்ளன. ஐந்து கண்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட அரிய தாவரங்களும் இருக்கின்றன. விதவிதமான மூங்கில் மரங்கள், பனை மரங்கள், ஆர்கிட் பூ வகைகள், மிகப் பெரிய இலைகளைக் கொண்ட விக்டோரியா அமேசோனிகா அல்லி போன்றவற்றை இங்கே மட்டும்தான் பார்க்கமுடியும். இவ்வளவு தாவரங்கள் இங்கே இருந்தாலும் மக்களைப் பெரிதாக ஈர்ப்பது பெரிய ஆலமரம்தான்!

இந்த ஆலமரம் 18,918 ச.மீ. பரப்பளவுக்குப் பரந்து விரிந்துள்ளது! மிக உயரமான கிளை 25 மீட்டர் நீளமானது. ஆசியாவிலேயே இது மிகப் பெரிய மரம் என்று கணிக்கப்பட்டுள்ளது. 3800க்கும் மேற்பட்ட விழுதுகள் இந்த மரத்தைத் தாங்கி நிற்கின்றன. இந்த மரம் சூரிய வெளிச்சம் கிடைக்கும் கிழக்கு திசையிலேயே வளர்ந்துகொண்டு செல்கிறது. தூரத்திலிருந்து பார்க்கும்போது அடர்ந்த காடுபோல் தோற்றம் அளிக்கிறது. அருகே சென்று பார்க்கும் போதுதான் இது ஒரே ஒரு மரமாக இருப்பது தெரிகிறது. இந்த மரத்தை பார்ப்பதற்காகவே உலகம் முழுவதிலுமிருந்து மக்கள் வருகின்றனர்.



ஆலமரத்தின் வயது சுமார் 250 வருடங்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பயணிகள் தங்களுடைய பயணக் குறிப்புகளில் இந்த மரத்தை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

1864, 1867-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட புயல்களால் இந்த மரத்தின் நடுப் பகுதி சேதமடைந்தது. 51 அடி சுற்றளவில் இருந்த இந்த மரத்தின் அடிப் பகுதியை 1925-ம் ஆண்டு எடுத்து விட்டார்கள். நடுமரம் இல்லாமல் விழுதுகளால்தான் இந்த மரம் நிற்கிறது. இத்தனை வருடங்களுக்குப் பிறகும் தனது விழுதுகளை இன்னும் பெருக்கிக்கொண்டே இருக்கிறது. அதனால் இதன் சுற்றளவும் பரப்பளவும் அதிகமாகிக்கொண்டே போகிறது. மரத்தைச் சுற்றி பார்ப்பதற்காக 330 மீட்டர் சுற்றளவில் பாதை போடப்பட்டுள்ளது. மரம் வளர்ந்துகொண்டே இருப்பதால் இதை 'நடமாடும் மரம்' என்று அழைக்கிறார்கள். பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இதன் நிழலில் அமர்ந்து இளைப்பாறலாம் என்றால் அதன் பரப்பளவை உங்களால் ஊகிக்க முடிகிறதா!

உலகிலேயே மிக அகண்ட மரம் என்ற புகழ் இந்த ஆலமரத்துக்கு உண்டு. 2005-ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்திலும் இந்த மரம் இடம் பெற்றுவிட்டது.

# இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் தனம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். நற்செய்திகள் நன்மையளிக்கும். செய்தொழில் விருத்தி, இலாபம்ல சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். ஈடுபடும் தர்மகாரியங்கள் ஜெயமளிக்கும், உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற லாபம் அடைவர்.




இவ்வாரம் ஜென்ம பாவத்தைக் குரு பார்ப்பதால் தேகம் புதுப்பொலிவு பெறும். ஜீவன பாவத்தில் புதன், ரவி சஞ்சரிக்கையில் இலாப பாவத்தைக் குரு நோக்குவதால் செய்யும் தொழிலால் விருத்தி இலாபம் ஏற்படும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பும், உத்தியோக அதிகாரமும் கொள்வர். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் ஆரம்பிக்கலாம். விவசாயிகளுக்கு அரச மானியம் வந்து சேரும்.




ஜீவன கர்ம பாவத்தைக் குரு நோக்குவதால் உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களில் காதல் விவகாரம் கைகூடித் திருமண சம்பந்தப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும். தனபாவத்தைக் குரு நோக்குவதால் வியாபாரிகள், விவசாயிகள் தம்முயற்சிக்கேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்பப் பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.




ஜீவன, கர்ம பாவத்தில் செவ்வாய் திக்கு பலம் பெறுவதால் செய்தொழில் விருத்தி, இலாபம் சேமிப்புக் கிட்டும். வங்கி, நிதி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பயிர் உற்பத்திகளைப் பெருக்கலாம். குடும்பப் பெண்கள், மாணவர்கள் இவ்வாரம் சௌபாக்கிய யோகமடைவர்.




இவ்வாரம் கண்டக வியாழ தோஷம் 5இல் சனி தோஷமிருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மையுண்டாகும். இவ்வாரம் ராகு, கேது மாற்றம் சுப யோக பலன்களை வழங்கும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் கூடும். விவசாயிகள், வியாபாரிகள், தம் முயற்சியாலும் முதலீடுகளாலும் நல்ல இலாபத்தை ஈட்டிக் கொள்வர். கன்னியரின் காதல் விவகாரம் ஜெயமளிக்கும்.




இவ்வாரம் குரு, வெள்ளி இலாப பாவத்தை நோக்குவதால் செய்யும் தொழிலால் இலாபம் வங்கி வசதிகள் அதிகரிக்கும். ஈடுபடும் கரும, காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களினால் வரவு கூடும். விவசாயிகள் இலாபமடைவர். குடும்பப் பெண்களின் இல்லறம் நல்லறமாக அமையும். புத்திரர்களால் குடும்பச் சுமை குறையும்.




குரு தனஸ்தானத்திலும் சனி தைரிய பாவத்திலும் சஞ்சரிப்பது விசேட யோகமாகும். தன லாபம், பொருள் வரவுகூடும். மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி பெறும். வெளிநாட்டுப் பணவரவுண்டு. நற்செய்திகள் நன்மையளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு ஊழியர்களின் உதவி அனுசரணை கிடைக்கும். வியாபாரிகள், விவசாயிகள் அதிக லாபம் பெறுவர்கள். பெண்கள், மாணவர்களுக்கு சிறப்புகள் உண்டு.




இவ்வாரம் ஜென்மத்து வியாழ தோஷம், ஏழரைக் கடைக்கூறு, கண்டக ரவி, புதன் தோஷமிருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக்கும். உத்தியோகத்தருக்கு கணிசமான வேலைப்பளுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு பண்ணைகளில் கூலியாட்களின் அனுசரணை கிடைப்பதில் சிரமம் ஏற்படும்.




இவ்வாரம் ஜென்மச் சனி, விரய வியாழ தோஷம், ஜென்மத்து ராகு/கேது தோஷம் நடப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மையுண்டாகும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும். சக ஊழியர்களை அனுசரித்துப் பணி செய்தால் வேலைப்பளு குறையும். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபத்தையும் கொள்முதலையும் தவிர்த்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மானியம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.




இலாப பாவத்தில் குருவும், ஜென்மத்தில் வெள்ளியும் சஞ்சரிப்பதால் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் உண்டாகும். வெள்ளி சுகத்தால் கன்னியரின் காதல் விவகாரம் கைகூடித் திருமணப் பேச்சுக்கள் இவ்வாரம் தொடரும். உத்தியோகத்தருக்கு பதவிச் சிறப்புண்டு. விவசாயிகளுக்கு அரச மானியம் கைகூடும். குடும்பத்தில் புருஷன்-மனைவிக்கு இடையே ஐக்கியம் ஏற்படும்.




இவ்வாரம் ஜீவன பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் தொழில் விருத்தி, சேமிப்பு, வங்கி வசதிகள் அதிகரிக்கும். ஈடுபடும் கரும, காரியங்கள் சிரமமின்றி நிறைவேறும். வெள்ளி மறைவால் கன்னிப் பெண்களில் காதல் விவகாரம் தடைப்படும். உத்தியோகப் பெண்களுக்கு கணிசமான வேலைச் சுமையுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தொடங்கலாம். விவசாயிகளுக்கு விளைபொருட்களால் நல்ல ஆதாயத்தைப் பெறலாம்.




இவ்வாரம் தர்ம, புண்ணிய பாவத்தில் குரு சஞ்சரிப்பதாலும், இலாபத்தில் வெள்ளி இருப்பதாலும் தர்ம காரியங்களில் ஈடுபாடு, நோன்பு, விரதம் பிடித்தல் ஆலய தரிசனம் உண்டு. பிதா வழி அனுகூலம். சொத்துச் சேர்க்கையுண்டு. தனபாவத்தில் குஜன் ஆட்சியாவதால் தனம், பொருள், நற்செய்திகள் நன்மையளிக்கும். குடும்பப் பெண்களின் நிர்வாகம் புத்திரர் உதவியுடன் நன்கு நடைபெறும்.



# மீனவப் பெண்ணாக பிறந்த பார்வதிதேவி


சிவபெருமானின் மனைவி பார்வதி குறித்து நிறைய கதைகள் உள்ளன. அவற்றில் ஒன்றினை பெரிய புராணத்தில் இருந்து காண்போம்.

ஒருமுறை சிவபெருமான், பார்வதிதேவிக்கு வேதங்களை விளக்கி கூறிக் கொண்டிருந்தார். ஆனால் பார்வதி அதை முழு மனதாக கவனிக்காமல் இருந்தாள். இதனால் கோபமுற்ற சிவபெருமான், பூமியில் ஒரு சாதாரண மீனவ குடும்பத்தில் மீனவ பெண்ணாக பிறந்து வளர்வாயாக என்று பார்வதிக்கு சாபம் கொடுத்தார்.


பார்வதியும் அதுபோலவே மீனவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்து வந்தார். இளம் வயது கொண்ட அவரது அழகில் பல இளம் மீனவர்கள் தங்கள் மனதை பறிகொடுத்தனர்.

பார்வதியை பிரிந்து இருக்க முடியாத சிவன் அவரை மீண்டும் கயிலாயம் அழைத்து வர எண்ணினார். அதற்காக ஒரு நாடகத்தை அவர் நடத்தினார். நந்தியை அழைத்து ஒரு சுறா மீனைப் போல் உருவெடுத்து அந்த மீனவ கிராமத்தை மிரட்டும்படி கூறினார். சுறாவைக் கண்ட மீனவர்கள் நடுங்கினர்.

இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காண எண்ணிய மீனவ தலைவன் அந்த சுறா மீனை கொல்லும் வீரனுக்கே தன் மகளான பார்வதியை மணமுடித்து தருவேன் என்று கூறுகிறார். சுறா மீனிடம் உயிரை விட எந்த மீனவரும் தயாராக இல்லை. பின் சிவன் சாதாரண மீனவர் வடிவில் வந்து சுறா மீனை கொன்று பார்வதியை மணமுடித்து கயிலாயத்துக்கு இருவரும் திரும்பினார்கள்.




# வானவர்களை நம்புவது



இஸ்லாமிய இறைநம்பிக்கை என்பது 70-க்கும் மேற்பட்ட கிளைகள் கொண்டது. அது குறித்த தகவல்களை இந்த தொடரில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் இறைநம்பிக்கைகளில் ஒன்றான வானவர்களை நம்புவது குறித்த தகவல்களை காண்போம்.

வானவர்களை நம்புவது இஸ்லாமிய அடிப்படைகளில் ஒன்று. இதுவும் இறை நம்பிக்கைகளில் ஒரு பகுதி. அவர்களை நம்புபவர்கள் இறைநம்பிக்கையாளர்கள் எனும் பெயரை பெறுகிறார்கள். அவர்களை நம்பாமல் இறைநம்பிக்கை பரிபூரணமாகாது.

'(இறைத்)தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார். (அவ்வாறே) இறைநம்பிக்கையாளர்களும் நம்புகின்றனர். இவர்கள் யாவரும் இறைவனையும், அவனது வானவர்களையும் நம்புகிறார்கள்' என்று திருக்குர்ஆன் (2:285) குறிப்பிடுகிறது.

வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டதாக பின்வரும் நபிமொழி உறுதிப்படுத்துகிறது.

'வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'(நூல்: முஸ்லிம்)

மனித இனம் படைக்கப்படுவதற்கு முன்பே வானவர்கள் படைக்கப்பட்டிருப்பதாக சில விவரங்களை இறைவன் திருக்குர்ஆன் வாயிலாக உலக மக்களுக்கு சேதி சொல்கிறான்.

(நபியே!) இன்னும் உமது இறைவன், வானவர்களை நோக்கி 'நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப்போகிறேன்' என்று கூறியபோது, அவர்கள் '(இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, ரத்தம் சிந்துவோரையா அமைக்கப் போகிறாய்? இன்னும், நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக, உன்னைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம்' என்று கூறினார்கள்.

அதற்கு இறைவன், 'நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நான் அறிவேன்' என்று கூறினான்.' (திருக்குர்ஆன் 2:30)

இவர்கள் ஆணுமல்ல, பெண்ணும் அல்ல. அவர்களுக்கு ஊண், குடிப்பு, உறக்கம், நோய் எதுவும் கிடையாது. காலமெல்லாம் இறைவனுக்கு மாறுசெய்யாமலும், பாவங்கள் புரியாமலும் இருப்பார்கள். இறைவன் இட்ட பணிகளை ஆற்றும் இறை அலுவலர்கள் இறைவனுக்கும், மனிதனுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தி வைக்கும் இறைத்தூதர்கள் ஆவார்கள்.

'வானவர்கள் தமக்கு இறைவன் ஏவியதில் மாறுசெய்யமாட்டார்கள். கட்டளையிடப்பட்டதைச் செய்வார்கள்' (திருக்குர்ஆன் 66:6)

வானவர்கள் குறித்து திருக்குர்ஆன் ஏராளமான இடங்களில் பலதரப்பட்ட தகவல்களைத் திரட்டித் தருகிறது. அவர்களின் பெயர் ஒருமையில் 13 இடங்களிலும், இருமையில் 2 இடங்களிலும், பன்மையில் 73 இடங்களிலும் திருக்குர்ஆனில் இடம் பெற்றிருக்கிறது.

அவர்கள் இறைவனின் மிக பிரமாண்டமான படைப்பு. அதிசயித்துப் போகும் அளவுக்கு அவர்களின் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து திருக்குர்ஆன் கூறும் செய்தியைக் காண்போம்.

'வானங்களையும், பூமியையும் படைத்த இறைவனுக்கே எல்லாப்புகழும். (அவன்) வானவர்களை இரண்டிரண்டு, மும்மூன்று, நான்கு நான்கு சிறகுகளைக் கொண்ட தூதர்களாக ஆக்கினான். தான் நாடியதைப் படைப்பிலே மிகுதப்படுத்துவான். நிச்சயமாக இறைவன் அனைத்துப் பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன்.' (திருக்குர்ஆன் 35:1)

'நபி (ஸல்) அவர்கள் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு 600 இறக்கைகள் இருக்க அவரின் நிஜத்தோற்றத்தில் அவரைப் பார்த்தார்கள்'. (அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் (ரலி) புகாரி)

'நபி (ஸல்) அவர்கள் வானவர் ஜிப்ரீலை அடிவானத்தை அடைத்துக் கொண்ட ஒரு பச்சை விரிப்பின் மீது (அல்லது அவர் தன்னுடைய இறக்கையை விரித்தபடி அதனால் அடிவானத்தை அடைத்து விரித்தபடி நிற்கக்) கண்டார்கள்.' (அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் (ரலி), புகாரி)

ஜாபிர் (ரலி) அறிவித்தார்: 'என் தந்தை அப்துல்லாஹ், உஹதுப் போரில் வீரமரணம் அடைந்த போது நான் அழ ஆரம்பித்தேன். மேலும், அவரின் முகத்திலிருந்த துணியை விலக்க முனைந்தேன். அப்போது நபித்தோழர்கள் என்னைத் தடுக்கத் தொடங்கினர். நபியவர்கள் தடுக்கவில்லை. மேலும், நபியவர்கள் 'அவருக்காக நீ அழவேண்டாம். பிரேதம் (அந்த இடத்திலிருந்து) தூக்கப்படும் வரை வானவர்கள் தங்கள் இறக்கைகளை விரித்து அவருக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்' என்று கூறினார்கள்.' (புகாரி)

வானவர்களும், மனித சமுதாயத்தைப் போன்று பலதரப்பட்ட அந்தஸ்தில் உள்ளவர்கள் உண்டு. அவர்களின் எண்ணிக்கையை உறுதியாக சொல்லமுடியாது. அதை அறிந்தவன் இறைவன் மட்டுமே.

'இறைவனின் படைகளை அவனைத் தவிர மற்றெவரும் அறியமாட்டார்கள்.' (திருக்குர்ஆன் 74:31)

'பைத்துல் மஃமூர் எனும் வளமான இறையில்லம் எனக்குக் காட்டப்பட்டது. இதில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் தொழுகிறார்கள். அவர்கள் இதிலிருந்து வெளியே சென்றால் திரும்ப இவ்விடம் வரமாட்டார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்' (நூல்: புகாரி)




தொடக்கத்தில் ஒரே நூலாக எபிரேய மொழியில் இருந்த நூல் 'சாமுவேல்'. பின்னர் கிரேக்க மொழியில் இதை மொழி பெயர்த்த போது சுருள்களின் இடப்பற்றாக் குறை காரணமாக இரண்டு பிரிவுகளாக அதைப் பிரித்தனர். முதல் மன்னனின் மரணம் வரை ஒரு நூலாகவும், தாவீது மன்னனின் வரலாறு இரண்டாம் நூலாகவும் அமைந்து விட்டது. தொடக்கத்தில் 'முதல் அரசாங்கம்' என அழைக்கப்பட்ட நூல் பின்னர் 'சாமுவேல்' என பெயர் மாற்றம் பெற்றது. விவிலிய நூல்களின் வரலாற்றில் இந்த நூலுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. இதற்கு முன்பு வரை நீதித்தலைவர்களால் ஆளப்பட்டு வந்த இஸ்ரயேல் மக்கள், தங்களுக்கென ஒரு அரசனை உருவாக்கும் காலம் இது. அந்த முதல் அரசனை பதவியேற்க வைப்பவராக இறைவாக்கினர் சாமுவேல் இருக்கிறார்.

இந்த நூலைச் சுருக்கமாகப் பார்த்தால், குரு ஏலியிடமிருந்து சாமுவேலுக்கு வருகின்ற நீதித்தலைவர் பணி, சாமுவேலிடமிருந்து சவுலுக்குச் செல்கின்ற அரசர் பதவி, சவுலிடமிருந்து தாவீதுக்குச் செல்கின்ற அரசர் பதவி என பிரிக்கலாம். இவரே இஸ்ரயேலின் கடைசி நீதித்தலைவர், முதல் இறைவாக்கினர்.

நீதித்தலைவர்களே போதும், இறைவனே தலைவராய் இருக்கிறார் எதற்கு உங்களுக்கு ஒரு அரசர்? அரசர் வந்தால் என்னென்ன பிரச்சினை வரும் தெரியுமா? என்றெல்லாம் சாமுவேல் மக்களை எச்சரிக்கிறார். ஆனாலும் மக்கள் கேட்கவில்லை.

எனவே இஸ்ரயேலின் முதல் அரசராக சவுல் என்பவரை சாமுவேல் திருப்பொழிவு செய்கிறார். இஸ்ரயேலின் முதல் இரண்டு அரசர்களான சவுல், தாவீது இவர்களை திருப்பொழிவு செய்த பெருமை இவருக்குரியது. இவரது காலம் கி.மு. 1105 முதல் 1015 வரை.

நீதித்தலைவர்களின் வரிசையில் கடைசியாக வரும் சாமுவேல், அரசுரிமையில் முதலாவதாக வரும் சவுல் இருவரையும் இணைக்கும் புள்ளியாக இந்த முதலாம் சாமுவேல் நூல் இருக்கிறது. இந்த நூலில் 31 அதிகாரங்களும், 810 வசனங்களும், 25,601 வார்த்தைகளும் இடம் பெற்றுள்ளன. இந்த நூலை எழுதியவர் யார் என்பது தெளிவாக தெரியவில்லை. யூத மரபுப்படி இதன் மூலம் சாமுவேல் இறைவாக்கினரால் எழுதப்பட்டது. அதில் காத், நாத்தான் ஆகிய இறைவாக்கினர்கள் பின்னர் தகவல்களை இணைத்தனர்.

ஆனால் அது எந்த அளவுக்கு உண்மை என்பதில் குழப்பம் நீடிக்கிறது. எது எப்படியெனினும், அந்த ஆசிரியர் சாமுவேல், சவுல், தாவீது எனும் நபர்களைப் பற்றிய குறிப்புகள் அனைத்தையும் படித்திருக்கிறார் என்பது மட்டும் சர்வ நிச்சயம். அரசவையில் உள்ள குறிப்புகளைக் கூட படிக்கக் கூடிய வாய்ப்பு பெற்ற ஒருவரே இந்த நூலை எழுதியிருக்க வேண்டும்.

தனக்கு ஒரு குழந்தை வேண்டுமே என மனம் கசிந்து அழுகின்ற ஒரு தாயின் நிகழ்விலிருந்து இந்த நூல் தொடங்குகிறது. அப்படி ஒரு குழந்தை பிறந்தால் அதை ஆண்டவரின் ஆலயத்துக்கே அர்ப்பணிப்பேன் என்கிறாள் அன்னை. குழந்தை பிறக்கிறது, சாமுவேல் என பெயரிடப்படுகிறான்.

சின்ன வயதிலேயே அவனை இறைவன் நேரடியாக அழைக்கிறார். அவனை இறைவாக்கினராக உருமாற்றுகிறார். மக்களுக்கான நீதித்தலைவராக உயர்கிறார் என கதை பயணிக்கிறது. சற்றும் பிழையற்ற, கறையற்ற இறைவனின் நேரடித் தொடர்பில் இருந்த இறைவாக்கினராக சாமுவேல் வாழ்கிறார்.

மக்கள் இறைவனை விட்டு விலகிச் செல்லும் போதெல்லாம் அவர்களை எச்சரித்து மீண்டும் இறைவனின் அருகில் கொண்டு வர அவர் முயல்கிறார்.

மோசேயைப் போல மதிக்கத்தக்க தலைவராக சாமுவேல் இருக்கிறார். மோசேயைப் போல யுத்தம் எதுவும் செய்யவில்லை, ஆனால் மக்களை வழிநடத்துவதிலும், நெறிப்படுத்துவதிலும் அவர் மும்முரமாய் இருந்தார்.

சவுல் முதல் மன்னராகிறார். அழகும், கம்பீரமும் நிறைந்த அவர் பலவீனங்களாலும் நிரம்பியிருந்தார். பிடிவாதக்குணம் கொண்டவராய் இருந்தார், துணிச்சல் குறைந்தவராகவும் இருந்தார். பின்னாட்களில் அவர் பொறாமையும் சுயநலமும் கொண்டவராக மாறிப்போகிறார். பிறருடைய நல்ல விஷயங்களைப் பார்ப்பதை விட அவர்களுடைய குறைகள் அவருக்குப் பெரிதாகத் தெரியத் தொடங்குகின்றன.

மன்னரும், மக்களும் இறைவனையே சார்ந்திருக்க வேண்டுமென சாமுவேல் தொடர்ந்து வலியுறுத்துகிறார்.

தாவீதின் கதையில் குறைந்தபட்சம் கோலியாத்துடன் சண்டை போடும் கதையாவது அனைவரும் அறிந்ததே. இந்த நூல் அந்த நிகழ்வையும், யோனத்தான் தாவீது இருவருக்கும் இடையே இருந்த அற்புதமான நட்பையும் அழகாய் படம் பிடிக்கிறது. சவுலின் மகளை தாவீது மணக்கும் நிகழ்வும், பின்னர் தாவீதின் மேல் சவுல் கொள்ளும் பொறாமையும் வெறுப்பும் கொலை துரத்தல்களும் என பரபரப்பாக பயணிக்கிறது நூல்.

தாவீதைக் கொல்ல சவுல் துரத்துகிறார், தாவீதோ சவுலைக் கொல்ல கிடைக்கும் வாய்ப்புகளையும் விட்டு விடுகிறார். கடவுள் திருப்பொழிவு செய்தவரைக் கொல்ல மாட்டேன் என்கிறார். தாவீதின் குணாதிசயம் இதன் மூலம் வெளிப்படுகிறது.

மிக அற்புதமான கட்டமைக்கும், எளிமையான நடையும், இலக்கியச் சுவையும், ஆன்மிக ஆழமும் கொண்டதாக இந்த நூல் அமைந்துள்ளது.




# கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

விரல் நுனியில் விந்தை நிகழும் விசித்திர உலகில் நடைபோடும் மாந்தர் எம் வாழ்வில் தொழில்நுட்ப வளர்ச்சியின் பங்கு எண்ணிலடங்காதது. தொழில்நுட்பம் இல்லையேல் மனிதர்களே இல்லை என்ற அளவிற்கு இன்றைய நவீன உலகம் வளர்ச்சியடைந்துள்ளது. எங்கு பார்த்தாலும் தொழில்நுட்ப வளர்ச்சி வானளவு உயர்ந்து காணப்படுகின்றது. அந்தவகையில்இ எத்துறையை எடுத்து நோக்கினாலும் அத்துறையில் தொழில்நுட்பத்தின் வகிபாகம் வார்த்தைகளால் சொல்ல முடியாத வகையில் வேரூன்றி விருட்சம் காண்கிறது. வணிகத்துறைஇ வங்கித்துறைஇ நிதித்துறைஇ நீதித்துறைஇ நிர்வாகத்துறைஇ தொடர்பாடல்துறை ஏன் கல்வித்துறையிலும் கூட இன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தன் வீரத்தை காட்டி வருகின்றது என்றால் அது மிகையாகாது. அத்தகைய செல்வாக்கு என்னவென்று சற்று உற்று நோக்கிப் பார்ப்போம்.

கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் அதைப்பற்றி நாம் சிந்தித்து பார்த்ததில்லை. அதே நேரத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் அதன் முழுமையான பலனை பெறுதல் குறித்து ஒருபக்கம் விவாதங்கள் நடந்து வருகின்றன. எனவே கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் தாக்கம் எத்தகையது என்றும் அது எந்த நோக்கத்தில் பயன்படுத்தபட்டு வருகின்றது என்றும் நோக்கவுள்ளோம். அத்தோடு, தகவல் தொடர்பாடல் பயன்பாடுஇ அதன்மூலம் ஏற்படும் நன்மைகள்இ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை கல்வித் திட்டங்களுடன் இணைக்கும் வழிமுறைகள் பற்றிய செயற்பாடுகளையும் காணவுள்ளோம்.

உலகளாவிய ரீயில் தொழில்நுட்ப பயன்பாட்டினை பார்க்கும் போதுஇ அவற்றை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அவையாக, ஊடகப்பயன்பாடு, கணனி,இணையத்தளம்இ இணையமயமாக்கப்பட்ட நூலகம், தொழில்நுட்ப மயப்படுத்தப்பட்ட ஆசிரியர் பயிற்ச்சிகள்இ புள்ளி விபரங்கள், தேர்ச்சி மட்டங்கள் என்று ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகலாம். இலகு முறையில் கல்வி விதான செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் கருவிகளாக காணொளிகள், ஒலிநாடாக்கள், இணைய செயற்பாடுகள்இ மென்பொருட்கள் என்பவற்றையும் சேர்த்துக்கொள்ள முடியும். கற்பித்தல் செயற்பாடுகளில் கற்பிப்பவரை விடுத்து கற்பவர் மையமாக மாற்றுவதில் இன்றைய கல்வி உலகம் வேகமாக நடைபோட்டு வருகின்றது. இந்த நடையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் கைகோர்த்துள்ளது என்றால் அது பொருத்தமுடையதாகிறது.

21ஆம் நூற்றாண்டின் கலவித்துறை நவீன மாற்றத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பேருதவி புரிந்துள்ளது என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இத்திட்டம் செம்மையான முறையில் கல்வி அமைச்சினாலும், கல்வித்துறை நிர்வாகத்தினாலும், மாணவர்களின் பெருமித ஒத்துழைப்பினாலும் செயல்முறைப் படுத்தபடுமேயானால் எதிர்கால உலகில் மாணவர்களின் அறிவு மற்றும் திறமை மலைமேல் விளக்காக எரியும். மிக முக்கியமாக இணையத்தளப் பயன்பாடு மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் முறையாகப் பயன்படுத்தப்படும் என்றால் மாணவ சமுதாயம் எழுச்சி பெறும். இப்புதிய தொழில் நுட்ப மயப்படுத்தப்பட்ட கல்வி முறையானது ஆசிரியர்கள் மாணவர்களை மையப்படுத்தி பாடம் கற்பிக்கவும் வழி வகுக்கிறது.

இம்முறையின் மூலம் மாணவர்கள் கல்வியின் பக்கம் ஆர்வத்தால் தூண்டப்படுவதோடு மேலும் பல புதிய முறைகளில் தகவலை பயன்படுத்தி பயன்பெற மாணவர்களுக்கு வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. மனனம் செய்து படிப்பதை பார்கிலும் மாணவர்களின் வாழ்கை சூழ்நிலைக்கு ஏற்ப கல்வி அமைத்தல் இலகுவாகிறது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதன் மூலம் ஆசிரியர் மாணவர் வேறுபாடின்றி கூட்டாக கலந்துரையாட இடமளிக்கப்படுகிறது. பல்லின கலாசார மக்களுடன் உறவினை பேண பாலமாக அமைகிறது. இதன் மூலம் ஆசிரியர் மாணவர்களின் ஒருமித்த கருத்தும் தகவல் பரிமாறும் திறனும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் சிறப்பாக கல்வி எல்லை வரையறுக்கப்பட்டதாக இல்லாமல் தொடர் பயணமாகவும் அமைகிறது.

ஆழமாக ஆய்வு செய்யப்போனால் ஆரம்பக் கல்வியில் தொழில் நுட்பத்தின் பங்கானது குறைவானது என்றே ஆய்வுகள் கூறுகின்றன. உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வியில் தான்; இதன் வளர்ச்சி அதிகளவிலாக காணப்படுகிறது என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பதிவுகள் கூட இணையத்தளம் மூலமே பதிவு செய்யப்படுகின்றன என்பதன் மூலம் நாம் இதனை ஆதாரப்படுத்திக் கொள்ள முடியும். அதுமட்டுமன்றி பல்கலைக்கழக கல்வி முறையில் அதிகளவிலான செயற்பாடுகள் இணையத்தினை மையப்படுத்தியே நடாத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடுகையில் பாடசாலையில் தொழில் நுட்பத்தின் பயன்பாடு வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. வானொலி, தொலைக்காட்சி, ஒலி, ஒளி நாடாக்கள் என்பவற்றின் பயன்பாடோடு குறைந்நளவிலான இணையத்தள பயன்பாட்டினையும் எம்மால் அவதானிக்க முடிகிறது. இருப்பினும் இதன்மூலம் மாணவர்களின் பாடசாலை தேர்வு மட்டம் மற்றும் வரவு மட்டம் உயர்வடைந்துள்ளதாக பாடசாலை மட்ட ஆய்வுகள் கூறுகின்றன.

பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்தே மாணவர்கள் கணனியினை பயன்படுத்தும் ஆர்வத்தால் தூண்டப்பட்டு வருகிறார்கள். இதன் மூலம் கல்வியினை இலகு படுத்திக்கொள்ளவும் செய்கிறார்கள். விரைவாகவும் வேகமாகவும் தங்கள் செயற்பாடுகளை செய்தும் கொள்கிறார்கள். மாணவர்களின் கற்கும் திறனும் அதிகரிக்கின்றது. உயர் கல்வியினை இலக்காகக் கொண்ட மாணவர் சமுதாயமாகிய பாடசாலை மாணவர்களிடையே கணனி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடானது எதிர்கால இலட்சியப் பாதையில் கைகொடுக்கும் என உறுதியாக கூறிக்கொள்ளலாம். இதன் வழியாக கல்வியில் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்கு எத்தகையது என்றும் அதன் முக்கியத்துவம் எத்தகையது என்றும் அறிவினை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். எனவே தொழில்நுட்பத்தினை தகுந்த முறையில் கல்வியில் நுழைத்து சீரிய பயனைப் பெற்று வீறுநடை போடுவோம்.

**சிவராசா அன்றுக்கா**
**முகாமைத்துவக் கற்கைகள்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**
**திருகோணமலை வளாகம்**

# இன்றைய சமூகத்தில் விசேட தேவைகள்சார் கல்வியின் அவசியம்

சகல சமூகங்களிலுமுள்ள சகல நபர்களும் கல்வியின் நன்மைகளைப் பெற வேண்டுமென்பதே சகலருக்கும் கல்வி (Education for All-EFA) என்பதன் அடிப்படை இலக்காகும். அனைவருக்கும் கல்வி என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பெரும் சவாலாக விளங்குவது விசேடதேவையுள்ளோரின் அதிகரிப்பும் அவர்களைச் சமூகமயப்படுத்தலுக்குள் உள்வாங்குதலுமாகும். விசேட தேவையுள்ளோர் இன்று பல்வேறு வழிகளில் கவனிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர். இதனால் விசேட தேவையுள்ள மாணவர்கள், அவர்களின் கற்றல் செயற்பாடுகளால் மெல்லக் கற்போராகவும், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கற்போராகவும் காணப்படுகின்றனர்.

இவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், செயற்பாடுகள் ரீதியாகவும் சவால்களை எதிர்கொள்வோராகக் காணப்படுகின்றார்கள். இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து அவர்களை விடுவித்து அவர்களுக்கேற்ற வகையில் கல்வியை வழங்குவதற்கென்று பின்பற்றப்படும் கல்வி முறையே விசேடதேவை கல்வி என அழைக்கப்படுகின்றது. குறிப்பாக சாதாரண வகுப்பறையொன்றிலிருந்து தனது கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதில் பெருமளவு இடர்படுகின்ற மாணவர்களே விசேட தேவையுடையோர் ஆவர். விசேட தேவையுடைய பிள்ளைகளை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்க முடியும்;. மீத்திறன் கொண்ட மாணவர்கள், கற்றல் இயலாமை உடையோர், மெதுவான உள வளர்ச்சியுடையோர், உக்கிர மனவெழுச்சி கொண்டோர், பல்வகைமை இயலாமை உடையோர், உடலியற் குறைபாடுகள் உடையோர், சுகாதார குறைபாடுகள் கொண்டோர், கேட்டல் குறைபாடுடையோர், பார்வை குறைபாடுடையோர், யுரவளைஅ குறைபாடுடைய பிள்ளைகள் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இந்தவகையில் தற்காலத்தில் விசேட தேவையுடையோரின் கல்வியின் அவசியம், அனைவராலும் பேசப்பட்டு வரும் ஒன்றாக காணப்படுகின்றது. விசேட தேவையுடைய பிள்ளைகளும் இம்மண்ணில் முழுமையாக வாழப் பிறந்தவர்களே என்ற அடிப்படையில் வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களையும் அனுபவிக்கும் வகையில் விசேட கல்வித் தத்துவம் முன்வைக்கப்படுகின்றது. தாராண்மைவாத கல்விச் சிந்தனைகளான அனைவருக்கும் கல்வி, கல்வியில் ஜனநாயகம், சமத்துவமான கல்வி வாய்ப்புக்கள், மனித உரிமையாக கல்வி போன்றவற்றை அடைந்துக் கொள்ள விசேடதேவைகள் சார் கல்வி அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. ஒரு நாட்டின் முழுமையான அபிவிருத்தியானது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. குறிப்பாக ஒரு நாட்டின் மனிதவளவிருத்தி, அறிவு, பொருளியல் விருத்தி, பொருளாதார விருத்தி, சமூக விருத்தி, போன்றவற்றிற்கு அனைவருமே கல்;வியினை பெற்றுக் கொள்ள வேண்டும் இதனூடாகவே தேசிய அபிவிருத்தியை அடைந்துக் கொள்ள முடிகின்றது. உடல் ஊனமுற்றவர்களுக்கு அல்லது வலது குறைந்தவர்களுக்கு அல்லது விசேட கல்வி அவசியமானவர்களுக்கு அறிவு, திறன் இல்லையென்று கூறிவிட முடியாது. அவர்களும் ஏதோ ஒரு துறையில் ஆற்றல் மிக்கவர்களாகவும் திறமை வாய்ந்தவர்களாகவும் காணப்படுவர.; ஆகவே அவற்றை இணங்கண்டு அவற்றின் ஊடாக நாட்டிற்கு பயன் கிடைக்க வேண்டுமென்றால் விசேட தேவைகள்சார் கல்வி முக்கியத்துவம் உடையதாக காணப்படுகின்றது. கல்வியில் ஈடுபாடு கொள்வதனையும், அக்கறையுடன் செயற்படுவதனையும், வலுவுள்ளதாக மாற்றியமைக்க விசேட தேவைகள் கல்விச் செயற்பாடுகள் அவசியமானதாகின்றது. சமூக, பொருளாதார தாக்கங்களின் பாதிப்பு, உடல், உளமனவெழுச்சி ரீதியான பாதிப்புக்களின் காரணமாக கல்வி மீதான நாட்டம் குறைந்தோரை கவனத்தில் கொள்வது விசேட தேவைகள் சார் மூலமாக சாத்தியமாகின்றது. பொதுக்கல்வியை பெற்றுக்கொள்ள பாடசாலை வராதோரையும், இடைவிலகுவோரையும், வரவு குறைபாடுடையோரையும் முழுமையாக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த விசேட கல்வி அவசியமாகின்றது. யுத்தம், வறுமை, இயற்கை அழிவுகள், வன்செயல்கள், போதைப் பொருள் பாவனை, கொடிய நோய்கள் போன்றவற்றினால் விசேட தேவையுள்ள மாணவர்கள் அதிகரித்துள்ளமையால் அவர்களை உரிய முறையில் நெறிப்படுத்த விசேட தேவைகள் சார் கல்வி அவசியமாகும்.



நாட்டின் முன்னேற்றம் அபிவிருத்தி என்பன கல்வியின் மீதே தங்கியுள்ளது. பொதுகல்வியை விட ஆங்கிலம், தகவல் தொழிநுட்பம் போன்றவற்றில் உயர் அடைவுகளை பெற வேண்டிய தேவையில் மாணவர்களை இசைவுபடுத்துவதில் விசேட தேவைகள் சார் கல்விக்கே பெரும் பங்குள்ளது. எமது பாடசாலைகளில் பெருமளவிலான மாணவர்களை உள்வாங்கிக் கொண்டு செயற்பட்டு வருவதனால் பல நடத்தைசார், பண்பாட்டுசார், சமூகம்சார் பிரச்சினைகள் தோன்றி கல்வி இலக்குகளில் தடை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. இவற்றை பொருத்தமாக கையாள விசேட தேவைகள்சார் கல்வி இன்றியமையாததாகும். மாற்றமடைந்து வருகின்ற சமூகவியல் போக்கில் உலகமயமாக்கம் நவீன காலனித்துவ கெடுபிடிகள் போன்றவற்றுடன் முரண்பாடுகளை கொண்டுள்ள சுயபண்பாட்டியல் மற்றும் சுதேசிய வாழ்க்கை கோலங்களுடன் கல்வியை பெற்றுக் கொள்வதற்கான அதிநவீன தடைகள் தோற்றம் பெற்று வருவதனால் விசேட கல்வியின் ஊடாகவே இவற்றுக்கு தீர்வை பெற வேண்டியது அவசியமாகிறது. அதுமட்டுமல்லாது இத்தகைய பிள்ளைகள் தங்களது எதிர்கால வாழ்வை சிறப்புடன் கொண்டு செல்வதற்கும் தாங்களும் சமூகத்தில் வாழ தகுதியுடையவர்கள் என்ற சிந்தனை எழுவதற்கும் இப்பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவது என்பது முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது.

குறிப்பாக விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகள் தங்களுடைய வாழ்நாளில் பாரிய சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்குகின்றனர். நண்பர் வட்டாரங்களை உருவாக்குவதற்கும் அந்நட்பினை தொடரந்து பேணுவதற்கும் பாடசாலையிலும் சமூகத்திலும் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குவர். இப்பிள்ளைகள் நாட்டின் சட்டத்திட்டங்களுக்கமைய விசேட சேவைகளையும் இருப்பிடங்களையும் அவர்களது குடும்பம், பாடசாலை, சமூகம் மற்றும் அரசு ஆகியவற்றிடமிருந்து பெற உரித்துடையவர்கள். இவர்கள் தொடர்பாக சட்டவாக்கல்கள் எடுத்தியம்புவது யாதெனில் ஒவ்வொரு பிள்ளையும் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட சூழலில் இலவசமானதும் பொருத்தமானதுமான கல்வியை பெறுதல் வேண்டுமென்பதாகும். உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனமும் (ஐ.நா.1948), சிறுவர் உரிமை பிரகடனமும் ((Child Rights Convention-CRC) (ஐ.நா.ச 1989) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாரபட்சமின்றி சகல பிள்ளைகளும் கல்வியனைப் பெறுவதற்கு மிக உரித்துடையவர்கள் என மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக சிறுவர் உரிமை பிரகடனத்தின் 23ம் சரத்தானது ஏனைய சாதாரன பிள்ளைகளைப் போன்று இயலாமையுடைய பிள்ளைகளும் விசேட கவனிப்பு, கல்வி, பயிற்சிகள் மற்றும் ஏனைய அனைத்து உரிமைகளையும் பெறும் உரித்துடையவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளன. விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகள் சாதாரண சிறுவருடன் சமநிலையில் கல்வியில் முன்னேற்றம் அடைதல் சிரமமான ஒன்றாகத் தென்படலாம். ஆனால் விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வேண்டிய உதவியளித்து அவர்களையும் இயக்குகின்ற உலகின் இளைஞர்களுள் ஒருவராகுவதற்குத் தயார் செய்யவேண்டியதும் சமூக நிறுவனமான பாடசாலையின் பொறுப்பாக காணப்படுகின்றது.

ஆகவே விசேட தேவைகள் சார் கல்வி பற்றி பேசப்பட்டாலும் அனைத்து சமூகங்களிலும் உள்ள விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு கல்வி வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது. ஒரு சில சமூகங்களில் இத்தகைய பிள்ளைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களாகவே வாழ்கின்றனர். கிராமங்களில் இவர்கள் பெற்றோர்களாலேயே ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். குறிப்பாக மலையக சமூதாயங்களில் இந்நிலையை காணக்கூடியதாக உள்ளது. இவர்களால் கல்வியை பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது. இவ்வாறான பிள்ளைகளுக்கு கல்வி என்றாலே என்னவென்று தெரியாத சூழல் காணப்படுவதோடு இப்பிரதேசங்களில் இப்பிள்ளைகளுக்குரிய கல்வியை வழங்குவதற்கு யாரும் முன்வராத தன்மையும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். விசேட தேவைகளுக்குட்பட்ட பிள்ளைகள் குறிப்பாகத் தம் சிறுவயதிலேயே பாதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்களது அபிவிருத்தியும் கூட பொதுவாகச் சமநிலை அற்றதாகவும் பின் தங்கியதாகவும் இருக்கலாம். அபிவிருத்தியில் சமநிலையற்ற பிள்ளையை அவதானித்த பெற்றோர் அது சம்பந்தமான தகவல், வழிகாட்டல் உதவிகளைப் பெறவும் அதன் மூலம் ஆரம்பத்திலிருந்தே தமது பிள்ளையின் அபிவிருத்தியை முன்னேற்றவும் முடியும். இந்தவகையில் விசேடதேவையுடைய பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு சிறப்பு பெறவும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லவும் விசேட தேவையுடையோருக்கு கல்வி வழங்கப்படுவது காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. எனவே இவ்வாறான பிள்ளைகளை இனங்கண்டு அவர்களும் முழுமையான கல்வியறிவை பெற்றுக் கொள்ளவும் அவர்களது திறமைக்கேற்ப ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றத்தை காணவும் அவர்களுக்கும் சமமான கல்வியை வழங்குவதற்கு கல்வி நிறுவனங்கள் முன்வர வேண்டும். இவ்வாறு இந்நிறுவனங்கள் விசேட தேவையுடையவர்கிளின் பால் அதீத கவனத்தை செலுத்தும்போது அவர்களும் ஒரு நாட்டினுடைய பெறுமதி மிக்க மனித வளமாக மிளிர்வர். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தில் அவர்களாலும் பங்களிப்பு வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**மணிராஜ் சுபாஷினி**
**கல்வி பிள்ளை நலத்துறை**
**விடுகை வருடம்**
**கிழக்குப் பல்கலைகழகம், இலங்கை**






கிழக்கிலங்கை காரைதீவு ஆதிசிவன் ஆலயத்தின் வருடாந்த சிவராத்திரி விழா நடை பெற்றது. இந்நிகழ்வில். சிவலிங்க பாலாபிஷேகம் கிரியைகள் நான்சாமப் பூஜைகளும் குருக்கள் நடத்துவதையும் கலந்து கொண்ட பத்தர்களையும் படங்களில் காணலாம்.

படம்: காரைதீவு நிருபர்





மகா சிவராத்தியினை முன்னிட்டு நுவரெலியா ஸ்ரீ லங்காதீஸ்வர ஆலய காயத்திரி பீடத்தில் மகா சிவராத்திரி விழா மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றன. இப்பூஜையில் விநாயகர் வழிபாடு, பாலாபிசேகம், தேன் அபிசேகம், பஞ்சாமிர்த அபிசேகம், சங்காபிசேகம், திரவிய அபிவிசேகம் உட்பட பல்வேறு அலங்கார அபிசேகங்கள் இடம்பெற்றதுடன் இரவு முழுவதும் நான்கு சாமப்பூஜைகளும் சிறப்பாக நடைபெற்றன.

படம்: க.கிஷாந்தன்






இரத்தினபுரி அல்மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இவ்வருட இல்ல விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் அதிபர்கள் எம்.எஸ்.எம்.மில்ஹான் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இரத்தினபுரி மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ.விஜேதுங்க மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் திருமதி மாலணி லொக்கு போதாகம கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதிகளாக கல்வி உயர் அதிகாரிகள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். அதிபரால் அதிதிகள் அழைத்து வரப்படுவதையும்,மாணவர்களின் நிகழ்ச்சிகளையும் மற்றும் வெற்றிபெற்ற மாணவர்கள் அதிதிகளிடமிருந்து சான்றிதழ்கள் பெறுவதையும் இங்கு அவதானிக்கலாம்.

படம்: எம்.எல்.எஸ்.முஹம்மத்






வவுனியா மாவட்ட செயலகமும், சிறுவர் நன்னடத்தை திணைக்களமும் இணைந்து நடாத்திய பிள்ளை யாருடையது என்பதல்ல எவருடையாதாயினும் அது பிள்ளை எனவே பாசத்துடன் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியா மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகி புதிய பேருந்து நிலையம் வரை சென்றடைந்து. ஏனைய நிகழ்வுகள் பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

படம்: வவுனியா நிருபர்





பெண்களும் ஆண்களுக்கு நிகராக அனைத்திலும் பங்களிப்பு செய்தல் அவசியம் எனும் கருப்பொருளில் இன்று சமூக மேம்பாட்டு அமைப்பினால் மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் துளிர் செயற்பாட்டின் முதலாவது நிகழ்வாக மரக்கன்றுகள் நடும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள், சுற்றாடல் படையணி, பொறுப்பாசிரியர்கள், போக்குவரத்து பொலீஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

படம்: கே. சுபஜன்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 10.03.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.